
# உள்ளம் கொள்ளை போகுதே

1



''அனி! அந்தக் கல் ஒட்டுகிற டிசைன்களை மட்டும் தனியாக எடுத்து வைத்து விடு. திலகா அந்த வேலையைத் தொடர்ந்து முடிக் கட்டும். நான் மற்றதை மட்டும் கொண்டு போகிறேன்,'' என்றபடி, கண்ணாடித் தாள் பைகளுக்குள் இருந்த டிசைன்கள் ஒவ்வொன்றையும் ஓரமாக ஒட்டியிருந்த விலைக் குறியீட்டோடு ஒப்பிட்டுச் சரி பார்த்தாள்.

விலையும் துணியும் மாறிவிடக் கூடாதே! ஒன்றைத் தேர்ந்தெடுத்த பின், விலை வேறு என்று தடுமாறினால், நன்றாயிராது.

தனிப்பட்ட வாடிக்கைகளும் உண்டு என்றாலும், 'உன்னதம்' நிறுவனம் மூலம் காஞ்சனிக்கு நிறைய ஆர்டர்கள் வரும். சுரிதாருக்கு, சேலைக்கு, சோளிக்கு... அருகி மறைந்து வரும் பாவாடை தாவணிக்குக் கூட, அழகிய வேலைப்பாடுகள் செய்து தரச் சொல்லிக் கேட்பார்கள்.

வேலைக்கான ஊதியமும், அவர்கள் பொறுப்பாய், உடனே கைக்கு வந்து விடும். எனவே, காஞ்சனியும்,

அவளது குழுவினர் தயாரிக்கும் புதுப்புது வேலைப் பாடுகளை அவ்வப்போது அங்கே கொண்டு போய்க் காட்டுவாள். அவற்றுள் ஒரு வகைதான், இன்று தயார் நிலையில் இல்லை!

அன்று அப்படி டிசைன்கள் கொண்டு செல்ல வேண்டிய நாள் வேறு.

'அனி' என்று அழைக்கப்பட்ட அனகா, அந்தச் சிறு கைத்தொழில் நிறுவனத்தை நடத்துகிறவளான காஞ்சனி குறிப்பிட்ட துணிகளைத் தனியே எடுத்து வைத்துவிட்டு, அவள் சரி பார்த்தவற்றை உன்னதத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய ஃபைலுக்குள் அடுக்கி வைத்தாள்.

''சாரி, காஞ்சி!'' என்றாள் திலகா மெல்லிய குரலில். ''நேற்று வீட்டில் அப்பா அடித்த கூத்தில், இந்த வேலையைத் தொடவே முடியாமல் போயிற்று. பூபாலை வேறு ரொம்பவே தேற்ற வேண்டியதாகி விட்டது. இந்த சமாதானத்தை, நீ 'உன்னத'த்தில் சொல்ல முடியாதுதான். ஆனால், உனக்குப் புரிகிறதில்லையா?'' என்று வருத்தத்துடன் விளக்கினாள்.

வாய் விளக்கம் சொல்லும்போதே, தன்னால் ஏற்பட்டு விட்ட பிழையை ஈடுகட்டும் விதமாக, அவளது கைகள் வெகு வேகமாக வேலை செய்வதைக் கண்ட காஞ்சனிக்கு மனம் இளகிப் போயிற்று.

சின்ன வயதில் இருந்து, திலகாவோடு சேர்ந்து படித்து முடித்த காஞ்சனிக்குத் தோழியின் வீட்டு விஷயம் நன்கு தெரியும். படிக்கிற காலத்தில் இருந்தே, திலகாவுக்கு இது ஒரு சிறுமை எப்போதும் இருந்தது.

திலகாவுடைய தந்தை ஒரு பெருங் குடிமகன்.



இரண்டு அர்த்தத்திலுமே அப்படித்தான்! நற்குடியில் பிறந்தவர்கள். செல்வ வளமும், ஒரு காலத்தில் இருந்ததுதான். எப்படிப் பழகினாரோ, இந்தக் குடிப் பழக்கம் அவரைப் பேயாகப் பற்றிக் கொண்டது. போதை யற்று இருக்கும் வேளைகளில் பெரிய மனிதனாக இருக்கும் அவர், சரக்கு ஏறியதும் ஆளே மாறி விடுவார்.

கல்விக் கூடங்களில் திலகாவுக்கு எப்போதும் தலை குனிவுதான். வேலை பார்த்த இடத்திலும் கேவலமாகி விட, அந்த வேலையையே விட நேர்ந்து விட்டது.

நல்ல வேளையாகக் காஞ்சனி அதே சமயத்தில் இந்த அலங்காரத் துணி வேலையைத் தொடங்கவே, திலகா வும் அதில் இணைந்து கொள்ள முடிந்தது.

ஆனால், அவளுடைய தம்பி பூபால் இன்னமும் மோசம்.

தந்தை குடித்துவிட்டு, அறிந்தவர், தெரிந்தவர் முன் னிலையில் கலாட்டா செய்வதில் கூனிக் குறுகிக் கல்லூரிக்குப் போவதையே நிறுத்தி விட்டான். படிப்பு பாதியில் நின்று போயிற்று. தாயார் இறந்த பிறகு, அவனது நிலைமை இன்னமும் கேடாகி விட்டது. ஒரு தரம் தற்கொலைக்குக் கூட முயன்றிருக்கிறான். திலகாவின் அன்பும் ஆதரவும்தான் அவனை உயிரோடு வைத்திருக் கின்றன எனலாம்.

காஞ்சனிக்கும் அவனிடம் பரிதாபம் உண்டு. திலகாவோடு சேர்ந்து, அவளும் அவனுக்குத் தைரியம், புத்தி சொல்வாள். 'நீயும் இல்லாவிட்டால், உன் அக்கா வுக்கு யார் துணை? அப்பா சரியில்லாதபோது, நீங்கள்

இருவரும்தானே, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள வேண்டும்?' என்று காஞ்சனி கேட்ட பிறகுதான், மூக்கியப் பிரச்சினை புரிந்து, அவன் கொஞ்சம் திடமுற்றதே என்பாள் திலகா.

ஆனாலும், அவ்வப்போது, தந்தை விவகாரம் அவனை அலைக்கழித்துவிடும்.

சும்மா இருப்பதே அவனது தைரியத்தைக் குலைக்கிறது என்று ஊகித்து, தன் தந்தையின் மூலம், அவனுக்கு ஒரு கைத்தொழில் பயிற்சிக்குக் காஞ்சனி ஏற்பாடு செய்து கொடுத்தாள். செய்கிற வேலைக்குத் தக்கபடி, சிறு ஊதியமும் கொடுக்கப்பட்டதால், பூபால் உற்சாகமாகவே வேலை செய்தான்.

அன்று அவனுக்குச் சம்பள தினம்.

எனவே, திலகா உற்சாகமாக வருவாள் என்று, காஞ்சனி நிச்சயமாக நம்பியிருக்க, நேர் மாறாக நேர்ந்திருக்கிறதே!

என்ன நடந்தது என்று, திரும்பி வந்ததும் கேட்க வேண்டும்.

தேவையானவற்றை எடுத்துக்கொண்டு, ஸ்கூட்டரில் 'உன்னதத்'துக்குச் செல்லுகையில், தோழியின் பிரச்சினையின் தொடர்ச்சியாகக் காஞ்சனிக்குத் தன் பெற்றோரைப் பற்றி எண்ணம் ஓடியது.

இரு தந்தையருக்கும் இடையே, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு!

அவளுடைய பெற்றோர், அவளது நியாயமான ஆசைகளுக்கு என்றும் தடை சொன்னதில்லை. அடுப்படிதான் உன் இடம் என்றதும் கிடையாது. சரியான



தேவை என்றால், செலவுக்குப் பார்க்கிறவர்களும் அல்ல. இயன்றவரை செய்து விடுவார்கள்.

இரு பிள்ளைகளுமே, தன் காலில் நிற்கத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்யத் தயாராக இருந்தார்கள். செய்தார்கள்.

எப்போதுமே, பூவேலை, வண்ணப் பொருத்தங்கள் போன்றவற்றில் அவளுக்கு ஈடுபாடு உண்டு. இப்போது, ஆடைகளில், ஜர்தோஷி, ஹகோபா, மணி வேலைப்பாடு, பேப்ரிக் பெயின்டிங், இன்னும் பலவிதத் துணி அலங்காரங்களில் ஓர் ஆண்டு தனிப் பயிற்சி எடுத்துக் கொண்டு வந்தவள், கற்றதை வருமானம் தரும் தொழிலாக மாற்ற விரும்பியபோது, அதற்கான உதவிகளைச் செய்து தந்தார்கள்.

இதுதானே இயற்கை!

திலகாவுடைய தந்தை மட்டும் ஏன் இப்படி மாறாக இருந்து பிள்ளைகளை வாட்டுகிறார்? அதுவும் தாயற்ற பிள்ளைகளுக்குத் தாயுமானவராக இருக்க வேண்டியவர்... என்று எண்ணிக் காஞ்சனி பெருமூச்சு விட்டபோது, தையல் நிறுவனமே வந்து விட்டது.

ஸ்கூட்டரை நிறுத்தும்போதே, தொழில் முறைப் பேச்சு வார்த்தைகளை எப்படி நடத்த வேண்டும் என்று, காஞ்சனியின் மனம் திட்டமிடத் தொடங்கி விட்டது.

சொன்ன நேரத்துக்கு, ஐந்து நிமிஷம் அதிகமாகவே அவகாசம் இருந்ததால், 'லிஃப்டை' விடுத்து, அங்கங்கே காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த ஆடைகளைப் பார்த்து ரசித்தவாறு, அப்படி ரசிக்கும்போதே, இவற்றுள் எதெதற்குத் தன் டிசைன்களைப் பயன்படுத்த இயலும்

என்று உள்ளூரக் கணித்தவாறே, மெல்லப் படியில் ஏறிப் போனாள்.

பெண்கள் பகுதிப் பொறுப்பாளர் சுகவனம், காஞ்சனியை மகிழ்ச்சியுடன் வரவேற்று, அவரது தனிப் பகுதியில் அமர்ந்திருந்த இரு பெண்களிடம் அவளை அறிமுகம் செய்து வைத்தார்.

பிரபல இசை அமைப்பாளருடைய குடும்பத்துப் பெண்கள் அவர்கள். அவர்களுக்கு ஏற்றவாறு பெரிய இடத்தில் பெண்ணுக்குத் திருமணம் நடக்கப் போகிறது. நெருங்கிய உறவுக்காரப் பெண்கள் எல்லோருக்கும், பட்டுச் சேலை வாங்கிக் கொடுக்கப் போகிறார்கள். அவற்றுள், ஏழெட்டுச் சேலைகளுக்கு, இப்போதைய நாகரீக முறையில், அலங்காரமாகத் தைத்துத் தர வேண்டும். மணப் பெண்ணின் சில சுரிதார் செட்டுகளிலும், கவர்ச்சிகரமாக அலங்கார வேலை செய்ய வேண்டும்.

மொத்த வேலைக் கணக்கைப் பார்த்தால், வருமானம் நிறைய வரும் என்று காஞ்சனிக்குத் தோன்றியது.

எனவே, கையோடு எடுத்துப் போயிருந்த டிசைன்களை, அந்தப் பெண்களுக்கு எடுத்துக் காட்டலானாள்.

வேகமாகப் பார்த்தபோதும், அம்மா, மகள் இருவரின் முகங்களும் மேலும் மேலும் மலர்வது போலத் தான் இருந்தது.

ஆனால், முழுவதும் புரட்டிப் பார்த்துவிட்டு, "எல்லாமே இவ்வளவுதானா? பட்டுச் சேலையில் போடக் கூடியதாக ஒன்றும் இல்லையே!" என்றாள் கல்யாணப் பெண். "அத்தோடு, எனக்குச் சில சுடிதார் செட்டிலும்கூட, இன்னும் உயர்வான.. விலை மதிப்புள்ள வேலைப்



பாடுகள் வேண்டுமே! கல் ஒட்டி, அதைச் சுற்றிலும் பூவேலை செய்து... எனக்கு அந்த மாதிரி வேண்டும், அம்மா!" என்று சிணுங்கினாள் அவள்.

ஆசை மகள்! மணப்பெண் வேறு! தாயாருக்குத் தாங்குமா?

அன்னை சுகவனத்தைப் பார்த்தாள். "எல்லாப் புது வகைகளும் கொண்டு வருவார்கள் என்றீர்களே! பாப்பா கேட்கிற தினுசு இவர்கள் செய்வதில்லை போல இருக்கிறதே!" என்று கேள்வி கேட்டாள்.

சுகவனம் தன் பங்குக்குக் காஞ்சனியிடம் திரும்ப, அவர் பேசுமுன்பே, முந்திக் கொண்டு, காஞ்சனி மணப் பெண்ணுக்கே பதிலளித்தாள்.

"நீங்கள் சொல்கிற தினுசில், கொஞ்சம் அதிகப்படி வேலைப்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியதால், அப்படிச் செய்யச் சொல்லிவிட்டு வந்தேன்!" என்று உரைத்தவாறே மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்துவிட்டு, "குறைந்தது ஐந்தாறு டிசைன்களிலாவது இப்போது வேலை முடிந்திருக்கும்!" என்று தெரிவித்தவளின் மனம் வேகமாக வேலை செய்தது.

இப்போது இவர்களை விட்டு விட்டுப் போனால், இதே வேலைப்பாடுகளைச் செய்து தரும் இன்னோர் இடத்தை நாடி இவர்கள் போய்விடக் கூடும்.

எனவே சுகவனத்திடம் திரும்பி, "சார், என் ஸ்கூட்டர் சாவியைத் தருகிறேன். இங்கே, ஸ்கூட்டர் ஓட்டத் தெரிந்த உங்கள் ஆள் யாரையாவது என் இடத்துக்கு அனுப்பி அந்த டிசைன்களை எடுத்து வரச் சொன்னால், அதற்குள், நான் இவர்களிடம் இந்த ஃபைலில் உள்ள மற்றவைகளைப் பற்றிப் பேசி முடித்துவிடுவேன். அப்புறமாக, அவை

களையும் பார்த்து விடலாம். இவர்களுக்கும் நேரம் விரயம் ஆகாது!'' என்று எடுத்துச் சொன்னாள்.

சுகவனத்துக்குச் சிரிப்பு வந்தது. உள்ளூரக் காஞ்சனியை மெச்சியவாறே, அவள் கேட்டுக் கொண்டபடி செய்தார்.

காஞ்சனியும் அதற்குள் செல்லில் திலகாவை அழைத்து விவரம் சொல்லிவிட, முந்தைய தன் தவறை ஈடுகட்டும் விதமாகத் திலகாவும் நிறைய வேலைகளை முடித்து வைத்திருந்து ராசுவிடம் அனுப்பி வைக்க, அந்த டிசைன்களில் பல, கல்யாணப் பெண்ணுக்குப் பிடித்துப் போயின.

ஏற்கெனவே கொண்டு போயிருந்தவற்றிலும் சிலதைப் பொறுக்கி எடுத்து உறவினருக்கு அளிக்கும் சேலைகளுக்குச் செய்யுமாறு கேட்டு, உரிய முன் பணமும் தந்து விடவே, காஞ்சனி மிகுந்த உற்சாகத்துடன் கிளம்பினாள்.

ஆனால், 'உன்னத'த்தை விட்டு வெளியே வந்து, ஸ்கூட்டர் நிறுத்தியிருந்த இடத்தைக் கண்டு, அதன் அருகே அவள் சென்று சாவியை எடுத்ததுமே, ''நினைத்தேன்! இந்தத் தகர டப்பாவை இங்கே நிறுத்திய வடிகட்டிய முட்டாள், ஒரு பெண்ணாகத்தான் இருக்கும் என்று நான் நினைத்தது, நூறு சதவிகிதம் சரியாகிப் போயிற்று!'' என்று, ஏளனமும் எகத்தாளமுமாக உரைத்து, அவளது உற்சாகத்தை அடியோடு அழித்தான், ஒரு நெடியவன்!



## 2

சும்மாவே, தன் ஸ்கூட்டரைப் பார்த்ததுமே, காஞ்சனிக்குச் சிறு வருத்தம். சுத்தமாகத் துடைத்து வைக்கப்பட்டிருக்கும் வண்டியை,



இயன்றவரை தண்ணீர், சகதி ஒதுக்கி ஓட்டி, அழுக்குப் படாமல்தான் அவள் வைத்திருப்பாள்.

ஆனால், பொருள் அவனுடையது அல்ல என்பதாலோ என்னவோ, ராசுவுக்கு அப்படிப்பட்ட கவனங்கள் இருக்கவில்லை போலும்.

முந்திய நாள் சிறு மழையென்ற போதும், அங்கங்கே குட்டையாகத் தேங்கியிருந்த மழைநீரைப் பஸ்காரன் மேலே அடித்துவிட்டான் என்று, சாவியைக் கொடுக்கும் போதே, ராசு சொல்லியிருந்தான்.

பரவாயில்லை., அன்றைய லாபத்தை நினைக்கும் போது, இதைப் பெரிதாக நினைக்கக் கூடாது என்று எண்ணியிருந்தபோதும், தன் வாகனத்தைப் பார்க்கும் போது, காஞ்சனிக்குச் சற்று வருத்தமாகத்தான் இருந்தது. அவளது வண்டியின் அழகான இளநீல வண்ணம், அங்கங்கேதான், லேசாகத் தெரிந்தது. மற்றப்படி, பெயின்ட் அடிக்கப் போன வண்டியின் தோற்றம்தான்!

இதற்காகத்தான் அந்தக் காலத்தில், அவரவர் குதிரையை அடுத்தவர்களிடம் கொடுக்க மாட்டார்கள் போலும் என்று சிறு வாட்டத்துடன் எண்ணமிட்டபடிதான் அவள் ஸ்கூட்டரை அணுகினாள்.

ஆனால், எவனோ ஒருவன், அருகிருந்து, முட்டாள் அது இது எனவும், திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள்.

அவளைத்தான் உறுத்து விழித்துக் கொண்டிருந்தான் அந்தக் கடுத்த குரலின் உரிமையாளன்.

அப்படியானால், அவளையா வடிகட்டின முட்டாள் என்றான், அவன்?

என்ன தைரியம்!

ஆத்திரத்துடன், "ஏன்? இந்த இடத்தில் ஸ்கூட்டரை நிறுத்தக் கூடாது என்று ஏதேனும் சட்டம் இருக்கிறதா? இந்த இடத்துச் சொந்தக்காரர்கள்கூட, அப்படி ஏதும் எழுதி வைத்திருப்பதாகத் தெரியவில்லையே!" என்றாள், அவளும் ஏளனமாகவே.

ஆனால், இந்தக் கேள்வியில், அவன் ஒன்றும் அடங்கி விடவில்லை. மாறாக, "இதைவிடப் புத்தி சாலித்தனமான பதில் உன்னிடம் இருந்து எப்படி வர முடியும்?" என்றான், அவன் - இன்னமும் ஏளனமாக.

அவள் வெட்டுவது போல நோக்கவும், மேலே நோக்கி, "கடவுளே, எனக்குப் பொறுமையைக் கொடு!" என்று வேண்டிய மூச்சோடு, "பாரம்மா, நீ சொன்னது போலச் சட்டம் எதுவும் கிடையாதுதான். ஆனால், ஒரு வாகனத்தை நிறுத்தும்போது, அருகில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனத்தின் கதவைத் திறக்கக்கூட முடியாத அளவு நெருக்கமாக நிறுத்தக் கூடாது என்பது, நாகரீகம் தெரிந்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பொது விதி. ஆனால், அதை யெல்லாம் உன்னிடம் எதிர் பார்ப்பது... போகட்டும், தயவு செய்து, இப்போதாவது, உன் வண்டியை எடுக்கிறாயா? நான் இன்னும் பத்தே நிமிஷங்களில், 'தாஜி'ல் இருக்க வேண்டும். ரொம்பவும் தயவு பண்ணி, உதவி செய்!" என்று, பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில், ஏளனத்தை விரவியே சொல்லி முடித்தான் அவன்.

தன் ஸ்கூட்டர் நின்றிருந்த நிலையைப் பார்த்த காஞ்சனிக்கு, முகம் கன்றிச் சிவந்து போயிற்று

இந்த ராசு வண்டியை இப்படி நிறுத்தியிருப்பான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லையே.



கார் கதவைத் திறக்க முடியாமல், இவன் எவ்வளவு நேரம் நின்றானோ?!

இறங்கி விட்ட குரலில், "வந்து..." என்று தொடங்கினாள் காஞ்சனி.

"அதுதான் ஒரு வழியாய் வந்து சேர்ந்து விட்டாயே! இப்போதேனும் வண்டியை நகர்த்தினாயானால் நன்றாயிருக்கும்."

வண்டியை இப்படி நிறுத்தியது தானில்லை என்பதைத் தெளிவுபடுத்திவிட விரும்பி, "பாருங்கள், இந்த ஸ்கூட்டரை..." என்று தொடங்கியவளின் பேச்சில், பட்டென்று கைகுவித்து இடையிட்டான் அந்தக் கார்க்காரன்.

"தயவு பண்ணி, உன் வண்டியை எடுத்துத் தொலைக்கிறாயா? நான் உடனே போயாக வேண்டும். எனக்காக நடக்கும் விழா. அதற்கு நானே தாமதமாகப் போய் நின்றால் நன்றாயிராது. ப்ளீஸ்..."

கெஞ்சுவது போலக் குத்தல்!

மெகா சீரியலில் வருகிற மாதிரி, விளக்கத்தைக் கேட்கக் கூடப் பிடிவாதமாக மறுத்தால் எப்படி?

"அவ்வளவு அவசரப்படுகிறவர், ஸ்கூட்டர் ஸ்டாண்டை எடுத்துவிட்டு, மெல்ல மெல்ல நகர்த்தி, ஒதுக்கி விட்டு விட்டுக் காரை எடுத்திருக்கலாமே!" என்றபடி, ஸ்கூட்டர் சாவியை, அதன் சாவித் துவாரத்தில் நுழைத்தாள்.

என்னவோ, உலக மகாப் பாதகத்தைச் செய்யச் சொல்லி விட்டாற்போல, "என்னது!" என்று அதிர்ந்தான் அவன். "இந்த அழுக்கு வண்டியை, நான் தொட்டு

நகர்த்துவதா? சகதியைப் பூசிக்கொண்டா, பார்ட்டிக்குப் போவார்கள்? கொஞ்சம் கண்ணைத் திறந்து, என்னைப் பார்த்துவிட்டுப் பேசு, பெண்ணே!''

ஸ்கூட்டரை அகற்றியவாறு பார்த்தவள் சற்றுத் திகைத்தாள்.

ஆள் நல்ல உயரம் என்பதை, அவள் முதலிலேயே, ஸ்கூட்டரை நாடி வரும்போது, அவளது பார்வை வட்டத்தில் அவன் விழுந்தபோதே, உணர்ந்திருந்தாள். ஆனால், அந்த உயரம் ஒரு வலிமையை உள்ளடக்கியிருப்பதும் இப்போது தெரிந்தது. அவனது உயரத்தையும் வலிமையையும் எடுத்துக் காட்டுவது போலக் கரு நீல நிறத்தில் 'சூட்', எந்த இடத்திலும் பிதுங்காமல், சுருங்காமல் அவனோடு இலகுவாகப் பொருந்தி நின்றது.

'உன்னத'த்தின் தயாரிப்பாக இருக்கும்.

பளபளத்த கேசத்தில் இருந்து, நக நுனிவரை, துளி அழுக்குப் படாமல் சுத்தமாக,

ஏதோ பார்ட்டிக்குப் போகிற மாதிரி...

அடடா! ஏதோ விழாவுக்குப் போக வேண்டும் என்று கூடச் சொன்னானே!

இவனைப் போய் ஸ்கூட்டரைத் தள்ளியிருக்கலாம் என்றது தப்புதான் என்று எண்ணியவாறு, அவசரமாக நகருமுன், அவன் மீண்டும் வெடிக்கத் தொடங்கி விட்டான்.

''எவ்வளவு நேரம்! அவசரம், அவசரம் என்றால் புரியவில்லையா? இவ்வளவு அசமஞ்சத்தனமாக இருந்தால் எப்படி உருப்படுவது? இதனால்தான், பெரும்



பாலும் பெண்கள் பின்தங்கியே இருக்கிறார்கள்!'' என்று பொரிந்து கொட்டியபடி, அவள் வண்டியை நகர்த்தியிருந்த அளவில் கிடைத்த இடத்தில், கதவைத் திறந்து காரில் ஏறினான்.

என்ன, ஒரேயடியாக விரட்டுகிறானே, என்ற ஆத்திரத்தில், ''ஒரேயடியாகப் பேசுகிறீர்களே! உங்கள் வீட்டுப் பெண்களை வைத்து மற்றவர்களைக் கணிக்க வேண்டாம்!'' என்று பதிலுக்குத் தாக்கினாள் காஞ்சனி.

''அதற்கு வாய்ப்பே இல்லை, அம்மணி! எங்கள் வீட்டுப் பெண்கள் விதி விலக்குகள்!'' என்று திருப்பிக் கொடுத்தவன், பதில் தர அவளுக்கு வாய்ப்பளிக்காமல், அவளைச் சுற்றிக் காரை வேகமாக ஓட்டிச் சென்று விட்டான்.

கோழை! நின்று அவளுடன் வாய்ப் போரிடத் தைரியமற்று ஓடிவிட்டான். அத்தோடு, அவனிடம் நியாயம் இல்லை. அவளது விளக்கத்தைக் காது கொடுத்துக் கேட்கவும் இல்லையே!

அவன் பார்ட்டிக்கு நேரமாயிற்று என்றது நினைவில் வந்த போதும், அவளது ஆத்திரம் அடங்கவில்லை. மாறாக, அப்படி நின்று விளக்கம் கேட்க நேரமில்லாதபோது, அடுத்தவரை, அவன் அநியாயமாகக் குற்றம் சாட்டியிருக்கக் கூடாது, என்று வாதித்தது அவளது உள்ளம்.

இதிலேயே உழன்றவாறு திரும்பி வந்தவளின் முகத்தைப் பார்த்ததும் திலகா தன் குற்றமோ என்று சோர்ந்தாள்.

''என்ன காஞ்சி, அங்கே போன காரியம் வெறும் காயாகிப் போயிற்றா? நான் தாமதமாக அனுப்பிய

தாலா? சாரி, காஞ்சி! உன்னை நஷ்டப்பட வைத்து விட்டேன் போலத் தெரிகிறதே! எல்லாம் என்னால் வந்தது!'' என்று வருத்தமாக உரைத்தாள்.

சிநேகிதி என்ன பேசுகிறாள் என்று புரியவே, காஞ்சனிக்குச் சற்று நேரம் பிடித்தது.

சும்மாவே இருக்கும் கஷ்டம் போதாது என்று, திலகா தன்னைத் தானே வருத்திக் கொள்வதை உணர்ந்து, அவசரமாக, ''அதெல்லாம் இல்லை, திலகா. நம் டிசைன்களில் பாதிக்கு மேல் அவர்களுக்குப் பிடித்துப் போயிற்று. இந்த ஒரு மாதத்துக்கு, அதிகப்படி ஆட்கள் அமர்த்திச் செய்யும் அளவுக்கு ஆர்டர்கள் கொடுத்திருக்கிறார்கள். முன் பணமும்! நீ கல் ஒட்டி அனுப்பியதில் மூன்று விதம், கல்யாணப் பெண்ணின் சேலைகளுக்கே செய்ய வேண்டுமாம்!'' என்று, வருவித்துக் கொண்ட உற்சாகத்துடன், காஞ்சனி தெரிவித்தாள்.

மற்ற இரு பெண்களும் எதையெதை என்று, மகிழ்ச்சியோடு கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

தொழில் முயற்சி காஞ்சனியுடையதுதான் என்றாலும், வருமானத்துக்குத் தக்கபடி, தாராளமாகவே அவள் ஊக்கத் தொகையும் கொடுத்து வந்ததால், மற்ற இருவருக்கும், ரொம்பவே சந்தோஷம்.

இந்த ஆனந்த ஆரவாரம் முடிந்ததும், திலகா மீண்டும் விசாரித்தாள்.

''பின்னே ஏன் காஞ்சி, வரும்போது உன் முகம் வாடியிருந்தது?'' என்று கேட்டவள், அதற்குரிய பதிலையும் தானே எடுத்துக் கொடுத்தாள். ''எங்கள் வீட்டு விவகாரம்தானே? சம்பள நாளும் அதுவுமாகப்



பூபாலைத் தேற்றும்படி ஆனது ஏன் என்று, அதைப் பற்றிய யோசனைதானே?'' வருத்தத்துடன் வினவினாள்.

இல்லை என்று தோழியிடம் சொல்ல மனம் வரவில்லை, காஞ்சனிக்கு. எப்படியும், செல்லும்போது, அதே யோசனைதானே என்று சமாதானப் படுத்திக் கொண்டு, ''என்ன ஆயிற்று, திலகா? நான் என்னமோ, நீ உற்சாகத்தில் குதித்துக் கொண்டு வருவாய் என்று எண்ணினேனே!'' என்று கேட்டாள்.

''வந்திருக்க வேண்டும்தான்! இந்தப் பூபால் பையன், அவனது சம்பளப் பணத்தில், வீட்டுக்குக் கொண்டு வராமல், என்னமாவது வாங்கிச் செலவு செய்து விட்டு வந்திருந்தால்... ஆனால், எனக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தானாம்! என்ன வாங்குவது என்று தெரியாததால், என்னையும் கூட்டிப் போய் வாங்கலாம் என்று பணத்தோடு வீட்டுக்கு வந்தான். அவ்வளவுதான். பெற்றவரிடம் அன்பில்லாத துரோகி என்று திட்டி, அவனிடம் இருந்து, பணத்தைப் பிடுங்கிப் போய் விட்டார். கொஞ்சம் அசிங்கமாக, எனக்குப் பிறந்தவனா என்றெல்லாம் அப்பா பேசிவிட, இவன் துவண்டு போனான்! ச்சு!'' என்று திலகா வருத்தத்துடன் முடித்தாள்.

சிறு அமைதியின் பின், ''எல்லாம் பாடம்தானே, திலகா? பிழையிலிருந்து படிப்பது! உன்னைப் போலவே, பணத்தைக் கருத்தாய் பாங்கில் கட்டிவிட்டு வீடு வர, அவனுக்குக் கிடைத்த பாடம்! இந்த ஒரு மாத நஷ்டத்தைப் புத்திக் கொள்முதலாக நினைத்துக் கொள்ளும்படி அவனிடம் சொல்லு,'' என்றாள் காஞ்சனி.

''புத்திக் கொள்முதல்! பிரமாதம், காஞ்சி! இந்த வார்த்தை நேற்றே எனக்குத் தோன்றியிருந்தால், பூபால் உடனேயே தெளிந்திருப்பான். ஆனால், உன் புத்திசாலித்தனம் எனக்கு ஏது?'' என்றாள், திலகா.

அதிகம் பேசாத அனகாவும், பார்வையில் தன் ஒப்புதலைக் காட்டினாள்.

ஆனால், காஞ்சனியின் மனம் சமாதானம் அடைய மறுத்தது.

இவர்கள் எல்லாம் பாராட்டி என்ன ஆயிற்று? அவன் அவளை முட்டாள் என்றல்லவா சொன்னான். அதிலும் வடி கட்டிய முட்டாள் என்றானே.

வண்டியை நிறுத்தியது தானல்ல என்று சொல்லவே இடம் கொடாதவன், இனிச் சொன்னால்கூட நம்புவது சந்தேகம். பெண்கள் புளுகுகிறவர்கள் என்றுதான் சொல்லக் கூடும்.

அடுத்த முறை 'உன்னதத்'துக்குச் செல்லும்போது, ஸ்கூட்டரைக் கவனத்துடன், ரொம்பவே ஒதுக்கி நிறுத்தினாள் காஞ்சனி.

சுற்றும் முற்றும் பார்த்ததில், அக்கம் பக்கத்தில்கூட, அந்த ஆத்திரக்காரனது கார் கண்ணிலேயே படவில்லை!

ஒருவேளை, திடுமென அவன் வந்து விட்டால்?

அவசரமாகச் செல்லும்போதே, கார் வந்து நிறுத்தும் சத்தமும் கேட்டது.

அதே வெளிர் தங்க நிறக் காரைத் திரும்பிப் பார்த்தவாறே, வேகமாக நிறுவனத்துக்குள் சென்று மறைய முயன்றவள், யார் மீதோ மோதிய வேகத்தில்,



அவள் கையிலிருந்த ஃபைல் திறந்து, உள்ளிருந்தனவெல்லாம் சிதறி விழ, கூடவே அவளும் விழுந்து விடாமல், யாரோ அவளை அழுந்தப் பிடித்து நிறுத்தினார்கள்.

வேறு யாரும் அல்ல.

'அந்த' அவனேதான்.

''காரின் கதவைத் திறக்க முடியாதபடி, அடுத்த வாகனத்தை நிறுத்தக் கூடாது என்பதுபோல, செல்லும் வழி மேல் விழி வைத்துப் போக வேண்டும் என்பதாகக் கூடப் பொது விதி ஒன்று உண்டு என்று எனக்கு ஞாபகம்!'' என்று, கண்களில் குறும்பு மிளிரக் கூறினான் அவன்.



3 தான் கீழே விழாமல் தாங்கிப் பிடித்தது, அந்தப் பொல்லாத காராளன்தான் என்று அறிந்ததும், காஞ்சனியின் முகம் கன்றிச் சிவந்து போயிற்று.

அவன் முகத்தில்கூட விழிக்கக் கூடாது என்று [illegible] எண்ணினால், இப்படி ஆகிவிட்டதே என்று குன்றிப் போனாள் அவள்.

அவளது தப்பு இல்லாதபோதே, அந்தக் கத்துக் கத்தினான். அவளது விளக்கத்தைக் காது கொடுத்துக் கேட்கவும் இல்லை.

அவளது காரின் பக்கத்தில் ஸ்கூட்டர் நின்றதற்கே, கண்டபடி திட்டினான். இப்போது, அவன் மேலேயே மோதி இதற்கு என்னவெல்லாம் சொல்லப் போகிறானோ என்ற கலக்கத்துடன் அவள் நிமிர்ந்தபோது

அவனது இலகுவான பேச்சு, அவளைத் திகைக்க வைத்தது.

கூடவே, இன்னமும் அவனது பிடியிலேயே நிற்பதை உணர்ந்து, சட்டெனத் துள்ளி நகர்ந்தாள். "சா..., சாரி... நா.. ன்.. நான்..." என்று, சொல்வதறியாது காஞ்சனி தடுமாறினாள்.

"பாதையில் கண் பதிக்கவில்லை!" என்று அவளுக்காக முடித்துக் கொடுத்தான் அவன். லேசாக முறுவலித்து, "பரவாயில்லை. அது ஒன்றும் இமாலயத் தவறு அல்ல. இப்போது, உங்கள் ஃபைல் சிதறி விட்டதே!" என்று சுலபமாகப் பேசியவாறே, கீழே விழுந்தவற்றை, அவளோடு சேர்ந்து பொறுக்கி எடுத்தான்.

என்ன சாதாரணமாக உதவியபடி, சரளமாகவும் பேசுகிறான்! நீங்கள் என்று மரியாதைப் பன்மை வேறு!

இவனும், அந்த ஆத்திரக்காரனும் ஒருவனேதானா?

காரணம் சொல்லக்கூட விடாதவன் இப்போது காரணம் இருந்தும், பெரிய தவறு அல்ல என்கிறானே!

திரட்டி எடுத்த மாதிரித் துணிகளை, அனுமதி கேட்டுக் கொண்டு, அருகில் இருந்த கவுன்ட்டர் மேல் வைத்த காஞ்சனி, உள்ளூர வியப்புடன் அவனை நோக்கிவிட்டு, உதவி செய்தமைக்காக நன்றியுரைத்தாள்.

லேசாகத் தோளைக் குலுக்கி, அந்த நன்றியை இதமாக ஒதுக்கிவிட்டு, "என்ன அவ்வளவு வேகமாக வந்தீர்கள்? அதுவும், பின்னால் திரும்பிப் பார்த்தபடி... எதற்காக? ஏதேனும் பிரச்..." என்று அவன் கேட்கும் போதே, தன்னை மீறிக் காஞ்சனியின் பார்வை, வெளியே நின்று கொண்டிருந்த வெளிர் தங்க நிறக்



காரின் மீது பாய்ந்து, தவறை உணர்ந்து, அவசரமாக மீண்டும் வந்து விட்டது.

ஆனால், அவனிடமும் வேகம் உண்டு போலும்!

அவளது பார்வை சென்ற இடத்தைக் கண்டு கொண்டதோடு, அவள் உள்ளே விரைந்து வந்த காரணத்தையும் கணித்து, "ஓ, இப்போது என் முறை..." என்று, சிறு முனகலில் முனகினான். தொடர்ந்து, "நீங்கள் என்னை ரொம்பக் கோபக்காரன் என்று கருதி விட்டீர்கள் என்று தெரிகிறது. காரைப் பார்த்ததும், என்னைத் தவிர்க்க, இப்படி ஓட்டம் பிடித்திருக்கிறீர்களே! வந்து பாருங்கள். நான் எப்போதுமே அப்படி 'வள்'ளென்று விழுகிறவன் அல்ல. சில பெண்கள் வாகனங்களை ஓட்டும் விதம் எனக்குப் பிடிக்காதுதான்..." என்றவனைக் குறுக்கிட்டு, "அதென்ன, பெண்கள் மட்டும்? ஆண்கள் தப்பாக ஓட்டுவது இல்லையா?" என்று திருப்பினாள் காஞ்சனி.

"ஓட்டுகிறார்கள். ஆனால், மாட்டிக் கொள்ளும் போதே, வெறுமனே உடம்பை நெளித்து, இளித்தால் போதும் என்று இருப்பதில்லை. நீங்களும் சின்னப் பெண்ணாக இருந்ததால், அதையே எதிர்பார்த்துச் சுத்தி... ஆனாலும், அந்த ஒரு சிலருக்காக, நான் பெண்களைக் குறைவாக மதிப்பிடுகிறவன் கிடையாது. அம்மாவுக்கு ஒரு முக்கிய விழாவுக்குப் போக வேண்டியிருந்தது!" என்று விளக்கலானான்.

இப்படி விளக்கம் கொடுத்தோ, மன்னிப்பை வேண்டியோ, இவனுக்குப் பழக்கம் இல்லை என்று காஞ்சனிக்குத் தோன்றியது.

அவனது சங்கடம் மனதை உறுத்த, ''சொன்னீர்களே! உங்கள் விழா.. அதற்கு நீங்களே தாமதமாகப் போகக் கூடாது... என்று...'' என்று எடுத்துக் கொடுத்தாள் அவள் -

அநியாயமாகக் குற்றம் சாட்டியவன்! இது போல விளக்குவதற்கு அவளுக்கு வாய்ப்புக் கொடுக்காத வனும் கூட! இவனுக்குப் போய் இளகுவதா என்று, அவளுக்குத் தன் மீதே கொஞ்சம் எரிச்சல் வந்தபோதும்!

''ஆமாம். அதுதான் எனக்கு ஒரே தவிப்பாக இருந்தது. இங்கே தைத்த கோட்டு அளவு சற்றுச் சரியில்லாமல் போய்க் கடைசி நேரத்தில் சீர் செய்யும்படி ஆயிற்று. அது முடிந்து வந்தால், காரை எடுக்க முடியாமல்... கடைசியாக, அங்கே அமைச்சரின் கார் முதலில் உள்ளே போய்விட்டது. கார் சாவியை செக்யூரிட்டியிடம் கொடுத்துவிட்டுப் பின் வழியே ஓடி, நான் மேடைக்குப் போய்ச் சேரவும், மாலை மரியாதைகள் முடிந்து, அமைச்சர் வரவும், சில வினாடி வித்தியாசத்தில் சமாளித்தேன். இருந்திருந்து, நான் தாமதம் ஆவதா என்று அந்த இறுக்கத்தில் இருந்தேன். வீட்டுப் பெண்களைப் பற்றிக் குறிப்பிட்டீர்களா, சும்மா வாய்க்கு வந்தபடி, கத்தி விட்டேன்! ஆனால், என் அம்மா போலவே, நீங்களும் தனிதான். பதிலுக்குப் பதில் என்று சும்மா கத்திக் கொண்டிராமல், தப்பை உணர்ந்து, வண்டியையும் நகர்த்தினீர்களே! பிறகு யோசிக் கும்போதுதான், அது நினைவு வந்தது. எப்போதாவது உங்களைப் பார்க்க முடிந்தால், விஷயத்தை விளக்கிவிட வேண்டும் என்று தீர்மானித்து வைத்தேன்,'' என்று முடித்தவன், சட்டென முகம் மலர, ''நல்ல வேளையாக, அந்த வாய்ப்பும் விரைவிலேயே கிடைத்தது.. இப்போது எல்லாம் புரிகிறதில்லையா?'' என்று முறுவலித்தான்.



விழியகலப் பார்த்தவளுக்குப் புரிய வேண்டியது இன்னும் எதுவோ இருப்பது போலத் தோன்றியது. அத்தோடு, அவனது பேச்சில் ஒன்று உறுத்த, ''நான் கூட, உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும். அன்று, ஸ்கூட்டரை அப்படி நிறுத்தியது நான் அல்ல...'' என்று தொடங்கினாள்.

ஆனால், அவளது பேச்சில் குறுக்கே புகுந்து, ''அப்படி நிறுத்தியிருந்தாலும், அது ஒன்றும் பெரும் குற்றம் அல்லம்மா! பார்ட்டி உடை இல்லையென்றால், நானே அதை நகர்த்தி விட்டுவிட்டுப் போயிருப்பேன். வாயிற் காவலனைக் கொண்டும் அதைச் செய்திருக்கலாம். ஆனால், அன்று லாரியில் இருந்து இறக்கிய சரக்குப் பெட்டி களைச் சரி பார்த்துக் கொண்டு இருந்தான், அவன். எனக்குக் காத்திருக்க நேரம் இல்லாது போனதுதான் பிரச்சினை!'' என்று பெரிய தாராள மனதோடு பேசினான் அவன்.

இப்போதும், அவளது விளக்கத்தை அவன் கேட்ப தாக இல்லை.

கருகருவென்று மூளத் தொடங்கிய சினத்துடன், ''அப்படியானால், நான்தான் வண்டியை நிறுத்தியிருப் பேன் என்றே, இன்னமும் நினைக்கிறீர்களா? என்னோடு வாருங்கள்!'' என்று மாடியேறத் திரும்பியபோது, அவளுக்கு உதவவே போல, ராகவே கீழே இறங்கி வந்து கொண்டிருந்தான்.

செய்த தப்புக்குப் பரிகாரம் புரிவதுபோல, அவனே விஷயமும் தெரிவித்தான். ''அன்னிக்கு மழைச்

சகதியைப் பஸ்காரன் அடிச்சிட்டுப் போயிட்டான்மா! கால்வாளித் தண்ணியை ஊத்திக் கழுவி வைக்கலாம்னு தான் நினைத்தேன்," என்று அதற்காகத்தான் அவள் கேட்பதாக எண்ணிச் சொல்லத் தொடங்கினான். "வண்டியை நிறுத்துமின்னே, சரக்கு வந்ததைப் பிரிச்சு எடுக்கணுமின்னு, வாட்ச்மேன் கூப்பிட்டாரு! இதோ, நம்ம சார் வண்டி பக்கத்திலே நிறுத்திவிட்டு, மேலே ஓடியாந்து, உங்க சாமானைக் கொடுத்திட்டு, அவசர மாப் போனவன், வண்டியைக் கழுவ மறந்திட்டேன்!" என்று அசடு வழிந்தான்.

இதற்கு மேல் என்ன வேண்டும்?

கிண்டல் சிரிப்பைக் காட்டாதிருக்க முயன்றபடி, "அதற்கில்லை, ராசு! அன்று உன் வேலையை விட்டு விட்டு, எனக்காகப் போய் வந்தாயே! அதற்காக, உனக்கு ஒன்றுமே தரவில்லையே! அதற்காகத்தான் கூப்பிட்டேன்!" என்று, கைப்பையைத் திறந்து, ஓர் ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் கொடுத்தாள், காஞ்சனி.

வாயெல்லாம் பல்லாக, "டாங்க்ஸ், மேடம்! இன்னும் எதுனாச்சியும் எடுத்தார வேணுமின்னா, என் கிட்டயே சொல்லுங்க, மேடம்!" என்று விட்டுப் போனான், அவன்.

"ரொம்பப் பெரீதாக மன்னிப்புக் கேட்க வேண்டும் போலத் தெரிகிறதே! ஹூம்..." என்று நீளமாகப் பெருமூச்சு விட்டான் அவன். "ஆனாலும், என்னை அசடு வழிய வைத்ததற்காக, ஐம்பது ரூபாய்ப் பரிசு கொடுத்தது அதிகப்படியாகத் தோன்றவில்லை?" என்று



அவன் சந்தேகம் காட்டியதும், காஞ்சனி தன்னை மீறிச் சிரித்தாள்.

"அருமையான சிரிப்பு! இதைக் காணக் கிடைப்பதற் காகக் கொஞ்சம் அசடு வழிந்தாலும் பரவாயில்லை!" என்று அவன் ரசனையோடு கூறவும், மீண்டும் சிரித்துக் காட்ட வேண்டும் போலத் தோன்றியதைச் சட்டெனக் கட்டுப்படுத்திக் கொண்டாள், அவள்.

யாரோ ஒருவன், ஏதோ ஐஸ் வைத்தால், உச்சி குளிர்ந்து போவதா?

அவன் இன்னும் சரியாக மன்னிப்புக் கூடக் கேட்க வில்லை என்பதும் காஞ்சனிக்கு அப்போது நினைவு வந்தது.

"நான் வருகிறேன். என் வேலையைக் கவனிக்க வேண்டும்!" என்று, கவுன்ட்டர் மீது வைத்த மாதிரிகளை எடுத்துக் கொண்டு, அடுத்த தளத்துக்குக் கிளம்பினாள் அவள்.

கூடவே நடந்தபடி, "இன்னும் உங்கள் பெயரைச் சொல்லவில்லையே! பார்க்கும் இடத்தில், உன்னதத்தில் மோதி விழப்போன பெண்ணே என்று கூப்பிட முடி யாதல்லவா?" என்று அவன் கேட்டபோது அது போன்ற கற்பனையில் லேசாக முறுவலித்து, "காஞ்சனி" என்றாள் அவள்.

"அழகான பெயர்!" என்று சிலாகித்தவன், "இரண் டாம் தளத்தில்தான் உங்கள் வேலையா? இது போல வேலைப்பாடுகளைச் செய்து கொடுப்பதா? அலங்கார வேலை மட்டுமா, அல்லது, முழு உடையுமேவா, காஞ்சனி?" என்று மேலே சரளமாகப் பேசவும் அவள் திகைத்தாள்.

இவன் யார் என்று தன் பெயரை அவன் சொல்லவில்லையே!

அவனை அறியும் ஆவல் இருப்பதாகத் தோன்றி விடுமோ என்பதால், காஞ்சனியால் அதைக் கேட்கவும் முடியவில்லை.

ஆனால் நேரடியாக மன்னிப்புக் கேளா விட்டாலும், என்றோ நடந்ததற்கு இவ்வளவு நீளமாய் விளக்கம் சொன்னவன், வேண்டும் என்று பெயரைச் சொல்லாதிருப்பான் என்றும் அவளுக்குத் தோன்றவில்லை. கூடவே, தொடர்ந்து அவன் சகஜமாகப் பேசிய விதமும் அவளுக்குக் குழப்பத்தையே தந்தது. என்னவோ, அவனை அவளுக்குத் தெரிந்திருக்கும் என்று எண்ணியதுபோல...

ஒரு வேளை, சற்று தூரத்து உறவு, நட்பு வட்டத்தில், அறிமுகம் ஆனவன்தானோ, அவள்தான் மறந்து விட்டாளோ என்று யோசித்தபோது, எதிர்மறைப் பதில்தான் கிடைத்தது. அவனே அவள் பெயரைக் கேட்டுத்தானே தெரிந்து கொண்டான்?

பின்னே?

உள்ளூரச் சஞ்சலப் பட்டபோதும், அதை வெளிக் காட்டாமல் நிமிர் நடையுடனேயே, அவனுக்கு உரிய பதிலைத் தந்தபடி, காஞ்சனி இரண்டாவது தளத்தை அடைந்தாள்.

படியேறி முடித்ததுமே, அவன் புறமாகத் திரும்பி, "இனி நான் தொழில் முறைப் பேச்சு நடத்தப் போக வேண்டும்! அதனால்..." என்று, விடைபெறும் விதமாகக் கை கூப்பினாள்.



இலகுவாக முறுவலித்து, "ஏன், இந்தப் பக்கம் சுற்றிப் பார்த்துக் கொண்டு நான் நின்றால், உங்கள் தொழில் பேச்சுக்கு, அது இடையூறாக இருக்குமா?" என்று அவன் புருவம் உயர்த்தி வினவவும், அவளுக்கு உள்ளூர எரிச்சல் வந்தது.

இவன் என்ன மகா மன்மதன், இவன் இருக்கும் இடத்தில், அவளுக்கு வேலை ஓடாமல் போவதற்கு?

லேசாகத் தோளைக் குலுக்கி விட்டு, வழக்கமாகச் சுகவனம் அமர்ந்திருக்கும் பகுதியை நோக்கி வேகமாக நடந்தாள் அவள்.

அவனது நேரம்! அதை வீணாக்குவதோ, உருப்படியாகச் செலவழிப்பதோ, அவனது விருப்பம். எப்படியோ போகட்டும்.

அதற்குள், "ஹலோ சியாமளன், சௌக்கியமா? ஆனால், நீ எங்கே இந்தப் பக்கம்?" சுகவனத்தின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால், பக்கவாட்டில் உடைகளை அணிந்து பார்க்கும் அடைப்பைத் திறந்து கொண்டு வெளியே வந்த அவர், 'அவ'னிடம்தான் பேசிக் கொண்டிருந்தார்.

ஆக, இவன் பெயர் சியாமளனா? நிறத்தால் ஒரேயடியாகப் பொருத்தம் என்று சொல்ல முடியா விட்டாலும், எப்படியோ, அந்தப் பெயர் அவனோடு ஒத்துப் போவது போலக் காஞ்சனிக்குத் தோன்றியது. அவனுள் ஒரு வேகம்.. ஒரு வலிமை.. கூடவே.. கூடவே என்னவென்று சொல்லத் தெரியாத ஏதோ ஒன்று.

"நன்றாயிருக்கிறீர்களா?" என்று பெரியவரிடம் பதிலுக்குக் குசலம் விசாரித்துவிட்டு, "என்ன அங்கிள்,

இவன் யார் என்று தன் பெயரை அவன் சொல்லவில்லையே!

அவனை அறியும் ஆவல் இருப்பதாகத் தோன்றி விடுமோ என்பதால், காஞ்சனியால் அதைக் கேட்கவும் முடியவில்லை.

ஆனால் நேரடியாக மன்னிப்புக் கேளா விட்டாலும், என்றோ நடந்ததற்கு இவ்வளவு நீளமாய் விளக்கம் சொன்னவன், வேண்டும் என்று பெயரைச் சொல்லாதிருப்பான் என்றும் அவளுக்குத் தோன்றவில்லை. கூடவே, தொடர்ந்து அவன் சகஜமாகப் பேசிய விதமும் அவளுக்குக் குழப்பத்தையே தந்தது. என்னவோ, அவனை அவளுக்குத் தெரிந்திருக்கும் என்று எண்ணியதுபோல...

ஒரு வேளை, சற்று தூரத்து உறவு, நட்பு வட்டத்தில், அறிமுகம் ஆனவன்தானோ, அவள்தான் மறந்து விட்டாளோ என்று யோசித்தபோது, எதிர்மறைப் பதில்தான் கிடைத்தது. அவனே அவள் பெயரைக் கேட்டுத்தானே தெரிந்து கொண்டான்?

பின்னே?

உள்ளூரச் சஞ்சலப் பட்டபோதும், அதை வெளிக் காட்டாமல் நிமிர் நடையுடனேயே, அவனுக்கு உரிய பதிலைத் தந்தபடி, காஞ்சனி இரண்டாவது தளத்தை அடைந்தாள்.

படியேறி முடித்ததுமே, அவன் புறமாகத் திரும்பி, "இனி நான் தொழில் முறைப் பேச்சு நடத்தப் போக வேண்டும்! அதனால்..." என்று, விடைபெறும் விதமாகக் கை கூப்பினாள்.



இலகுவாக முறுவலித்து, "ஏன், இந்தப் பக்கம் சுற்றிப் பார்த்துக் கொண்டு நான் நின்றால், உங்கள் தொழில் பேச்சுக்கு, அது இடையூறாக இருக்குமா?" என்று அவன் புருவம் உயர்த்தி வினவவும், அவளுக்கு உள்ளூர எரிச்சல் வந்தது.

இவன் என்ன மகா மன்மதன், இவன் இருக்கும் இடத்தில், அவளுக்கு வேலை ஓடாமல் போவதற்கு?

லேசாகத் தோளைக் குலுக்கி விட்டு, வழக்கமாகச் சுகவனம் அமர்ந்திருக்கும் பகுதியை நோக்கி வேகமாக நடந்தாள் அவள்.

அவனது நேரம்! அதை வீணாக்குவதோ, உருப்படியாகச் செலவழிப்பதோ, அவனது விருப்பம். எப்படியோ போகட்டும்.

அதற்குள், "ஹல்லோ சியாமளன், சௌக்கியமா? ஆனால், நீ எங்கே இந்தப் பக்கம்?" சுகவனத்தின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால், பக்கவாட்டில் உடைகளை அணிந்து பார்க்கும் அடைப்பைத் திறந்து கொண்டு வெளியே வந்த அவர், 'அவ'னிடம்தான் பேசிக் கொண்டிருந்தார்.


ஆக, இவன் பெயர் சியாமளனா? நிறத்தால் ஒரேயடியாகப் பொருத்தம் என்று சொல்ல முடியா விட்டாலும், எப்படியோ, அந்தப் பெயர் அவனோடு ஒத்துப் போவது போலக் காஞ்சனிக்குத் தோன்றியது. அவனுள் ஒரு வேகம்.. ஒரு வலிமை.. கூடவே.. கூடவே என்னவென்று சொல்லத் தெரியாத ஏதோ ஒன்று.

"நன்றா யிருக்கிறீர்களா?" என்று பெரியவரிடம் பதிலுக்குக் குசலம் விசாரித்துவிட்டு, "என்ன அங்கிள்,

நானாவது பெண்கள் ஆடைப் பகுதிக்கு மட்டும்தான் வந்திருக்கிறேன்! அதற்கே எங்கே வந்தாய் என்கிறீர்கள்! நீங்களானால், பெண்கள் தனியாக உடை மாற்றும் இடத்தில் இருந்தே வருகிறீர்களே, இதை என்னவென்று சொல்வது?'' என்று கேலியாக நகைத்தான், அந்தச் சியாமளன்.

கேட்ட அனைவரும் கிளுக்கிச் சிரிக்க, ''நாட்டி பாய்!'' என்றார் சுகவனம். ''உள்ளே ஒரு லைட் எரியவில்லை என்று பார்க்கப் போனால்...'' என்று அவர் விளக்கம் சொல்ல, ''நீங்கள் பொய்யா சொல்லப் போகிறீர்கள், அங்கிள்? ஒத்துக் கொள்கிறேன், ஒத்துக் கொள்கிறேன்! நீங்கள் என்ன சொன்னாலும், அப்படியே ஒத்துக் கொள்கிறேன்!'' என்று கண்களை அகல விரித்து, அப்பாவியாய் உரைத்து, இன்னொரு சிரிப்பலையை எழுப்பினான் அவன்.

சிரிப்பை மறைக்கும் முயற்சியில், முகத்தை வேறு புறம் திருப்பியவளின் மனம், இவன் அந்தக் கண்ணனே தான் என்று கணித்தது.



சியாமளனுக்குச் சுகவனம் ரொம்பவும் பழக்கப் பட்டவர் போலும். அவனது கேலியைத் தவறாக எடுத்துக் கொள்ளாததோடு, மற்றவர் களோடு சேர்ந்து, தானும் சிரித்தார்.

பிறகு, ''பொல்லாத போக்கிரி! உனக்குப் பதில் சொல்ல என்னால் ஆகாதப்பா! ஆனால், அதை விடு. வழக்கமாகக் கீழே, ஆண்கள் உடைப் பகுதியோடு திரும்பி விடுவாயே! இன்று, இங்கே என்ன திடீர் விஜயம்? யாராவது சிநேகிதிக்கு ஏதாவது வாங்க



வந்தாயா?'' என்று, தன் பங்குக்கு, அவனைச் சீண்டினார்.

''சிநேகிதியா? எனக்கா? ஐயோ, நான் சுத்தம் அங்கிள்!'' என்று அவசரமாகப் பதிலுறுத்தான் அந்த இளைஞன்.

''அட, சும்மா சொல்லுப்பா! நான் ஒன்றும் உன் அப்பாவிடம் போட்டுக் கொடுத்துவிட மாட்டேன்!'' என்று அவர் மேலும் சீண்டவும், ''தெரிந்தவர்களோடு பேசிக்கொண்டு, அப்படியே உங்களையும் பார்க்கலாம் என்று வந்தேன், அங்கிள். அதைப் போய், இல்லாத தெல்லாம் சொல்லாதீர்கள்!'' என்று முடித்து விட்டு, ''உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள் போல!'' என்று, சற்றுத் தள்ளி நின்ற காஞ்சனியைக் காட்டினான் சியாமளன்.

அவளைக் கண்டதும், சுகவனத்தின் முறுவல் மேலும் விரிந்தது.

விடைபெறும் விதமாகச் சியாமளனிடம் தலையாட்டி விட்டு, அவளிடம் வந்து, ''என்னம்மா, கல்யாண வீட்டுக்காரர்கள் உன் வேலையைப் புகழோ புகழ் என்று புகழ்கிறார்களே! நீ அனுப்பிய மூன்று சேலைகளுமே, மணப் பெண்ணுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டதாம்! இன்னும்கூடச் சில ஆர்டர்கள் தந்தார்கள். மூன்று வாரத்தில் முடித்துக் கொடுக்க வேண்டும். முடியுமா?'' என்று வினவினார்.

முகம் மலர, ''செய்யலாம், சார். இப்போது உங்களுக்குக் காட்டச் சில சிகான், ஜர்தோஷி வேலைப்பாடு, புதிது எடுத்து வந்தேன். பார்க்கிறீர்களா?'' என்று சேலையை எடுத்தாள் காஞ்சனி.

"பார்ப்போமே! ஒன்று மட்டும் நினைவிருக்கட்டும். கல்யாண வீட்டுக்காரர்கள் ரொம்ப வசதி உள்ளவர்கள். அவர்களைப் பார்த்து மற்றவர்கள் என்று, நிறைய, நல்ல நல்ல ஆர்டர்கள் தொடரக் கூடும். ஆனால், காசு விஷயத்தில், எல்லோரையும் நம்பி விட வேண்டாம். முதலில் கொஞ்சம் கண்டிப்பாக இருந்து விட்டால், பிற்பாடு தொல்லை யிராது!" என்று, ஃபைலைப் பிரித்தார் சுகவனம்.

"எப்போதுமே, நான் அப்படித்தான் சார்!" என்றாள் காஞ்சனி. "ஒவ்வொரு வினாடியும் ஏமாறுவதற்கு ஒரு வரும், ஏமாற்றுவதற்கு இரண்டு பேரும் பிறந்து கொண்டே இருப்பதாகச் சொல்வார்கள். நீ இரு பிரிவிலும் இருக்கக் கூடாது என்று, இதைத் தொழிலாகத் தொடங்கும் போதே, அப்பா சொல்லியிருக்கிறார், சார்! அதனால், நான் கவனமாகத்தான் இருப்பது!" என்று விட்டு, கொண்டு வந்த வேலைப்பாடுகளை, ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டி விவரம் சொல்லலானாள்.

ஆனால், இலகுவாய் கவுன்ட்டரில் சாய்ந்தபடி சியாமளன் அங்கேயே நின்று கவனிக்கையில், சுகவனத்தோடு பிசினஸ் பேச்சுப் பேசுவது அவளுக்குக் கடினமாகத்தான் இருந்தது. தன் குரலில் வழக்கமான அமைதியும் அழுத்தமும் குறைந்திருந்தது போல, அவளுக்கு ஓர் எண்ணம்.

ஒரு வேளை, அவளுக்குத்தான் அப்படித் தோன்றியதோ?

ஏனெனில், சுகவனத்தின் பேச்சு முறையில் எந்த வித மாறுதலும் இருக்கவில்லை.

எனவே, முடிந்தவரை சியாமளனை மனதிலிருந்து பிடிவாதமாக ஒதுக்கிவிட்டு, அவளும் வந்த வேலையில் தீவிரமாகக் கவனத்தைச் செலுத்தலானாள்.



இரண்டு பேருமே நேரத்தின் அருமை தெரிந்தவர்கள் என்பதால், வீண் வளவளப்பின்றி விரைவாகவே பேச்சு வார்த்தை முடிந்து, வேலைப்பாடு செய்வதற்கான துணிகளுடன், காஞ்சனி கிளம்பினாள்.

திருமண வீட்டுக்காரர்கள் அனுப்பியிருந்தவையோடு சேர்ந்து, துணிகள் சற்று அதிகமாகத்தான் இருந்தன.

பெரிய ஜம்போ பைகள் மூன்று.

அவள் யோசனையோடு பார்க்கையிலேயே, "நான் தூக்கி வந்து தருகிறேன்!" என்று சியாமளன் உதவிக்கு வந்தான்.

"இல்லை, ராசுவை..." என்று அவள் தயங்குகையில், "சும்மா தூக்கட்டும்மா! வீரப் பிள்ளையின் உடம்புக்கு வலுக் கூட வேண்டும் என்று, அவன் அம்மா, முட்டையும் மீனுமாகத் திணிக்கிறார்கள். இப்படியாவது, தொப்பை கொஞ்சம் கரையட்டும்!" என்று சிரித்தார் சுகவனம்.

தொப்பை இருந்தால்தானே, கரைவதற்கு என்று காஞ்சனி நினைக்கும்போதே, "தொப்பையா? எனக்கா? [illegible] சொன்ன வாய்க்குப் போஜனம் கிடைக்காது. [illegible] போகிற வழியில், ஆண்ட்டியிடம் போய், உங்களுக்கு உப்பு, எண்ணெய் ஒன்றும் இல்லாத பத்தியச் சாப்பாடு போடச் சொல்லி, உங்கள் தொப்பையைக் குறைக்க வழி வைக்கிறேன், பாருங்கள்!" என்று மிரட்டி விட்டு, அனாயசமாகப் பைகளைத் தூக்கிக் கொண்டு, "வாருங்கள், காஞ்சனி!" என்று சியாமளன் முன்னே நடந்தான்.

"ஐயோ! எல்லாம் நீங்களேவா? ஒன்றை நான் எடுத்து வருகிறேனே!" என்று அவனது வேகத்துக்குச்

சரியாக நடந்தபடி, அவள் வேண்ட, "ஒன்றும் வேண்டாம். நீங்கள் பெயருக்கேற்றபடி, தங்கச் சிலையாக என்னோடு வாருங்கள், போதும்! பொருள் சரிதானே? காஞ்சனம் என்றால், தங்கம் என்றுதானே அர்த்தம்? ஆனால், காஞ்சனா என்றுதானே பெயர் வைப்பார்கள்?" என்று கலகலப்பாகப் பேசிய விதத்தில், தன்னையறியாது இணைந்து, "ஆமாம். ஆனால், யாராவது 'காஞ்ச நாய்' என்று கேலி செய்வார்களோ என்று அப்பாவுக்குப் பயம். அதனால் இப்படி வைத்து விட்டார்கள்!" என்று பதிலிறுத்தாள் அவள்.

"அத்தோடு, 'காஞ்சனி' எனும்போது, கேட்பதற்கும், தேன் வடிகிற மாதிரி இனிமையாக இருக்கிறதே! உங்கள் அப்பா கெட்டிக்காரர்தான்!" என்று அவன் சொன்னதும், அவளுக்கு உவப்பாக இருந்தது.

வெளியே சென்ற பிறகும், பைகளை அவன் தலையில் கட்டிவிட்டு, எப்படியோ போ என்று அவன் சென்று விடவில்லை. மாறாக, இந்த மூன்று பெரிய பைகளை ஸ்கூட்டரில் கொண்டு செல்வது கடினம், கூடாது என்றபோது, அவளும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

பின் இடத்தில் வைத்துக் கட்டிவிடலாம் என்றாலோ, துணிகள் கசங்கி விடக் கூடாதே என்று அது வேறு பார்க்க வேண்டியிருந்தது.

கீழ்த் தளத்தில், சியாமளன் மிகவும் அறிமுகம் ஆனவனாக இருந்தது இப்போது அவளுக்கு வசதியாகிப் போயிற்று.

அந்தத் தளத்தில் பொறுப்பாளரை அணுகி, அவன் ஒரு பேச்சு பேசியதும், எல்லாம் மந்திரம் போட்ட



மாதிரி நடந்தது. அவர்களுக்கு, அவன் ஒரு முக்கியமான வாடிக்கையாளன் என்பது நன்றாகப் புரிந்தது.

விரைவிலேயே, அங்கிருந்த பொறுப்பாளரின் உத்தரவுப்படி, மேல் தளத்து ராசுவைப் போன்ற எடுபிடி ஒருவன், ஆட்டோவில் மூன்று பைகளோடும், காஞ்சனியின் அலுவல் இடத்துக்குப் போய்க் கொண்டிருந்தான்.

பொறுப்பாளருக்கு நன்றியுரைத்து விட்டு, வெளியே வந்தவள், சியாமளனுக்கும் நன்றி தெரிவித்துவிட்டுக் கிளம்ப முயன்றால், அவன் மேலும் பேச்சுக் கொடுத்தான்.

"நிஜமாகவே உங்கள் மனதில் நன்றி இருக்கு[illegible]னால், உங்கள் வேலை பற்றி, எனக்குச் சில விவரங்[illegible] தெரிவித்துவிட்டு, அப்புறம் கிளம்புங்கள், காஞ்சனி!" [illegible]றான் அவன்.

தொடர்ந்து, அவனோடு நின்று பேசிக் கொண்டிருப்பது, [illegible]னிக்குச் சரியாகப் படாவிட்டாலும், உதவி [illegible]விடம் மறுப்பதும் கடினமாகப் பட்டது.

"[illegible] தெரிய வேண்டும்?"

"[illegible]வோ, சிக்கன், ஜர்தோஷி, நிர்த்தோஷி என்று [illegible] சொல்லிக் கொண்டிருந்தீர்களே, சிக்கன் [illegible] என்றால், கோழி இறகு கொண்டு செய்வதா? [illegible]யில், கோழி சம்பந்தமாக ஒன்றையுமே [illegible]"

[illegible] நிலையை மறக்கடித்துக் கொண்டு, [illegible] பீறிட்டது.

[illegible] நகைத்தவள், முடிந்தவரை விரைவி[illegible] [illegible]க் கொண்டு, "அது, சிக்கன் அல்ல.

'சிகான்.' எல்லாமே நூல், சரிகை நூல் கொண்டு தைப் பதுதான்,'' என்று வெகு சுருக்கமாக விளக்கிவிட்டு, ''அவ் வளவுதானே? நான் கிளம்பவேண்டும். நேரமாகிறது!'' என்றாள் சற்றுக் கண்டிப்பான குரலில்.

''அதுவும் சரிதான். பிசினஸ்காரம்மா! என்னைப் போலக் காரில் சும்மா ஊரைச் சுற்றுகிறவளா? ஓகே. பிறகு சந்திப்போம்!'' என்று அவன் இலகுவாக விடை கொடுத்தது, கொஞ்சம் உறுத்தலாகவும் இருந்தது.

ஆனால், பிறகு சந்திப்பதா? எப்படி? எப்போது? அவனது முகவரி அவளுக்குத் தெரியாது. அவளது விலாசத்தை, அவனுக்கு அவள் கொடுக்கவும் இல்லை.

சுகவனத்திடம் கேட்பான் என்றும் தோன்றவில்லை!

அப்படியிருக்க, இந்தப் 'பிறகு சந்திப்போம்' எப்படிச் சாத்தியப்படும்?

இதே போல, இன்னொரு தரம் 'உன்னத'த்தில் தற்செயலாகச் சந்திப்பதா?

மூன்றாவது தடவையாகத் தொடர்ந்து ஒரு தற்செயல் நடப்பது சாத்தியம் இல்லை என்று தோன்றவும், காஞ்சனி தன்னை அறியாமல் பெருமூச்சு விட்டாள்.

ஆனால், பத்து தினங்களுக்குப் பிறகு, அவளது சிறிய அலுவல் இடத்தை, மேலும் சின்னதாக்கிக் கொண்டு, சியாமளன் உள்ளே வரவும், ஒரு துணியில் டிசைன் வரைந்து கொண்டிருந்த காஞ்சனி திகைத்து எழுந்தாள்.

''என்னம்மா, இவ்வளவு ஆச்சரியம்? உன்னால்.. சாரி, உங்களால் எனக்கு ஒரு வேலை ஆக வேண்டி யிருந்தது. முகவரியைச் சுகவனம் அங்கிளையே கேட்



டிருப்பேன். ஆனால், உன்.. 'உங்களுக்கு அது நல்ல தில்லையோ என்று தோன்றவே, ஆண்கள் உடைப் பொறுப்பாளரிடம் விஷயத்தைத் தெரிவித்ததும், உடனே, அன்று துணிகளைக் கொண்டு வந்து கொடுத்த வனிடம் கேட்டுச் சொன்னார்.''

சுகவனத்தைக் கேளாதது, மெய்யாகவே தனக்காகவா என்பதில் அவளுக்குச் சந்தேகம்தான். அதைக் காட்டிக் கொள்ளாமல், ''ஆண்கள் உடைப் பகுதிக்காரர் அவ் வளவு வேண்டியவரா?'' என்று வினவினாள்.

''வேண்டியவர் என்று இல்லை. ஆனால், ஒரு 'சூட்'டுக்குத் தையல் கூலி எவ்வளவு போடுகிறார்கள்! பத்தனை தைக்கக் கொடுக்கிறேன்! சிறு பதில் உபகாரம்!''

அப்படி, எத்தனை தைப்பான்? வெய்யில் சுட்டெரிக்கும் இந்தச் சென்னையில், கோட்டும் சூட்டும் எதற்கு?

சும்மா கதை என்று எண்ணியவள், ''ஏதோ வேலை என்றீர்களே, என்ன விஷயம்?'' என்று விசாரித்தாள்.

''யாரோ கல்யாணப் பெண்ணுக்குச் சேலையில் அலங்கார வேலை செய்து கொடுத்தீர்களே, அதே போல ஒரு சேலை எனக்கும் செய்து தர வேண்டும்.''

சேலை இவனுடைய வருங்கால மனைவிக்கா?


நிறைய சூட் தைப்பதாகச் சொன்னானே! திருமணத் துக்கு, அதை ஒட்டிய ஏதாவது மிக முக்கிய நிகழ்ச்சி களுக்குத்தானோ நிறையத் தைப்பார்கள்! மெய்தான் சொல்லியிருக்கிறான்.

மெய்யோ, பொய்யோ, தன் திகைப்பை அவன் அறிந்து விடக் கூடாது என்று தோன்ற, ''சேலை என்ன

நிறம், அவர்கள் எப்படி இருப்பார்கள், என்ன பிடிக்கும் என்று தெரிந்தால், என்ன மாதிரி வேலைப்பாடு, எவ்வளவு ஆகும் என்று பேசி முடிக்கலாம்!" என்று, முயன்று அவன் முடித்தபோது. அவளது குரலில் அழுத்தம் வந்திருந்தது.

அவளது தொழில் முறைக் குரலில், அவன் லேசாக முறுவலித்தான். "உன்னை மாதிரி நல்ல நிறம், அழகு. சாயல்... என்னோடு ஒப்பிடும்போது மென்மையாகத் தெரிவானே தவிர, நானும், என் தங்கையும், பார்ப்பதற்குக் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான் இருப்போம்!" என்று சியாமளன் சொன்னபோது. அவள் மீது, யாரோ கூடைப் பூவைக் கவிழ்த்தார்கள்.

இப்போதும் காஞ்சனி திகைத்தாள்.



5

**கா**ஞ்சனிக்குத் தன்னை நினைத்தே, உள்ளூர ஒரே திகைப்பாக இருந்தது.

இந்தச் சியாமளன், அவனுடைய வருங்கால மனைவிக்கு வண்ணச் சேலையைப் பரிசளித்தாலும், அன்றி அதையே உடன் பிறந்த தங்கைக்கு வாங்கிக் கொடுத்தாலும், அவளைப் பொறுத்த வரையில், அது, அவளுக்கு ஒரு விற்பனை! அதாவது லாபம்! எனவே, அவள் மகிழ்ச்சி அடைய வேண்டிய விஷயம்!

இதில் முதலில் வேதனை ஏன்? பிறகு அதிகப்படி ஆனந்தப் படுவானேன்?

ஏன் என்று புரியாத அளவுக்குக் காஞ்சனி முட்டாள் அல்ல.



இந்தச் சியாமளனைப் பார்த்துத் தன் மனம் சலனம் அடைந்திருக்கிறது என்று அவளுக்கு நன்றாகவே புரிந்தது. அன்றுவரை அறிந்திராத விதமான சலனம்!

ஆனால், இது வெறும் சலனம் மட்டும்தானா, அல்லது, வாழ்க்கை முழுவதற்கும் ஒன்றேயான பாதிப்பா என்று நிச்சயிக்க அவளுக்குத் தெரியவில்லை.

அது மட்டுமல்ல, அவளது பாதிப்பு, அவனுக்கும் இருக்கிறது என்று என்ன நிச்சயம்?

அவளிடம் சிரித்துப் பேசுகிறான். சரிதான். ஆனால், இன்னும் பல பெண்களுடனும் சியாமளன் இதே போலப் பழகவில்லை என்று என்ன நிச்சயம்?

சுகவனம்கூட, அவளது சிநேகிதிகள் பற்றிக் கிண்டலாகப் பேசவில்லையா?

அது மட்டும் அல்ல. அவளைக்கூட அறிந்தவனாக அவரது முன்னிலையில், சியாமளன் காட்டிக் கொள்ளவில்லை. இப்போதும், கழுத்தைச் சுற்றி, மூக்கைத் தொட்டானே தவிர, அவளது முகவரியை நேரடியாகச் சுகவனத்திடம் கேட்கவில்லையே!

பொய்யாகவே, அது அவளுக்கு நல்லதில்லை என்று சமாளித்தானா? அல்லது, தந்தையிடம் போட்டுக் கொடுத்து விடக் கூடியவர் சுகவனம் என்பதால், அமைதியாக ஒதுங்கிக் கொண்டானா?

அது நிஜம் என்று அவளுக்கு என்ன நிச்சயம்?

எப்படியும் எச்சரிக்கையோடு இருப்பது அவளுக்கு நல்லது

காஞ்சனி மனதினுள் இவ்வளவு யோசித்துக் கொண்டிருந்தபோது, சியாமளன் சரளமாகப் பேசினான். "நான்

முன்பே வந்து கேட்டிருப்பேன், காஞ்சனி. ஆனால், சுகவனம் அங்கிள் கொடுத்த ஆர்டர்களின் வேலை கொஞ்சம் முடியட்டும் என்று நினைத்தேன். நானும் வெளியூர் போக வேண்டியிருந்ததே! இப்போது, என் தங்கைக்கு வரும் பதினைந்தாம் தேதி பிறந்த நாள். சரியாகப் பதினைந்து நாட்கள் இருக்கின்றன. அதற்குள் முடித்துக் கொடுத்துவிட முடியும் அல்லவா?''

''முடியும்!'' என்றவள், அவனுக்கு உட்கார இடம் தேடினாள்.

முடித்த வேலைகளும், செய்யப்பட வேண்டியவையுமாக, அலமாரிகளோடு நாற்காலி, மேஜை எல்லா இடங்களிலுமே, துணிகள் இருந்தன. ஒரு புறமாக, அனியும் திலகாவும் சட்டத்தில் மாட்டியிருந்த சேலையில், ஆரே ஊசி கொண்டு, சரிகை வேலை செய்து கொண்டிருந்தனர்.

சீக்கிரமே வேறு பெரிய இடம் பார்க்க வேண்டும் என்று எண்ணியபடி, நாற்காலியில் இருந்தவைகளை அள்ளி ஒதுக்கிவிட்டு, அவனை உட்காரச் சொல்லி, ஃபைல்களை அவனிடம் நீட்டினாள்.

''உங்களுக்கு என்ன செலவில் டிசைன் வேண்டும் என்று சொல்கிறீர்களா? இந்த ஃபைலில் இருப்பது பூ வேலை பெரிதாக இருக்கும். செலவு குறைவு. இதில் நுண்ணிய வேலைப்பாடு இருப்பதால், கூலியும் அதிகமாக... என்ன?'' என்று, அவனது முறுவலைப் பார்த்துவிட்டுக் கேட்டாள், காஞ்சனி.

''பிசினஸ்காரம்மா, ரொம்பக் கறாராகப் பேசுகிறாயே என்று தோன்றியது!'' என்று மேலும் முறுவலித்தான் அவன்.



அவன் பேசாமல் ஃபைல்களை நீட்டவும், ''இதில் எது நன்றாக இருக்கும் என்று எனக்கு என்ன தெரியும், காஞ்சனி? ஏதோ, கல்யாணப் பெண்ணுக்குப் பிடித்துப் போயிற்று என்று அங்கிள் சொன்னாரே, அந்த மாதிரியில் ஏதாவது செய்யுங்களேன்,'' என்றான் சியாமளன்.

இசை அமைப்பாளர் மகளுக்குச் செய்தது!

''அந்த மாடல், செலவு கொஞ்சம் அதிகம் ஆகுமே, பரவாயில்லையா?''

''அடடா! அப்படியா? ஆனால், எனக்காகக் கொஞ்சம் குறைத்துப் போட மாட்டாயா?'' என்று, கவலை போலக் கேட்டான் அவன்.

இவன் மெய்யாகக் கேட்கிறானா? வேடிக்கை செய்கிறானா?

வேலை செய்து கொண்டிருந்த இரு பெண்களும், திரும்பிப் பார்த்துவிட்டு, மீண்டும் வேலையைத் தொடர்ந்தனர்.

இருவர் முகத்திலும்கூட ஆராய்ச்சிதான்.

எப்படியும் அன்றைக்கு அந்த ஆட்டோ ஓட்டி, துணிகளைக் கொடுத்துவிட்டுக் காசு வாங்க மறுத்துப் போய்விட்டார், இவன்தானே கொடுத்திருக்க வேண்டும்? அந்தக் கடன் எதற்கு?

''தெரிந்தவர்களுக்கு ஐந்து சதவிகிதம் குறைப்பது தான். உங்களுக்கும் அதைப் போலச் செய்கிறேன். சேலையை எங்கே...?'' என்று, முயன்று வருவித்த சாதாரணக் குரலில் கேட்டான் காஞ்சனி.

''சேலை? அதிலும் உன் உதவி எனக்குத் தேவை, காஞ்சனி. என் தங்கைக்கான சேலையை நீதான்

தேர்ந்தெடுத்துத் தர வேண்டும்! இப்போதே போய் வாங்கி வந்து விடுவோமா?'' என்று வெகு இயல்பாகக் கேட்டான் சியாமளன்.

நீங்கள் நீயாகி, தனியே கடைக்கு வேறு அழைத்தா கிறதே!

தோழியரின் தலைகள் திரும்பி மீள்வதைக் கவனித்த காஞ்சனிக்கு, அலுவல் இடம் பெரிதாக இல்லையே என்று, மீண்டும் தோன்றியது.

இடம் பெரிதாக இருந்தால், இதுபோலத் தொழில் உரையாடல்களுக்குத் தனியிடமே வைத்துக் கொள்ள லாமே! இவனது ஏக வசனப் பேச்சுக்கு வெளிப்படை யாகப் பதில் கொடுக்கலாமே! இப்போது, தோழிகள் முன்னிலையில், பூசி மெழுக வேண்டியிருக்கிறதே!

''அதெல்லாம் நீங்களே, உங்கள் தங்கைக்குப் பிடித்த மாதிரியாக, வாங்கி வருவதுதான் சரி, சார்!'' என்றாள் அவள், முன் போலவே.

''எப்படிச் சரியாக இருக்கும்? இப்போது, என் னென்ன வண்ணங்கள், துணிகள் நாகரீகம், இந்த வேலைப் பாடுகளை எந்த மாதிரித் துணிகளில் செய்தால் நன்றாக இருக்கும் என்று, எதுவுமே எனக்குத் தெரியாதே! நீ வந்தால்...''

பொறுமை யிழந்து, ''அது போலெல்லாம், நான் யாரோடும் வெளியே கடைகளுக்குப் போவது இல்லை, மிஸ்டர் சியாமளன்!'' என்றாள் காஞ்சனி எரிச்சல் குரலில்.

''ஏன்?'' என்று கேட்டான் அவன். ''பெரிய பிசினஸ் பண்ணுகிறீர்கள்! அதை வளர்ப்பதற்கு வாய்ப்புக் கிடைத் தால் தயங்குவதா? ஏன், இப்போது இந்தத் தொழிலை



விரிவாக்கம் செய்வதற்குக் கடன் விஷயமாகப் பேசுவதற்குப் பாங்க் நிர்வாகி அழைத்தால், ஒரு பிசினஸ் லஞ்சுக்கே போக மாட்டாயா? அதுவும், கையிலிருந்து செலவு செய்தே போவாய்தானே? இதுவும் அப்படித்தான். பெரிய அலங்கார சாதனங்கள் தயாரிப்பு நிறுவனம் ஒன்றின் டைரக்டர் மஞ்சுவுடைய கணவர். அவள் இதை அணிகிற நேரம் எல்லாம், உங்களுக்கு இலவச விளம்பரம்தான். அதுவும் பெரிய இடங்களில்! இந்தச் சேலை நல்ல மாதிரியாக அமைவதில், உனக்கு நீடித்த லாபம் எனும்போது, உரிய துணியைத் தேர்ந்தெடுப்பதில், எனக்கு உதவி புரிய வந்தால் என்ன?''

இப்படி மடக்குகிறவனிடம், என்ன சொல்லி, எப்படி மறுப்பது?

அத்தோடு, இவன் என்ன, தனியறைக்கா அழைக் கிறான்? எத்தனையோ பேர் பணிபுரியும், வந்து போகும் கடைக்குத்தானே!

''உங்கள் சகோதரிக்குப் பொதுவாக என்ன நிறம் பிடிக்கும்?'' என்று, தன் சம்மதத்தை ஒரு கேள்வியால் தெரிவித்துவிட்டுத் தோழியரிடம் திரும்பிப் பேசினாள்.

அடுத்துச் செய்ய வேண்டிய சிலவற்றைச் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

அப்போதும், அவனிடம் கடையின் பெயரைச் சொல்லி, ''அங்கே வந்து விடுங்கள்!'' என்று விட்டு, அவனை நிமிர்ந்து பாராமல், காஞ்சனி தன் ஸ்கூட்டரை எடுக்கப் போனாள்.

தோளைக் குலுக்கி விட்டுக் காரிடம் சென்றான் சியாமளன்.

மாந்தளிர்ச் சிவப்பில் ஒரு மென் பட்டுச் சேலையையும் பொருத்தமாக ரவிக்கைக்கான துணியையும் வாங்கிக் கொண்டு திரும்பி வந்தார்கள்.

காஞ்சனி தேர்ந்தெடுத்த டிசைனையே ஒத்துக்கொண்டு, முன் பணமும் கொடுத்துவிட்டு, அவன் சென்ற பிறகே, அவளுக்கு அமைதியாக இருக்க முடிந்தது.

மற்ற இருவரோடும் அவனைப் பற்றிப் பேசவும் முடிந்தது.

ஆள் நன்றாக இருக்கிறார், தங்கையிடம் பாசம் என்றெல்லாம் மற்றவர்கள் உயர்வாகப் பேசியபோது, உள்ளூர ஆமோதித்தாலும், காஞ்சனி தீவிரமாக வேலையில்தான் ஈடுபட்டிருந்தாள்.

பதினைந்து நாள் அவகாசம் கொடுத்தவன், இரண்டே நாட்களில் மீண்டும் வந்து நின்றான். அவனுடைய தங்கையுடைய சின்ன மகளுக்கும் காஞ்சனிதான் தைத்துத் தர வேண்டுமாம்! "மகளுடையது போலவே, பாவாடை சட்டை அணிந்து கொண்டு, பேத்தியும் கூட நிற்க வேண்டும் என்று, அம்மா ஆசைப்படுகிறார்கள், காஞ்சனி. அபிக் குட்டிக்கு இரண்டரை வயது ஆகிறது. இன்று போய் அவளுக்குத் தேவையான துணி வாங்கி வந்து விடலாமா?" என்று கேட்டான் சியாமளன்.

"நீங்களே..." என்று அவள் தொடங்கவும், குறுக்கிட்டு, "பழைய் வசனம் எல்லாம் திருப்பிப் படிக்க வேண்டுமா? முதலில், இரண்டரை வயதுப் பெண்ணுக்கு எவ்வளவு துணி வாங்க வேண்டும் என்று கூட, எனக்குத் தெரியாது!" என்றான் அவன்.

அதற்கு மேலும், அவனோடு தொடர்ந்து விவாதம் பண்ணப் பிடிக்காமல், "வாருங்கள்!" என்று எழுந்து, மேஜை மீது ஸ்கூட்டர் சாவியைத் தேடினாள் காஞ்சனி.



"சாவி வெளியே காவலாளியிடம் இருக்கிறது, காஞ்சி. சரிகை நூல், மணி எல்லாம் வாங்கி வந்த பின், துடைத்து வைக்கச் சொல்லிக் கொடுத்தேன்," என்றாள் அனகா.

காவலாளிடம் இருந்து சாவியை வாங்கிய சியாமளன், ஸ்கூட்டரை லாகவமாகத் திருப்பிக் கொண்டு போய்க் கட்டடத்தின் பக்கவாட்டில் இருந்த ஷெட்டில் மற்ற வாகனங்களுக்கு இடையில், எளிதாகக் கொண்டு போய் நிறுத்தி விட்டு வந்தான்.

எப்போதுமே, அங்கே இட நெருக்கடிதான். எதிலும் இடிக்காமல் கொள்ளாமல் எப்படி நிறுத்துகிறான் என்று உள்ளூர வியந்தாள் அவள்.

சாவியை மீண்டும் அவளிடமே கொடுத்து விட்டு, "பலமுறை பார்த்து விட்டோம். பொதுவான தெரிந்தவரும் இருக்கிறார் எனும்போது, நீங்கள் என்னோடு காரில் வருவதில், ஒரு தப்பும் இல்லை, காஞ்சனி! அத்தோடு, என் வேலைக்காக, நீங்கள் வீண் பெட்ரோல் செலவழிப்பானேன்? மேலும், கூட வருகிறாயா... வருகிறீர்களா என்று கவனித்தபடி காரை மெல்ல ஓட்ட வேண்டியிருப்பது, இன்னொரு வேதனை! காரிலேயே வாருங்கள் சீக்கிரமே போய் வந்து விடலாம்!" என்றான் அவன்.

அதற்கு மேலும் மறுப்பது அசட்டுத் தனமாகப் பட்டது காஞ்சனிக்கு.

சற்று நேரம் கார் ஓடிய பிறகு, அவன் பேச்சுக் கொடுத்தான். "ஏன் காஞ்சனி, இந்த அலங்காரத் தையல் வேலைகள் தவிர, உனக்கு வேறு என்னென்ன பிடிக்கும்?" என்று வினவினான். "பொழுதுபோக்கைச் சொன்னேன்."

மறுபடியும், ஒருமைப் பேச்சு! காரில் உடன் வர வைத்த விதமும் நெருட, "தைப்பதே எனக்கு அப்படித்தான்!" என்றாள் அவள் சுருக்கமாக.

"ஆனால், அது தொழில் ஆயிற்றே! முழு நேரமும் வேலையிலேயே மூழ்கிக் கிடப்பவர்கள் உற்சாகமற்றுப் போய் விடுவார்கள் என்பார்கள். ஆனாலும், நீ அப்படியில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஒன்று சொல்லு. வீட்டிலும் எதையாவது தைத்துக் கொண்டே இருந்தாலும், சிடி எதையாவது, ஓட விட்டுக் கேட்பதில்லை? இனிமையான சங்கீதம்! லேசான நகைச்சுவையுடன் கடிய புத்தகங்களும் உனக்குப் பிடிக்கும் என்பது, என் ஊகம்!"

சரியாகக் கணித்து விட்டானே!

படிக்கிற காலத்திலிருந்தே, அருகில் ஏதாவது இன்னிசை ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும், காஞ்சனிக்கு. அதே போலத்தான் புத்தகங்களும்.

வியந்த பார்வையை உணர்ந்து, "என் தங்கைக்கும் உனக்கும், பாவனையில் ஓர் ஒற்றுமை! அதனால்தான், அவளுக்குப் பிடித்ததே உனக்கும்... சாரிம்மா, என் தங்கையை விடவும் சின்னப் பெண் நீ.. இந்த மரியாதைப் பன்மை, பாதி நேரம் மறந்து போகிறது. தப்பாக எண்ண வேண்டாம்..." என்று முடித்தான் சியாமளன்.

இடையிடையே ஒருமையில் விளிக்கிறானே என்று, தான் எண்ணியதை, முகத்தில் அவன் கண்டிருப்பானோ என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் தங்கையை விடவும் சின்னவள் என்ற பிறகு, தடுத்துச் சொல்வதும் முடியவில்லை.



"பரவாயில்லை..." என்றாள் அரை மனதாக.

"அப்புறம்?"

"என்ன அப்புறம்?"

"உன்னைப் பற்றி நான் கணித்தேனே! என்னைப் பற்றி என்ன தோன்றுகிறது?"

கண்ணன் என்று எண்ணியது காஞ்சனிக்கு நினைவு வந்தது. "நீங்கள்.." என்று யோசனையோடு நிமிர்ந்தவளுக்கு, எதிரே கண்ட காட்சியில் சட்டென மூச்சு நின்றது.

பத்து மணி வரையிலான நெரிசல் குறைந்திருந்த போதும், சாலையில் வழக்கமான போக்குவரத்து, சைக்கிள், கார், ஆட்டோ என்று வந்து போய்க் கொண்டிருந்தது.


இடையில், புதிதாக எருமை மாடு ஒன்றும் சாலையின் குறுக்கே செல்லலாயிற்று.

கார் சென்று கொண்டிருந்தது, அகலம் அதிகமற்ற கிளை வழி. இருவழிப் போக்குவரத்தில், இப்புறம், அப்புறம் ஒடித்துத் திருப்ப முடியாத நிலை. சடன் பிரேக் போட்டால் பின்னே வருவது இடிக்கும்!

கட்டாயமாகச் சிறு மோதல் நேர்ந்தே தீரும் என்று [illegible] இறுகக் காஞ்சனி காத்திருக்கையில், இடப்புறமாக வந்த மோட்டார் சைக்கிளுக்கும், சாலையைக் கடந்து கொண்டிருந்த எருமைக்கும் இடையில், இருபுறமும் [illegible] இடம் விட்டு, அவர்களது கார் நில்லாது சென்றது. வெகு சிறு வேகக் குறைவு மட்டுமே.

[illegible] மீறிய பிரமிப்பில் அவன் புறம் திரும்பி, "[illegible] பிரமாதமாகக் கார் ஓட்டுகிறீர்களே!" என்று

அவள் பாராட்ட, விழிகள் பளிச்சிட அவளை ஒரு தரம் பார்த்துத் திரும்பிய சியாமளன் அடக்க மாட்டாமல் நகைக்கலானான்.



6

**சி**யாமளனின் சிரிப்பு, கேட்க நன்றாகத் தான் இருந்தது. அநாவசிய அங்க சேஷ்டைகள் இல்லாமல், லேசாகத் தோள்கள் மட்டும் குலுங்க, ரசனைக்குரிய சிரிப்பு.

காஞ்சனியின் முகத்தில்கூட, முதலில் புன்னகை அரும்பிவிட்டது. ஆனால், காரணம் புரியாமல் எப்படி நகைப்பது?

கூடவே, அவனது சிரிப்பு, தன்னைப் பார்த்தோ என்று தோன்றி விடவும், முகம் மாற, "எதற்குச் சிரிக்கிறீர்கள்?" என்று அவனிடம் நேரடியாகக் கேட்டாள்.

லேசாகத் தலையசைத்து, "டக்கென்று சரியாகச் சொல்லி... மனமாரப் பாராட்டினாயே, அந்த மகிழ்ச்சி. உன்னைப் பாராட்டினால் சந்தோஷப்பட மாட்டாயா? அதுதான்!" என்று முறுவலோடு உரைத்தான் சியாமளன்.

அவள் சந்தேகமாக நோக்கவும், "மெய், காஞ்சனி! இத்தனை நாளும் கறாராகப் பேசி வந்த பிசினஸ் காரம்மா, திடுமெனப் பாராட்டவும் எனக்கு ஒரே குதூகலமாகிப் போயிற்று. அடக்க முடியவில்லை. அதிருக்கட்டும். என் கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லவில்லையே! என்னைப் பற்றிய உன் கணிப்பு என்ன?" என்று கேட்டான் அவன்.

பேச்சை மாற்றுகிறானோ என்ற ஐயத்தோடு, அவனை ஆராய்ந்தாள் காஞ்சனி.



கவனியாதது போல, "ம், சொல்லும்மா!" என்று ஊக்கினான் சியாமளன். "ஒருவேளை, ஒன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை போல?"

"ஏன் முடியாமல்?" என்று ரோஷத்தோடு தொடங்கினாள் காஞ்சனி. "உங்களைப் பார்த்தால், பத்தோடு பதினொன்றாகக் கிரிக்கெட்.. ஹாக்கி விளையாடுகிறவராகத் தெரியவில்லை! ஓய்ந்து உட்கார்ந்து புத்தகம் படிப்பவரும் இல்லை! உங்களிடம் ஒரு வேகம். ஒரு சவாலாக ஏற்று எதையாவது செய்கிறவர். அத்தோடு, கார் ஓட்டுவதில் கெட்டிக்காரர்!" என்று அவள் முடிக்கவும், மீண்டும் அவன் நகைத்தான்.

"என்ன? சரியில்லையா?"

"நூற்றுக்கு நூறு மார்க்!"

துணிகளை வாங்கிக் கொடுத்துவிட்டுப் போனவன், தையல் வேலைகள் எந்த மட்டில் இருக்கின்றன என்று பார்க்க ஒரு நாள் வந்தான்.

அலங்காரத் தையல் வேலைகள் முடிவடைந்ததும், அவையும் துணிகளோடு வந்தான்.

"இங்கே துணியை அழகு படுத்துவதோடு சரி, அளவாகத் தைத்துத் தருவதில்லை!" என்று காஞ்சனி குறையுரைத்தபோது, ஒரு நல்ல தையல்காரரிடம் அழைத்துச் செல்லுமாறு, அவளையே வேண்டினான், சியாமளன்.

அவனுடன் அழைத்துச் சென்றாள்.

[illegible] தங்கை மஞ்சுளாவிற்கு ரவிக்கை தைக்க [illegible], குழந்தை அபிக்குப் பாவாடை சட்டை [illegible] இன்னொருவரிடமும் சேர்ந்து போனார்கள்.

இந்தப் பயணங்களில் இருவரும் கலகலப்பாகப் பேசுவது இயல்பாயிற்று.

பொதுவான விஷயங்களில் இருவருக்கும் ஒத்த கருத்து இருப்பது தெரிந்தது.

கார், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் முதலிய வற்றுக்கு உதிரிப் பாகங்கள் செய்யும் ஒரு தொழிற் சாலையைத் தந்தை தொடங்கி நடத்துவதாகவும், தானும் அதில் பங்குதாரர் என்றும் சியாமளன் சொன்னான். அடையாறில் வீடு. தாயார், திருமணமான தங்கை, அவ ளுக்கு ஒரு குழந்தை... என்று விவரம் தெரிவித்தான். வீட்டின் செல்லப் பேத்தியான அபிக் குட்டி பற்றி, நிறையச் சொன்னான்.

அதே போல, அவளுடைய தந்தை என்ன செய்கிறார், தம்பி என்ன படிக்கிறான் என்று அவளும் சொன்னாள்.

இரு வீடுகளிலும், ஆணும் பெண்ணுமாய் இரு பிள்ளைகள் என்று சியாமளன் ஒற்றுமை கண்டு பிடித்தான்.

இது, காஞ்சனியும் மனதால் எண்ணியதுதான். ஆயினும், "ஆனால், உங்கள் வீட்டில், அண்ணன் தங்கை. எங்கள் வீட்டில், அக்கா, தம்பி!" என்று, கவ சிரத்தையோடு விளக்கினாள் அவள்.

"எப்படியோ, இரு பெற்றோருக்கும் ஒத்த மதி! இரண்டுக்கு மேல் இந்த நாடு தாங்காது என்று நிறுத்தி விட்டார்கள்!" என்று எடுத்துச் சொன்னான் அவன். இருவருமே சிரித்துக் கொண்டனர்.

ஒரு தரம், இந்தத் தொழிலை எப்போது தொடங்கி னாள், என்ன ஏது என்று பேச்சுக் கொடுத்தான் அவன்.



பிறகு, "இந்த அளவு வேகமான வளர்ச்சியை எதிர் பார்க்கவில்லை போல? இடம் போதாதது போல எனக்குத் தோன்றியது!" என்றான் சியாமளன்.

அவள் மனதிலும், பல நாட்களாக இருந்த பிரச்சினை. எனவே, "அப்பாவிடம் அதிகப் பணம் கேட்கக் கூடாது என்று எண்ணம்! தோற்றாலும், நஷ்டம் பெரிதாக இராதே என்று சின்னதாகவே பார்த்தேன்! 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்று பழமொழி வேறு இருக்கிறதே. இப்போதைக்கு இது போதும் என்று தொடங்கும்போது நினைத்தேன். சுரிதாருக்குப் பரவாயில்லை. ஆனால்... சேலையில், தாவணியில் வேலை செய்யும்போது, நீளமாக ஃப்ரேம் போட முடியவில்லை. இப்போது, அந்த வேலைகள் நிறைய வருவதால், சிரமமாகத்தான் இருக்கிறது!" என்றாள், அவள் மறைக்காமல்.

"உன் திறமையில் நம்பிக்கை இருக்கும்போது, உழைக்கச் சோம்பாத போது, நஷ்டம் எப்படி வரும்? தாராளமாக, நீ பெரிய இடமே எடுத்திருக்கலாமே! நான் வேண்டுமானால், அது போலப் பார்க்கட்டுமா? உன் வாடிக்கைகள் பெரிய ரெடிமேட் கடைகள் எனும்போது, [illegible] மாற்றுவதால், வருமானம் கெட வாய்ப்பில்லை [illegible]?" என்று வினவினான் சியாமளன்.

"அது சரிதான். ஆனாலும் ரொம்பவே அதிக வாடகை [illegible], சியாமளன்!" என்றாள் அவள்.

"[illegible]!" என்று அங்கலாய்த்தான் அவன். "அண்ணா [illegible], [illegible] பக்கத்தில், ஆயிரம் சதுர அடியில் [illegible] முடிப்பதாக அல்லவா இருந்தேன்!

இப்போது அதை நான் யார் தலையில் கட்டட்டும்?'' என்று ரொம்பவே வருத்தப்பட்டான்.

கலகலவென்று சிரித்துவிட்டு, ''சாரி!'' சொன்னாள் காஞ்சனி. ''ரொம்பப் பெரிய அளவுக்குப் போய் விடுவீர்களோ என்று நினைத்தேன். நினைத்திருக்கக் கூடாது. மீண்டும் சாரி!'' என்றாள்.

''இத்தனை 'சாரி' கூட அவசியமே இல்லை!'' என்று முடித்தான் அவன்.

துணிகளைத் தைத்து முடிக்கும் சமயம், சியாமளன் வெளியூர் செல்ல வேண்டியதாக இருக்கவே, அவளிடம் ஓர் உதவி கேட்டான். தைத்து முடித்த துணிகளைக் 'கூரியர்' மூலமாக, அவன் வீட்டிற்கு அனுப்பிட அவளால் முடியுமா என்று கேட்டான்.

''மஞ்சுவின் பிறந்த நாளன்றுதான், நான் ஊரிலிருந்து திரும்பி வர முடியும், காஞ்சனி. ஒருவேளை, வந்து சேருவதற்குச் சற்றுத் தாமதமானால், அதற்குப் பிறகு, இங்கே வந்து, துணிகளை வாங்கிப் போய், அலங்காரமாய் 'கிஃப்ட் ராப்' பண்ணி எடுத்துப் போக அவகாசம் இராது. துணிகளை நீ அனுப்பி விட்டால், அந்த வேலையை அம்மா பார்த்துக் கொள்ளுவார்கள். அதற்காகத்தான்!'' என்று சியாமளன் விளக்கியபோது, மறுக்காமல் தலையாட்டியபோதும், உள்ளூர ஓர் ஏமாற்றம் பரவுவதை, அவளால் தவிர்க்க முடியவில்லை.

இந்தத் துணிகளை வாங்கிப் போக அவன் வருவான். அந்தச் சாக்கில், அவனோடு சற்று நேரம் உரையாடலாம் என்று உற்சாகத்துடன் எதிர்பார்த்திருந்தாள். இனி, அது நடக்காதே என்ற வருத்தம்.



ஆனால்...

சேலையில் பூவேலை செய்து தரச் சொல்லிச் சியாமளன் கேட்டபோது தோன்றிய உணர்வுகள், காஞ்சனிக்கு நினைவு வந்தன.

இந்தச் சலனம் தீவிரமானதுதானா? ஆனால், அந்தத் தீவிரம் அவனுக்கும் இருக்கிறதா? மற்றப்படி, அதற்கு எதிர்காலம் ஏது?

கலகலப்பாகப் பேசிக் கண்ணால் சிரித்தபோதும், சியாமளன் மனதில் என்ன இருக்கிறது என்று அவளுக்கு ஒன்றும் புரிபடவில்லை.

சும்மா ஓய்வு நேரங்களில், ஓர் இளம் பெண்ணுடன் பேசிச் சிரிப்பது மட்டும்தான் அவனது நோக்கம் என்றால், இந்தப் பழக்கம் இத்தோடு முடிவதுதான் நல்லது என்று வருத்தத்துடன் எண்ணினாள், காஞ்சனி.

உள்ளேயிருந்த வருத்தத்தை வெளிக் காட்டாமல் சிரித்த முகமாய் அவனுக்கு விடை கொடுத்துவிட்டுக் காஞ்சனி மிகவும் தீவிரமாக வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

துணிகள் தைத்து வந்தபோது, ஒரு சிறு குழப்பம்.

துணிகளை மடித்து, அடுக்கி, உறையிலிட்டுத் தானே 'கிஃப்ட் ராப்' பண்ணி அனுப்பி விடலாமா என்று தோன்றியது.

ஆனால், சியாமளனுடைய தாயார், மகன் தங்கைக் [illegible] கொடுக்க இருக்கும் பரிசைக் காண ஆசைப்பட்டால், [illegible], திரும்பி வருகிறவன், அவனை ஏர்ப்பதற் [illegible] செய்த மாதிரி, காஞ்சனியைத் தவறாகவும் [illegible] கூடுமே!

ஒரு பெருமூச்சுடன், துணிகள் கசங்காதிருக்கும்படி உறையில் இட்டு, செல்லோ டேப்பால் ஒட்டி, அட்டைப் பெட்டியில் வைத்துக் கட்டி முடித்து ஃபோனில் கூரி யரைக் கூப்பிடப் போனவளுக்கு ஒன்று தோன்றியது.

துணிகள், அட்டைப் பெட்டி எல்லாமாகச் சேர்ந்து, கூரியரில் அனுப்புவதானால், இருபது ரூபாய்க்கு மேல் ஆகும். சியாமளன் வந்து, தந்துவிடக் கூடும். ஆனால், அவனுக்கும்தான் ஏன் வீண் செலவு?

தம்பி நந்தகுமார், நண்பர்களைப் பார்க்கவென்று, அடிக்கடி அடையாறு செல்கிறவன். அவனிடம் கொடுத்து அனுப்பி விடலாம்.

அக்காவுக்கும், தம்பிக்கும் இடையே சில்லறைச் சச்சரவுகள் இருக்கும் என்றாலும், பாசமும் மிகவும் அதிகம். எனவே, அவள் கேட்டதும், ப்ராஜெக்ட் வேலை செய்து வைப்பாயா, வாங்க, போங்க என்று மரியாதையாகப் பேசுவாயா என்று கொஞ்சம் அலட்டி, வெறுப்பேற்றிவிட்டு, அதன் பிறகே, கொடுத்து விடுவதாகச் சொல்லிப் பார்சலை வாங்கிச் சென்றான், நந்தகுமார்.

பார்சலைக் கொடுத்தனுப்பியதுமே, காஞ்சனிக்கு உள்ளூர ஏதோ வேதனையாக இருந்தது. சியாமள னோடு இருந்த தொடர்பு அத்தோடு முடிந்து விட்டாற் போல, உள்ளூர ஓர் உருவகம்.

இதையெல்லாம் பெரிதாக நினைக்கக் கூடாது என்று தனக்குத் தானே அறிவுறுத்தியவாறு, புது டிசைன் ஒன்று அமைப்பதில் மனதைச் செலுத்திக் காஞ்சனி வேலை செய்யத் தொடங்கினாள்.



சூரிய கிரணங்கள் கழுத்திலிருந்து தொடங்கி, சரிதார் மேலங்கி பாதிவரை தொடர்பு அறாமல் பரவியிருப்பது போல வரைந்து, அவள் திருப்தியோடு பார்த்துக் கொண்டிருந்தபோது, அவளது செல் கீதம் இசைத்து, அவளை அழைத்தது.

அழைத்தது நந்தகுமார் என்று அறிந்ததும், ஒரு கணம் நடுங்கிப் போனாள்.

பார்சலுக்கு ஏதாவது...

ஆனால், தம்பி அவசரமாக அவளிடம், அவள் கொடுத்த முகவரி சரிதானா என்று கேட்டான். "அனுப் பியவர், தன் வீட்டுக்கு அனுப்புவதாகத்தானே சொன்னார்?" என்று பரபரப்புடன் விசாரித்தான்.

"ஆமாமடா. அப்பா பெயர் ஞானப் பிரகாசம்..."

"அதை விடு. அனுப்பியவர் பெயர் என்ன?"

"சியாமளன்."


"மட்டி, மட்டி! அதை முதலில் சொல்லாமல்... அவர் என்ன கார் வைத்திருந்தார்?"

"என்ன கார்..? ஏதோ நல்ல கார்... ஏன் கேட்கிறாய்?" என்று குழப்பமும், திகைப்புமாகக் கேட்டாள் காஞ்சனி.

"எல்லாம் வீட்டுக்கு வந்து சொல்கிறேன். பக்கத்தில் சிநேகிதன் காத்திருக்கிறான். போக வேண்டும். பார் சலைக் கொடுத்து விட்டேன். ஆனால், நீ மட்டிதான் அக்கா! [illegible]!" என்று பேச்சை முடித்து விட்டான் நந்தகுமார்.

மட்டியா? நானா? நந்து இவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறானே!

[illegible], தம்பியின் வருகைக்காகக் காஞ்சனி காத்திருந்தாள்.



7

**ந**ண்பர்களோடு அளவளாவப் போனால், நந்தகுமாரன் திரும்பி வீடு வந்து சேரக் குறைந்தது ஒன்பது மணியாவது ஆகிவிடும். அவனுக்காகச் சாப்பாடு எடுத்து வைத்து விட்டு, மற்றவர்கள் உணவருந்துவார்கள்.

ஆனால், அன்று ஆறு மணிக்கே, தம்பி வீட்டில் இருந்தான்.

வந்ததுமே, அவளைப் பார்த்து, "நல்லவேளை, நீயும் வந்து விட்டாய். உன்னைத் தேடி, உன் எலிப்பொந்துக்கு வர வேண்டி இருக்குமோ என்று பயந்து கொண்டே வந்தேன்!" என்றவாறு, உணவு மேஜை மீது இருந்த தண்ணீரை எடுத்து, அவசரமாகக் குடித்தான்.

"அது ஒன்றும் எலிப் பொந்து இல்லை!" என்றாள், தமக்கை - சற்றுக் கோபமாக.

"எலிப் பொந்தேதான். எலிகளோடு போட்டி போட்டுக் கொண்டு, உன்னைப் போலக் குள்ளக் கத்தரிக்காய்கள் உருண்டு விளையாடலாம். மற்றப்படி, மனிதன் வந்தால், நிற்க, உட்கார, அங்கே இடமே இருக்காதே!" என்றான் தம்பி விடாமல்.

அந்த இரண்டு ஆண்டுகளாக, ஆண்களுக்கு உரிய விதமாக நந்தன் வளர்ந்து, அவளை விட உயரமாகி விட்டதில் இருந்து, இது ஓர் அலட்டல், அவனுக்கு.

தனது ஐந்தரையடி உயரம், குள்ள ரகத்தில் சேராது என்று அறிந்திருந்ததால், காஞ்சனியும் சிரித்துக் கொண்டேதான், ஏதாவது பதிலடி கொடுப்பாள்.

ஆனால், அன்று சியாமளனைப் பற்றி அறியும் ஆவல் அவளுக்கு. அதை நேரடியாகக் கேட்கவும் மனம் இல்லை. அவளுக்கு ஆவல் இருப்பது தெரிந்து விட்டால், தம்பி வேண்டும் என்றே இழுத்தடிப்பான்.



இன்று அந்த மாதிரிச் சீண்டல்களில் ஈடுபட அவனுக்கும் மனம் இல்லை போலும். தமக்கை பதில் சொல்லு முன் அவசரமாக, "அதை விடு, அக்கா. நிஜமாகவே, அந்தப் பார்சலைக் கொடுக்கச் சொன்னது, சியாமளன் சாரேதானா? அதை முதலில் சொல்லு!" என்று காஞ்சனியை விரட்டினான்.

"அப்படித்தான் பெயர் சொன்னார். சுகவனம் அங்கிள்கூட, அவரை அதே பெயர் சொல்லித்தான் அழைத்தார். எனவே, அவரது பெயர் சியாமளனாகத் தான் இருக்க வேண்டும். வேறு எந்தக் கந்தனையோ, நந்தனையோ, அவர் அந்தப் பெயர் சொல்லிக் கூப்பிட மாட்டார் இல்லையா?" என்று கேட்டுத் தன்னை மட்டி என்றதற்குப் பழி தீர்த்துக் கொண்டாள் தமக்கை.

அவளது கேலியைப் பொருட்படுத்தாமல், "ஆனால், அவரைப் போய், உனக்கு எப்படித் தெரிய முடியும்? இதை என்னால் நம்பவே முடியவில்லையே!" என்றான் தம்பி. "ஆனால், முகவரி அவரதுவாகத்தான் இருக்கிறது... முதலில் இதைச் சொல்லு, அவர் என்ன கார் வைத்திருந்தார்?" என்று மீண்டும் கேள்வி கேட்டான்.

"என்ன கார்? அது..." என்று யோசித்தாள் காஞ்சனி.

"ம்ம், சொல்லு, சொல்லு!" என்று ஊக்கினான் தம்பி.

"அது.. நிறம், சற்றே வெளிறிய தங்க நிறம்! உட்கார்ந்து செல்லும்போது, வசதியாக.. சுகமாக இருந்தது."

"என்ன, என்ன? அந்தக் காரில் நீ உட்கார்ந்து போக [illegible] செய்தாயா? அவரே ஓட்டினாரா? எப்பேர்ப்பட்ட

அதிருஷ்டம்! ஆனால், அப்போதுமா நீ கண்டு பிடிக்க வில்லை? குறைந்தது அது என்ன கார் என்று கூடவா? சொன்னால் மட்டும் கோபப் படுகிறாயே! மட்டி! மட்டி!'' என்றான், அவன். ஆத்திரமும், எரிச்சலுமாக.

இப்போது, அவளுக்கும் கோபம் வந்தது. ''உனக்கு அதில் ஆர்வம் இருக்கிறது. என்ன கார், என்ன பைக் என்று உடனே கண்டு கொள்கிறாய்! எனக்கு எப்படித் தெரியுமாம்?'' என்று கேட்டாள்.

''கண்ணும் இருந்து, அதைக் கொண்டு பார்க்கவும் செய்தால் தெரியும்!'' என்றான் அவன் ஏளனமாக. ''மட்டி என்றால், சரியான மட்டிதான்!'' என்றான் விடாமல்.

''ஏய், என்னடா, ஒரேயடியாக அக்காவை விரட்டு கிறாய்?'' என்றாள், டிவி பார்த்த வண்ணம், பிள்ளைகளி டமும் ஒரு கண்ணை வைத்திருந்த தாயார்.

''பாருங்கம்மா, இவன் பேசுவதை! எத்தனையோ பூ வேலை செய்த ஜிப்பா, ஷெர்வானி எல்லாம் போடுகிறானே, சாடின் ஸ்டிச், காம்புத் தையல் என்றால் என்ன என்று, இவனைச் சொல்லச் சொல்லுங்களேன், பார்ப்போம்!'' என்று, தாயிடம் சலுகை பேசினாள் பெண்.

''போயேன், பெரிய சிதம்பர ரகசியம்! சாடின் தையல் என்றால், சாடின் துணி கொண்டு தைப்பது. காம்புத் தையல் என்றால், பூக்களுக்குக் காம்பு தைப்பது! இதைப் போய்..'' என்று, நந்தகுமார் சொல்லி முடிக்குமுன், காஞ்சனி கலகலவென்று சிரிக்கத் தொடங்கி விட்டாள்.

தாயாரும், புன்னகையோடு சின்னத் திரைப் பக்கம் திரும்பிக் கொண்டாள்.



''அடே, தம்பிப் பையா! சாடின் தையலுக்கும், சாடின் துணிக்கும் சம்பந்தமே கிடையாது! வெறும் நூல் கொண்டு, வேண்டிய வடிவத்தில் நெருக்கமாகத் தைத்துவிட்டு, மேலே தொட்டுப் பார்த்தால், சாடின் போல வழுவழுப்பாக இருக்கும்! அதே போலக் காம்புத் தையல் என்பதும், ஒரு தையலின் பெயரே தவிர, நீ சொன்னது போல அல்ல!'' என்றவளுக்கு, சிகான் வேலைப்பாட்டில், கோழி இறகைக் காணோமே என்று சியாமளன் கேட்டது நினைவு வர, மீண்டும் நகைத்தாள்.

உடனேயே, சற்று முந்தையப் பேச்சின் நினைவு குழப்ப, ''அப்படி, அந்தக் காரிலே என்ன இருக்கிறது, நந்து?'' என்று விசாரித்தாள்.

தமக்கையின் தையல் விளக்கத்தில் சற்றே அசடு வழிந்தவன், இப்போது விரைப்பாக நிமிர்ந்து, ''என்ன இருக்கிறதா? என்ன இல்லை என்று கேள்! முதலில், அது ஏசி கார் என்றாவது கண்டு பிடித்தாயா, இல்லையா?'' என்று வினவினான்.

சியாமளனோடு செல்லும்போது மனதைச் சமனப் படுத்தி, அமைதியாகக் காட்டிக் கொள்வதற்கே, படாத பாடு பட்டுக் கொண்டிருக்கும்போதே, இதை யார் கவனித்தார்கள்?

கவனிக்கவில்லை என்றால், அதற்கும் ஏதாவது சொல்லுவானே என்று அவசரமாக யோசித்தபோது, கார் கண்ணாடிக் கதவுகள் மூடி இருந்தது நினைவு வர, வேகமாகத் தலையாட்டி, ''ஏசிதான்டா! எனக்கு நன்றாக நினைவிருக்கிறது!'' என்றாள் காஞ்சனி.

''அப்பப்பா! இதைச் சொல்ல, இவ்வளவு நேரமா? ஆனால், இதில் உன் மேல் தப்பில்லை!'' என்று நந்தன்

பெரிய மனதுடன் இறங்கி வந்து மன்னித்தான். "ஏனென்றால், அந்தக் காரில் ஏசி ஓடும்போது, கொஞ்சம் கூடச் சத்தமே இருக்காது!" என்றவன் தொடர்ந்து, "ஆனால், உட்கார, கால் நீட்ட வசதியாக நிறைய இடம் இருந்திருக்கும்! அதிலேயே..." என்று மீண்டும் தொடங்கவும், குறுக்கிட்டு, "நான்தான் வசதியாக இருந்தது என்றேனே! சும்மா அளந்துகொண்டே போகாதே! அது என்ன கார்? அதை முதலில் சொல்லு. ஒரு வேளை, உனக்கும் தெரியாது என்றால், ஆளை விடு. எனக்கு நிறைய வேலை இருக்கிறது!" என்று காஞ்சனி முறுக்கிக் கொள்ளவும், அவள் எதிர் பார்த்தது போலவே, தம்பி தழைந்து வந்தான்.

அவனது முக்கியச் செய்தியைச் சொல்லி முடிக்காமல் அவனால் இருக்க முடியுமா, என்ன?

"ஏய், அது டயோட்டாவின் காம்ரி கார்டி!" என்றான், ரொம்பவும் மரியாதையான குரலில், கைகட்டி, வாய் பொத்தாத குறை.

காஞ்சனி விளங்காமல் பார்க்கவும், "விலை என்ன தெரியுமா? கிட்டத்தட்டப் பதினெட்டு லட்சம் ரூபாய்!" என்று கண்ணை உருட்டிச் சொன்னது, அவன் விரும்பிய பலனைத் தந்தது.

"என்னது? பதினெட்டு லட்சமா?!" என்று வாயைப் பிளந்தாள் தமக்கை. "ஏன்டா? நல்ல ஏசி கார், நாலு, ஐந்து லட்சத்துக்கே கிடைக்குமாமே, இதில் போய் எதற்கு..."

"எதற்கா? அது எப்பேர்ப்பட்ட கார்! தொட்டால் பறக்கும். இஞ்சின் பவர் 141 பி.ஹெச்.பி. தெரியுமா?"



என்று தன் விஷய ஞானத்தைக் காட்டிக் கொண்டான், நந்தகுமார்.

"அது சரிடா. ஆனால், சும்மா கடைக்கு வருவதற்கு, இவ்வளவு விலை உயர்ந்த காரைப் போய் எடுப்பார்க... நந்து, அவர்... சியாமளன் ஏதோ உதிரிப் பாகங்கள் தயாரிக்கிற தொழிற்சாலை வைத்திருப்பதாகச் சொன்னார்."

"கரெக்ட். ஆனால், ஏதோ உதிரிப் பாகங்கள் அல்ல. தண்ணீர் லாரியிலிருந்து, உன் தகர டப்பா ஸ்கூட்டர் வரை, தரையில் ஓடுகிற வாகனங்களின் தயாரிப்பு நிறுவனங்கள் அத்தனையும் அவர்களிடம் இயந்திரப் பாகங்கள் வாங்குகிறார்கள். ஆனால், இந்தக் கார், இவருடைய தனிச் சம்பாத்தியம்."

"என்னடா அளக்கிறாய்? பதினெட்டு லட்சம், சியாமளனின் சொந்தச் சம்பாதிப்பா? ஏதோ கார் பற்றிய விஷயங்களில் உன்னை மாதிரித் தெளிவாகத் தெரியாதே தவிர, ஊர், உலகம் இருக்கிற நிலவரமுமா தெரியாமல் போகும்? சும்மா கதை விடாதே!" என்றாள் அவள்.

"கதையா? இரு, இதோ வருகிறேன்!" என்று, உள்ளே சென்று சில பத்திரிகைகளை எடுத்து வந்தான், நந்தகுமாரன்.

"முதலில், உன் சியாமளன் இவர்தானா என்று பார்த்துச் சொல்லு!" என்று ஒன்றின் அட்டைப் படத்தைக் காட்டிக் கேட்டான்.

அங்கங்கே ஏதேதோ லேபிள் எல்லாம் ஒட்டி, விசித்திரமான உடையில் இருந்தாலும், படத்தில் சிரித்துக் கொண்டிருந்தவன், சியாமளனேதான்.

[illegible] தலையாட்டும்போதே, உன் சியாமளன் [illegible], அப்படிக் கிடையாதே என்று, உள்ளூர ஒரு [illegible] எழுந்தது.

"அதுதானே! முகவரி சரியாக இருக்கிறதே என்று பார்த்தேன்!" என்றவன், சகோதரியின் திகைத்த முகத்தைப் பார்த்து, "இன்னும் தெரியவில்லையா? சியாமளன் சார் கார் ரேசிங்கில் பெரிய ஆள். அக்கா! நரேன் கார்த்திகேயன், கருண் சந்தோக் போல, ஸ்டார்! அரபு ஷேக் ஒருவர் ஏற்பாடு செய்த ரேசில் முதலாவதாக வந்தார் என்று. அந்த ஷேக் கொடுத்த பரிசு! அது, சியாமளனின் முதல் ரேசும் கூட! வீட்டில் எத்தனையோ கார் இருந்தாலும்... எல்லாம் விலை உயர்ந்ததுதான். சியாமளன் இந்தப் பரிசுக் காரைத்தான் ஓட்டுவது வழக்கம்! அதனால்தான் காரைப் பற்றிக் கேட்டேன்!" என்றான் நந்தகுமாரன்.

ஏதோ நினைவு வர, "அவர் பெரிய பணக்காரரா, நந்து?" என்று காற்றாகி விட்ட குரலில் கேட்டாள், காஞ்சனி.

"பின்னே?" என்றான் தம்பி. "அவர் குடும்பத்து 'ஜிபி' நிறுவன வருமானமே அதிகம். மற்றப்படி, அடையாறில், அவ்வளவு பெரிய தனி வீடு கட்டியிருக்க முடியுமா?

"காசு இல்லாமல் கார் ரேசிலே கலந்து கொள்ள முடியாதுக்கா! பைக்கே முடியாமல், நான் இருக்கிறேன். ஆனால், சியாமளன் சார்கூட, முதலில் பைக் ரேஸ் போனவர்தான். அவர்கள் நிறுவனத் தயாரிப்புகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஸ்கூட்டர், பைக் எல்லாம் ஓட்டி வேகம், பாலன்ஸ் எல்லாம் தானே பரிசோதிப்பாராம்! அப்படியே பைக் ரேஸ், கார் ரேஸ் என்று..."

இன்னமும் ஏதா இருக்கிறது, இருக்கிறது என்று, முதலில் இருந்தே தோன்றியதே! இருந்தது. இதுதான்!



தன் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்ளாதது. தெரிந்திருக்கும் போல நடந்து கொண்டது, எல்லாமே, இப்போது புரிந்தது. பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்திருப்பாள் என்று நினைத்திருக்கிறான்.

அவளது ஸ்கூட்டரை, என்ன லாகவமாக நகர்த்தினான்! கார் ரேசில் பெரிய ஸ்டாராக இருப்பவனைப் போய், நன்றாகக் கார் ஓட்டுகிறாய் என்று சர்டிஃபிகேட் கொடுத்ததை எண்ணுகையில் முகம் கன்றிக் குன்றிப் போனாள்.

"..போன மாதம் கூட ஒரு வெற்றிக்காக, மந்திரியெல்லாம் வந்து, அவருக்குத் தாஜிலே ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள்.." என்று தம்பி சொன்னபோது, காஞ்சனியின் முகம் மேலும் சிவந்தது.

அன்றுதானே தொடக்கம்!

"இப்போதுகூடத் தென்கிழக்கு நாடுகளில் இயங்கும் சர்க்யூட் ஒன்றில் கலந்து ஜெயித்திருக்கிறார். நாளைக்குப் பத்திரிகையில் வரும், பார்!" என்று, என்னமோ அவனே காரோட்டி வென்றது போலப் பெருமைப் பட்டான், நந்தகுமாரன்.


காஞ்சனியின் மனம் இன்னதென்று சொல்ல முடியாத விதமாகத் தவித்தது.

காஞ்சனியுடைய தந்தையிடமும் கார் இருந்தது. சின்ன மாருதி கார். நாலு பேரும் சேர்ந்து போக நேரும்போது காரை எடுப்பார்கள்.

இந்தச் சியாமளன் கொஞ்சம் பெரிய கார் வைத்திருக்கிறான். அவர்களை விடக் கொஞ்சம் உயர்ந்த நிலையாக இருக்கக் கூடும். அவ்வளவுதானே என்று எண்ணி

யிருந்தாள். ஆனால் இப்போது, பழைய கவலையற்ற வாழ்வு இனி இல்லை என்று நன்றாகப் புரிந்தது.

இந்நிலையில், சியாமளனுடைய தங்கையின் பிறந்த நாள் வந்தது!



8

**ம**ஞ்சு! மஞ்சுளா!

இவளது பிறந்த நாள் பரிசுக்காகத்தானே, சியாமளன் காஞ்சனியைத் தேடி வந்ததே! நல்ல பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று...

அவனிடம் விலையைப் பற்றிப் பேசியதை நினைக்கையில், மறுபடியும் அவளது மனம் கூசியது. அதிலும், பெரிதாகத் தள்ளுபடி வேறு கொடுத்தாளே!

சியாமளனைப் பார்த்து, அவள் நடந்து கொண்ட விதம் பற்றி விளக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால், அவனது பணம் புகழுக்காக, அட்டையாக ஒட்ட வந்ததாக நினைத்தால்? அதைவிடச் சும்மாவே இருப்பது மேல். அத்தோடு, அவனை மறக்க முயற்சிப்பது, அதை விட நல்லது.

அதற்கான முயற்சிகளை அவள் வெகு தீவிரமாகக் கடைப் பிடித்துக் கொண்டிருந்தபோதுதான், மஞ்சுளாவின் பிறந்த நாள் வந்து, அவளது முயற்சிகளை அடியோடு வீணாக்கியது.

அன்றுதானே சியாமளன் திரும்பி வருவதாகக் கூறினான்!

தாமதமாக வரக் கூடும் என்றும் சொன்னான்.

சியாமளன் திரும்பி வந்திருப்பானா என்று காஞ்சனி பத்தாவது தடவையாக யோசித்தபோது, அவனே டெலிஃபோனில் அவளை அழைத்தான்.



தான் நினைத்தது எதையும், தோழிகள் அறியச் சொல்ல முடியாமல், வெறுமனே, "வெற்றிக்கு வாழ்த்துக்கள்!" என்றாள் அவள், வெற்றுக் குரலில்.

சியாமளன் நகைத்தான். "ஒரு வழியாகத் தெரிந்து விட்டது போல!" புன்னகைக் குரலிலேயே!

"உம்... தம்பி சொன்னான். உண்மை தெரியாமல், நான் ஏதேதோ... சாரி!"

"போதும், காஞ்சனி. மன்னிப்புக் கோர, இதில் ஒன்றுமே இல்லை. அத்தோடு, என் மண்டைக் கனத்துக்கும், இப்படி ஒரு சரியான அடி தேவைதானே!" என்று மேலும் சிரித்தான் அவன்.

அவனது சிரிப்புச் சத்தமே, அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்க, "அப்படியில்லை..." என்று மறுத்தாள் காஞ்சனி.

"கர்வம்தான், காஞ்சனி! ஏதோ சில ஸ்போர்ட்ஸ் பத்திரிகைகளில் படம் வந்து விட்டதாலேயே, பெரிய ஹீரோ என்று எண்ணிக் கொண்டது, பிசகுதானே? கடைசியாக ஒரு சின்னப் பையன் வந்து, அடையாளம் காட்டும்படி ஆகிவிட்டது. ஒரு வகைப் பாடம். அதிருக்கட்டும். நான் ஃபோன் செய்தது, வேறு காரணமாக. மாலையில் பூ வேலை செய்து கொடுத்தவளை, என் தங்கை சந்தித்தே ஆக வேண்டுமாம்! அவளுக்கு அவ்வளவு பிடித்துப் போய் விட்டதாம், அந்த வேலைப்பாடு! அதை அமைத்த ஆளையும் பார்த்தே தீர வேண்டும் என்று ஒரே பிடிவாதம். நாளை மாலை, உன்னால் இங்கே வர முடியுமா? நான் வந்து அழைத்துப் போகிறேன்!" என்று கேட்டான் சியாமளன்.

பின்னணியில் கேட்ட இசையும், பேச்சுக் குரல்களும், விழா நடந்து கொண்டிருப்பதைப் புலப்படுத்தின. அங்கே இருந்து கொண்டுதான் பேசுகிறான். தங்கை கேட்டதுமே, கூப்பிடுகிறானா?

உள்ளம் பூரிக்க, "வருகிறேன்," என்றாள் அவள்.

அவன் கேட்டதும், சந்தோஷத்தில் வருகிறேன் என்று உடனே சொல்லி விட்டாளே தவிர, அந்த மஞ்சுவின் வீட்டுக்கு என்ன உடை அணிவது, என்ன நகை போடுவது என்று காஞ்சனி தவித்துப் போனாள்.

பெரிய பணக்காரர்கள் என்று தம்பி சொன்னானே. அவர்கள் புருவம் தூக்கிக் கீழ்க் கண்ணால் பார்க்கும் படியாக எதையும் அணிந்து கொண்டு போய்விடக் கூடாதே என்ற பயம்.

அந்த இசையமைப்பாளர் வீட்டுப் பெண்கள் அணிந்திருந்த உடையை நினைவு படுத்திப் பார்த்தாள். இருவரின் ஆடைகளுமே, சற்று அதிகப் படியாகத்தான் காஞ்சனி எண்ணினாள்.

ரொம்ப யோசித்துவிட்டுத் தாயிடமே யோசனை கேட்டாள்.

லலிதாவுக்கு உள்ளூர ஆச்சரியம்.

பொதுவாக உடை பற்றிக் காஞ்சனிக்கு ஏதும் சொல்ல வேண்டியிராது. இடத்துக்கும், உறவுக்கும் பொருத்தமாக அவளது தேர்வு எப்போதும் சரியாகவே இருக்கும்.

தாயின் விசித்திரப் பார்வை புரிந்து, அவள் முகம் லேசாகக் கன்றியது. "என்னிடம் தைத்துக் கொண்டவர்கள், அம்மா! பெரிய பணக்காரர்கள் என்று, நந்து



சொல்கிறான். அங்கே போய்த் தலை இறக்கமாகி விடக் கூடாது அல்லவா? அதனால்தான் கேட்கிறேன்!" என்று சமாளித்தாள் பெண்.

"உன் ஜரி வேலை ஆடைகள் எல்லாமே நன்றாகத் தான் இருக்கும். கொஞ்சம் எளிமையான வேலைப்பாடு உள்ளதாகப் பாரேன்! நன்றாகக் கஞ்சி போட்ட காட்டன் என்றால், யார் வீட்டுக்கும் பொருந்திக் கொள்ளும். பொதுவாகப் பணக்காரப் பெண்களும், எப்போதும் பட்டாடையிலேயே இருப்பது கிடையாது, காஞ்சிம்மா. உடம்புக்கு இதமாக இருப்பதைத்தான் அவர்களும் முக்கியமாகக் கருதுவது. அதனால், உடை குறைவாகத் தோன்றி விடுமோ என்று பயப்படாதே! மற்றப்படி, நீயேதான் எப்போதும் பளிச்சென்று இருப்பாயே!" என்று முறுவலித்தாள் அன்னை.

பதிலுக்குப் புன்னகை செய்தவளின் உள்ளூர இருந்த கலக்கம் மறைந்து, உடல் தானாக நிமிர்ந்தது.

எப்போதுமே, லலிதா அப்படித்தான். என்ன, ஏது என்று நுணுக்கி நுணுக்கிக் கேட்க மாட்டாள். ஆனால், பிள்ளைகளின் தன்னம்பிக்கையைத் தூண்டி விட்டு விடுவாள். தன்னால் முடியாது, தாழ்வு மனப்பான்மை தோன்றவே விட மாட்டாள்.

சற்றே மலைத்த மனம் மீண்டும் நிலைக்கு வந்துவிட காஞ்சனி இலகுவாக உடை தேர்ந்தெடுத்தாள்.

பச்சையும் நீலமுமாகப் பூப் போட்டதில், நீலப் பூக்களில் மட்டும் அதே நிறத்தில், அவளே செய்த [illegible] பளபளப்புடன் மணி வேலையுடன் கூடிய [illegible]. மெல்லிதான தங்க நகைகள்.

வேலை நேரம் முடிந்து, மற்றவர்கள் சென்று விட, சியாமளன் வந்தபோது, அவள் தயாராக இருந்தாள்.

சியாமளனின் திருப்தியுற்ற பார்வை, இதமாய் அவளைப் பாராட்ட, உள்ளூர மகிழ்ச்சியோடு கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

சியாமளனுடைய தங்கையும் பழகுவதற்கு இனிய வளாக இருந்தாள்.

கார் சத்தம் கேட்டதும், வாயிலுக்கு வந்து வரவேற்ற வள், உடனேயே, காஞ்சனியின் உடையைப் பாராட்டி, சகஜமாகப் பேசலானாள். "அண்ணன் தந்த சேலையும், வேலைப்பாடு மிக அழகு, காஞ்சனி. என் மாமியார், பட்டுச் சேலைகளில் போய்க் கன்னா பின்னா என்று என்னவோ செய்கிறார்கள் என்று அவ்வப்போது குறைப்படுவார்கள், அவர்களே 'பிரமாதம்' என்று விட்டார்கள். இனி, என் சுரிதார் எல்லாவற்றையும் உங்களிடம்தான் கொடுக்கப் போகிறேன்!" என்றாள்.

"பார்த்தும்மா! இந்தம்மா விலை அதிகம் போடு வார்கள். கட்டுப்படி ஆகுமா என்று கவனித்துக் கொடு. ஆனால், கேட்டுக் கொண்டால், கொஞ்சம் குறைப்பதும் உண்டு!" என்ற சியாமளனின் கேலியில் காஞ்சனியின் முகம் லேசாகச் சிவக்கவும், "அது என்ன கதை?" என்று ஆர்வத்துடன் கேட்டாள் மஞ்சுளா.

அவன் சிரிக்க, "ஒன்றும் இல்லை, மஞ்சுளா. உங்கள் அண்ணன் யார் என்று தெரியாமல், உங்கள் சேலையின் வேலைக்குக் கட்டணம் அதிகம், பரவாயில்லையா என்று கேட்டு விட்டேனாம். உடனே, கையில் பணம் இல்லாத மாதிரிக் குறைத்துப் போடச் சொல்லிக் கேட்டு,



நானும் மக்கு மாதிரி, அதற்கும் சரியென்றேன். அதைத் தான் சொல்லிக் காட்டுகிறார்!" என்றாள், சற்றே இறங்கிய குரலில், காஞ்சனி.

"மக்கு மாதிரி என்று ஏன் சொல்லுகிறீர்கள், காஞ்சனி! அண்ணன் சிரியாமல் சொல்லுகிற விதத்தில், என் கணவர்கூடப் பலமுறை ஏமாந்திருக்கிறார். மனோவின் புத்திசாலித்தனத்தை மெச்சி, நிறுவனத்தின் விற்பனைப் பிரிவையே அவரிடம் ஒப்படைத்திருக்கிறார்களே! அண்ணனிடம் ஏமாறுவதால், யாரும் மக்காகிவிட மாட்டார்கள். அண்ணனுக்கு நன்றாக நடிக்கத் தெரியும் என்று வேண்டுமானால் சொல்லலாம்!" என்று காஞ்சனியைத் தாங்கிப் பேசினாள் மஞ்சுளா.

குறுநகையுடன் தங்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான், சியாமளன்.

காஞ்சனி திரும்பிப் பார்க்கவும், "இனம் இனத் தோடே!" என்றான் சோகமாக.

இரு பெண்களும் ஒருவரை ஒருவர் பார்த்துத் தோழமையாய் முறுவலிக்க, சியாமளன் தொடர்ந்தான். "அத்தோடு, வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி, அத்தானின் புத்திசாலித்தனத்துக்கு ஒரு பறைசாற்றல். பக்கத்திலேயே, இந்த அண்ணன், உயிரைக் கொடுத்துச் சாதனை படைத்தாலும், பாராட்டி ஒரு வார்த்தை உண்டா? நமக்கெல்லாம் ஒரு டமாரத்தை எடுத்துக் கழுத்தில் மாட்டிக் கொண்டு, நாமாகச் சொன்னால்தான் உண்டு!" என்று வருத்தப்பட்டான்.

"அதற்காகத்தான் சீக்கிரமாகக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள் என்று, கிளிப்பிள்ளைக்குச் சொல்லுகிற

மாதிரித் திருப்பித் திருப்பிச் சொல்வது! வருகிற அண்ணி உங்கள் புகழ் பாடுவாள் அல்லவா?"

"அவள் என் புகழைப் பாடுவாளோ, அல்லது, அவள் பாட்டுக்கு என்னைத் தாளம் போடச் சொல்லுவாளோ? யாரம்மா கண்டது?" என்று சியாமளன் பாவனையோடு கூறவும், எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

அதுவரை, அண்ணன் தங்கையின் பேச்சில் குறுக்கிடாமல் பார்த்திருந்த காஞ்சனியால் இப்போது சிரியாதிருக்க முடியவில்லை.

அவள் சிரிப்பதைச் சில கணங்கள் பார்த்துவிட்டு, "அண்ணன் சொன்ன மாதிரி, மிக அழகாக இருக்கிறீர்கள்!" என்று மஞ்சுளா சொன்னபோது, மீண்டும் காஞ்சனியின் முகம் சிவந்தது.

அண்ணன் சொன்னாராமே!

முயன்று சமாளித்துக் கொண்டு, "எப்போதாவது, நடிக்கிறபோது சொன்னாராக்கும்!" என்று அவள் திருப்ப, மஞ்சுளாவுக்கு மீண்டும் சிரிப்புப் பீறிட்டது.

"இல்லை, அப்படி இல்லை, காஞ்சனி. நிஜமாகவே நீங்கள் அழகாகத்தான் இருக்கிறீர்கள்!" என்று சிரிப்பைச் சமாளித்துக்கொண்டு, மஞ்சுளா வலியுறுத்த,

"இந்த வார்த்தை நான்தான் சொல்ல வேண்டும். உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்றால், யாருமே நம்ப மாட்டார்கள். பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல, அவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்!" என்றாள், காஞ்சனி.



"பின்னே? ஒரு கிலோ கூடினாலும், உடல் பயிற்சி, பயிற்சி என்று மனோ என் உயிரை வாங்கி விடுவாரே! உணவிலும்.." என்று மஞ்சுளா விவரிக்கையில், சியாமளன் குறுக்கிட்டான்.

"இது எனக்குத்தான் ஒரு மறைமுகமான பாராட்டு. மஞ்சு. எதையாவது சொல்லிக் கெடுக்காதே!" என்று அவன் புருவம் உயர்த்திப் பெருமையாகக் கூறவும், இரு பெண்களும் வியந்து நோக்கினர்.

"எப்படி?" என்று, ஒரே குரலில் கேட்டனர்.


"உன்னிடம் முதலிலேயே, நானும் தங்கையும் ஒரே சாயல் என்று சொன்னேனே! தங்கை அழகு என்றால், அதே சாயல் உள்ள நானும் அப்படித்தான் என்று சொல்லாமல் சொல்வதுதானே!" என்று அவன் எடுத்துச் சொல்ல, காஞ்சனி மறுக்க மாட்டாமல் முறுவலித்தாலும், "டமாரம் கொட்ட, உங்கள் அண்ணனுக்கு ஆளே தேவையில்லை. மஞ்சுளா! அவரே போதும். அதிகப்படி என்றுகூடச் சொல்லலாம். வாய்ப்புக் கிடைத்தால், விடவே காணோமே!" என்று காலையும் வாரி விட்டாள்.

கலகலப்பான பேச்சிலும், பழச்சாறு சிற்றுண்டியிலும், நேரம் போவதே தெரியாமல் ஒரு மணி நேரத்துக்கு மேல் சென்று விட, "ரொம்ப இருட்டு முன் நான் வீடு திரும்பி விடுவது வழக்கம்!" என்று, காஞ்சனி எழுந்தாள்.

மீண்டும் அவளது அலுவல் இடத்தில் விட்டுவிட்டு, "உன் விசிறியான என் தங்கையை நீ பார்த்து விட்டாய். என் விசிறியான உன் தம்பியை நான் சந்திப்பது எப்போது?" என்று கேட்டான், சியாமளன்.

அவள் வீட்டுக்கு வருவதாகச் சொல்லுகிறானே! அப்படியானால்..?

விழி விரிய, அவனைப் பார்த்தவளின் உள்ளம் துள்ளாட்டம் போட்டது.



9

அவளுடைய வீட்டுக்குச் சியாமளன் வர வேண்டும் என்று காஞ்சனி உள்ளூர ஆசைப்பட்டாளே தவிர, தானாக அவனை வீட்டுக்குக் கூப்பிடவே அவளுக்குத் தயக்கம்தான். அவனது பணம், புகழுக்காக அழைப்பதாக எண்ணி விடக் கூடாதே!

அதனாலேயே, வா என்று - ஜாடை மாடையாகக் கூட - அவனிடம் அவள் சொல்லவில்லை.

ஆனால், அவனே வருவதாகக் கூறவும், அவளுக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

முகம் விகசிக்க, "நாளைக்..." என்று தொடங்கி விட்டவள், சட்டெனப் பேச்சை அடக்கி, "நாளைக்கு நந்தகுமார் வீட்டில் எப்போது இருப்பான் என்று தெரியவில்லை, சியாமளன்! அவனிடம் கேட்டுக் கொண்டு, சொல்லட்டுமா? நீங்கள், கொஞ்ச நாள், ஊரில் இருப்பீர்கள்தானே?" என்று விசாரித்தாள்.

"உன் வீட்டுக்கு வருகிறவரை, நிச்சயமாகச் சென்னையில்தான் இருப்பேன்!"

வேடிக்கையாகச் சொன்னானா அல்லது, உண்மையாகச் சொன்னானா?

எப்படியும், வீட்டுக்கு வருகிறேன் என்றது நிஜம் தானே?



அவனுடைய தங்கை வீட்டுக்கு அழைத்துச் சென்றான். இப்போது அவள் வீட்டுக்குத் தானாகக் கேட்டு வருகிறான். இதற்கு ஏதேனும் உள்ளர்த்தம் இருக்குமா?

அவள் அடக்கி வைத்தாலும், பிடிவாதமாகத் தலை தூக்குகிற உள்ளர்த்தம்?

"தம்பியைக் கேட்டு, நாளையே ஃபோன் பண்ணுகிறேன், சியாமளன்! வரட்டுமா?" என்று, ஸ்கூட்டரில் சாவியை நுழைத்தாள் காஞ்சனி.

அவளது வண்டியின் ஸ்டாண்டை எடுத்து விட்டு விட்டு, "உன் தம்பியுடைய நண்பர்கள் யாரும் ரேஸ் பைத்தியம் இல்லையே! அப்படியே இருந்தாலும், இன்னொரு முறை சந்திக்கலாம் என்று சொல்லி விடு. இப்போது எனக்கு உன் வீட்டாரை மட்டும்தான் பார்த்துப் பேச வேண்டும்!" என்று அவன் முறுவலோடு கூறியபோது, அது பற்றி, மேலே நினைத்துப் பார்க்கக் கூட, அவளுக்குப் பயமாக இருந்தது.

ஏதேதோ ஆசைகளை வளர்த்துக் கொண்டு, அப்புறம் ஒன்றுமில்லை, சும்மாதான் என்றால் தாங்க முடியாது. எனவே, அதைப் பற்றி, நினையாதிருப்பது நல்லது.

ஆசைப்படும்போது, எதிர்பார்க்கத் தோன்றும், எதிர்பார்த்தது கிடைக்காதபோது, ஏமாற்றம் ஏற்படும் என்றுதானே அறிஞர்கள் சொல்லுகிறார்கள்! அதனால், ஆசைப் படுவதே கூடாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் காஞ்சனி.

ஆனால், சொல்லிக் கொள்ள மட்டும்தானே முடியும்?

நந்தகுமாருக்கு ஒரே மகிழ்ச்சி.

அவனுடைய ஹீரோ! இந்தச் சின்ன வீட்டுக்கு அவனைப் பார்க்க வருகிறான்! எப்பேர்ப்பட்ட அதிருஷ்டம்!

''சின்ன வீடு என்று சொல்லாதேடா! நம் வீடும் நல்ல வீடுதான்! நம் இரண்டு பேருக்கும் தனித்தனிப் படுக்கை அறை, குளியலறை என்று எவ்வளவு வசதியான வீடு! உன் நண்பர்களோடு, என்ன கொட்டம் அடிப்பாய்! இப்போது, சொல்வதைப் பார்!'' என்று குரலில் கண்டனம் தொனிக்கக் கூறினாள் காஞ்சனி.

''ஆமாமாம்! பெத்த வசதிதான். ஊரில் இருந்து அத்தை, சித்தப்பா குடும்பத்தோடு வரும்போது இடத்துக்குத் திண்டாடுவது நினைவில்லை? சியாமளன் சார் வீடு எவ்வளவு பெரிது, தெரியுமா? ஏன், அவருடைய வீட்டைப் பார்த்தாயே, எப்படி இருக்கிறது?'' என்று திருப்பிக் கேட்டான், நந்தகுமார்.

''பணம் இருக்கிறது. பெரிதாகக் கட்டி, அழகு படுத்தி வைத்திருக்கிறார்கள். அதற்காக, நம்மதைப் பற்றிக் குறைப்படாதே. இதுவும் இன்னொரு வகையில் அழகு தான்!'' என்றாள் தமக்கை - பிடிவாதக் குரலில்.

முந்தைய நாள், அங்கே எதை உடுத்துப் போவது என்று மலைத்தது மறந்து விட்டது போல என்று உள்ளூர முறுவலித்துக் கொண்டபோதும், மக்களின் வாக்கு வாதம் காதில் விழுந்ததாகவே, லலிதா காட்டிக் கொள்ளவில்லை.

அவர்களே சண்டையிட்டு ஓயட்டும்! போதும் என்று யாரிடம் சொன்னாலும், அம்மாவுக்குத் தன்னைப் பிடிக் காது, அடுத்தவர்தான் செல்லம் என்று தாயிடம் பாயத் தொடங்கி விடுவார்கள். தலையிடாமல் விட்டு விட் டால், தானாகவே சமாதானமாகி, வீட்டை அழகு படுத் தும் வேலையையும் சீக்கிரமே தொடங்கி விடுவார்கள்,



ஏதோ, இருவருக்கும் மதிப்புக்குரிய விருந்தாளி, நல்லதாக ஓர் இனிப்பு, காரம் தயாரித்து வைத்துவிட்டு, ரசனைக்கேற்ப பழச்சாறோ, காஃபியோ கொடுத்தால், அவள் வேலை முடிந்தது என்பது, லலிதாவின் கருத்து.

ஆனால், வந்தவன் அவளையும் இழுத்து வைத்துப் பேசுவான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

குறித்த நேரத்தில் சரியாக வந்த சியாமளன், கையோடு கொண்டு வந்த பூங்கொத்தையே, ''வணக்கம் ஆன்ட்டி!'' என்று லலிதாவிடம்தான் கொடுத்தான்.

பூங்கொத்தை வைப்பதற்குக் கிண்ணம் தேடிச் செல்லத் தொடங்கியவளை நிறுத்தி,

''நீங்கள் உட்காருங்கள், ஆன்ட்டி! அதையெல்லாம் சின்னப் பிள்ளைகள் செய்யட்டும். ஆனால், நீங்களே சின்னவர்களாகத்தான் தோன்றுகின்றீர்கள். ஏதோ, வெறும் முகஸ்துதி என்று நினைத்து விடாதீர்கள், ஆன்ட்டி. என் அம்மாவும் அப்படித்தான். இந்த ஆண்டோடு, அம்மா வுக்கு வயது ஐம்பது முடிந்து விட்டது. இப்போது, முன்னுச்சியில் கொஞ்சம் நரைக்கத் தொடங்கி விட்ட பிறகுதான், எனக்கு அம்மா என்றால் எல்லோரும் ஒருவாறு ஒத்துக் கொள்ளுகிறார்கள். அதுவரை, உன் பெரியக்காவா என்று கேட்டு, என் மானத்தை வாங்குவார்கள். உங்கள் பிள்ளைகளுக்கும், இதே அனுபவம் நேர்ந்திருக்கும் என்பது, எனக்கு நிச்சயம்!'' என்று முறுவலித்தான் சியாமளன்.

சியாமளன் கூறியது எல்லோருக்குமே பிடித்தது.

'ஆமாம், ஆமாம். அப்படி நடந்திருக்கிறது, எங்கள் பள்ளியில்... எங்கள் கல்லூரியில்..' என்று வீட்டுப்

பிள்ளைகள் இருவரும் மாறி மாறிச் சொல்லி மகிழ்ந்த பிறகு, "சியாமளனுடைய தங்கையும் அப்படித்தான், அம்மா! ஒரு குழந்தைக்குத் தாய் என்று சொல்லவே முடியாது. என்னைவிடச் சின்னப் பெண்ணாகத்தான் தெரிகிறார்கள்!" என்றாள் காஞ்சனி.

அவள் முடிக்கும்போதே, "ஊகூம், இது பொய். உன்னை விட, அவள் பெரியவளாகத்தான் தெரிந்தாள்!" என்று மறுத்தான் சியாமளன். "எனவே, இது முழுக்க முழுக்க முகஸ்துதி. அடடா, முகத்துக்கு நேராகப் பொய்யாகப் புகழுவதுதானே, முகஸ்துதி? இங்கே மஞ்சுளா இல்லாததால், முகத்துக்குப் பின்னால் சொல்லுகிற முகஸ்துதி என்று பெயர் சூட்டி விடலாமா?" என்று அவன் சிறு பாவனையோடு கேட்க, எல்லோரும் முறுவலித்தனர்.

கண்ணை விரித்துப் பார்த்து, "ஐயோ! நீங்கள் இப்படியெல்லாம் பேசிச் சிரிப்பீர்கள் என்று, நான் நினைத்ததே இல்லை, சார். தருண் பார்த்தால், பொறாமையில் வீங்கி, வெடித்து விடுவான்!" என்று நந்தன் பிரமிப்புடன் சொன்னான்.

"ஐயோ, என்னப்பா நீ, இப்படிச் சிரிக்காவிட்டால், என் அழகான, வெண்ணிறமான வரிசைப் பற்களை உங்களுக்கெல்லாம், நான் எப்படிக் காட்டுவதாம்? அதற்காகவேனும் நான் சிரித்தே ஆக வேண்டுமே!" என்று, மேலும் சிரிக்க வைத்தான், சியாமளன்.

மற்றவர்கள் குலுக்கிச் சிரிக்கையில், "ஆனாலும், என் பேச்சை நிரூபிக்க, நீங்கள் இவ்வளவு முயற்சிப்பீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை. ரொம்ப நன்றி!" என்றாள் காஞ்சனி.



வினாவாக நோக்கியவனின் கண்கள் சட்டெனப் பளிச்சிட, "என்ன செய்வது? வீட்டுக்கு அழைத்து, விருந்தும் கொடுக்கிறவளின் வார்த்தையைக் காப்பாற்றித்தானே ஆக வேண்டும்!" என்றான், சியாமளன் - பதிலுக்கு.

"அது என்ன வார்த்தை? காஞ்சனி என்ன சொன்னாள்?" என்று மற்ற இருவரும் ஆவலோடு கேட்க, இப்போது காஞ்சனி தயங்கினாள்.

அவனுடைய சொந்தத் தங்கை வீட்டிலேயே, அவனைத் தற்பெருமைக்காரன் என்று இலகுவாகச் சொன்னாள். கேலிதான்! அண்ணன், தங்கை இருவருமே தவறாக எண்ணவில்லை. அதிலும், கேலிக்கு ஆளானவன் கோபப்படவே இல்லையே என்று, அதை நினைத்து வியப்பும் மகிழ்ச்சியும் அடைவதோடு காஞ்சனி நிறுத்திக் கொண்டிருக்க வேண்டும்!

சொந்த வீட்டிலேயே, அதைக் குறிப்புக் காட்டிக் கேலி செய்திருக்கக் கூடாது!

இப்போதும் வெறும் கேலிதான். ஆனால், தாயார் அதை எப்படி எடுத்துக் கொள்ளுவாளோ என்று அவருக்குச் சொல்லத் தயக்கமாக இருந்தது. அத்தோடு, நந்து வேறு, என் ஹீரோவை எப்படி அப்படிச் சொல்லலாம் என்று எரிந்து கட்டினான் என்றால், சூழ்நிலையே [illegible], ரசாபாசம் ஆகிவிடும்.

அவள் தயக்கத்துடன் நோக்கவும், கண்ணால் சிரித்து, "[illegible] ஒன்றும் இல்லை, ஆன்ட்டி! பற்பசை [illegible]த்துக்கு, என் அழகான பல்லைப் போடலாமே என்று [illegible] தங்கைக்கு ஒரே ஆசை! பரவாயில்லை. [illegible] என்று அப்போது காஞ்சனியும் ஒத்து

ஊதினாள் பற்பசை விளம்பரத்துக்கே தகுதியான அருமையான பற்களை, அவ்வப்போது காட்டாமல் இருக்கலாமா என்றும் பேச்சு வந்தது. அதிருக்கட்டும், நந்தகுமார். ரேசில் உனக்கு ஆர்வம் உண்டு என்று, உன் அக்கா சொன்னாள். அப்படியா?'' என்று பேச்சைத் தம்பியின் பக்கம் திருப்பினான் சியாமளன்.

'அப்பாடி' என்றிருந்தது காஞ்சனிக்கு.

நந்தனும் வாய்ப்புக்காகக் காத்திருந்தவன் ஆயிற்றே!

சற்று நேரம், இந்தக் கார், அந்தக் கார், இத்தனை சிசி, ஃபார்முலா, சர்க்யூட் என்று ஆண்கள் இருவரும் அலசித் தீர்த்தனர்.

அதாவது, நந்தகுமார் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்கக் கேட்க, சியாமளன் அலுத்துக் கொள்ளாமல் பதில் கூறிக் கொண்டு இருந்தான்.

''அவரை ஏதாவது சாப்பிட விடு, நந்து! பேசிக் கொண்டே இருந்தால், எப்படிச் சாப்பிடுவார்?'' என்று லலிதா கூறிய பிறகும், அவன் விடுவதாக இல்லை.

சியாமளனே, ''பரவாயில்லை, ஆன்ட்டி, அவனுக்கும் ரேசில் ஆர்வம் இருக்கிறது. அவன் உண்மையான ஆர்வத்தோடு கேட்பதால், எனக்கும் பதில் சொல்லப் பிடிக்கிறது!'' என்று லலிதாவுக்குப் பதில் கூறவும், மீண்டும் அதே பேச்சு தொடர்ந்தது.

"நீங்கள் சொல்வது சரிதான், சியாமளன் சார். இங்கே எல்லோருக்கும் ரேஸ் என்றாலே ஓட்டப் பந்தயம் மட்டும்தான்! கரன் கதம் பதினாலு வயதில் பைக் ரேசில் ஜெயித்திருக்கிறான் என்றால், இங்கே, காது கொடுத்துக் கேட்க ஆளில்லை!'' என்றான், நந்தகுமார் - வருத்தத்



துடன். ''அதே சமயம் ஆசை மகள் என்றால், அவள் கேட்பதை எல்லாம் செய்வார்கள்!'' என்று பொருமினான்.

''ஆமாமாம்!'' என்று தலையாட்டிவிட்டு, ''முக்கிய மானதை விட்டுவிட்டாயே! சுய விளம்பரம் செய்யத் தேவையே இல்லாமல், மகள் மூச்சு விடுவதைக் கூட அவர்களே புகழ்வார்களே!'' என்று ஓரக் கண்ணால் காஞ்சனியைப் பார்த்துவிட்டு நகைத்தான், சியாமளன்.

விடமாட்டேன் என்கிறானே என்று எண்ணியபோதும், கூட இருப்போருக்குப் புரியாத இந்த ரகசியக் கிண்டல், அவளுக்குக் குதுகலமாகவே இருந்தது.

''அதேதான்! நம்மை மட்டும் கண்டு கொள்வதே இல்லை, சியாமளன் சார்!'' என்று ஒத்து ஊதிய நந்த குமாரன் தொடர்ந்து, ''எப்போதும், சியாமளன் சார், சியாமளன் சார் என்றால், பழைய காலத்தில் 'மகாகனம் பொருந்திய' என்று தொடங்கி நீளமாகக் கூப்பிடுவது போல இருக்கிறது. அம்மா ஜாலியாகத் தம்பி என்று விட்டார்கள். இவள் மாதிரிப் பெயரை மட்டும் சொல் வதும் மரியாதைக் குறைவாகத் தெரிகிறது. அங்கிள் என்பதற்கோ, கொஞ்சமும் பொருந்தாமல், நீங்கள் மிகவும் சின்ன வயதாக இருக்கிறீர்கள்...'' என்று கூறுகையில், அதில் இடையிட்டு, ''ரொம்ப நன்றிப்பா! அங்கிள்தான் பொருத்தம் என்று விடுவாயோ என்று ஒரு கணம் ரொம்பவும் பயந்தே போனேன். நல்ல வேளை, காப்பாற்றினாய்!'' என்று ஓர் ஆசுவாசப் பெருமூச்சை விட்டுச் சிறு சிரிப்பலையை எழுப்பினான், சியாமளன்.

ஆனால் அதில் கலந்து கொள்ளாமல், நந்தகுமாரன் புருவம் சுழிக்கவும், ''கவலைப் படாதே, நந்தன். நீ

எளிதாகக் கூப்பிடும்படி, ஏதாவது வார்த்தை கண்டு பிடித்து விடுவோம்!'' என்று இலகுவாக முறுவலித்தான், சியாமளன்.

''சியாமளன் சார் என்பது ஒன்றும் நீளமில்லை..'' என்று காஞ்சனி தம்பியுடன் வாதாட, லலிதாவின் முகத்தில் திகைப்புப் பரவியது.

10



அன்றையச் சந்திப்பு அத்தோடு முடியவில்லை.

ஏதோ வந்தோம், கலகலப்பாக இரண்டு வார்த்தை பேசினோம், கிளம்பினோம் என்றில்லாமல், ''ரேசில் கலந்துகொள்ள உனக்கு ஆசையா, நந்தகுமார்?'' என்று வீட்டு இளவலிடம் சியாமளன் விவரம் கேட்டான்.

''ரொம்ப!'' என்று ஏக்கத்தை முழுவதாக முகத்தில் காட்டினான், நந்தன். ''ஆனால், இங்கேதான் அது பற்றி வாயைத் திறக்க விடுவதே இல்லையே, சியாமளன் சார்! நான் ஏதாவது கேட்டாலே அப்படித்தான்!'' என்று வருத்தப்பட்டான்.

''அப்படியில்லை, தம்பி. அவள் தைத்தாள். இரண்டு பேரை வைத்து வேலை செய்ய இடம் கேட்டாள். தெளிவாகச் சொன்னாள். எல்லாம் புரிந்தது. செய்து கொடுத்தோம்! இவனது ரேஸ் சமாசாரம் எங்களுக்கு ஒன்றுமே புரியவே இல்லை. இவனுமே ரொம்ப ஆசைப்படுகிறானே தவிர, எங்கே போய், என்ன செய்ய வேண்டும் என்று, ஒன்றும் தெரியவில்லை. நிறையச் செலவாகும் என்று மிரட்டுவதோடு சரி. ஆனால், இவன் அப்பா பிள்ளைகள் விஷயத்தில் பணத்தைப் பெரிதாக



நினைப்பவர் இல்லை. இவனுக்கே சரியான வழிகாட்டல் இல்லை என்பது என் கருத்து,'' என்றாள் லலிதா.

''நான் ஏற்பாடு செய்யட்டுமா, ஆன்ட்டி? ஏதாவது பைக் தயாரிப்பு நிறுவனத்தில் சேர்த்து விட்டால்...'' என்று சியாமளன் சொல்லி முடிக்கு முன், ''முடியுமா, சியாமளன் சார்? அதை மட்டும் செய்து தந்தீர்கள் என்றால், என் உயிர் இருக்கும்வரை, நான் உங்களை மறக்க மாட்டேன், சார்!'' என்று அவன் கையைப் பற்றிப் பரபரத்தான் நந்தன்.

சியாமளன், லலிதாவைப் பார்க்க, அவளும் ஒப்புதலாய்த் தலையசைத்தாள்.

''ஏதாவது 'நாலைவசி'ல், உன்னைச் சேர்க்க ஏற்பாடு செய்கிறேன். ஆனால், நான் சொன்னேன் என்பதற்காக எடுக்க மாட்டார்கள். நீயும் திறமையைக் காட்ட வேண்டும்!'' என்று சியாமளன் கூறவும், நந்தகுமாருக்கு நன்றி மிகுதியில் கண்ணீரே வந்து விட்டது.

நன்றி நவிலுமுன், ஏகப்பட்ட தடுமாற்றங்கள். அதிலும், சியாமளனின் பெயரை, சாருடன் சேர்த்து, எழுத்துக்களை முன்னும் பின்னுமாகப் போட்டுக் குழப்பியடித்தான்.

''இவனுக்கு வசதியாக ஒரு சின்னப் பெயரைச் சீக்கிரமே கண்டு பிடிக்க வேண்டும்போல இருக்கிறதே! இல்லாவிட்டால், என் பெயரே அம்பேல்தான்! 'சீரளன் சார், சாளரன் பார்' என்று கொலை பண்ணி விடுவான், நந்தகுமார்!'' என்று சிரித்தான் சியாமளன்.

தம்பிக்காகக் காஞ்சனி பேசினாள். ''அவனுக்கு இருக்கும் பரபரப்பில் தெளிவாகப் பேசக்கூட வர

வில்லை. அவ்வளவு ஆசை, அவனுக்கு ரேசில். அவனது ஆசை நிறைவேறுவதில், எனக்கும் மிக்க மகிழ்ச்சி, சியாமளன். என் நன்றியையும் ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவள், உணர்ச்சியோடு.

''ஆஹா! எவ்வளவு இலகுவாக, நன்றி என்ற ஒரே வார்த்தையில் முடித்துவிடப் பார்க்கிறாய்? அதெல்லாம் ஒத்துக் கொள்ள முடியாதும்மா!'' என்றான் சியாமளன்.

''வேண்டுமானால் உங்கள் ஜிப்பா ஒன்றுக்குப் பூவேலை செய்து தருகிறேன்!'' என்றாள் காஞ்சனி, தாராளமாக.

''அதெல்லாம் போதாது.''

''வேறு என்ன வேண்டும், சியாமளன் சார்? சொல்லுங்கள், நான் செய்யச் சொல்லுகிறேன்!'' என்றான் நன்றிக் கடலில் முக்குளித்துக் கொண்டிருந்த நந்தன்.

''வேறென்ன? இப்போது உங்களைப் பார்க்கக் காஞ்சனியோடு இங்கே உங்கள் வீட்டுக்கு நான் வரவில்லையா? அதே போல, எங்கள் வீட்டுக்குக் காஞ்சனியும் வந்து, என் அப்பா, அம்மாவைப் பார்க்கலாமே! நீயும் வந்தால், உனக்குப் பயிற்சிக்கு யார் யாரைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று, என் தந்தை சொல்லுவார்! காஞ்சனி அம்மாவிடம் பேசிக் கொண்டிருக்கலாம்!''

உற்சாகத்தில் நந்தன் குதிக்கத் தொடங்கி விட்டான்.

உண்டு முடித்த பின், காலிப் பாத்திரங்களை அகற்றிச் சுத்தம் செய்வதில் காஞ்சனி ஈடுபட, ''நந்துவின் பிரியப்படி, ஏதாவது சின்னப் பெயர் கண்டு பிடிக்கப் போவதாகச் சொன்னீர்களே, சியாம் என்ற சுருக்கம்



மட்டும்தான் இருக்கிறது. ஆனால், அது அதிகப்படி உரிமை எடுத்தாற் போலத் தோன்றுகிறதே!'' என்று லலிதா கேட்டாள்.

''ஐயய்யோ, நான் மாட்டேன்! சுத்த மரியாதை இல்லாத் தனமாகத் தெரியும்!'' என்றான் நந்தகுமார்.

''நானும் அதைச் சொல்லவில்லை. நம் இரு குடும்பங்களின் மூலமும் கிட்டத்தட்ட ஒரே இடம். மூன்று தலைமுறையை அலசினோமானால், ஏதாவது உறவு கிடைக்கும். அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணினேன்!''

லலிதாவின் முகத்தில் இறுக்கம் தளர்ந்தது. ''ஜாக்கிரதை, தம்பி. ரொம்பத் தோண்டினால், ஏதாவது தாத்தா உறவாகி விடப் போகிறீர்கள்! எனக்குத் திருமணமான அன்று, இப்படித்தான் என்னை ஒரு பத்து வயதுப் பெண் பாட்டி என்று அழைத்தது. இவன் அப்பாவுக்கு ஏதோ இரண்டு விட்ட அக்காவுடைய பேத்தியாம்! அவரைத் தாத்தா என்றது. தாத்தாவுடைய மனைவி பாட்டிதானே!'' என்று இலகுவாகப் பழங்கதை சொல்லலானாள்.

வேலை முடிந்து, வீட்டுத் தலைவர் மாதவனும் வந்து விட்ட, அவருடனும் சற்று நேரம் பேசியிருந்து விட்டுச் சியாமளன் கிளம்பினான்.

அவனை வழியனுப்பப் போன பிள்ளைகள் இருவரும் வரும் ஞாயிறன்று, சியாமளன் வீட்டுக்குச் செல்லப் போவதாக அறிவித்தார்கள்.

அன்று அவனுடைய தந்தைக்கு விடுமுறை என்பதால் வீட்டில் இருப்பாராம். நந்தன் பைக் ஓட்டுவதைப் பார்த்து அபிப்பிராயம் சொல்லுவாராம்.

''பரீட்சைக்குப் போகிற மாதிரிக் கொஞ்சம் பட படப்பாக இருக்கிறதும்மா!'' என்று வெளிப்படையாக ஒத்துக் கொண்டான் நந்தகுமார்.

அதே போல உணர்ந்ததை, வெளியே சொல்லாமல் மறைத்து, இயல்பு போலக் காட்டிக் கொள்ள முயன்றாள், காஞ்சனி.

ஆனால், அவளுக்கு என்ன பரீட்சை? ஒரு சிநேகிதியாக அவன் வீட்டுக்குச் செல்வதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தனக்குத் தானே அறிவுறுத்தி அமைதியடைய முயன்றாள் அவள்.

ஞாயிறு நல்லபடியாக விடிந்தது.

நந்தகுமாரனின் முதுகில் தட்டிக் கொடுத்து, கட்டை விரலை உயர்த்திக் காட்டி அனுப்பி வைத்தனர், பெற்றோர்.

கூடவே, தம்பியைப் பார்த்துக் கொள்ளுமாறு, அவன் அறியாமல் மகளிடம் ஒரு சைகை.

இவனானால், அக்காதான் அப்பா, அம்மாவுக்குச் செல்லம் என்கிறான் என்று உள்ளூரச் சிரிக்கும்போதே, காஞ்சனி திடுமெனப் பெரியவளாக உணர்ந்து, தம்பியின் மனம் போல எல்லாம் நடக்க வேண்டும் என்று உள்ளூரக் கடவுளிடம் வேண்டிக் கொண்டாள்.

சியாமளன் கூறியிருந்தபடி, இருவருமே நந்தனின் பைக்கில் சென்றனர்.

மஞ்சுளா குடும்பத்தோடு தாய் வீட்டுக்கு வந்திருந்தாள்.

காஞ்சனியைக் கண்டதும், அவள் ஓடி வந்து உற்சாகமாக வரவேற்ற விதம், காஞ்சனியின் இறுக்கத்தை அறவே போக்கிற்று.



அவளுடைய மகள் அபிக் குட்டி குறுகுறு கண்களை உருட்டியபடி, துறுதுறுவென்று எல்லோர் கவனத்தையும் கவர்ந்தாள்.

ஏதோ விளம்பரப் படப்பிடிப்பு இருந்ததால், மஞ்சுளாவுடைய கணவர் விரைவிலேயே கிளம்பிவிட, சியாமளனும், அவனுடைய தந்தையும் நந்தகுமாரனோடு சென்று விட, வீட்டில் பெண்கள் ராஜ்ஜியம் இனிதே நடந்தது.

தம்பி கிளம்புகையில், காஞ்சனிக்குக் கொஞ்சம் கவலை தான்.

அவளது முக பாவனையைக் கவனித்து, ''கவலைப் படாதே, அம்மா. உன் தம்பியைப் பத்திரமாகக் கூட்டி வந்து உன்னிடம் ஒப்படைக்கிறோம். மைதானத்துக்கு இரண்டு பேரை வரச் சொல்லி இருக்கிறேன். போய்ப் பார்த்துப் பேசிவிட்டு, வருகிறோம். அதுவரை, எங்கள் இடையூன்றி நிம்மதியாகப் பேசிக் கொண்டிருங்கள்!'' என்று ஞானப்பிரகாசம் புன்னகையோடு கூறித் தென்பூட்ட, தம்பியைப் பார்த்து உற்சாக முறுவலோடு தலையசைத்து அனுப்பினாள் அவள்.

சுமார் இரண்டு மணி நேரம் கழித்து அவர்கள் திரும்பி வந்தபோது அவன் களைத்திருந்தபோதும், அவனது முகம் உற்சாகமும் மகிழ்ச்சியுமாகப் பளபளத்தது.

சியாமளனுடைய தாயார், அவளது கையைப் பற்றி அன்போடு முத்தமிட்டு வழியனுப்பியபோது, காஞ்சனி மிகவும் சந்தோஷமாக உணர்ந்தாள்.

அந்த வீட்டில் எல்லோரும் பிரியமானவர்களே. பணக் கணக்குப் பார்த்து, அதற்குச் சரியாக மில்லி மீட்டர் கணக்கில் புன்னகைக்கிறவர்கள் அல்ல.

மறுநாள் வேலை முடிகிற நேரம் வந்த சியாமளன், ஒரு டிசைன் புத்தகத்தைப் புரட்டியபடி, ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

அதாவது காத்திருக்கிறானாம்.

குறுகுறுப்பாக நோக்கிவிட்டு, மற்ற இருவரும் கிளம்பிச் சென்றதும், படபடப்பைக் காட்டாமல், தன் வேலையில் ஈடுபட்டிருந்த காஞ்சனியின் அருகில் வந்து, அவளது கையைப் பற்றி, எழுப்பினான் அவன். "நந்துவை, என்னை அத்தான் என்று அழைக்கச் சொல்ல வேண்டும் என்று எனக்கு ஆசை. என்னை மணந்து, அந்த உரிமையை எனக்குத் தருவாயா, காஞ்சனி?" என்று கேட்டான்.

ஒரேயடியாக எதிர்பார்க்காதது என்று இல்லை. ஆனால், எதிர்பார்ப்பே உன் மனதின் ஆசையின் விளைவோ என்று மனதை அடக்கிக் கொண்டு இருந்தவள், இப்போது சற்றுத் திகைத்தாள்.

மனதை அடக்குவதற்காகக் கண்ட காரணங்கள் நினைவு வர, "உங்கள் பெற்றோர் ஒப்புவார்களா?" என்று கேட்டாள் அவள்.

"அவர்களுக்கு உன்னை மிகவும் பிடித்துப் போய் விட்டதாம்!" என்றான் அவன்.

"ஓ! அப்படியானால், ஒப்புதலுக்காக அழைத்துப் போனீர்களா?" என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டாள் அவள். "அவர்கள் மறுத்திருந்தால்?"

"காஞ்சனி?!" என்றான் அவன் வியப்புடன்.

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் பேசாது நிற்கவும், "மறுக்க மாட்டார்கள் என்று எனக்குத்



தெரியும். காஞ்சிம்மா! என் பெற்றோர் நாகரீகம் தெரிந்தவர்கள்! அதைப் போலப் பெரியவர்கள் என்ற மரியாதை காட்டுவதும் நம் வயதினருக்கு நாகரீகம் அல்லவா? நந்தன் ஒரு பெண்ணை விரும்பினால், உன் பெற்றோரிடம் தெரிவிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாய்தானே?" என்று அமைதியாக வினவினான் அவன்.

யோசித்துவிட்டு, "ஆமாம்!" ஒத்துக் கொண்டாள், அவள்.

"பின்னே, இம்மெனுமுன் என்ன கோபம்?"

"கோபம் ஒன்றும் இல்லை, பயம்."

"பயமா?" என்று மீண்டும் வியந்தான் சியாமளன்.

"ம். பயம்தான். அவர்களுக்கு என்னைப் பிடிக்காமல் போயிருந்தால், என் கதி?"

உற்றுப் பார்த்தவன் கண்கள் மலர, அருகில் வந்து, "யாஹூ!" என்று அவளைத் தூக்கித் தட்டாமாலை சுற்றி இறக்கி விட்டான். "சம்மதத்தை இவ்வளவு அழகாக யாரும் சொன்னதில்லை, கண்மணி!"

## 11



சியாமளனுடைய பெற்றோரைப் போலவே, காஞ்சனியைப் பெற்றவர்களும், இளைய தலைமுறையினரின் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுப்பவர்களே.

ஆனால் நடுத்தர வர்க்கத்தில், சற்று உயர்ந்த நிலையில் இருந்த மாதவனும், லலிதாவும், சியாமளன் குடும்பத்தாரின் செல்வ வளத்தைக் கண்டு சற்றே தயங்கினர்.

மூன்று படுக்கையறை ஃப்ளாட்டைச் சொந்தமாக வாங்கி, ஒரு சின்ன மாருதியோடு, சுகமான வாழ்வு

தான். தங்களைப் பற்றித் தாழ்வுணர்ச்சி இருவருக்குமே இருந்ததில்லை.

மேற்கொண்டு, ஒரு 'ட்யூப்ளே' மாடல் சொந்த வீட்டில், சற்றுப் பெரிய இன்டிகாவோ, அதற்கும் மேலாக டாட்டா சுமோவோ வைத்திருக்கும் இடத்தில் மகளுக்குக் கணவன் கிடைத்திருந்தால், முழுத் துடிப் போடு திருமணத்தை நடத்தி வைத்திருப்பார்கள்.

ஆனால், சியாமளனின் வீட்டைப் பற்றி, நந்தகுமார் சொன்ன அளவிலேயே, அவர்களுக்கு மனம் சற்று யோசித்தது.

ரொம்பவே வசதியுள்ள இடம். இரண்டே பிள்ளைகள்! எவ்வளவு செல்லம் கொடுத்து வளர்த்திருப்பார்களோ?

நினைத்ததை யெல்லாம் சாதித்துப் பழகியவனாகச் சியாமளன் இருந்தால் - அப்படித்தான் இருப்பானோ என்று லலிதாவுக்குள் ஒரு சந்தேகமும் இருந்தது. அவன் என்னதான் மூன்று தலைமுறை உறவை , யெல்லாம் இழுத்துப் பேசியபோதும், இந்த 'அத்தான்' உறவைத் தான் சுருக்கப் பெயராக நந்துவிடம் சொல்ல நினைத் தான் என்பது அவளது ஊகம். அப்படியிருந்தால், நினைத்ததைச் சாதித்ததாகத்தானே கொள்ள வேண்டும்? - அது போன்ற பிடிவாதங்களுக்குத் தலையாட்டுகிறவள், காஞ்சனி இல்லையே!

தன்னம்பிக்கை வேண்டும், சுய கௌரவம் வேண்டும் என்று, பிள்ளைகளை முதுகெலும்பு உள்ளவர்களாக வளர்த்து விட்டு, இப்போது எதற்கும் 'ஆமாங்க' போட்டு, விட்டுக் கொடுத்துப் போவாள் என்று எப்படி எதிர்பார்ப்பது?



அதிலும் காஞ்சனி, தன் விருப்பு வெறுப்புகளில் எப்போதும் தெளிவுள்ளவள்.

விருப்பப் பாடம் தேர்ந்தெடுத்தது. பிடித்த ஒரு தொழிலைத் தொடங்கி நடத்துவது... எல்லாவற்றிலும் அப்படித்தான்.

அவளது எல்லாத் தேர்வுகளும் சரியாகத்தானே இருந்தன!

ஆனால், இப்போது, இந்தக் கணவன் தேர்வு அது போல இருக்குமா?

மற்றத் தேர்வுகளைப் போல, இதிலும் அவள் மூளையைப் பயன்படுத்தி இருப்பாளா? காதல் மனதை மயக்கும் உணர்வு ஆயிற்றே!

மகள் பணத்தைக் கண்டு மட்டுமாக மயங்கியிருக்க மாட்டாள் என்பது அவர்களுக்கு நிச்சயம். ஆனால், சியாமளனின் கவர்ச்சிகரமான தோற்றம்!

இது வெறும் வயதின் ரசாயனமாக இருந்து, அவள் பிற்பாடு வருத்தப்படும்படி ஆகி விடக் கூடாதே!

பெற்றவரின் கடமை என்று, மகளிடம் அது பற்றிப் பேசினர்.

அவர்களது கவலை புரிந்து, கண்ணில் சிரிப்புடன், ஒரு சிறு சம்பவத்தின் மூலம், அவர்களுக்குக் காஞ்சனி பதில் சொன்னாள்.

அவளது மனம் தெரிந்ததும், திருமணமே உறுதியாகி விட்ட மாதிரிச் சியாமளன் உற்சாகப்பட்டான்.

உடனே, "ரொம்பவும் துள்ளுகிறீர்களே! என் அப்பா மறுத்தால் என்ன செய்வதாம்?" என்று காஞ்சனி கேட்டாள்.

கேட்டது கிண்டலாகத்தான்.

ஆனால், "உன் அப்பா மறுக்க மாட்டார்!" என்று அவன் ரொம்பவும் நிச்சயமாகக் கூறியது அவளுக்கு உறுத்தி விட்டது!

"ஏன்? நீங்கள் பணக்காரர் என்பதாலா?" என்று மனதில் நினைத்ததை அப்படியே காஞ்சனி கேட்டு விட்டாள்.

அதற்கு, "உடனே கோதிக்க வேண்டுமா? படிக்கிற காலத்திலும் சரி, தொழிலில் ஈடுபட்ட பிறகும் சரி, இன்று வரையில், என் பெயருக்கு ஒரு கரும்புள்ளி விழ நான் விட்டதில்லை! என் பெற்றோர் எனக்காகச் சமா தானம் சொல்லவோ, தலை குனிந்து நிற்கவோ நேர்ந் ததும் கிடையாது! பிறகு, உன் அப்பா ஏன் மறுப்பாராம், சொல்லு?" என்று சியாமளன் பதில் கேள்வி கேட்க, "சரிதான்!" என்று அவள் ஒப்பும்படிதான் ஆயிற்று.

"அப்பா, தன் பெயரில் கரும்புள்ளி விழ விட்டதில்லை என்றால் என்ன அர்த்தம்? தப்பு வழி சென்றதில்லை என்றுதானே? அந்த அளவுக்கு மனக் கட்டுப்பாடு உள்ளவர் என்றுதானே? அப்படிப்பட்டவர், கண் போன வழி, மனம் சென்ற விதமாக ஆடுகிறவராக எப்படி இருப்பார்? அத்தோடு, நந்துவை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள், அவர்கள் வீட்டினர் எல்லோருமே பழகும் விதம் நன்றாகத்தான் இருக்கிறது! பந்தாவே கிடையாதுப்பா! வேறே வீட்டில் இருக்கிற உணர்வே தோன்றவில்லை!" என்றாள் பெண்.

"அது சரி, காஞ்சிம்மா, இவ்வளவு நாள் படிப்பு, தையல் வேலை என்று ஏதாவது வேலை செய்து



கொண்டே இருந்து விட்டாய். இனிமேல், பெரிய வீட்டு மருமகளாக வீட்டில் சும்மா இருப்பது என்றால் உன்னால் முடியுமா என்று யோசித்தாயா?"

"சும்மா இருப்பதா? தன் முனைப்புடன் ஒன்றைத் தொடங்கிச் செய்கிறாள். அதை நிறுத்தச் சொல்லக் கூடாது என்று மாமாவே' சொன்னாராம்மா! சியாமளனும் எனக்காக, வேலை செய்யத் தாராளமாக இடம் இருக்கும் படி பெரியதாக ஓர் இடம் பார்த்துக் கொண்டு இருக் கிறார் தெரியுமா? திலகா, அனி இரண்டு பேருக்கும் மிகுந்த மகிழ்ச்சி!" என்றாள், காஞ்சனி - பெருமையாக.

பெருமளவு கவலை பெற்றோருக்குக் குறைந்ததோடு, மகளின் மனமும் நன்றாகப் புரிந்து போயிற்று.

ஞானப் பிரகாசம் தம்பதியைப் பார்த்த பிறகோ, பாரம் அடியோடு இறங்கிவிட, மிகுந்த உற்சாகத்துடன் திருமண வேலைகளில் ஈடுபடலாயினர்!

நந்தகுமாரனுக்குத் தலைகால் புரியாத உற்சாகம். இவனுடைய ஹீரோவே, அவனுக்கு அத்தானாக வருவது என்றால் எப்படி இருக்கும்! அத்தனை நண்பர்களிடமும் போய்ச் சொல்லி, 'ட்ரீட்' கொடுத்துப் பெருமைப்பட்டான்.

அவனது பயிற்சி ஒரு புறம் நில்லாமல் நடந்தது அவனது இன்னோர் ஆனந்தம்.

பெரியவர்கள் சேர்ந்து, விரைவிலேயே திருமண நாளையும் நிச்சயம் செய்தார்கள்.

திருமணம் தொடர்பான வேலைகளும் வேகமாக நடந்தன.

முகூர்த்தச் சேலை வாங்குவதற்காக இரு அன்னையரும், பிள்ளைகளோடு கடைக்குச் சென்றார்கள்.

ஆனால், சேலை தேர்ந்தெடுப்பதில், ஒரு சிறு குழப்பம் நேர்ந்தது.

காஞ்சனிக்கு, மஞ்சளில் பாய்ப் பின்னல் பார்டருடன், ஒரு புரோகேட் சேலை மிகவும் பிடித்தது.

கிட்டத்தட்ட அதே போல, இளஞ்சிவப்பு நிறத்தில் ஒன்றை எடுத்து. அதுதான் காஞ்சனிக்கு மிகவும் நன்றாக இருக்கும் என்றான் சியாமளன்.

இருவருக்குமே அவரவர் தேர்வுதான் மிகவும் பிடித்தமாக இருந்தது. ஆனால், சற்றுப் பொறுத்து, அரை மனதாக அடுத்தவருக்கு விட்டுத்தர இருவரும் தயாரானபோது, லலிதா இன்னொரு சேலையைச் சுட்டிக் காட்டினாள்.

மஞ்சளும், இளஞ் சிவப்பும் கலந்த இரட்டை வர்ணத்தில் நெருங்கப் பின்னிய ஜரிகைக் கொடியமைப்பு. பெண், பிள்ளை இருவருக்கும் பிடித்த மஞ்சள், இளம் சிவப்பு இரண்டு நிறங்களும் சரி விகிதத்தில் கலந்திருக்க, சேலை மிக அழகாக இருந்தது.

பார்த்ததுமே எல்லோருக்குமே பிடித்துப் போக, அதையே தேர்வு செய்தனர்.

கணவனிடம் விவரம் சொல்லிப் பணம் எடுத்துக் கொண்டு, மறுநாள் லலிதா அதே பட்டு அங்காடிக்குச் சென்று, வேண்டியதைத் தேர்ந்தெடுத்துப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பார்சலை வாங்கச் சென்றால், அங்கே வெளியே காத்திருந்த சியாமளனுடைய அன்னை யசோதையைச் சந்திக்க நேர்ந்தது.



சிறு திகைப்பின் பின், "மாப்பிள்ளைக்குப் பிடித்ததே என்று. அந்த இளம் சிவப்புச் சேலையை வரவேற்புக்குக் காஞ்சனிக்குக் கட்டி விடலாம் என்று வாங்கினேன்!" என்றாள், லலிதா - தயக்கத்துடன்.

லேசாகச் சிரித்துவிட்டு, "இது என்ன பாருங்கள்! காஞ்சனிக்குப் பிடித்ததே என்று, அதே மஞ்சள் சேலையை அவளுக்கு நிச்சயப் பட்டாகக் கொடுக்க எண்ணி வாங்கினேன்!" என்று டிரைவர் வாங்கி வந்த பார்சலைக் காட்டி யசோதை கூறவும், லலிதாவுக்கும் சிரிப்பு வந்தது.

மகளின் எதிர்காலம் பற்றிய கவலையும் அடியோடு அகன்று போயிற்று.

இப்படியொரு மாமியார் எந்தப் பெண்ணுக்குக் கிடைப்பாள்?

வீட்டிற்கு வந்து மகளிடம் நடந்ததைச் சொல்லி, லலிதா மகிழ்ந்தாள்.

அதைக் காஞ்சனி டெலிபோன் பேச்சில், சியாமளனிடம் தெரிவிக்க, அதற்குள், தன் தாய் மூலம் விவரம் அறிந்திருந்த அவன், "ஏன் நான் மட்டும் அதிர்ஷ்டசாலி இல்லையா? எனக்குப் பிடித்ததை, என் மாமியாரும் தான் வாங்கியிருக்கிறார்கள்!" என்றான் பதிலுக்கு.

"ஆனால், ஒன்றுக்கு மூன்றாகக் கட்டிக் கொள்ளப் போவது நான்தானே!"

"அதில் என்ன பிரயோஜனம்? கட்டிக் கொண்டு கண்ணாடியில் ஓரிரு தரம் பார்ப்பதோடு சரி. கட்டியிருப்பதைப் பார்த்து, முழு நேரமும் ரசிக்கப் போவது நான்தானே!" என்று அவன் திருப்பவும், இருவருக்குமே சிரிப்பு வந்துவிட்டது.

இப்படித் தினம்தோறும், வருங்காலக் கணவனும் இன்றையக் காதல் நாயகனுமான சியாமளனோடு பேசிக் கொண்டிருப்பதும், சந்திப்பதும், அன்றாட வேலைகளைக் கவனிப்பதுமாகக் காஞ்சனிக்குப் பொழுது இறக்கை கட்டிப் பறந்தது.

இடையில் ஏதோ வேலை என்று சியாமளன் வெளியூர் சென்று வந்தான்.

செல்லில் தினமும் அவன் பேசியபோதும், காஞ்சனிக்குச் சென்னை ஒளியிழந்து காணப்பட்டது.

அவன் திரும்பி வந்ததும், உலகம் மீண்டும் நேராயிற்று.

அதிலும், திரும்பி வந்தவன் நேராக அவளைப் பார்க்க வரவும், பளிச் பளிச் என்று வாண வேடிக்கையே நடந்தது.

வந்தவனும், திலகா, அளகாவிடம், "இதோ வந்து விடுகிறோம். பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று, அவன் தான் முதலாளி போல உத்தரவிட்டு விட்டுக் காஞ்சனியைக் கைப்பிடியாகக் கூட்டிச் செல்ல, அவளும் மறுக்கவில்லை. மறுக்கத் தோன்றவில்லை.

காரினுள் ஏறி, அவளை அருகே அமர்த்தி, அவளது கையைப் பற்றியவாறு சற்று நேரம் அசையாமல் அமர்ந்திருந்தான், சியாமளன்.

அவளுக்கும், அந்த அண்மை தேவைப்பட்டாற்போல, அவன் தோளில் தலை சாய்த்துப் பேசாதிருந்தாள்.

ஒரு பெருமூச்சுடன், "இந்த மாதிரி, உன்னைப் பிரிந்து நாலு நாள் பயணம் எல்லாம் இனி முடியாது என்று



தோன்றுகிறது. கல்யாணம் ஆகியிருந்தால், கூடவே கூட்டிக் கொண்டு போயிருப்பேனே!" என்று அவன் கூற, திருமணத்துக்கு இன்னும் இருந்த பதினைந்து நாட்களை, மிகவும் அதிகப்படியாகக் காஞ்சனி உணர்ந்தாள்.

இந்நிலையில், நந்தகுமாரன் ஒரு நாள், முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு, வீடு வந்து சேர்ந்தான்.

"பாருங்கள், அப்பா! என் சர்க்யூட்டில், என் முதல் பந்தயத்தை, காஞ்சி கல்யாணத்தன்று பார்த்து வைத்திருக்கிறார்கள், பாருங்கள்!" என்று வருத்தத்துடன் கூறினான்.

## 12



நந்தகுமாரன் கொண்டு வந்த சேதி, வீட்டில் எல்லோருக்குமே வருத்தத்தைத் தந்தது.

வீட்டு அங்கத்தினர், நாலே பேர், குடும்பத்தில் நடக்கும் முதல், முக்கிய விழாவில் அவர்களில் ஒருவர் இல்லை என்றால் எப்படி?

"அன்று முழுவதும் அத்தான் பக்கத்திலேயே இருந்து, எல்லா ஃபோட்டோ, வீடியோவிலும், அவர் கூடவே நானும் இருக்க வேண்டும் என்று நினைத்தேனே!" என்று மேலும் அவன் புலம்பவும், அது பொறுக்காமல், "பேசாமல், இந்த ரேசில் கலந்து கொள்ள முடியாது என்று சொல்லி விட்டால் என்ன?" என்று கேட்டு விட்டுக் காஞ்சனி தம்பியிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

"என்னது?" என்று, என்னவோ உலக மகா அநியாயத்தைச் செய்யச் சொன்ன மாதிரி அவன் உறுத்து

விழிக்கவும், "இல்லைடா, உனக்காகத்தான், நீ வருத்தப் படுகிறாயே என்றுதான் சொன்னேன்! நீ ரேசுக்கே போய்க் கொள்!" என்று அவசரமாக வெள்ளைக் கொடி காட்டினாள் அவள்.

ஆனால் அவளது சமாதானத்தை ஏற்காமல், "எல் லாம் உன்னால் வந்தது. நீதான் பொறாமைப் பட்டிருப் பாய்! அத்தானுக்கும் எனக்கும் ரேஸ் ரொம்பப் பிடிக் கும். அதனால், அத்தான் என்னிடம் பேசிக் கொண் டிருப்பாரோ என்று, நீ கண் போட்டிருப்பாய். அதனால் தான் இப்படி ஆகிவிட்டது!" என்று பொருமினான், நந்தகுமாரன்.

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட மற்ற மூவருக் கும், இந்தப் பேச்சில் சிரிப்பு வந்த போதும், குடும்பத்துக் கடைக்குட்டியின் வருத்தத்தைப் பார்த்துப் பரிதாபமாக வும் இருந்தது.

ஆனால், அவனை எப்படிச் சமாதானப்படுத்துவது என்றும், அவர்களில் யாருக்கும் புரியவில்லை. திரு மணம் பற்றிய பேச்சு, செயல் எல்லாமே அவனுக்கு எரிச்சலூட்ட, வீட்டின் கலகலப்பு குறைந்து போயிற்று.

அந்தச் சமயத்தில், தன் தங்கை காஞ்சனிக்குப் பரிசளிக்க விரும்புவதால், பரிசைத் தேர்ந்தெடுப்பதற் காகக் காஞ்சனியை அழைத்துச் செல்லச் சியாமளன் வந்து சேர்ந்தான்.

ஏற்கெனவே, தம்பியின் மனநிலை பற்றிக் காஞ்சனி அவனுக்குத் தெரிவித்திருந்தாள். சியாமளனிடம், தம்பி முகட்டு முகம் காட்டி விடக் கூடாதே என்ற கவலை அவளுக்கு. எதையும் எதிர்பார்க்கும்படியான முன்னெச் சரிக்கை போன்ற அறிவிப்பு.



ஆனால், வந்தவன் நேரே நந்தகுமாரனிடம் சென்று வாழ்த்துத் தெரிவித்தான்.

"அதற்குள் உன்னை ரேசில் ஓட்ட அனுமதித்து விட்டார்களே! அதுவே ஒரு வெற்றிதான், நந்தன்! அன்றைக்கு மிகவும் நல்ல நாள் போலத் தோன்றுகிறது. எனக்கும், உன் அக்காவுக்கும் திருமணம்! உனக்கு ரேசில் கலந்து கொள்ள அங்கீகரிப்பு! கேட்கவே எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது, தெரியுமா!" என்று உற்சாகமாகப் பேசினான்.

சற்று முகம் தெளிந்த போதும், "திருமணத்துக்கு என்னால் இருக்க முடியாதே, அத்தான்!" என்று வருத்தம் காட்டினான் வருங்கால மைத்துனன்.

"அதெப்படிப்பா, நீ இல்லாமல் எங்கள் திருமணம் நடக்கும்?" என்று வியப்புடன் கேட்டான், சியாமளன். "உன் அக்காவையே எனக்குத் தருவதற்கான நன்றி அறிவிப்பாக, உனக்குக் கொடுப்பதற்காக, அம்மா ஒரு மோதிரம் வேறு வாங்கி வைத்திருக்கிறார்களே! அதற்குப் பேர்கூட, என்னவோ பொரி மோதிரம் என்று சொன்னார்களே, அதை உனக்குப் போட்ட பிறகுதானே, அவள் முழுசாக எங்கள் வீட்டுப் பெண்ணாவாளாம்!" என்று கதை படித்தான்.

"ஆனால்..."

"ஆனால் என்ன, நந்து? மதியத்துக்கு மேல்தானே, உன் ரேஸ் வரும்? பைக்கை முன் தினமே ரேஸ் நடக்கும் இடத்துக்கு அனுப்பித் தயார் நிலையில் வைக்க ஏற்பாடும் செய்து விடுவோம். காலையில், திருமணச் சடங்கு எல்லாவற்றுக்கும், நீ என் பக்கத்திலேயே இரு.

திருமணம் முடிந்த பிறகு, சரியான நேரத்தில், உன்னை ரேஸ் நடக்கும் இடத்துக்குக் கொண்டு சேர்ப்பது, என் பொறுப்பு. பைக் தயார் நிலையில் இருப்பதால், பெயரை ரிப்போர்ட் செய்வது தவிர, அங்கே உனக்கு வேறு வேலை இராது. ஆனால்... மாலையில், வரவேற்புக் கேக் வெட்டும்போதுதான், நீ இல்லாமல், எனக்கு போரடிக்கும். கஷ்டம்தான். ஆனாலும் பரவாயில்லை. நீ அங்கே உன் முதல் ரேசில் பைக்கை ஓட்டிக் கொண்டிருப்பாயே, அது எவ்வளவு பெரிய விஷயம்! அதை நினைத்து சந்தோஷப்பட்டுக் கொள் கிறோம். நாங்கள் உன்னை நினைத்துக் கொண்டிருப் போம் என்பதை நினைத்து, நீயும் நன்றாக ஓட்ட வேண்டும்!'' என்று சியாமளன் கூறவும், ''நிச்சயம், அத்தான்!'' என்று பூரிப்புடன் வாக்களித்தான் நந்தகுமாரன்.

காரில் செல்லும்போது, ''பொல்லாத ஆள்தான் நீங்கள்! நந்து இல்லாமல் தவித்துப் போகிற மாதிரி, பாவ்லா காட்டி, அவனை உச்சி குளிர வைத்து விட்டீர்களே!'' என்றாள் காஞ்சனா.

இவன் நடித்தானே என்றிருந்தபோதும், தம்பியின் மூடு மாறி, உற்சாகமானது, அவளுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

ஆனால், ''ஒரேயடியாகப் பாவ்லா அல்ல, காஞ்சனி. உன் தம்பி எனக்கும் பிரியமானவனே! அவன் அருகில் இருப்பது, எனக்குமே மெய்யான மகிழ்ச்சிதான். அதற்கு இயலாமல் போவது வருத்தமும்தான். ஆனால், அவன் தனது கன்னி முயற்சியை, ஒருவிதச் சலனமும் இல்லாமல், அமைதியான மனதோடு செய்ய வேண்டும் என்றும் எண்ணினேன். ஏதோ என்னாலானது!'' என் றான், அவன் - அமைதியாக.



''எப்படியும் நந்துவின் மனநிலை மாறியது எனக்குச் சந்தோஷம்! அதற்காக உங்களுக்கு நன்றி!'' என்று முறுவலித்தாள், காஞ்சனி.

''ஹூம், எத்தனை ஆங்கிலப் படங்கள் பார்க்கிறாய்! காதலனுக்கு எப்படி நன்றி சொல்வது என்று, இன்னும் கற்றுக் கொள்ளத் தெரியவில்லையே! இந்த மக்குப் பெண்ணைக் கட்டிக் கொண்டு என்ன பாடு படப் போகிறேனோ?'' என்று சத்தமாகப் பெருமூச்சு விட்டு, அவளைச் சிரிக்க வைத்தான், அவன்.

உள்ளூர, அவனது வார்த்தைகளை மனதில் அசை போட்டபடி இருந்தாளோ, என்னவோ?

''அண்ணி, வாங்க!'' என்று முக மலர்ச்சியுடன் வரவேற்ற மஞ்சுவைப் பார்த்து, மகிழ்ச்சியோடு பதில் முறுவல் செய்தபோது, ஏதோ புரிந்தது.

இந்தியத் திருமணங்கள் இரு குடும்பங்களை இணைப்பவை என்பது சரியே என்று தோன்றியது.

மற்றப்படி அவளுடைய தம்பியிடம் சியாமளனுக்கும், அவனுடைய சகோதரியிடம் அவளுக்கும் பாசம் எப்படித் தோன்றும்?

இந்த மஞ்சு, ஏதோ பரிசு கொடுத்தால் போதாதா என்றிராமல், காஞ்சனிக்குப் பிடித்தமான பரிசு வாங்க வேண்டும் என்று ஏன் மெனக்கெட வேண்டும்?

'அத்தான்! அத்தான்!' என்று, நந்து ஏன் உருக வேண்டும்?

இரு மாமியார்களும், மருமக்களின் விருப்பத்துக கேற்பத் துணி வாங்கியதும் அவளுக்கு நினைவு வந்தது.

இந்த அன்பும் மகிழ்ச்சியும் நிலைக்க வேண்டுமே!

நிலைக்க வேண்டும் என்று, மனமுருகிக் கடவுளிடம் வேண்டிக் கொண்டாள் காஞ்சனி.

அவளது காதருகில் குனிந்து, "உள்ளே போயிருக்கிற மஞ்சு திரும்பி வருமுன், என்னைப் பற்றிய கனவை முடித்துக் கொள். அல்லது, பகலிலேயே தூங்குகிற சோம்பேறித் திலகம் என்று, மஞ்சு எண்ணிக் கொள்ளப் போகிறாள்!" என்று எச்சரித்த சியாமளனின் கிசுகிசுப் பில் கண் திறந்து, விழி விரிய அவனை நோக்கினாள், காஞ்சனி.

நெக்குருகி இருந்த நிலையில், அவனைப் பார்க்கத் தெவிட்டவில்லை அவளுக்கு. இவனை அடைய, முற்பிறவியில் அவள் என்ன தவம் செய்திருக்க வேண்டும்!

"ஏய், வேண்டாம்மா! இந்தப் பார்வையெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறமாய் வைத்துக்கொள், டார்லிங்! இப்போது வேண்டாம்!" என்று குறும்பாகக் கூறியவன், உடனே அவள் கையைப் பற்றி, "என்னடா? என்ன விஷயம்? பார்வை குழைகிறதே!" என்று மென்குரலில் வினவினான்.

நெகிழ்வுடன், "அது..." என்று தொடங்கியவள், சட்டெனச் சுதாரித்தாள். "ஊகூம்! சொல்ல மாட்டேனே! சும்மாவே மண்டைக் கனம் உண்டு என்று நீங்களே கூறியிருக்கிறீர்கள். இதைச் சொன்னால், இன்னமும் கர்வம் தலைக்கேறி விடும். அதனால், சொல்லவே



மாட்டேனாக்கும்!" என்று அணிந்து வந்திருந்த சின்ன ஜிமிக்கி அசையத் தலையாட்டி அவள் மறுக்க, அவன் அதை ரசித்துச் சிரித்தான்.

நீ சொல்லாவிட்டால் தெரியாதா என்கிற அவனது பாவனையில், அவளது கன்னங்கள் சிவந்து போயின.

மரகதப் பச்சையும், ரூபியுமாகச் சிறு சிறு கட்டங் களாக, ஒரு பெரிய சதுரத்தை உருவாக்கியது போன்ற அமைப்பு. பட்டை வெட்டிய சங்கிலியைச் சதுரத்தின் இரு முனைகளிலும் கோத்து, உள்ளங்கழுத்தில் அசை யாது நிற்கும்படி செய்திருந்தார்கள்! பொருத்தமான காதணிகள், மோதிரம்!

காஞ்சனியின் கலா ரசிக உள்ளம் பிரமித்துப் போகும் அளவு மஞ்சு தேர்ந்தெடுத்து வைத்திருந்தது அழகாக இருந்தது.

தன் தேர்வே காஞ்சனிக்குப் பிடித்துப் போனது, அவளுக்கும் மிகவும் சந்தோஷம்.

அண்ணி கலைத் திறமை உடையவள் என்பதால், அவளது ஒப்புதல் கிடைத்தால் வாங்கிக் கொள்வதாகச் சொல்லி, எடுத்து வைத்திருந்தாளாம்.

மஞ்சு கிரெடிட் கார்டில் கையெழுத்துப் போட்டுப் பணக் கணக்கு முடித்துக் கொண்டிருந்தபோது, சியாமளன், அவசரமாகக் காஞ்சனியின் விரலில் ஒரு மோதிரத்தை மாட்டி விட்டான்.

அவள் திகைப்புடன் பார்க்கவும், "அதிகாரப் பூர்வமான மோதிரம் நிச்சயத்தன்று அணிவிப்பேன்! இது என் ஆசைப் பரிசு!" என்று கண் சிமிட்டி விட்டு,

கவனியாதது போல நின்ற விற்பனையாளரிடம், உரிய விலையைப் பணமாகவே கொடுத்தனுப்பினான்.

அவசரக் கோலமாக வாங்கிய மோதிரம் அல்லவா? அளவு கொஞ்சம் பெரிதாக இருந்தது. சிறிது பண்ணி வாங்கலாமா, அல்லது மாற்றலாமா என்று கேட்பதற்காகக் காஞ்சனி மறுநாள் அவனுக்கு ஃபோன் செய்தாள்.

முதல் முறையாக வாங்கியதை மாற்ற, அவளுக்கே விருப்பம் இல்லை.

செல்லுக்குத்தான் செய்தாள். ஆனால், அவன் வீட்டில் இருந்தான் போலும்.

"ஹலோ!" என்றவன் மேலே பேசுமுன் யாரையோ அழைத்து, டிவியைச் சத்தம் குறைத்து வைக்கச் சொன்னான்.

"சரியான சோம்பேறி போலத் தெரிகிறீர்களே! டிவியை, நீங்கள் எழுந்து, சத்தம் குறைக்கக் கூடாதா?" என்று கேலியாகக் கேட்டாள் அவள்.

"செய்யலாம்! ஆனால், தக்காளி, வெங்காயம் வெட்டி அள்ளிப் போட்டதில், என் அடுத்த கை ரொம்ப அழுக்காக இருக்கிறதே!" என்றான் அவன்.

"தக்காளி, வெங்காயமா? நீங்கள் என்ன சமையலா செய்கிறீர்கள்? என்ன கதை இது?"

"கதையா? கடவுளே, உனக்கு விஷயமே தெரியாதா? எனக்குக் கல்யாணம் ஆகப் போகிறதும்மா! ஒரு நல்ல கணவன் ஆவதற்கு, என் தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டாமா? நாளைக்கு, என் மனைவி வந்து, சமைக்கக் கூடத் தெரியாதா, என்னப்பா கணவன் நீ என்று கேட்டு விட்டால், கேவலம் அல்லவா..." என்று அவன்



சொல்லிக் கொண்டிருக்கும்போதே, காஞ்சனி அருவியாய்ச் சிரிக்கத் தொடங்கி விட்டாள்.

வெளிநாடு செல்லும்போது, அங்கங்கே உண்பதில், பிடித்துப் போவதை, இங்கு வந்து எப்போதேனும் செய்து பார்ப்பதும், பெற்றோருக்குக் கொடுப்பதும், அவனுக்குப் பழக்கம் என்பது, அன்று அவள் அறிந்து கொண்டது. அன்று அவன் செய்து கொண்டிருந்தது, மலேஷிய 'மீ.'

இப்படிச் சிரிப்பும், விளையாட்டுமாக நாட்கள் பறக்க, திருமண நாளும் வந்து சேர்ந்தது.

ஏதேதோ கனவுகளுடன் விழித்தெழுந்த காஞ்சனிக்கு, இன்று நந்தனுக்கு ரேஸ் இல்லாதிருந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றியது.



**13**

**சரியாகச்** சொல்லப் போனால், முன் தினம் நிச்சயதார்த்தத்தின்போது, நிச்சயப் பட்டைக் கட்டிக் கொண்டு வந்தபோது, சியாமளன் பார்வையிலேயே, காஞ்சனிக்குக் காதல் கனவுகள் மட்டும்தான் இரவில் வந்திருக்க வேண்டும். வந்தன.

மோதிரம் போடும்போது அவன் செய்த குறும்பும், மாலை அணிவிக்கும்போது, அதைச் சரி செய்து விடுவது போலக் கன்னத்தை வருடியதும், எல்லாவற்றுக்கும் மேலாக, சேலையைக் காட்டி, 'யாரம்மா பார்த்து, ரசித்துக் கொண்டிருப்பது?' என்பது போல ஜாடை காட்டிச் சிரிப்பதுமாக நடந்த ரகசிய நாடகமும் சேர்ந்து, அவளுக்கு உடம்பெங்கும் சிலுசிலுவென்று பரவசமூட்டிக் கொண்டு இருந்தன.

இந்த நிலையில், இரவில் அவள் கண்ணயர்ந்ததே கொஞ்சம். அப்போதும், சியாமளனை நாயகனாகக் கொண்ட இனிய கனவுகள்!

அதே எண்ணங்களோடுதான் காஞ்சனி விழித்ததும்!

ஆனால், திடுமென நந்தனின் ரேஸ் பற்றிய நினைவு ஏன் வந்தது?

ஏன் வந்தது என்பதும், அவளுக்கு உடனே புரிந்து விட்டது!

பிறந்த நாட்கள், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகள், எதுவானாலும், முழு நேரமும், அக்கா வும் தம்பியும் சேர்ந்திருந்தே கொண்டாடிப் பழக்கம்.

வினாயகர் சதுர்த்திக்குச் சேர்ந்து கொழுக்கட்டை பிடிப்பதில் இருந்து, தீபாவளிக்குப் புத்தாடையோடு வாயிலில் நின்று வெடி வைப்பதுவரை!

இப்போது, மிகமிக முக்கியமான விழாவின் போது இடையிலேயே... பாதிக் கொண்டாட்டத்திலேயே தம்பி கிளம்பப் போகிறான்.

அதிலும், கேலியும் கிண்டலும், ஆட்டமும் பாட்டு மான குதூகலப் பகுதியில் பங்கேற்று மகிழ, அவன் இங்கே இருக்க மாட்டான். அவன் ஒருவன் மட்டும், எங்கேயோ தனியாக இருப்பான். தன்னந் தனியாக!

அதுதான் அவளது மனதை உறுத்தியிருக்கிறது.

மகள் முகம் வாடி நிற்பதைக் கவனித்துவிட்டு, ''என்னம்மா?'' என்று கவலையுடன் அருகில் வந்த லலிதா, விவரம் அறிந்ததும் சிரித்தாள்.

''தம்பியின் தனிமை பற்றி, நீ கவலைப் படாதே. அங்கே போய் ரேசில் பைக் ஓட்டும்போது, ஜென்ம



சாபல்யம் ஆனது போல, அவன் மகிழ்ச்சியில் முக் குளித்துக் கொண்டிருப்பான். நம் நினைவுகூட அவ னுக்கு வராது. அப்படியிருக்க, அவனை நினைத்து, இன்றைக்குப் போய், நீ முகம் வாடுகிறாயா? அசடு! போய், ஷாம்பூ போட்டுக் குளித்துவிட்டு வா. டிரையர் போட்டுக் காய விட வேண்டும். இன்னும் கொஞ்ச நேரத்தில், தலை அலங்காரம் பண்ண வந்து விடுவார் கள்!'' என்று மகளைக் குளிக்க அனுப்பி வைத்தாள், அன்னை.

திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

முன் தினம் மாப்பிள்ளை அழைப்பின்போது, மணமகன் கையில் பூச்செண்டு கொடுத்து வரவேற்றதில் இருந்து, நந்தகுமாரன் கோந்து போட்ட மாதிரிச் சியாமளனையே ஒட்டிக் கொண்டு அலைந்தான்.

அவ்வப்போது குளிர் பானமோ, தண்ணீரோ கொண்டு வந்து கொடுப்பது, வேர்த்தால் டிஷ்யூ கொண்டு துடைப்பது, விசிறுவது போன்ற வேலைகளை, அவனது ஏகபோக உரிமை போல, மற்றவரைத் தொட விடாமல், தானே செய்தான்.

அவனுடைய ரேஸ் நண்பர்களிடம், சியாமளன் அவனை மைத்துனன் நந்தகுமார் என்று அறிமுகப் படுத்தியபோது, சிம்மாசனத்தில் அமர்த்தினாற் போல அகமகிழ்ந்தான்.

பட்டு வேஷ்டி, ஜிப்பாவுடன் அவன் விசுக் விசுக்கென்று நடமாடுவதைப் பார்த்து, அவன் பெற் றோருக்கும் காஞ்சனிக்கும் சிரிப்பு வந்தது.

சியாமளனுடைய பெற்றோரோ, தங்கள் மகனை அகலக் கரைப் பட்டு வேஷ்டியில் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

திருமணச் சேலையைப் பாங்காகக் கட்டிக் கொண்டு, மணமேடையில் அருகே அமர்ந்தவளிடம், "என்ன? கண்ணாடியில், ஒரு தரமேனும் முழுசாகப் பார்த்தாயா? என் கண்களுக்குத்தான் நட்சத்திர ஹோட்டல் விருந்து!" என்று சியாமளன் கிசுகிசுக்க, பூரிப்பும் வெட்கமுமாகக் காஞ்சனி கன்னம் சிவந்தாள்.

என்னதான் எதிர்பார்த்தது என்றாலும், திருமணம் முடிந்ததும், அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு, நந்தகுமாரன் கிளம்பியபோது, காஞ்சனிக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

கை குலுக்கி "பெஸ்ட் ஆஃப் லக்!" என்று வாழ்த்திய சியாமளன், "மனதைச் சிதற விட்டு விடக்கூடாது, நந்தகுமார். முழுக் கவனத்தையும் ஒரு முகப்படுத்தி ஓட்டுவது முக்கியம். அதே சமயம், மனதை அமைதியாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படியானால்தான், நிலைமைக்கேற்ப உடலை இயக்க முடியும். நினைவிருக்கட்டும்!" என்று ஆலோசனையும் வழங்கி அனுப்பி வைத்தான்.

கிளம்பும்போதே, நந்தகுமாரின் மனம் ரேஸ் நடக்கும் இடத்துக்குத் தாவி விட்டது என்பது, அவன் முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது.

ரேசோடு சம்பந்தப்பட்டவன் என்பதால், சியாமளனின் பேச்சைக் கவனித்தானே தவிர, கூட நின்று வழியனுப்பிய பெற்றோர், தமக்கையின் வாழ்த்தோ, சிறு முக வாட்டமோ அவனது கருத்தில் பட்ட மாதிரியே தோன்றவில்லை.

"உம்.. சரி... சரி! பை..." என்று அரைக் கவனமாகப் பதில் உரைத்தவாறு, அவனுக்காகச் சியாமளன் ஏற்பாடு செய்திருந்த காரில் ஏறிக் கொண்டான்.



"பைக் ரேசில், நந்தன் பெரிய ஆளாய் வரப் போகிறான், மாமா! அதற்குள், அவன் எண்ணம் முழுவதும், அங்கே போய் விட்டதே!" என்று புன்னகையோடு சிலாகித்தபடி, சியாமளன் செல்போனை எடுத்து, யாரையோ அழைத்துப் பேசினான்.

"பையன் வந்து கொண்டிருக்கிறான். பைக் முழுக்க முழுக்கச் சரியான நிலையில் இருக்கிறதல்லவா? காத்திருக்கும் நேரத்தில், ரொம்பவும் முறுக்கேறி விடாமல் கொஞ்சம் சாதாரணமாகவே பேசிக் கொண்டிருங்கள். பொறுப்பை உங்களிடம்தான் ஒப்படைக்கிறேன். பார்த்துக் கொள்ளுங்கள், பிரபு!" என்று அவன் பேசிய விதத்தில் இருந்து, எதற்காக, யாரிடம் பேசுகிறான் என்று புரிந்துவிட, காஞ்சனிக்கு ஆறுதலாக இருந்தது.

அதற்குப் பிறகு, தம்பியைப் பற்றி நினைப்பதற்கு, அவளுக்குக் கொஞ்சமும் நேரம் இருக்கவில்லை.

மணமக்கள் இருவருடையே வழி உறவினர்களும், நண்பர்களும் வரவர, அடுத்தவருக்கு அறிமுகப் படுத்திச் சற்று நேரம் பேசியிருந்து வழியனுப்பினார்கள்.

காஞ்சனி சியாமளனோடு பேசிப் பழகியவள்தான். ஆனால், அவன் அருகே உரிமைக்காரியாக நிற்பதும், மற்றவர்களும் அதை ஏற்றுப் பேசிப் பழகியதும், தனி அனுபவமாக இருந்தது.

இன்னொன்றும் காஞ்சனியின் மனதில் பட்டது.

அது மாமனார், மாமியார் நடந்து கொண்ட விதம்.

அவர்கள் வகையில் பெரிய பெரிய ஆட்களெல்லாம் வரத்தான் செய்தார்கள். வைர அங்கியே சாத்தினாற் போல அலங்காரத்தோடுகூடச் சிலர் காணப்பட்டார்கள்.

ஆனால், அதற்காக அவர்கள் யாருக்கும் தனி மரியாதை தரவும் இல்லை. அதே போல, யாரையும் கவனியாது இருக்கவும் இல்லை.

நீ எனக்கு முக்கியம் என்று தோன்றும்படி வரவேற்று, காஞ்சனிக்கு அறிமுகம் செய்வித்து, இரண்டு வார்த்தை பேசி, அதன் பிறகே உணவருந்த அழைத்துச் செல்லு மாறு யாரிடமாவது பொறுப்பை ஒப்படைத்து அனுப்பி வைத்தார்கள்.

ஒரு தரம் அவள் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த போது, சிலருடன் வந்த ஞானப்பிரகாசம், அவள் தண்ணீர் குடித்து முடிக்கும்வரை, கீழேயே நின்று அவர்களிடம் ஏதோ ஜோக்கடித்துப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவள் தம்ளரை யாரிடமோ கொடுத்து அனுப்பிய பிறகு தான், விருந்தினரை மேடைக்கு அழைத்துச் சென்றார்.

கல்லூரித் தோழியரோடு படம் பிடித்துக் கொண் டிருந்தபோது, யசோதையும், இதையே செய்ததைக் காஞ்சனி கவனித்தாள்.

என் மருமகளின் சுகம், விருப்பம் முக்கியம் என்று, பெரியவர்கள் செயலால் காட்டும்போது, மற்றவர்களும் அதை, அவளை மதித்துத்தானே ஆக வேண்டும்!

இந்தப் பண்பாட்டைக் கற்றுக் கடைப்பிடிக்க வேண் டும் என்று மனதுள் அழுத்தமாக எண்ணிக் கொண்டாள், அவள்.

காலை ஒன்பது மணித் திருமணம் என்பதால், பன்னிரண்டு மணிக்கே மதிய விருந்து முடிந்துவிட்டது.

இரு தரப்பிலும், சற்று நெருங்கிய உறவு, நண்பர்களுக் காக, மாலையில் ஒரு விருந்து ஏற்பாடு செய்திருந்தனர்.



மூன்று மணிக்குக் கேக் வெட்டி, சிற்றுண்டியோடு தொடங்கி, சில கேளிக்கை விளையாட்டுகளின் பிறகு, விருந்தோடு முடிப்பதாக ஏற்பாடு.

ரொம்பவும் நெருங்கியவர்கள், திருமணத்துக்கு வந்த வர்கள், அப்படியே மண்டபத்திலேயே தங்கியிருந்தனர்.

காலையிலேயே வந்து, வரவேற்பதிலும், விருந்துண்ண அழைத்துப் போய் உட்கார வைப்பதிலும் உதவி புரிந்த திலகாவும், அனகாவும்கூடத் திருமணம் முடிந்ததும், குடும்பத்தினரை அனுப்பி விட்டு, மேற்கொண்டு உதவிக் காக, அங்கேயே தங்கினர்.

அவர்கள் இருவருக்கும், அலங்கார வேலை செய்த ஒரே மாதிரிப் பட்டுச் சேலைகளைக் காஞ்சனி பரிசாகக் கொடுத்திருந்தாள்.

இருவரும் அதைக் கட்டிக் கொண்டு பளிச் பளிச் சென்று இங்கும் அங்கும் அலைந்து பலர் கவனத்தையும் கவர, ''சொந்தத் திருமணத்திலேயே தொழிலுக்கு விளம்பரமா?'' என்று சியாமளன் கேலி செய்தான்.

புன்முறுவலோடு, ''வேண்டுமானால், நீங்களும் ஒரு ஷாஃப்டையும், ஸ்ப்ரிங்கையும் தூக்கிக் கொண்டு, இரண்டு பேரை நிற்க வைப்பதுதானே?'' என்றாள், காஞ்சனி பதிலுக்கு.

திட்டமிட்டபடி மூன்று மணிக்கு மணமக்கள் கேக் வெட்டினர்.

அவனுக்குப் பிடித்திருந்த இளம் சிவப்பு வண்ணச் சேலையில் காஞ்சனி வரவும்,

''மூன்றாவது முறையாக, நட்சத்திர ஹோட்டல் விருந்து! எனக்கு மட்டும்!'' என்று சியாமளன் சிரிக்க,

ஃபுல் சூட்டில் நின்ற அவனைக் கடைக் கண்ணால் நோக்கி, ''என் விருந்து பற்றி, உங்களுக்கு என்ன தெரியுமாம்?'' என்று மர்மமாய் முறுவலித்தாள் அவள்.

''இதே அனுபவம் அவ்விடமும் என்றால், அடியேன் பாக்கியசாலி!'' என்று அவன் கண் சிமிட்ட, அவள் வெட்கப் பட்டாள்.

கேக் வெட்டிய பிறகு, மத்திய இளம் வயதினருக்காகப் பல்வேறு விளையாட்டுகளுக்கு மஞ்சு ஏற்பாடு செய்திருந்தாள்.

கூச்சலும் கும்மாளமுமாக, எல்லோரும் விளையாட்டுகளில் ஈடுபட்டபோது, தம்பி இல்லையே என்று, காஞ்சனிக்கு உள்ளூர வருத்தம்தான். அதையே, சியாமளனும் எதிரொலிக்கவும், சற்றே ஆறுதலாக உணர்ந்தாள் அவள்.

ஓரிரு விளையாட்டுகள் முடிந்ததுமே, உடை மாற்றிக் கிளம்புவதற்கு என்று மணமக்களை அழைத்துப் போய் விட்டார்கள்.

மாமல்லபுரத்தில், ஒரு கடற்கரையோரக் காட்டேஜில், அவர்கள் தங்கள் வாழ்வைத் தொடங்குவதாக இருந்தது. நல்ல வெளிச்சத்திலேயே, அங்கே போய்ச் சேர்ந்துவிட வேண்டுமாம்!

காரை ஓட்ட வேறு யாரையாவது அனுப்பலாமா என்று யாரோ தொடங்கியது, சியாமளனின் சத்தமற்ற சிரிப்பில் அடங்கிப் போயிற்று.

சியாமளனின் காரோ, அவன் காரோட்டிய லாகவமோ, கார் சாலையில் வழுக்கிக் கொண்டு சென்றது.



காட்டேஜைத் திறந்து சாமான்களை உள்ளே வைத்தபோது, பொன் மாலைப் பொழுதுதான்.

''சற்று நேரம் கடல் ஓரமாக நடந்து விட்டு வருவோமா? இன்றைய இறுக்கம் அப்போதுதான் தளரும்!'' என்று சியாமளன் கூறியது காஞ்சனிக்கும் பிடித்திருந்தது.

அலைநீர், லேசாகக் காலை நனைக்கும் தூரத்தில் சற்று நேரம் நடந்துவிட்டு, உடலை வருடிச் சென்ற சிலுசிலு காற்றை அனுபவித்த பின், பொன் மணல் பரப்பில் உட்கார்ந்திருந்து விட்டு, காட்டேஜுக்குத் திரும்பிய போது, இருவரையும் இனிய மயக்கம் ஒன்று சூழ்ந்திருந்தது.

''காஞ்சனி...'' என்று, மனைவியின் கையைச் சியாமளன் மெல்லப் பற்றியபோது, அவனது செல்ஃபோன் ஒலித்தது.

அழைத்தவர் எண்ணைப் பார்த்தவனின் முகம் மாறியது.

குறுக்கிடாமல் கேட்டு, ''சரிப்பா!'' என்று முடித்தவன், கவலையுடன் நோக்கிய காஞ்சனியைப் பார்த்து, ''உடனே கிளம்ப வேண்டும், காஞ்சிம்மா! நந்தனுக்கு அடி பட்டு விட்டதாம்!'' என்று இறங்கிய குரலில் விவரம் தெரிவித்தான்.

## 14



**மா**மல்லபுரத்திலிருந்து திரும்பி வந்த பயணம் பற்றிக் கேட்டால், காஞ்சனிக்கு ஒன்றுமே தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும்.

செல்லும்போது எல்லாமே சுகமாக இருந்தது.

வரும்போது, நெஞ்சின் இறுக்கம் தவிர, வேறு எதுவுமே தெரியவில்லை.

நந்து உயிரோடுதானே இருக்கிறான்? அவன் உயிருக்கு ஆபத்தில்லையே? பிழைத்து விடுவான்தானே?

இருட்டுக்குள் துழாவுகிற மாதிரி, எத்தனை தரம் எத்தனை விதமாகக் காஞ்சனி இதையே கேட்டாள் என்று சொல்வதற்கு இல்லை.

ஆனால், "ஒன்றும் இராது! பயப்படாதே! என்று ஒவ்வொரு தரமும், சியாமளன் தைரியம் சொல்லிக் கொண்டே இருந்தான்.

அவனது ஒவ்வொரு பதிலிலும் அவள் சற்றே அமைதியடைவாள். ஆனால் சற்று நேரத்தில் அந்தப் பேச்சை அடியோடு மறந்தவள் போன்று, மீண்டும் அதே கேள்வியைத் தொடங்கி விடுவாள்.

ஒரு தரம் திடுமென நிமிர்ந்து உட்கார்ந்து, "ஒன்றும் இராது என்று சொல்லுகிறீர்களே தவிர, ஒன்றும் இல்லை என்று சொல்ல மாட்டேன் என்கிறீர்களே! அப்படியானால் அவனுக்கு அபாயம்தான்! அப்படித்தானே? சொல்லுங்கள். நிஜத்தைச் சொல்லுங்கள்!" என்று, உரக்க, அதட்டிக் கேட்டாள்.

அப்போதும் அவன் நிதானமாகவே பதிலிறுத்தான். "பாரம்மா! நந்துவுக்கு அடி பட்டிருக்கிறது. வைத்தியம் செய்து கொண்டு இருக்கிறார்கள். நீயும் பக்கத்தில் இருந்தால் நல்லது என்று உன் அம்மா அபிப்பிராயப் பட்டதால், அப்பா ஃபோன் செய்து கூப்பிட்டிருக்கிறார். இவ்வளவுதான், இப்போதைக்கு நமக்குத் தெரிந்தது. ஏன் கெடுதலை எண்ண வேண்டும்? நல்லதே நடக்கட்டும் என்று கடவுளை வேண்டிக் கொள்வோம்!"



"உம்!" என்று தளர்ந்து இருக்கையில் சாய்ந்தவள், விலுக்கென, உடனே நிமிர்ந்தாள், "அம்மாவா? அம்மா லேசில் பயப்படுகிறவர்கள் இல்லையே! அவர்களே வரச் சொன்னால்... அப்படியானால், நந்துவுக்கு அடி பலம்தான், இல்லையா? பிழைப்பதுகூட... கடவுளே!..." என்று கலங்கத் தொடங்கினாள் அவள்.

"ஷ், காஞ்சி! அம்மா என்றால், வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும், உள்ளே கலங்கத்தான் செய்வார்கள். பத்து மாதம் சுமந்து பெற்றவர்கள் அல்லவா? ஒரு தரம் ரேசில், என் கார் மீது, இன்னொரு கார் மோதியதை டி.வி.யில் பார்த்தபோது, அம்மாவுக்கு நெஞ்சுத் துடிப்பே நின்றது போல ஆகி விட்டதாம். தாயார் என்றால் அப்படித்தான் இருக்கும். அதைப் பெரிதாக நினைத்துக் கலங்குவதை விடப் பெரிதோ, சிறிதோ, என்ன மாதிரி அடி என்றாலும், சீக்கிரமே குணமாகி விட வேண்டும் என்று கடவுளை வேண்டுவது நல்லது அல்லவா?"

சிறு அமைதியின் பின், "எதற்கும், நந்து எப்படியிருக்கிறான் என்று ஃபோன் செய்து கேட்டால் என்ன?" என்று, இன்னொரு விதமாகத் தொடங்கினாள் அவள்.

காரை ஓட்டியபடியே, "கேட்கலாம். ஆனால், எல்லோரும் எங்கே இருக்கிறார்களோ? மருத்துவமனை வளாகம் என்றால், அநேகமாக செல்லைப் பயன்படுத்தத் தடை இருக்கும். அத்தோடு, காரை நிறுத்தி, ஃபோன் செய்து பேசி நேரத்தை வீணாக்குவதை விடச் சீக்கிரமாக அங்கே போய் நேரிலேயே பார்த்து விடலாமே!" என்று

சியாமளன் சொன்னதும் ஒரு விதத்தில் ஏற்கக் கூடிய தாகவே தோன்றவும், காஞ்சனி சற்று நேரம் பேசாதிருந்தாள்.

அவனது சட்டைப் பையில் இருந்த செல்ஃபோனை எடுத்து, மாமனாரின் எண்ணைக் கேட்டு, அவளே, நேராக விவரம் கேட்கலாம்தான். ஆனால், அதற்கு, அவளுக்குப் பயமாக இருந்தது.

ஒரு வேளை, ஏதாவது கெட்ட செய்தியைக் கேட்க நேர்ந்து விட்டால்?

அதைவிடக் கணவன் சொன்னதை ஏற்றுத் தம்பியைக் காப்பாற்றும்படி கடவுளிடம் மன்றாடுவது, அப்போது காஞ்சனிக்கு இலகுவாகப் பட்டது.

எல்லாம் சில நிமிஷங்கள்தான்.

அவ்வளவு நேரம் பேசியது எல்லாம் மறந்து, ''நந்துவுக்கு ஒன்றும் இராதே?'' என்று மறுபடியும் தொடங்கினாள்.

அலுத்துக் கொள்ளாமல், ''ஒன்றும் இராது. கவலைப் படாதே!'' என்றான் கணவன்.

சென்னை நகரை நெருங்கும்போதுதான், திரும்பத் திரும்பக் கேட்டும், அவன் தன்னிடம் அலுத்துக் கொள்ளவே இல்லை என்பது, அவளுக்கு உறைத்தது.

ஏன் என்ற கேள்வி தோன்றும்போதே, காஞ்சனி பயத்தில் விரைத்துப் போனாள்.

அச்சத்துடன் முகம் திருப்பி அவனைப் பார்க்கும் போதே, அவனது கை, அவளது நடுங்கும் கரத்தைப் பற்றி அழுத்தியது. ''நீ நினைக்கிற மாதிரியாக எதுவும் இல்லை, காஞ்சனி. நாம் நல்லதையே எதிர்பார்ப்போம்!'' என்றான், அமர்ந்த குரலில், அவன்.



சென்னை நகருக்குள் கார் புகவும், மீண்டும் காஞ்சனி கணவனைப் பார்த்தாள். ''நந்து வேறே எங்கேயோ அல்லவா...?''

''ரேஸ் நடக்கிற இடத்தில், டாக்டர், மருத்துவ வசதி எல்லாம் இருக்கும். விபத்து ஏற்பட்டதும், முதலுதவி எல்லாம் செய்து, ஆம்புலன்சில், இங்கே கூட்டி வந்து விட்டார்கள்!'' என்றபடி, நகரின் பெரிய மருத்துவமனை ஒன்றின் 'கார் பார்க்'கில், சியாமளன் காரை நிறுத்தினான்.

வரவேற்புப் பகுதியில் அமர்ந்திருந்த ஒருவர், சியாமளனைக் கண்டதும் எழுந்து வந்து, ஐசியு வரை கூட்டிப்போய் விட்டு விட்டுப் போனார்.

ஐசியுவில், கண்ணாடி வழியே, தலை முதல் கால் வரை கட்டுகளுடன் தன் உணர்வின்றிக் கிடந்த தம்பியைப் பார்த்த காஞ்சனியின் கால்கள் துணியாய்த் துவண்டன.

சியாமளனின் கைபலம் இல்லையென்றால், தரையில் சரிந்து விட்டிருப்பாள்.

ஒருபுறமாகக் கவலையுடன் அமர்ந்திருந்த தாய், தந்தையிடம், அவளை அழைத்துச் சென்றான் சியாமளன்.

தாயின் முன்னே மண்டியிட்டு, இடையோடு அணைத்து அவள் மடியில் முகம் புதைத்தாள் மகள்.

மருமகனைக் கண்டதும், அவசரமாக எழுந்து, ''உட்காருங்க, மாப்பிள்ளை!'' என்றார் மாதவன்.

''இருக்கட்டும்...'' என்று, அவரிடம் தணிந்த குரலில், தனியே பேசினான் சியாமளன்.

மகளின் தலையைச் சற்று நேரம் வருடிக் கொண்டிருந்து விட்டு, ''நீங்கள் இருவரும் கிளம்பிக் கொஞ்ச

நேரத்திலேயே, இப்படி விபத்து என்று தகவல் தெரிந்து விட்டது. இன்றைக்கு உங்களைத் தொல்லை செய்ய வேண்டாம் என்று நினைத்து.. பொறுத்துப் பார்த்...'' என்ற லலிதாவின் குரல் தழுதழுத்துத் தடைப்பட்டது.

அண்ணாந்து தாயின் முகம் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தவள், ''இன்றைக்கு என்ன ..ச்சு!'' என்று லேசாகத் தலையைச் சிலுப்பிவிட்டு, ''இ.. இப்போது எப்படி.. இருக்கிறான்... டாக்டர் என்ன...'' என்று தடுமாறினாள்.

''அப்.. அப்படியேதாம்மா இருக்கிறான்! சொல்லா விட்டால், தப்பாகி விடுமோ என்றுதான் உன்னைக் கூப்பிடச் சொன்னேன். அப்படியே, அதே நிலையில் தான் உணர்வே இல்லாமல்...'' என்ற லலிதா, அதற்கு மேல் பேச மாட்டாமல் அழுதாள்.

"அம்மா, அம்மா...!" என்ற காஞ்சனிக்கும் அழுகையை அடக்க முடியவில்லை.

கண்ணீருடன் மாதவன் நிற்க, சியாமளன், ஒன்றும் பேச மாட்டாமல், வெறுமனே பார்த்துக் கொண்டு நின்றான்.

யாருக்கேனும் ஆறுதல் சொல்லி அமைதிப் படுத்துவ தானாலும், அதற்கான அடிப்படை நம்பிக்கையும் இருக்க வேண்டும் அல்லவா?

மருத்துவர்கள் அப்படி ஒரு வார்த்தை கூடச் சொல் லாதபோது, அவன் மட்டும் என்ன சொல்லி, யாரைத் தேற்ற முடியும்?

ஆனால், அவன் நினைத்தது போலவே, ஒரு நர்ஸ் அவர்கள் அருகில் வந்தார்.



சற்றுத் தணிந்த குரலிலேயே, ''பாருங்கள், உங்கள் துன்பம் எங்களுக்குப் புரியாமல் இல்லை. ஆனால், இங்கிருந்து அழுவது கூடாது. உங்களைப் போலக் காத்துக் கிடக்கும் மற்றவர்கள் மன நிலையை அது பாதிக்கும். அத்தோடு, இங்கே அதிகம் பேர் இருக்கக் கூடாதும்மா. அந்தப் பையன் நந்தகுமாரன் உறவினர் தானே? பையன் கண் விழித்தால், தாய், தகப்பனைப் பார்க்க விரும்பலாம்! அவர்கள் இருந்து கொண்டு, மற்றவர்கள் அருகில் எங்காவது போய்த் தங்கி விட்டுக் காலையில் வரலாமே. ப்ளீஸ்!'' என்று நிலைமையை அமைதியாக எடுத்துச் சொல்லிக் கேட்டுக் கொண்டார்.

''இரண்டு நிமிஷம்மா!'' என்று அனுமதி கேட்டுக் கொண்டு, ''அவர்கள் சொல்வது சரிதாம்மா. வீட்டுச் சாவி தருகிறேன். இரண்டு பேரும்...'' என்ற மாதவனை இடையிட்டு, ''இருக்கட்டும், மாமா! இங்கே பக்கத்தி லேயே நல்ல ஹோட்டல்கள் இருக்கின்றன. எப்படியும் தங்குவதற்கு ஓர் இடம் தேவைப்படக் கூடும் என்று, அப்பா ஒரு ரூம் போட்டு வைத்திருக்கிறார். அதன் போன் எண், இது. நாங்கள் அங்கே இருக்கிறோம். எந்த நேரம் என்றாலும் நிலைமையில் சிறு முன்னேற்றம் என்றாலும், உடனே தெரிவியுங்கள். கீழே பரந்தாமன் என்று வரவேற்புப் பகுதியில் ஒருவர், உங்கள் உதவிக் காக உட்கார்ந்திருப்பார். எது வேண்டுமானாலும், அவரிடம் சொல்லுங்கள், செய்வார்,'' என்றான் சியாமளன்.

ஒரு பெருமூச்சுடன், ''சரி, மாப்பிள்ளை. நீங்கள் கிளம்புங்கள்!'' என்று ஃபோன் எண்ணை வாங்கிக் கொண்டு, சோர்வுடன் அமர்ந்தார், மாதவன்.

காஞ்சனிக்கு அங்கிருந்து செல்ல மனமே இல்லை. ஆனால், இருக்க முடியாது என்று புரிந்து, எழுந்து சியாமளனோடு சென்றாள்.

லிஃப்டிலிருந்து வெளிப்பட்டதுமே, முதலில் கூட வந்த மனிதர் எழுந்து வந்தார்.

இவர்தான். பெற்றோருக்கு உதவும் பொருட்டு, மாமனார் ஏற்பாடு செய்திருக்கும் மனிதர் என்பது புரிந்தது.

யோசித்துச் செய்த அருமையான உதவிதான்.

ஆனால், அதற்காக நன்றி சொல்லக்கூடத் தோன் றாமல், மனம் மரத்துப் போயிருந்தது.

ஹோட்டல் அறைக்குள் சென்றதும், ''நந்து கண் விழித்தால் என்று நர்ஸ் சொன்னார்களே! அப்படி யானால், கண் விழிக்காமல்கூடப் போய்.. போய்.. அப்படித்தானே அர்த்தம்?'' என்று கவலையும் பயமு மாக, அதிலேயே உழன்றாள்.

''நல்லதாகவே எடுத்துக் கொள்வோமே, காஞ்சிம்மா! உனக்கு உடம்பு சோர்ந்து விட்டதால், கெட்டது மட்டுமே தோன்றுகிறது. கொஞ்சம் தூங்கி எழுந்தால், எல்லாமே வேறு மாதிரித் தெரியும்! போ.. படுத்துத் தூங்கு!'' என்றான் சியாமளன்.

''தூங்குவதா?'' என்று ஒரு மாதிரிக் கேட்கும்போதே, கணவன் சொல்வது சரிதான் என்று காஞ்சனிக்குப் புரிந்தது.

அவள் மிகவும் களைத்துத்தான் போயிருந்தாள். ஆனால், படுத்தும் தூங்க முடியாமல், அன்னையின்



கண்ணீரும், தம்பியின் தன்னுணர்வற்ற தோற்றமும், அவளை அலைக்கழித்தன.

அவளைக் கவனித்தவாறே, செல்லில் தந்தையுடன் பேசி முடித்த சியாமளன், மனைவியின் அருகே வந்து அமர்ந்து, அவளது புருவங்களை மெதுவே நீவி விடலானான்.

கண் திறந்து அவனைப் பார்த்துவிட்டு, அப்படியே உறங்கிப் போனாள் அவள்.

அப்போதைக்குத் தூங்கி விட்டாலும், ஆழ்ந்து தூங்க முடியாமல், பல கனவுகள் அவளை அலைக்கழித்தன.

கடைசியாக ஒன்று. காண்டாமணி ஓசை போலக் காதுக்குள்ளேயே கேட்டது. பார்த்தால், எமனுடைய எருமை மாட்டின் கழுத்து மணிச் சத்தம். ஐயோ! என்று ஓடிப் போய், நந்தனை மறைத்துக் கொண்டு நின்றால், அவளைத் தள்ளிவிட்டு, ரத்தக் காயங்களுடன் கிடந்த வனை, யாரோ பிடித்து இழுக்கிறார்கள். மூச்சு வாங்க எழுந்து ஓடிப்போய், அவள் இந்தப் பக்கம் இழுக்க, அவன் வலியில் கத்துகிறான்! வெகு நேரப் போராட் டத்தில், அவள் களைத்துப் போகிறாள். 'ஐயோ, அவனை விடேன்!' என்று கெஞ்சியபடி எழுந்தால், ''விழித்து விட்டாயா, காஞ்சனி?'' என்று சியாமளன் முறுவலுடன் அவள் அருகே வந்தான்.

''நல்ல செய்தி! நந்து பிழைத்து விட்டான்!''

கனவு மறவாத நிலையில் இதை நம்புவது, கடினமாகப் பட்டது. ''எப்படித் தெரியும்?'' என்று ஐயப் பார்வையுடன் விசாரித்தாள்.

''போன் வந்ததும்மா! உன் அப்பாவே சொன்னார்!''

கனவு மீண்டும் நினைவு வந்தது. அந்தக் காண்டா மணி ஓசை!

"எப்போது?" என்று மீண்டும் கேட்டாள்.

"சுமார் மூன்று மணியிருக்கும்."

கைக்கடிகாரம், அப்போது மணி ஐந்து என்றது. இரண்டு மணி நேரம்.

"என்னை ஏன் எழுப்பிச் சொல்லவில்லை?"

சிறு வியப்புடன் நோக்கி, "அயர்ந்து தூங்குகிறவளை எழுப்புவானேன் என்று..." என்றவனின் பேச்சில் குறுக்கிட்டு, "என் விஷயத்தில், நீங்கள் எப்படி முடிவு செய்யலாம்?" என்று ஆத்திரத்துடன் சீறினாள் காஞ்சனி.

## 15



**கா**ஞ்சனியின் சீறலில், சியாமளன் திகைத்து நோக்கவும், தான் கத்தியது குறித்து, அவளுக்கும் ஒரு மாதிரி ஆகிப் போயிற்று.

கணவன் செய்தது, அவளது நன்மையைக் கருதித்தான். சொல்லாமல் தீராது என்பது போன்ற ஒரு சில காரணங்கள் தவிர, துன்பம் மறந்து, அயர்ந்து ஓய்ந்து தூங்குகிறவர்களை எழுப்புவது தப்பேதான்.

அவளுடைய கணவன் அவளை எழுப்பாததும், அந்த எண்ணத்தில்தான்.

ஆனால், கனவில் அவள் பட்ட பாடு, அவனுக்கு என்ன தெரியும்?

அது தெரியாதவரை, அவளது சீறல் காரண மற்றதாகவே தோன்றும்.



ஒரு விளக்கம் தேவை என்று தோன்றவும், காஞ்சனி தன் கனவைப் பற்றிச் சியாமளனிடம் கூறினாள்.

"நந்துவைக் காப்பாற்ற, நான் என்னமாய்த் தவித்தேன், தெரியுமா? தொண்டை காய்ந்து, வாய் உலர்ந்து, கைகால் ஓய்ந்து... எல்லாம் அப்படியே, நிஜம் போலவே இருந்தது."

அவளுடைய கணவனுக்கு அதிகம் சொல்லத் தேவை இருக்கவில்லை.

அவளருகே வந்து அமர்ந்து, அவளது கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து, "கனவு காணும்போது, அப்படித்தான் இருக்குமாம். படித்திருக்கிறேன். உன்னை எழுப்பிச் சொல்லலாமா என்று ஒரு தரம் யோசித்தேன். ஆனால், புருவம் லேசாகச் சுழித்திருந்த போதும், நீ சற்றும் அசையவில்லை! அதிகப்படியான அயர்வின் அடையாளம், அந்தச் சுழிப்பு என்று எண்ணி... சாரிம்மா! உன்னைக் காப்பதாகக் கருதிக் கஷ்டப்பட வைத்துவிட்டேனே!" என்று வருந்தினான், சியாமளன்.

அவனைத் தொடர்ந்து, அவளும் மன்னிப்புக் கேட்டாள். "இரண்டு மணி நேரம், அந்தக் கனவில், அனாவசியமாகத் துன்புற்றதாகத் தோன்றியதா, உங்களிடம் சட்டென்று கத்தி விட்டேன். சாரிப்பா!" என்றாள், அவள் சின்னக் குரலில்.

அவளை இழுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டு, "விட்டு விடும்மா. நினைக்காதே. அதற்காக வேறு வேதனைப் படாதே!" என்று, அவளை அணைத்து, ஆறுதல் படுத்தினான், அவன்.

கண் மூடி, அவன் மீது சாய்ந்திருந்தவள், சற்றுப் பொறுத்து, மெல்லிதாகப் பெருமூச்சு விடவும்,

''என்னம்மா, இங்கே ஏதாவது காபி கிடைக்குமா என்று பார்ப்போமா?'' என்று வினவினான்.

அமர்ந்திருந்த நிலை, அவளுக்கு இதமாக இருந்தது போலும். கண்ணைத் திறவாமலே, ''எதற்குப்பா? சும்மா இப்படியே உட்கார்ந்திருப்போமே!'' என்றாள், மனைவி.

ஆனால், அவன் கையை நீட்டி ஃபோனை எடுத்து, வரவேற்பை அழைத்து, அங்கே காபி கிடைக்குமா என்று விசாரித்தான்.

''இங்கே ஆறரை மணிக்கு மேல்தான், சார். ஆனால் பையனை அனுப்பி வெளியிலிருந்து வாங்கி வரச் சொல்லவா? சுத்தமாக, நல்ல காபியாக இருக்கும், சார்.''

''ஒரு நிமிஷம்..'' என்று, தொலைபேசி வாயை மூடிக் கொண்டு, ''என்னம்மா, வெளியே நல்ல காபி கிடைக்குமாம். துணிந்து வாங்கி வரச் சொல்லுவோமா?'' என்று மனைவியிடம் வினவினான் சியாமளன்.

''எதற்கு...'' என்று அரை மனதாக அவள் இழுக்கையிலேயே, ''அடடா, இரவிலும் நீ சாப்பிட வில்லையே!'' என்று நினைவு கூர்ந்து, ''சீக்கிரமாக வயிற்றுக்குள் ஏதாவது போடவில்லை என்றால், யாரைக் கடிப்பது என்று வரும். மறுபடியும் என்னிடம் வேண்டாம்மா!'' என்று பயந்த பாவனை காட்டி விட்டுத் தொலைபேசியில் காபி அனுப்பச் சொன்னான் அவன்.

சிரிப்பு வந்தபோதும், குன்றலாகவும் உணர்ந்து, உதட்டைக் கடித்தவாறு, காஞ்சனி ஓரக் கண்ணால் பார்த்தபோது, அவன் முகம் சாதாரணமாகவே இருந்தது.

செல்லை எடுத்து எண்களை அழுத்தியபடி, ''சீக்கிர மாகப் பல்லைத் துலக்கிக் கொண்டு வா, காஞ்சனி. காபி



ஐந்து நிமிஷங்களில் வந்து விடுமாம்,'' என்று அவளிடம் கூறிவிட்டு, ''ஹல்லோ பரந்தாமன், சியாமளன் பேசுகிறேன்...'' என்று தொடங்கினான்.

மாதவன் குடும்பத்தின் உதவிக்கென, மருத்துவ மனையில், சியாமளனுடைய தந்தை வைத்திருக்கும் மனிதர்.

நின்று கேட்க ஆசையாக இருந்தபோதும், அனுசிதமாகவும் தோன்றியது. எப்படியும், அவளுடைய கணவன் அவளிடம் சொல்லாதிருக்க மாட்டான்.

பேஸ்ட்டையும், பிரஷ்ஷையும் எடுத்துக்கொண்டு, அடுத்திருந்த குளியலறைக்குள் புகுந்தாள் அவள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, காபி அருந்துகையில், நந்தனைப் பற்றிச் சியாமளன் அவளிடம் சொன்னான்.

விவரங்கள் அதிகமில்லை. நந்தன் கண் விழித்துப் பார்த்தான். பெற்றோரை உடனேயே அடையாளம் கண்டு கொண்டது ஒரு நல்ல திருப்பம். பின்னடைவு ஏதும் இல்லாதிருந்தால், விரைவிலேயே அவனை வீட்டுக்கு அழைத்துப் போய் விடலாம்.

உற்சாகத்துடன் நந்தனைப் பார்க்கச் சென்றால், அவன் பழைய நிலையிலேயே அசைவற்றுப் படுத்திருந்தான்.

காஞ்சனி கண்டு பிடித்த ஒரே வேறுபாடு, தம்பி சற்று இலகுவாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தான்.

மகள் முகத்தில் கவலையைக் காணவும், ''பயப்படத் தேவையில்லை, காஞ்சி. இது வெறும் தூக்கம்தானாம். விழித்து எழும்போது, இன்னமும் பலம் ஊறியிருக்கும் என்று, டாக்டர்கள் சொல்கிறார்கள். எப்படியோ, கடவுள் காப்பாற்றினார்!'' என்று அவளைத் தேற்றி விட்டு, லலிதா தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ஆமாம்மா! நந்து பிழைத்து விடுவான் என்று நிச்சயமாகத் தெரிந்த பிறகுதான், ஒழுங்காக மூச்சே விட முடிகிறது." என்று தந்தையும், தன் நிலைமையை மகளிடம் தெரிவித்துக் கொண்டார்.

திடுமென ஒரு கலக்கம், காஞ்சனிக்கு உள்ளூர உண்டாயிற்று.

'உதவி செய்கிறேன் பேர்வழி என்று, உன் கணவன் தூண்டி விட்டிராவிட்டால், எங்கள் பிள்ளைக்கு இந்தக் கதி நேர்ந்திராதே!" என்று அவளுடைய பெற்றோர் எண்ணி இருப்பார்களோ? அப்படி ஏதேனும் அவர்கள் சொன்னால், அவளுக்கு எவ்வளவு தலை குனிவாக இருக்கும்!

அதை விடவும், எவ்வளவு மன வேதனை!

கலக்கத்துடன் கணவனைப் பார்த்தால், அவன் அந்தப் பகுதியிலேயே இல்லை!

அப்படியொரு கேள்வியை எதிர்பார்த்து, அவனே அங்கிருந்து அகன்று போய் விட்டானோ?

ஆனால், இந்த ஒளிதல், மறைதல் எவ்வளவு நேரம் நடக்கும்?

காஞ்சனி மனம் கலங்கி யோசிக்கும்போதே, கையில் ஒரு பையுடன், சியாமளன் அங்கே வந்து சேர்ந்தான்.

தன் வேக நடையுடன் அவர்களை அணுகி, "வெறும் காபி மட்டும் குடித்தீர்கள் என்று பரந்தாமன் சொன்னார். இப்போதும், தோசை, சப்பாத்தி போலத் திட உணவு உண்ண மனம் இடம் கொடுக்குமோ, இல்லையோ என்று, கொஞ்சம் சூப் தயார் பண்ணச் சொல்லி வாங்கி வந்தேன்! சின்னக் கரண்டி கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்தால், உப்பும் உறைப்புமாக, உடம்புக்குத் தென்பாக இருக்கும்! குடியுங்கள், மாமா. குடியுங்கள், அத்தை!" என்று, பையிலிருந்து இரு கப்புகளை எடுத்து, மாமனார், மாமியாரிடம் கொடுத்தான் அவன்.



"எதற்கு மாப்பிள்ளை..?" என்றபோதும், சூப்பை வாங்கிக் கொள்ள மூத்த தலைமுறை மறுக்கவில்லை.

கொஞ்சம் அருந்தியதும், அவன் சொன்னது போலத் தென்பு வந்ததோ, என்னவோ,

"ஏற்கெனவே, உங்கள் தந்தையும் நீங்களும், எங்களுக்காக எவ்வளவோ செய்து விட்டீர்கள்..." என்று, மாதவன் நன்றி தெரிவிக்கலானார்.

தன்னை அறியாமல், காஞ்சனியின் இறுக்கம் மறைந்தது.

தந்தை கணவனைக் குற்றம் சாட்டவில்லை.

ஆனால், அவர் அத்தோடு நில்லாமல், மகனின் விருப்பத்தை நிறைவேற்ற, மருமகன் உதவி செய்ததி லிருந்து, வரிசையாக எடுத்துச் சொல்லத் தொடங்கியது தான் அவளுக்குப் பிடிக்கவில்லை.

"இப்போது என்னப்பா, ரேஸ் அது இதென்று வேண்டாத பேச்சு? எனக்கு நந்தனைப் பற்றிச் சொல் லுங்கள்! அவன் எப்போது, மீண்டும் கண்ணைத் திறந்து பார்த்துப் பேசுவானாம்? எல்லா விவரமும் சொல்லுங் கள்!" என்று பேச்சை வேறு திசைக்குத் திருப்பினாள்.

"ஆமாம், மாமா! பரந்தாமனிடம் நான் பேசி விட்டேன். என்றாலும், இங்கே உங்களிடம் டாக்டர் என்ன சொன்னார் என்று சொல்லுங்கள். உங்கள் வாயால் கேட்டால், காஞ்சனிக்கு ஆறுதலாக இருக்கும்!" என்றான், சியாமளனும்.

அவர்கள் பேசி முடிக்கும்வரை காத்திருந்து, மனைவியைக் காலை உணவுக்கு அழைத்துச் சென்றான். ''இனிமேல், கவலையற்றுச் சாப்பிடுவாயல்லவா?''

கணவனின் கரிசனம் மனதைக் கசிய வைக்க, அவனை ஒட்டிக் கொண்டே உணவுச் சாலைக்குச் சென்றாள் அவள்.

சிற்றுண்டியை முடித்துக்கொண்டு வந்தால், நந்தகுமாரன் கண் விழித்திருந்தான்.

விழுந்தடித்துக் கொண்டு, அவனைப் பார்க்கப் போனார்கள்.

அங்கே, ஏற்கெனவே லலிதாவும் மாதவனும் இருந்தனர்.

தாய், தந்தையின் கைகளைக் கண்ணீருடன் பற்றியிருந்தவன், சியாமளனைக் கண்டதும், ''என் தப்புதான், அத்தான்!'' என்று வருத்தத்துடன் முனகினான்.

''ஷ்! இங்கே இருந்து நோயாளியோடு பேசி, அரட்டை அடிக்கக் கூடாது! மதியத்துக்கு மேல், அறைக்கு அனுப்பி விடுவோம்! அப்போது, வேண்டியதைப் பேசிக் கொள்ளுங்கள்! அப்போதும்கூட, அதிகம் லொடலொடக்கக் கூடாது!'' என்று நர்ஸ் அழுத்தமாகக் கூறி, எல்லோரையும் வெளியே அனுப்பி வைத்தார்.

காஞ்சனியை அவளுடைய பெற்றோருடன் விட்டு விட்டுத் தந்தையைப் பார்க்கப் போய் விட்டு, மாலையில் சியாமளன் திரும்பி வந்தபோது, நந்தகுமாரன் தனியறைக்குச் சென்றிருந்தான்.

இப்போதும் சியாமளனைக் கண்டதும், சைகையால் அவனை அருகழைத்து, ''எல்லாம் என் தப்புதான், அத்தான்!'' என்று அக்கா கணவனிடம் மீண்டும் சொன்னான்.



''எல்லோருக்கும் முன்னால் நான்தான் சென்று கொண்டிருந்தேன், அத்தான். திடீரென்று, நான் ஜெயித்து வந்து, கப்போடு நிற்பதாக ஒரு கற்பனை. அடுத்த வினாடி, எங்கேயோ பறந்து கொண்டிருந்தேன். பந்தயம் முடிந்து, ஒரு நிலைக்கு வந்து நின்ற பிறகுதான் வேறு எதையும் நினைக்க வேண்டும் என்று, எத்தனை தரம் சொன்னீர்கள்! அதை மறந்துவிட்டு.. இனிக் கவனமாக இருப்பேன், அத்தான்!'' என்று, தடுக்கத் தடுக்கப் பிடிவாதமாக முயன்று கூறி முடித்தான்.

அவன் குரலில் வருத்தத்தோடு, குன்றலும் மிகுந்திருப்பதைக் கவனித்துவிட்டு, ''நந்து, இதற்காக, இவ்வளவு வருத்தப் படக் கூடாதும்மா! ரேஸ் என்று வரும்போது, எப்போதாவது இப்படி ஒரு சறுக்கல் ஏற்படுவதுதான். உனக்கு முதலிலேயே நேர்ந்து விட்டதும், ஒரு வகையில் நல்லதே! பிழையிலிருந்து கற்பது கல்லில் பொறிப்பது போல! இனி எப்போதும், இரு மடங்குக் கவனத்துடன் இருப்பாயல்லவா?'' என்று மைத்துனனைத் தேற்றியவன், அருகில் நின்ற மனைவியின் கை, நோயாளி அறியாது, தன்னை அழுத்தவும் பேச்சை நிறுத்திக் கவனித்தான்.

''கொஞ்சம் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருக்கிறீர்களா?'' என்று காதருகே காஞ்சனி, எரிச்சலோடு முணுமுணுக்கவும், யோசனையோடு அவளைப் பார்த்தான், அவன்.



## 16

மருத்துவ மனையில் நந்த குமாரனுக்குத் தனியறை கொடுத்த பிறகுதான், அவனுடைய பெற்றோருக்கு மகனின் சுகம் பற்றி முழுமையான நம்பிக்கை வந்தது எனலாம்.

அதுவரையிலும், ஐசியுவில் மகன் இருக்கிறான் என்ற எண்ணமே, அவர்களது நெஞ்சுக்குள் ரயிலைத் தடதட வென்று ஓட வைத்துக் கொண்டிருந்தது.

நந்தகுமாரன் அறைக்கு வந்த பிறகும், அவனைப் பரிசோதிக்க வந்த வைத்தியர், நர்ஸ் எல்லோரிடமும், இரண்டு தரம் தெளிவாகக் கேட்டுவிட்டு, அதன் பிறகே மாதவன் அங்கிருந்து, பாங்கிற்குப் பணம் எடுக்கக் கூட, வெளியே போனார்.

அதுவரை, வீட்டில் இருந்து வரும்போது, பைசா விடாமல் துடைத்து எடுத்துக் கொண்டு வந்ததுதான். கிட்டத்தட்டக் காலியாகி யிருந்தது.

அப்போதும், "அம்மாவைக் கவனித்துக் கொள்!" என்று மகளிடம் சொல்லிவிட்டு, அதன் பிறகே போனார். அந்த ஒரு நாளில் மனைவி பட்ட மன உளைச்சல், உடல் வாதனை அவருக்கல்லவா தெரியும்!

அதே போல, "வீடு வரை போய், வேண்டிய பொருட் களை எடுத்து வருகிறேன். அப்பாவைப் பார்த்துக் கொள்!" என்று, மகளிடம் கணவரின் பொறுப்பை ஒப்படைத்து விட்டுத்தான், தாயும் வீடு வரை சென்று வந்தாள்.

இரண்டு பேருக்குமே, காஞ்சனிக்குத் திருமணம் ஆனதே மறந்து விட்ட ஒரு நிலை.

சியாமளனும், வேலையைப் பார்த்துவிட்டு வருவ தாகச் சென்று விட்டதால், அவனைப் பற்றிய நினைவோ, முன் தினம்தான் கல்யாணமான புதுமணப் பெண் மகள் என்பதோ, அவர்களுக்குத் தோன்றவே இல்லை.

மருந்தின் சக்தியாலோ, உடல் நிலையின் பலவீனத் தாலோ, நந்தன் அயர்ந்து உறங்க, மற்ற மூவரும்,



அவனை எழுப்பி விடாமல் தாழ்ந்த குரலில் ஏதாவது பேசிக் கொண்டிருந்தனர்.

ஒருவர் மாற்றி ஒருவராகப் பெற்றோரையும், காஞ்சனி உறங்க வைத்தாள். விழித்ததும், ஆரஞ்சு பிழிந்து கொடுத்துக் குடிக்க வைத்தாள்.

அப்படி ஒரு தரம் அவள் தாயிடம் பழச்சாறைக் கொடுத்துக் கொண்டிருந்தபோதுதான், ஞானப் பிரகாசமும், அவருடைய மனைவி யசோதாவும், நந்த குமாரனைப் பார்க்கவென்று அங்கே வந்தார்கள்.

"என்ன தம்பி, எல்லோரையும் மிரட்டி விட்டாயே!" என்று, வேடிக்கை போலக் கேட்டு விட்டு, "ஒன்றும் பயப்படாதீர்கள், சம்பந்தி. எல்லாப் பிள்ளைகளும் இப்படிப் பெற்றவர்களை அவ்வப்போது மிரட்டுவது தான். ஆனால் பெரிதாக எதுவும் நடக்காமல், கடவுள் நல்லபடியாகப் பார்த்துக் கொள்வார். தைரியமாக இருங்கள்!" என்று நந்தனைப் பெற்றவர்களைத் தேற்றி, மருமகளிடமும் இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போனார்கள்.

நிலைமையைக் கவனித்து, மகனிடம் என்ன சொன்னார் களோ, அன்றி, அவனாகவேதான் செய்தானோ, நந்தனுக்கு நன்றாகும் வரையிலும், காஞ்சனி அங்கேயே இருக்கட்டும் என்று கூறிவிட்டுப் போனான், சியாமளன்.

இங்கே, எல்லோருக்குமே, அப்பாடா என்று இருந்தது.

மகன் ஓய்ந்து கிடக்கையில், ஓர் ஆதாரமாகப் பெற்றோருக்கு மகள் தேவைப் பட்டாள். மகளுக்கோ, தம்பியை விட்டு நகர்வதை, நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை.

சியாமளன் தினமும் வந்து பார்த்துவிட்டுப் போனான்.

ஓரிரு நாட்களில், நந்தன் சற்றுத் திடமுற்று, படுக்கையைத் தலைப்புறம் தூக்கி, அவ்வப்போது சாய்ந்து அமர்ந்திருக்கத் தொடங்கினான்.

அவ்வப்போது, அவனது ரேஸ் குழுவினர் வந்தனர். ரேஸ் தொடர்புடையவர்கள், நிறையப் பேரே வந்தார்கள்.

வந்தவர்கள், சும்மா போகாமல், "கடைசிக்கு முந்தின சுற்று வரை, பிரமாதமாக ஓட்டினாய், தம்பி! அப்புறம் தான் ஏதோ சொதப்பி விட்டாய். இதெல்லாம், முதலில் நிகழ்வதுதான். உனக்குக் கெட்டிக்காரத்தனம் இருப்ப தால், ஓட்ட ஓட்ட, வண்டி நீ சொன்னபடி கேட்கும். வண்டியும், நீயும் என்று ஒன்றாகி விடுவீர்கள்!"

என்றெல்லாம், ஏதாவது கிளப்பிவிட்டுப் போனார்கள்.

அடிபட்டுக் கிடக்கிறவனிடம், அவர்கள் அப்படிச் சொன்னதே, காஞ்சனிக்குப் பிடிக்கவில்லை. அதற்கும் மேலாக, "இன்னும் கொஞ்ச நாள் ஓய்வெடுத்துக்கொள். அப்புறம் பாரேன்! கொளுத்தி விடுவாய்!" என்று பலர் நந்தனைத் தூண்டி விட்டதுதான் அவளுக்குப் பிடிக்க வில்லை.

அவளாக, நேரடியாக ஏதும் சொன்னால், நாகரீக மற்றுப் பேசுவது போலத் தோன்றும். எனவே, அவர் களோடு பேசும்படி, கணவனிடம் கேட்டுக் கொண்டாள் அவள்.

"நல்ல அடி! வலியும் வேதனையுமாகத் தானாக, இதை மறந்து விடுவான் என்று பார்த்தால், அதையே சொல்லிக் குத்திக் கிளறி விடுகிறார்களே! எனக்கு ஒரே எரிச்சலாக வருகிறது!" என்றாள் காஞ்சனி.



அவள் முகத்தையே பார்த்து, "அவர்களிடம் என்ன சொல்ல வேண்டும் என்கிறாய்? நந்துவிடம் பேசும் போது, என் பெண்டாட்டி முகத்தைப் பார்த்துக் குறிப் பறிந்து கொண்டு, அதற்குத் தக்கவாறு பேசுங்கள் என்றா?" என்று, கேலி போலக் கேட்டான் அவன்.

"நான் அப்படியா சொன்னேன்? ரேஸ் பற்றிப் பேச வேண்டாம் என்று சொல்லலாமில்லையா?"

"தாராளமாகச் சொல்லலாம். ஆனால், நந்தனைப் பார்க்க வருகிறவர்கள் யாரும், என்னிடம் அனுமதி கேட்டுக் கொண்டு வருவதில்லை. ஏன், என்னிடம் தெரிவித்து விட்டுக் கூட வருவதில்லை! அதனால், அப்படி அவனைப் பார்க்க வருகிறவர்கள் யார் யார் என்று வீடு வீடாகத் தேடிப் போய், என் மைத்துனரிடம் ரேஸ் பற்றிப் பேசாதீர்கள் என்று கேட்டுக் கொள்ள வேண்டும் என்கிறாயா? நன்றாயிருக்குமா, காஞ்சனி?"

அவன் தெளிவுபடுத்திய விதத்தில், ஓர் அசடு போல உணர்ந்தவளுக்குக் கோபம் வந்தது. "நீங்கள் வேண்டும் என்றே இப்படிப் பேசுகிறீர்கள். சும்மா, அந்த வட்டாரத்தில், நந்துவின் வீட்டில் யாருக்குமே, ரேஸ் என்றாலே பிடிக்கவில்லை என்று, ஒரு பேச்சைப் பரவ விடலாம் அல்லவா?" என்று பதிலுக்குக் கேட்டாள் அவள்.

புருவம் சுருக்கி, "முதலில், உனக்கு எரிச்சல் என்றாய். இப்போது, வீட்டில் எல்லோருக்கும் என்று, சேர்த்துச் சொல்கிறாயே!" என்று வினவினான், அவன்.

"எல்லோருமே அப்படித்தான் சொல்லப் போகிறார்கள், சீக்கிரமே!"

''ஓஹோ!'' என்றதற்கு மேல், சியாமளன் ஒன்றும் சொல்லவில்லை.

அவளுக்கும் சற்று நேரம் எதுவும் பேசத் தோன்ற வில்லை.

நந்தகுமாரனோடு, அவனுடைய தாயார் துணை யிருக்க, கணவன் மனைவி இருவரும் அறைக்கு வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

அங்கங்கே போகிறவர்கள், வருகிறவர்களை வேடிக்கை பார்த்தபடி, ''இது போலச் சறுக்கல் எல்லோருக்கும் நேர்வதுதான் என்று, அன்றைக்கு நந்துவிடம் சொன்னீர் களே, உங்களுக்கும் விபத்து நேர்ந்திருக்கிறதா?'' என்று காஞ்சனி கேட்டாள். ''அன்றைக்கு, மாமாகூட அது போல ஏதோ சொன்னாரே!'' என்றும் நினைவு கூர்ந்தாள்.

''நடக்கப் படிக்கிற குழந்தை விழுந்து எழுவது போல, எதிலுமே, தொடக்கத்தில் தவறு நேர்வது இயல்புதானே, காஞ்சனி? தைக்கத் தொடங்கும்போது, நீ ஊசியால் கையைக் குத்திக் கொண்டது இல்லையா? அது போல, ஒரு சிறு விபத்து. பயப்படும்படியாக எதுவும் இல்லை!'' என்றான் அவன்.

''விரலில் ஊசி குத்துவதில் உயிர் போகாதே!''

''இதிலும் அப்படி ஒன்றும் உயிர் போயிருக்காது.''

''ஆனால், மாமா மிரண்டு விட்ட மாதிரிச் சொன்னாரே!''

''பெற்றவர்கள் என்றால் அப்படித்தான். சின்னதாக ஒரு நகம் பெயர்ந்தால்கூடக் காலே போய்விட்ட மாதிரிக் கவலைப்படுவார்கள். பெற்ற மனம் பித்து என்று சும்மாவா எழுதி வைத்திருக்கிறார்கள்?'' என்று, இலகு வாகவே கூறினான் சியாமளன்.



சற்று நேரம் காஞ்சனி பதில் சொல்லவில்லை.

பிறகு, "நந்தனைப் பார்க்கையில், எனக்கும் மிகவும் கவலை யாகத்தான் இருந்தது!'' என்றாள், அவள் மெதுவாக.

''அன்பு கொண்ட மனம் என்றாலே பெற்ற மனம் போலத்தானே!''

அவனைப் பார்த்து லேசாக முறுவலித்துவிட்டு, ''ஆமாம், உங்கள் விபத்து எப்படி நடந்தது? நந்து மாதிரி அவசரப்பட்டுக் கனவு காண்கிற ஆள் நீங்கள் இல்லையே!'' என்று, காஞ்சனி மீண்டும் துருவினாள்.

''அது...'' என்று லேசாகச் சிரித்தான் சியாமளன். ''ஓரளவுக்கு அப்படித்தான், காஞ்சி. ரேசில் சில விதி முறைகள் உண்டு. மற்றவரை விட வேகமாக ஓட்டி, ஒருவர், ஒரு சுற்று முன்னதாக வந்து விட்டால், பின் தங்கியுள்ள மற்றவர்கள் ஒதுங்கி, வேகமாக வந்தவருக்கு வழி விட வேண்டும் என்று, முக்கியமான விதி ஒன்று உண்டு. அன்று, நான் அப்படி முன்னே வந்து விட்ட நிலை. அடுத்தவர் பக்கவாட்டில் நகர்ந்து வழி விடுவார் என்ற எண்ணத்தில், வேகம் குறையாமலே ஓட்டினேனா, மோதி விட்டது. அதைவிடக் கடைசி நேரத்தில் மோதலைத் தடுக்க முயன்றதில், காரைக் கட்டுப் படுத்த முடியாமல் போனதில், கார் ஒரு குட்டிக்கரணம் போட்டு விட்டது. அவ்வளவுதான்!''

இப்போது, காஞ்சனி, ''ஓஹோ!'' என்றாள்.

அந்த ஒற்றை வார்த்தையைக் கேட்டதும், சியாமளனின் முகம் மாறியது.

மனைவியை ஒரு தரம் கூர்ந்து நோக்கிவிட்டு, ''மஞ்சு வுடைய புகுந்த வீட்டு உறவினர் எல்லாரும் நம் திருமணத்துக்காக வந்தவர்கள், அவர்கள் இன்றுதான் ஊருக்குக் கிளம்பிப் போகிறார்களாம். விரைவில், நந்துவைப் பார்க்க வரப் போவதாகச் சொன்னாள். அத்தை எப்போது இருப்பார்கள், நீ இங்கே எப்போது இருப்பாய் என்றெல்லாம் கேட்டுக் கொண்டு இருந்தாள்,'' என்று, தங்கை வருகிற தகவலைத் தெரிவித்தான் அவன்.

தகவல் தெரிவிக்கும் சாக்கில், கணவன் பேச்சை மாற்றுகிறான் என்று, காஞ்சனிக்குத் தோன்றியது. ஆனால், ஏற்கெனவே பிரியம் இருந்ததோடு, இப்போது நாத்தனாரும் ஆகிவிட்ட மஞ்சுவை அலட்சியப் படுத்த மனமின்றி, அவள் கேட்டனுப்பிய விவரங்களைச் சொன்னாள் அவள்.

மஞ்சு தேர்ந்தெடுத்து வந்த நேரம், நந்தனுடைய தாய், தமக்கை இருவரும் அவனோடு கூட இருக்கும் சமயமாக இருந்தது.

முதலில் நந்தனுடைய உடல் நிலை பற்றி நன்கு விசாரித்தாள் அவள்.

''அடேடே! இன்னும் ஒரு நாளில் வீட்டுக்குப் போய் விடலாமா? வெரி குட், வெரிகுட்!'' என்று மகிழ்ந்தாள்.

பிறகு, ''அண்ணி, நீ தம்பியைப் பார்த்துக் கொள்வாய் தானே? நானும் அத்தையும் சேர்ந்து வெளியே போய்ப் பேசி, ஒரு பெரீய சதி பண்ணப் போகிறோம்!'' என்று, மர்மமான புன்னகையோடு கூறினாள்.

அறையில் இருந்த மூவரும் திகைத்து நோக்குகை யில், ''வாருங்கள், அத்தை! நாம் சதி பண்ணப்



போவோம்!'' என்று, லலிதாவின் கையைப் பிடித்து இழுத்தபடி, தன் அண்ணியைப் பார்த்து, லேசாகக் கண்ணைச் சிமிட்டிவிட்டு, அறையை விட்டு, வெளியே சென்றாள், அவள்.

''சதியா? என்னக்கா, சதி? அதுவும் நம் எல்லோரி டமும் சொல்லிவிட்டே செய்கிற சதி! அதுவும் நம் அம்மாவோடு சேர்ந்து, இவர்கள் என்ன சதி பண்ண முடியும்? சும்மா உல்டா!'' என்றான் நந்தகுமாரன்.

அன்னையும், நாத்தனாரும் சென்ற திசையை யோசனையோடு நோக்கிய காஞ்சனியின் கன்னங்களில் பூத்த செம்மை விரைவிலே மறைய, அவள் முகம் கல்லாய்க் கடினமுற்றது.

17



மஞ்சுவின் சதி விவரம் பற்றிக் காஞ் சனியின் ஊகம் சரிதான்.

காதலித்து மணந்துகொண்ட தன் அண்ணன், முன் போலவே தனியனாக இருப்பது, அவ னுடைய அன்புத் தங்கைக்குப் பிடிக்க வில்லை.

நந்தகுமாரன் படுகாயமுற்றுக் கிடந்த நிலையில், இது பற்றி நினைப்பதுகூட நியாயமல்லதான். ஆனால், அவனுக்குக் கிட்டத்தட்ட குணமாகிவிட்ட பிறகு, கண வன் மனைவி இருவரும் பிரிந்திருக்கத் தேவையில்லை என்பது, அவளது அபிப்பிராயம்.

இங்கிதமற்றுத் தோன்றுமோ என்ற எண்ணத்தில் பெரியவர்களும், அலைவது போல ஆகிவிடுமோ என்ற தயக்கத்தில் அண்ணனுமாகக் குடும்பத்தில் வேறு யாரும் இந்தப் பேச்சை எடுக்கத் தயாரில்லை என்று ஊகித்தவள், தானே தொடங்கி விட்டாள்.

அப்போதும், இதிலெல்லாம் மூக்கை நீட்டுவது நன்றாக இருக்குமா என்று, அவளுடைய கணவனுக்குத் தயக்கம்தான்.

ஆனால், ஏன் கூடாது என்பது, அவளுக்கு.

அவளும், திருமணமாகிக் குழந்தையும் பெற்று விட்ட பெரிய மனுஷிதானே! கூச்ச நாச்சம் பாராமல், பிரச்சினையை எடுத்துப் பேசும் தகுதி அவளுக்கும் உண்டுதானே!

அதிலும், சியாமளன் அவளுடைய அருமை அண்ணன். அவனுக்காக, அவள் என்னதான் செய்ய மாட்டாள்!

அதற்காகவே, ஒருவாறு விருந்தாடி வந்திருந்த உறவு முறைக்காரர்கள் எல்லோரும் கிளம்பிச் செல்லவும், அவளும் அன்றே மருத்துவமனையை நாடிப் போய் விட்டாள்.

நல்ல வேளையாக, மகனைப் பற்றிய கவலைகள் குறையக் குறைய, லலிதாவுக்கும் இதே விஷயம் மனதை உறுத்தத் தொடங்கியிருந்தது.

பார்வையாலோ செயலாலோ சிறு சலனத்தைக் கூடச் சியாமளன் காட்டாத போதும், அவனைப் பார்க்கும் போதெல்லாம், லலிதாவைக் குற்ற உணர்ச்சி உறுத்தத் தொடங்கியிருந்தது.

தன் வசதிக்கும் மன ஆறுதலுக்கும் பார்த்து, மகளை நிறுத்திக் கொண்டார்களே, புதுக் கணவனுக்கு எப்படி இருக்கும்?

எனவே, மஞ்சுளா இந்தப் பேச்சை எடுக்கவும், அவளும் ஆவலாகவே, அதில் கலந்து கொண்டாள்.



இருவருமாகச் சேர்ந்து திட்டமிட்டு விட்டுப் பெண், பிள்ளை இருவரிடமும் கேட்டார்கள்.

காஞ்சனி உடனேயே தலையாட்டிவிட, மனைவி என்ன சொன்னாள் என்று, சியாமளன் விவரம் கேட்டான்.

''மறுத்து ஒன்றும் சொல்லவில்லை, அண்ணா. நான்தான், அதே மகாபலிபுரம் என்றால், தயக்கமாக இருக்கிறதா என்று கேட்டேன். அதுபோல செண்டிமென்ட் ஒன்றும் கிடையாது என்று விட்டாள், அண்ணி. நல்ல வேளை! உனக்கு அதிருஷ்டம்தான் அண்ணா!'' என்று தங்கை மகிழ்ச்சியோடு கூற, ''ஆமாம்மா!'' என்று, அண்ணனின் பதில் ஒற்றைச் சொல்லாக வந்தது.

''நம் வீட்டுக்குப் போவதற்கு, நீ எதற்கம்மா? நாங்களே பார்த்துக் கொள்ளுவோம். தம்பியும் பிடித்துக் கொண்டு நடக்கிறான். அடுத்த வாரம் பைக்கையே ஓட்டுவேன் என்கிறான். அதனால்...'' என்ற தாயின் பேச்சில் குறுக்கிட்டு, ''என்னது, பைக்கா? அதை, அவன் தொடவே கூடாது என்று அவனிடம் கண்டிப்பாகச் சொல்லி வையுங்கள்!'' என்றாள், காஞ்சனி எரிச்சலோடு.

''அதை யெல்லாம், அவன் உடம்பில் நல்ல பலம் வந்த பிறகு சொல்லிப் பார்ப்போம்! முதலில், நீ மாப்பிள்ளையைப் பார். திருமணமான அன்றே, அவரிடம் இருந்து உன்னைப் பிரித்துக் கூட்டி வந்து, இங்கேயே பிடித்து வைத்திருந்து விட்டோமே! நினைத்தால் எனக்கு நெஞ்சு கூசுகிறது!'' என்றாள் தாய்.

''ஏம்மா? நீங்கள் என்ன, ஸ்க்ராபிளும், கேரமும் விளையாடவா என்னை வரவழைத்தீர்கள்? சும்மா, தேவையற்று வருத்தப்படாதீர்கள்!'' என்றாள் பெண்.

"இருக்கலாம், காஞ்சி. ஆனால், மாப்பிள்ளை வீட்டிலும், எல்லோரும், ஒரு முகச் சிணுக்கம்கூட இல்லாமல், எவ்வளவு உதவியாய் வேறு இருக்கிறார்கள், பார்! எல்லோருமே, தங்கமான மனிதர்கள். மாப்பிள்ளையோ, எல்லோருக்கும் மேல்!" என்று, உணர்ச்சி வசப்பட்ட குரலில் லலிதா கூற, மகளும் அதை ஒப்புக் கொண்டாள்.

மகாபலிபுரத்திலிருந்து திரும்பி வந்தது காஞ்சனிக்கு நினைவு வந்தது. ஹோட்டல் அறை, இன்னமும் தினமும் வந்து, ஏதாவது உதவி தேவையா என்று கேட்டுப் போகும் பரந்தாமன்... எல்லாம் கணவன் வீட்டு ஏற்பாடு தானே? அத்தோடு, சியாமளன் நடந்து கொண்ட விதம்!

"உண்மைதான், அம்மா. அங்கே எல்லோருமே நல்லவர்கள்தான். அத்தோடு, சியாம் எனக்குக் கிடைத்தது, என்னுடைய அதிருஷ்டம்தான். பேரதிருஷ்டம்! இது நிலைக்க வேண்டும் என்று, கடவுளிடம் எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள், அம்மா!" என்று, கண்களில் நீர் கசியக் கூறினாள் காஞ்சனி.

"ஏண்டா கண்ணு, நீயும் மிகவும் நல்ல பெண்தானே! அதனால், உனக்கு எப்போதுமே நல்லதுதாம்மா நடக்கும்!" என்று, அருகில் அமர்ந்திருந்த மகளின் முதுகை அன்போடு தடவிக் கொடுத்தாள் தாயார்.

"நடக்கத்தான் வேண்டும்!" என்றபோது மட்டும், மகளின் குரலில் சற்று அதிகப்படி அழுத்தம் இருந்தது போல, லலிதாவுக்குத் தோன்றியது.

ஆனால், அவள் வியப்புடன் தலை திருப்பிப் பார்க்கு முன்னரே, கலகலவென்று சிரித்தவாறு, துள்ளிக் குதித்து எழுந்து விட்டாள் காஞ்சனி.



"அம்மாவும் மகளுமாக, மாற்றி மாற்றி நன்றாகத் தான் சியாமளன் குடும்பத்துப் புகழைப் பாடுகிறோம். இதுவே பழைய ராஜாக்கள் காலம் என்றால், ஆளுக்கு ஒரு பொற்கிழியேனும், சியாம் பரிசு தந்திருக்க வேண்டும்!" என்று அவள் வேடிக்கை பேச, லலிதாவுக்கும் சிரிப்பு வந்தது.

தாய்க்கு ஒளித்தொரு சூல் இல்லை என்பார்கள். என்ன தான் சிரித்துப் பேசினாலும், மகளின் மனதில் ஏதோ யோசனை நடப்பது, அன்னைக்குத் தெரியாமல் இல்லை.

"தம்பிக்கு நன்றாகி விட்டதும்மா. அவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிராமல், உன் வாழ்க்கையைப் பற்றி யோசி!" என்று கூறிப் பார்த்தாள்.

பளீரென முறுவலித்து, "வேறே எதையேனும் நான் நினைப்பேன் என்றா எண்ணினீர்கள்?" என்று கேட்டுக் காஞ்சனி சிரிக்கையில், மகளோடு கலந்து கொள்ளத்தான் அவளுக்குத் தோன்றியது.

அப்போதும், மகளை அழைத்துச் செல்ல வந்த மருமகனிடம், "காஞ்சிக்கு அவள் தம்பியிடம் மிகுந்த பிரியம். அவனையே நினைக்கிறாள் என்று தோன்றுகிறது. அந்த நினைவில், அவள் ஏதாவது... ஏதாவது.. எதையும், பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள்!" என்று, வினயத்துடன் கேட்டுக் கொண்டாள்.

மகளின் குழப்பம் என்னவென்று அவளுக்கே புரியாதபோது, இதற்கு மேல், அந்தத் தாயும்தான் என்ன சொல்லுவாள்?

ஆனால், "காஞ்சிக்காக நீங்கள் என்னிடம் கேட்க வேண்டுமா? நான் அவளுடைய கணவன், அத்தை!"

என்று சியாமளன் முறுவலித்து விட, அதன் பிறகு அவளால் நிம்மதியாக இருக்க முடிந்தது.'

மருமகனின் பார்வை, அவன் மனைவியின் மீது யோசனையாகப் படிந்ததை, நல்ல வேளையாக, அவள் கவனிக்கவில்லை.

நகரின் போக்குவரத்து நெரிசலைக் கடந்து, கார் இலகுவாகச் செல்லத் தொடங்கியதும், "உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும், காஞ்சனி. மஞ்சுவை அத்தையிடம் நான் அனுப்பியதாகத் தவறாக நீ எண்ணிக் கொள்ளவில்லையே?" என்று, சியாமளன் வினவினான்.

"அடடா! அப்படியானால், அண்ணியை நீங்கள் அனுப்ப வில்லையா?" என்று முகத்தில் ஆச்சரியத்துடன் கேட்டாள் காஞ்சனி.

"இல்லைம்மா! அந்த முந்திரிக் கொட்டைக்கு, ஏதோ எனக்குப் பெரிதாக உதவுவது போல எண்ணம். அண்ணன் தனிமைத் துயரில் தவித்துக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு, அவளாகவே வந்து விட்டாள்!" என்று, தங்கையின் செயலுக்கு விளக்கம் கொடுத்தான் அவன்.

"ம்ம்ம்..." என்று யோசித்துவிட்டு, "என் மேல் உங்களுக்கு எவ்வளவு ஆசை என்று, விலாவாரியாக நீங்கள் விளக்கிய விதத்தில், நான் மெய் சிலிர்த்துப் போனேன், டார்லிங்!" என்று, அவள் பாவனையோடு கூறவும், சியாமளன் சட்டென நகைத்தான்.

இருவருமாகச் சிரித்து முடித்த பின், அவன் சொன்னான். "ஆசை இல்லாமல், உன்னை மணந்திருக்க மாட்டேன் என்பது, உனக்கும் தெளிவுதான். ஆனால், இன்றைய நிலையில்.."



சட்டெனக் குறுக்கிட்டு, "இன்றைய நிலை ஏன் வந்தது, சியாம்?" என்று கேட்டாள் காஞ்சனி.

சிறு அமைதியின் பின், "ஒரு வினாடிக் கவனக் குறைவு!" என்றான் அவன்.

"அது வேறு விஷயம்!" என்று கணவனின் அருகே நெருங்கி, அவன் தோளில் தலை சாய்த்து, "நந்து ரேசில் கலந்து கொண்டிரா விட்டால், இந்த நிலை ஏற்பட்டே இராதல்லவா?" என்று, அவன் காதோரம் வாய் குவித்துக் கேட்டாள் அவன் மனைவி.

மீண்டும் ஒரு சிறு மௌனம் நிலவியது.

அதன் பின், "இராவிட்டால்!' இது ஒரு மோசமான வார்த்தை, காஞ்சனி. இப்படிச் செய்திராவிட்டால், அப்படி நடந்திரா விட்டால்... என்று, எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம்.. கடைசியாக, நாம் பிறந்தே இராவிட்டால் என்பதில்கூட அது முடிவடையாது. நம் பெற்றோர், அவர்களுக்கு முன்னோர் பிறந்திரா விட்டால்... என்று, போய்க் கொண்டே இருக்கும்! எல்லாமே பயனற்ற சொற்கள்!" என்றான் அவன்.

"ஆனாலும், யோசிக்கவும் வேண்டும் அல்லவா?"

"எப்போது? இதைத்தான், 'எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்று வள்ளுவர் நமக்குச் சொல்லி வைத்திருப்பது. யோசனை, செயலில் இறங்குவதற்கு முன்னர்தான் இருக்க வேண்டும்! அப்புறம் தேவை முழுக் கவனமும், முயற்சியும்தான்!"

கணவனோடு அழுத்தமாக ஒண்டியபடி, "ஆனாலும்..." என்று தொடங்கினாள் அவள்.

''நான் ரேசில் காரை ஓட்டும்போது, மிகவும் தைரியமாக ஓட்டுவேன். ஏனென்றால், அப்போதெல்லாம், என் ஒரு முகக் கவனத்தைக் கலைப்பதற்கு, இப்படியொரு மேனகை என் அருகில் இருந்தது இல்லை!''

''ம்கூம்? உங்கள் ஆசையின் அளவு பற்றி நான் அப்போது சொன்னதை, இப்படிச் சமாளிக்கிறீர்களாக்கும்?'' என்று அவன் தோளில் முகத்தை உரசினாள் அவள்.

ஓரமாகக் காரை ஒதுக்கி, வேகத்தைக் குறைத்தான். சியாமளன். ''மெய்தான் சொன்னேன், கண்ணம்மா! மனம் காரை ஓட்டுவதில் நிலைக்கவில்லை. கார் ரேசில் பல முறை ஜயிக்கிறவன், இந்த நேர் சாலையில் எங்காவது முட்டிக் கொண்டு நின்றால், எவ்வளவு கேவலம், பார்! அதை விடவும் முக்கியமாக, இன்று அப்படி எங்கேனும் இடைவழியில் நிற்கும் உத்தேசம் எனக்குக் கொஞ்சமும் இல்லை! அதனால், நேரே உட்கார்!''

கரகரத்த குரலில் கணவன் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் புரிய, கன்னம் சிவக்க, பெருமிதமான புன்னகையோடு காஞ்சனி நிமிர்ந்து அமர்ந்தாள்.

இந்த ஆசைக் கணவன், அவள் கேட்டால் என்னதான் செய்ய மாட்டான்! சமயம் பார்த்துச் சொல்ல வேண்டும். அவ்வளவுதான்.

ஆனால், அவளுடைய ஆசைக் கணவன், அவளுக்காகச் செய்வதிலும், ஓர் உறுதியான எல்லை வகுத்திருந்தான். எந்தக் காரணத்துக்காகவும், அதில் ஒரு இம்மியளவு விட்டுக் கொடுக்கக் கூட அவன் தயாரில்லை



என்று தெளிவாக அறிய நேர்ந்தபோது, காஞ்சனியின் காதல் மனம் ரொம்பவே அதிர்ந்து, கலங்கிப் போயிற்று.



18

**கா**ஞ்சனியும் சியாமளனும், அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்கு, நல்லபடியாகவே போய்ச் சேர்ந்தார்கள்.

ஆனால், விடுதியின் முன் காரை நிறுத்திக் கீழே இறங்கும்போதே, இருவரும் ஓர் இறுக்கத்தை உணர்ந்தனர்.

இறுக்கம் வெளிச் சூழ்நிலையில்.

கடற்கரைப் பக்கமாக இருந்தபோதும், விடுதிப் பகுதியில் ஆங்காங்கே வளர்க்கப்பட்டிருந்த மரம், செடி, கொடிகளின் இலைகளெல்லாம், ஏதோ சித்திரத்துக்குத் தீட்டப்பட்ட மாதிரி, அசைவற்றுக் காட்சி கொடுத்தன.

அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு காஞ்சனி பார்த்தபோது, கடலுக்குள் மின்னலடிப்பதைச் சியாமளன் அவளுக்குச் சுட்டிக் காட்டினான். ''அங்கே மழை பெய்வதால், இங்கே இறுக்கம்!'' என்று விளக்கம் சொன்னான். மழையும் காற்றும் மெல்ல நகர்ந்து, கரைக்கு வரும் என்பதன் அடையாளம்.

''எந்தக் காற்றும் மழையும், ஏன் புயலே அடித்தாலும், நம் விடுதியில் ஒன்றும் தெரியாது, சார். உள்ளே போய் ஏசியைப் போட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டால், அப்புறம் தேவலோகம்தான். உங்கள் அறை, கடலைப் பார்த்து இருப்பதால், கண்ணாடி வழியாகக் கொந்தளிக்கிற கடல், மின்னல், மழையைக் கூடக் கையில்

சூடான காபியோடு, சுகமாக உட்கார்ந்தபடி, பார்த்து ரசிக்கலாம்!" என்று விட்டு, பெல்பாயை அழைத்து, சாமான்களை அறையில் கொண்டு வைக்கும்படி கூறினார், விடுதிப் பொறுப்பாளர்.

"அவன் கூடப் போங்க சார். அறையைக் காட்டுவான்."

அவர் சொன்ன 'தேவலோக'த்தில் ஒருவரை ஒருவர் புன்னகையோடு பார்த்துக் கொண்டவர்கள், பதில் பேசாமல், பெல்பாயைத் தொடர்ந்தனர்.

புதிதாகத் தண்ணீர் பிடித்துக் கொணர்ந்து வைத்து விட்டு, மெனு கார்டையும் கொடுத்து விட்டுப் போனான் அவன்.

"ஏதாவது, லேசாகச் சாப்பிட்டு விட்டு வந்து விடுவோமா? அம்மா வீட்டில் இருந்தால், மணக்க மணக்கப் புளியோதரை, எலுமிச்சை சாதம், இட்டிலி மிளகாய்ப் பொடி என்று ஏதாவது செய்து தந்திருப்பார்கள். பள்ளி, கல்லூரியில் சுற்றுலா செல்லும்போதே நிறையச் செய்து தருவார்கள். எனக்கு, உனக்கு என்று எல்லோரும் போட்டி போட்டுக் கேட்பார்கள். இப்போது, இந்தப் பையன் இப்படி இழுத்துக் கொண்டிரா விட்டால்..."

"மறுபடியும் ஓர் 'இராவிட்டாலா?' என்னவோ, நந்தன் வேண்டும் என்று விபத்துக்காளானது போலப் பேசுகிறாயே!" என்றவாறு, தன் பெட்டியைத் திறந்து, பற்பசை, பிரஷ் எல்லாம் எடுத்து வெளியே வைத்தான், சியாமளன்.

"அப்படியில்லை... ஆனால், தவிர்த்திருக்கலாமோ என்று தோன்றியது..."

"சாப்பிட்டு விடலாம் என்றாயே, வா!" என்றான் சியாமளன்.



அரை வெளிச்சத்தோடு, உணவறையும் மயக்கத்தைத் தூண்டுவது போலவே இருந்தது. இனிமையாக மெல்லிய இசை வேறு.

இரவுக் குளியலை முடித்துக் கொண்டு, ரோஜா வண்ண நைட்டியில் வந்த காஞ்சனி, ரதியாகவே இருந்தாள்.

முதலிலேயே குளியலை முடித்துவிட்டு, ஒரு புறச் சுவரே போல அமைந்திருந்த அகன்ற ஜன்னலின் கண்ணாடி வழியே கடலின் மீதும் கரையிலுமாகப் பெய்யத் தொடங்கியிருந்த மழையைப் பார்த்துக் கொண்டிருந்த சியாமளன், குளியலறைக் கதவு திறந்த ஒலியில் திரும்பி, வரவேற்பாய் வலது கையை நீட்டினான்.

முறுவலோடு அருகில் வந்தவளைத் தோளோடு அணைத்துக் கடலைக் காட்டினான்.

பளிச் பளிச்சென்ற மின்னலின் ஒளியில், பெரிய வெள்ளிப் பாளங்களாக எழும்பி அமர்ந்த கடல் பயங்கரக் கவர்ச்சியுடன் விளங்கியது.

அதை அவள் சொன்னபோது, "நீயும் அப்படித்தான் இருக்கிறாய்!" என்று, அவளது உச்சியில் முத்தமிட்டான் கணவன்.

சற்று நேரம், இருவருக்கும் வெளி உலகத்தின் அழகும் அட்டகாசமும் மறந்து போயிற்று.

கைகளில் நெகிழ்ந்து குழைந்தவளைப் பாதி ஏந்தியவாறு, சியாமளன் உள்ளே திரும்பியபோது, ஏதோ நினைவு வர, அவனை மெல்லத் தடுத்து, "சி.. சியாம்! எனக்காக ஒன்று செய்வதாக வாக்குக் கொடுப்பீர்களா?" என்று, கெஞ்சும் குரலில் சிறு தடுமாற்றத்துடன் காஞ்சனி கேட்டாள்.

"என்னவானாலும் பிறகு பார்ப்போமே!" என்றான், அவன் - கனத்த குரலில்.

"இப்போதே.. ப்ளீஸ்...!" என்றாள், அவள் - குழைவாகவே.

"என்ன செய்ய வேண்டும்?"

"அதைச் சொன்ன பிறகுதான் வாக்குக் கொடுப்பீர்களா? நான் என்ன விரும்பினாலும், அதை நிறைவேற்றுவதாகச் சொல்ல மாட்டீர்களா?"

"ஊகூம்!" என்று விளையாட்டாகக் கையை விரித்தான் சியாமளன். "தசரதன் மாதிரி வாக்குக் கொடுத்து விட்டுப் பிறகு திண்டாட நான் தயாராக இல்லை, அம்மணி!"

உணர்ச்சிகளின் வசப்பட்டு இளகி நின்ற நிலை கொஞ்சம் குறைந்து, அவன் சற்றே சுதாரித்திருப்பது, அவளுக்குப் புரிந்தது. ஆனால், அவன் சொன்ன உவமானம், அவளுக்கு வருத்தத்தை ஏற்படுத்த, "கைகேயி போல, நான் உங்கள் கெடுதலுக்குக் கேட்பேனா?" என்று குறையோடு வினவினாள்.

"முதலில் வரத்தை வாங்கிக் கொண்டபோது, கைகேயியும், எந்தக் கெடுதலையும் எண்ணியிருக்கவில்லை. தேவையற்ற கேடு பிறகுதானே தலை தூக்கிற்று!"

"ஆனால், உங்கள் நன்மைதான், எப்போதும், என் லட்சியமாக இருக்கும். அந்த நம்பிக்கை உங்களுக்கு இல்லையா?"

"கைகேயி கூடத் தசரதனின் மரணத்தை எதிர்பார்த்து, வரம் கேட்கவில்லையே! மெய்யாகவே எனக்கு, அது



நன்மைதானா என்பதை, நான்தான் தீர்மானிக்க வேண்டும்!" என்றான், அவன் முடிவாக.

'காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுகிற' நேரம் முடிந்து போயிற்று. இனி, அவனாக அலசி ஆராய்ந்து தான் முடிவு செய்வான் என்பது, காஞ்சனிக்குப் புரிந்தது.

ஆனால், அவளும் ஒன்றும், அவனது அழிவுக்கு வழி வகுக்கவில்லையே!

நல்லவனான அவள் கணவன், அவள் சொல்லுவதைப் புரிந்து கொள்ள மாட்டானா?

நிச்சயம் புரிந்து கொள்ளுவான்.

அவள் யோசிக்கையில், அருகில் கிடந்த இரண்டு நாற்காலிகளையும் வசதியாக இழுத்துப் போட்டான், சியாமளன்.

"உட்கார். உட்கார்ந்து, இதற்குள்ளே என்ன இருந்து, உன்னைக் குழப்புகிறது என்று சொல்லு!" என்று, அவளது தலையைத் தொட்டுக் காட்டிச் சொன்னான்.

"அதாவது, குழப்புகிற அளவுக்கேனும், அங்கே ஏதாவது இருந்தால்!" என்று அவன் கேலி பேசியது, அவளுக்கு ஒரு மாதிரித் தென்பூட்டியது.

"உங்களை மணந்து கொண்டதை நினைக்கும்போது, எனக்கே அதில் சந்தேகம்தான்!" என்று பதில் கொடுத்து, "அது ஒன்றுதான், உள்ளே இருப்பதற்கே அடையாளம்!" என்று அவன் திருப்ப, "ஆக, இருப்பதை ஒத்துக் கொள்ளுகிறீர்கள்!" என்று அவள் மடக்க, இருவருமாகச் சிரித்து முடித்தபோது, அவளது தயக்கம் அடியோடு மறைந்திருந்தது.

''சொல்லும்மா! என்ன விஷயம்?'' என்று, மீண்டும் அவன் கனிவாகவே கேட்கவும், காஞ்சனியும், ''சியாம், அன்று உங்கள் விபத்து பற்றிச் சொன்னீர்களே...'' என்று சொல்லத் தொடங்கினாள்.

சியாமளன் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்க, அவள் தொடர்ந்தாள். ''அது போல மீண்டும் நேர்ந்தால், என்னால் தாங்கவே முடியாது, சியாம்! அதனால்...'' என்று வாக்கியத்தை முடிக்காமல், ஊகத்துக்கு விட்டாள்.

''ஆனால், அப்படி எதுவும் நேராதே!'' என்றான், அவன் - சாதாரணமாக.

அவள் முகம் சுழித்துக் கேள்வியாய் நோக்கவும், ''அந்த ஆள் கத்துக்குட்டி, காஞ்சிம்மா! ரேஸ் விதிகள் மிகவும் கடுமையானவை. எந்தச் சிபாரிசும், அங்கே செல்லாது. யாராக இருந்தாலும், விதியை மீறினால், விரட்டி விடுவார்கள். எனக்கு வழி விடாமல் ஓட்டி னானே, அவனுக்கு அன்றோடு, ரேசில் மூடுவிழா ஆகி விட்டது, தெரியுமா?'' என்றான், சியாமளன்.

"அவரைப் போல, விதி முறை தெரியாத இன்னொருவர் வர மாட்டார் என்று, உங்களுக்கு என்ன நிச்சயம்? அதனால்...''

''அதனால் ஒன்றும் பயமில்லை, காஞ்சி. அடுத்தவர் திரும்பத் தொடங்குகிறாரா, இல்லையா என்று முதலி லேயே கவனித்து, அதற்கு ஏற்றவாறுதான் நான் இப்போது காரை ஓட்டுவது!'' என்றான் சியாமளன்.

''அதெல்லாம் நம்ப முடியாது. திரும்புகிற மாதிரி ஒடித்து விட்டு, மனதை மாற்றிக் கொண்டால் என்ன செய்வது? அதனால்...''



மனைவியைக் கூர்ந்து பார்த்தான், சியாமளன். ''இது மூன்றாவது 'அதனால்!' என்ன விஷயம், காஞ்சனி? நீ என்ன சொல்ல வருகிறாய்?'' என்று நேரடியாகக் கேட்டான்.

காஞ்சனி கற்பனை செய்து வைத்திருந்த காட்சி இதுவல்ல. ஆனால், அவளும் நேர் பேச்சில் நம்பிக்கை உள்ளவள் என்பதால், இதுவே வசதியாகத் தோன்றி விட, ''இனிமேல் கார் ரேசில் கலந்து கொள்வது இல்லை என்று எனக்கு வாக்குக் கொடுங்கள், சியாம்! ப்ளீஸ்!'' என்று மனதில் இருந்ததைக் கெஞ்சலாகவே போட்டு உடைத்தாள்.

திகைப்புற்று, ''என்னது?'' என்றான் சியாமளன்.

''நீங்கள் இனி ரேசில் கார் ஓட்ட வேண்டாம், சியாம். என்னால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாது. நீங்கள் திரும்பி வருவீர்களா, மாட்டீர்களா என்கிற நிச்சயம் இல்லாமல், உங்களை ரேசுக்கு அனுப்பி விட்டுக் காத்திருப்பதை என்னால் தாங்கவே முடியாது. அதனால், தயவு பண்ணி ரேசை விட்டு விடுங்கள்!'' என்று, தன் மனநிலையைப் பொறுமையோடு விளக்கி னாள் அவன் மனைவி.

வியந்த பார்வையுடன், ''ஆனால், நான் கார் ரேஸ் போவதை, ஒரு நாளும் உன்னிடம் மறைத்தது இல்லையே! தெரிந்துதானே என்னை மணந்து கொண்டாய்? இப்போ தென்ன?'' என்று கேட்டான் அவன்.

''தெரியும். தெரியும்தான். ஆனால், இதில் இவ்வளவு ஆபத்து உண்டு என்று அப்போது எனக்குத் தெரியாதே! தெரிந்த பிறகு... ஊகூம்... முடியாது! நிச்சயமாக,

நீங்கள் ரேசில் ஓட்டுவதை, நான் ஒத்துக் கொள்ள மாட்டேன், மாட்டவே மாட்டேன்!" என்று முடித்தபோது, காஞ்சனியின் குரல் கீச்சிடத் தொடங்கியிருந்தது.

லேசாகத் தலையசைத்து, "வேண்டாம்மா! வீணாக அலட்டிக் கொள்ளாதே! நாம் என்ன, கார் ரேஸ் பற்றி வாதாடவா இங்கே வந்தோம்? நம் அன்பான, நெருங்கிய உறவினர்கள், ஏதோ எண்ணி, நம்மை இங்கே அனுப்பி வைத்தார்கள். அதை மறந்து, இப்போது, இந்தப் பேச்சு எதற்கும்மா? வா!" என்று அவளது கையைப் பற்றி, அவளை எழுப்பி விட முயன்றான், சியாமளன்.

சட்டென அவன் கையை உதறிக்கொண்டு, காஞ்சனி தானே எழுந்து நின்றாள். முகம் கடினமுற, "இல்லை, முடியாது. முதலில், எனக்கு இந்த விஷயமும் முடிவாக வேண்டும். அதற்குப் பிறகுதான் மற்றதெல்லாம்!" என்றாள், பிடிவாதமாக.

இமையிடுங்க, "அதாவது...?" என்று கேட்டான் அவன்.

"உங்கள் நலனைப் பற்றிய உறுதி இருந்தால்தான், என் மனம் நம் உறவில் ஈடுபடும்! எனவே, நீங்கள் கார் ரேசை விடுகிற அன்றுதான், நாம் உண்மையான கணவன் மனைவி ஆக முடியும்!" என்றாள், அவள் தெளிவாக.

பலமுறை உருப்போட்ட தெளிவு.

அவளை வெறித்து நோக்கி, "நினைத்தேன். சில நாட்களாகவே, இப்படி ஏதோ ஒரு பைத்தியக்காரத் தனமான திட்டம், உன் மனதில் உருவாகிறது என்ற



சந்தேகம் எனக்கு இருந்தது. அது சரிதான் என்று, இப்போது தெரிகிறது!" என்றான், சியாமளன் - ஏளனமான குரலில்.



## 19

**தா**ன் ஒரு வார்த்தை சொன்ன வுடனேயே, 'ஆகா' என்று சியாமளன் தலையாட்டி விடுவான் என்று, காஞ்சனியும் எதிர் பார்த்திருக்கவில்லைதான்.

அவளுடைய குடும்பத்திலேயே, பைக் ரேசை உயிராக எண்ணுகிற பையன் ஒருவன் இருக்கிறானே! சியாமளனும் அதே ரகமாக இருக்கலாம்.

ஆனால், அவனது உயிருக்கு எந்த வித ஆபத்தும் நேர்ந்து விடக் கூடாதே என்ற கவலைதானே, அவளுக்கு! அவனது விரல் நகத்தில் அடி பட்டால்கூட அவளால் தாங்க முடியாது எனும்போது, அதற்கு மிகவும் அதிகப்படியான, அவனது உயிருக்கே அபாயம் நேரக் கூடிய ஒன்றை, அவள் எப்படி ஏற்றுக் கொள்வாள்?

எப்போதும், அவளது இதம் தேடுகிற அவளுடைய கணவன், தன் மனநிலையை எடுத்துச் சொன்னால், புரிந்து ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கையும் காஞ்சனிக்கு நிறைய இருந்தது.

ஒரு வேளை, அவனது பந்தய ஆசை அதையும் மீறுவதாக இருந்தாலும், காதல் மனைவியின் மீதுள்ள மோகத்தைப் பணயமாக வைத்தேனும் அவனைக் காப்பாற்றியே தீருவது என்று, காஞ்சனி முடிவு செய்திருந்தாள்.

மிகவும் சிரமப்பட்டு, மனதைக் கடினமாக்கிக் கொண்டு எடுத்த முடிவு.

ஏதோ ஒரு வகையில், அவனுக்கு ஆபத்து நேராமல் தடுத்தே ஆக வேண்டும் என்று, அவள் மிகவும் யோசித்துக் கண்டு பிடித்த வழி.

அறுவைச் சிகிச்சை செய்தேனும், ஆளைக் காப்பாற்றுகிற விதம்.

ஆனால், அதைப் பைத்தியக்காரத்தனம் என்று அவன் உதாசீனப் படுத்தவும், அவளுக்கு ஆத்திரம் வந்தது. அப்படிப் பைத்தியக்காரத்தனமாக முடிவெடுக்க, அவள் என்ன முட்டாளா?

சினமுற்று, ''பைத்தியக்காரத்தனமா? இல்லவே இல்லை!'' என்று கோபமாகக் கத்தினாள் அவள். ''பல நாட்களாகத் தீர ஆலோசித்து, நான் எடுத்திருக்கும் உறுதியான முடிவு, இது!'' என்று சீறினாள்.

மின்னல் மழையோடு குமுறிய கடல் பின்னணியில் தெரிய, அதற்குப் பொருத்தமாக ஆத்திரப் பேச்சும், கோபப் பெருமூச்சுமாக மனைவி நின்ற நிலை, சியாமளனின் ரசிக மனதை ஒரு கணம் கவர்ந்து இழுத்தது.

ஆனால், உடனேயே அவளது பேச்சின் பொருள் மனதில் பட, ''அவசியமற்ற ஆலோசனை! அசட்டுத்தனமான முடிவு!'' என்று எரிச்சலோடு கூறினான்.

''உங்கள் பேச்சுதான் அசட்டுத் தனமாக எனக்குப் படுகிறது!'' என்றாள், அவள் பதிலுக்கு.

அவனும் ஆத்திரமாக நோக்கவும், ''நான் உங்கள் நன்மைக்காகப் பேசுகிறேன் என்பதையே, உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையே! உங்கள் புத்திக் கூர்மை எப்படி என்று, அதிலிருந்தே தெரியவில்லையா?'' என்று உதட்டைப் பிதுக்கினாள் காஞ்சனி.



''உன் ஆலோசனையோ, அறிவுரையோ இல்லாமலே, இத்தனை ஆண்டுகள், நான் நல்லபடியாகத்தான் வாழ்ந்து வந்திருக்கிறேன். அதுவும், மற்றவர்கள் போற்றிப் புகழும்படியாகவே!'' என்று, கொஞ்சம் கர்வமாகவே கூறினான், சியாமளன்.

''அதுதானே எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. மனிதர் உயிரோடு இருப்பதே அதிசயம். இதில், கைகால் வேறு முழுசாக இருக்கிறது என்றால், இதைத்தான் அதிருஷ்டம், அதிருஷ்டம் என்கிறார்கள் போல!'' என்று வியந்தாள் அவள்.

உள்ளே பொங்கிக் கொண்டிருந்த ஆத்திரத்தையும், ஏமாற்றத்தையும் மறந்து, தன்னை மீறிச் சிரித்தான், சியாமளன்.

பதிலாக, அவள் முகத்திலும் புன்னகை அரும்பவும், ஓரெட்டில் அவளை அணுகி, ''காஞ்சீ, காஞ்சீ!'' என்று அவளது தோளைப் பற்றி, லேசாகக் குலுக்கினான் அவன். ''இதென்னம்மா, இருந்திருந்து இன்று போய், நாம் இருவரும் இப்படிச் சண்டை போட்டுக் கொள்கிறோம்? சுத்தச் சிறு பிள்ளைத்தனமாக இல்லை?'' என்றவாறு, மனைவியை மார்பில் சாய்த்துக் கொண்டான்.

அவளும் விலகவில்லை.

ஆறுதலாகப் பெருமூச்சு விட்டு, அவன் நெஞ்சிலேயே முகம் புதைத்து நின்றாள்.

எதிரொலியாய், அவனும் நெடியதாய் மூச்சை இழுத்து விடவும், ''இனியேனும், நான் சொல்வது போலச் செய்வீர்களா? செய்வீர்கள்தானே, சியாம்?'' என்றாள் காஞ்சனி.

அவளது முதுகை வருடிக் கொண்டிருந்த கை அங்கேயே நின்றது. சற்று நேரம் அசையாது நின்று விட்டு, ''வேண்டாம், கண்ணம்மா! நம் வாழ்வுக்கு இந்த அநியாயம் நீ செய்யாதே!'' என்றான் அந்தக் கணவன்.

அவளும் முகம் புதைத்து நின்ற நிலை மாறாமலே, ''அதைத்தானே நானும் சொல்லுகிறேன். நம் வாழ்வு நல்லபடியாக அமைவதற்காகத்தானே, என் பேச்சைக் கேளுங்கள் என்கிறேன்!'' என்று தெளிவற்ற குரலில் விளம்பினாள்.

''ரேசை விடுவது முடியாத காரியம், காஞ்சனி!'' என்றான் அவன் தெளிவாக.

சாட்டையடி பட்டது போலச் சட்டென விலகினாள் அவள். ''அப்படியானால், உங்களுக்கு நான் வேண்டாம் என்று அர்த்தம்!''

''அதையும் இதையும் முடிச்சுப் போடாதே!'' என்று, அவன் கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான்.

''முடிச்சென்ன? என்னைப் பொறுத்த வரையில், இரண்டும் ஒன்றுதான். நீங்கள் உயிரோடு இருந்தால் தானே, நாம் சேர்ந்து வாழ்வதே நடக்கும்? எனவே, இதில்லாமல், அது இல்லை!'' என்றாள் அவள், அழுத்தம் திருத்தமாக.

இருவரின் மூச்சுச் சத்தம் தவிர, வேறு ஓசையின்றிச் சற்று நேரம் கழிந்தது.

சற்றுப் பொறுத்து, ''என்ன சியாம், உங்கள் நலனுக்காக, நம் இருவரின் நீண்ட கால மகிழ்ச்சிக்காக, நான் எவ்வளவோ யோசித்து, ஒன்றைச் சொன்னால், அதை



ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறீர்களே!'' என்று வருத்தத்துடன் காஞ்சனி கேட்டாள்.

உண்மையான வருத்தம்! கண்களில் நீர்கூட மல்கியிருந்தது.

அவளை அணைத்து ஆறுதல் படுத்தத் தன்னிச்சையாக எழுந்த கரங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, சியாமளன் பேசினான்.

''பாரம்மா, நன்மை தீமை பற்றி ஆண்களின் மனோபாவமும், பெண்களின் மனோபாவ... ஏன் ஒரே பாலினர் இருவரின் எண்ணங்கூட, கார்பன் காப்பி போல, ஒரே மாதிரி இருப்பது இல்லை. அதனால், எனக்கு நல்லது என்று நீ நினைப்பதே தவறாக...''

''ஆபத்து, விபத்தில் மாட்டிக் கொண்டு உயிரை விடக் கூடாது என்பதில் கூடவா, மாறுபட்ட கருத்துகள் ஏற்பட முடியும்? சும்மா பேச்சுக்காகச் சொல்லுகிறீர்கள். பேசிப் பேசி என்னை மடக்கி விடலாம் என்று நினைக்கிறீர்கள். ஆனால் ஊகூம், நான் அப்படி ஏமாறுகிறவள் அல்ல!'' என்றாள் காஞ்சனி பிடிவாதக் குரலில்.

பெருமுயற்சி செய்து தன்னை அடக்கிக் கொண்டு, சியாமளன் மீண்டும் பேசினான். ''புரிந்து கொள்வது பற்றி நீ சொன்னது, ஒரு வகையில் சரிதான், காஞ்சனி. ஆனால்... கொஞ்சம் குறுக்கிடாமல் கேட்கிறாயா? இப்போது, உன்னைப் பற்றி எனக்குத் தெளிவாகத் தெரியாதுதான். என்னைப் பற்றி, உனக்கும் அப்படித்தான். நாம் இருவரும் கணவன் மனைவியே என்றாலும், ஒருவரை ஒருவர் முழுமையாக அறிந்தவர்கள் அல்ல.

பலமுறை பார்த்திருக்கிறோம், மேலோட்டமாகப் பழகி யிருக்கிறோம். அந்த அளவிலேயே ஒருவரையொருவர் பிடித்துப் போய் மணந்து கொண்டும் இருக்கிறோம். அவ்வளவுதான். அதற்கு மேல், நாம் இருவர் மட்டுமே தனித்திருந்து, ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொன்னான வாய்ப்பு வீணாகிப் போய் விட்டது. ஆனால், நாம் இருவரும் பொறுப்பறிந்தவர்கள். இந்த இழப்பைச் சீர் செய்ய முடியும். கொஞ்ச காலம், நாம் ஒன்றுபட்டு வாழுவோம். ஒருவரை ஒருவர் புரிந்து, புரிய வைத்து, எதெதில் விட்டுக் கொடுப்பது என்று தீர்மானித்து... அதெல்லாம் மெல்ல மெல்ல வர வேண்டும். இந்தப் பிரச்சினை எல்லாம், அப்போது பார்ப்போமே, காஞ்சி!" என்றான் அவன்.

அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "நீங்கள் பேச்சில் கெட்டிக்காரர் என்று கேள்விப் பட்டேன். அதை நிரூபித்து இருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் என்னதான் சாமர்த்தியமாகப் பேசினாலும், நான் சொன்னது சொன் னதுதான். ஒரு போதும் மாறாது!" என்றாள் அவள்.

"இப்படித் தடாலடியாக, எடுத்தேன், கவிழ்த்தேன் என்று நின்றால், வாழ்க்கை நன்றாக அமையாது, காஞ்சனி. யோசித்துப் பேசு!" என்றான் அவன்.

"வாழ்க்கையே கிடையாது என்கிறேன், அது நன்றாக அமையுமா, இல்லையா என்று ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்!" என்று எரிச்சலோடு முணுமுணுத்தாள், காஞ்சனி - தெளிவாகக் கேட்குமாறுதான்.

"கடைசியாக என்னதான் சொல்லுகிறாய்?" என்று அவனும் எரிச்சலாகவே கேட்டான்.



"மீண்டும் மீண்டும் கேட்டால், சொல்லப் பயந்த மனதை மாற்றிக் கொள்வேன் என்று எண்ணினீர்களா? நீங்கள் எத்தனை தடவை கேட்டாலும், என் பதில் ஒன்றேதான். நீங்கள் கார் ரேசை விடுகிறவரை, நாம் கணவன் மனைவியாக வாழ முடியாது. இது உறுதி!" என்று கறார்க் குரலில் காஞ்சனி கூறினாள்.

சியாமளனின் முகத்தில் இகழ்ச்சியான பாவம் ஒன்று பரவியது.

தோளைக் குலுக்கி, "அதாவது, என் மனைவியான உன்னை நான் தொட வேண்டும் என்றால், ரேசில் கார் ஓட்ட மாட்டேன் என்று உனக்குச் சத்தியம் செய்தாக வேண்டும் என்பது, உன் நிபந்தனை, சரிதானா?" என்று கேட்டுவிட்டு, "செக்கை வைத்து, பிளாக்மெயில் பண்ணுகிற அளவு, நீ தரம் இறங்குவாய் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை, காஞ்சனி!" என்றான், அருவருத்த குரலில்.

அடிபட்டாற்போல முகம் வாடி நின்றவள், உடனேயே தலையை உலுக்கிக் கொண்டு நிமிர்ந்தாள். "நீங்கள் பேச்சில் வல்லவர் என்று மீண்டும் நிரூபிக்கிறீர்கள். ஆனால், இதில் ஏமாறுகிறவள் நான் அல்ல. என் னுடையது மிரட்டல் அல்ல. நிபந்தனை. உங்களைக் காப்பதற்காக, நம் காதலைப் பணயம் வைக்கிறேன், அவ்வளவே!"

"காப்பாற்றுவதற்கு அவசியம் இல்லை என்றால்..."

"ஒத்துக் கொள்ள முடியாது!" என்று, அவன் பேச்சை, அவள் முடித்தாள். செய்கையற்றவன் போலச் சற்று நேரம் இலக்கற்று வெறித்தான் சியாமளன்.

பிறகு, உன்னிஷ்டம் என்பது போலக் கையசைத்து விட்டு, சியாமளன் திரும்பிச் சென்று, தன் பெட்டியைத் திறந்தான். ஒரு டவலையும், நீச்சல் ட்ரெஸ்ஸையும் எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, "நான் கொஞ்ச நேரம் நீந்திவிட்டு வருகிறேன். கதவுச் சாவியை எடுத்துப் போகிறேன். நீ தூங்கு!" என்று விட்டுக் கதவை நோக்கி நடந்தான்.

நெஞ்சு பதைத்தது அவளுக்கு. "நில்லுங்கள்!" என்றாள், ஆத்திரத்துடன்.

அவன் நின்று திரும்பிப் பார்க்கவும், "என்னவோ, நான் தரம் இறங்கி பிளாக்மெயில் செய்வதாக, இளக்காரமாகச் சொன்னீர்களே, இப்போது நீங்கள் செய்வதற்குப் பெயர் என்னவாம்?" என்று சீறினாள்.

"என்ன என்று நீ சொல்கிறாய்?"

"என்னவா? மண வாழ்வுக்குத் தடை என்றால், இந்தப் புயல் மழை நேரத்தில், கொந்தளிக்கும் கடலில் நீந்தப் போய், அபாயத்துக்கு ஆளாவேன் என்றால், அது மட்டும் மறைமுகமான மிரட்டல் அல்லவா? ஆனால், அதுதானே, உங்கள் வழக்கம்?" என்றாள் அவள் கசந்த குரலில்.

"எது? மிரட்டுவதா?" என்றான், அவன் - ஏளனமாக.

"இல்லை! வேண்டும் என்றே ஆபத்தில் சிக்குவது!" என்றாள், அவள் - குரல் கம்ம.

"தான் திருடி, பிறரை நம்பாள் என்பது சரியாகத்தான் இருக்கிறது! உன்னைப் போலவே, என்னையும் எண்ணுகிறாயே!" என்றான், அவன் - கிண்டலாக.



அவனது பேச்சின் பொருள் புரியாத போதும், கணவன் தன்னை மிகவும் மட்டமாக நினைக்கிறான் என்பது தெளிவாகத் தெரிய, வருத்தமும் திகைப்பும், கூடவே, நீந்தப் போய் விடுவானோ என்ற அச்சமுமாகக் காஞ்சனி, சியாளனைப் பார்த்தாள்.

20



மனைவியின் பார்வையைப் புரிந்து கொண்டவன் போலச் சியாமளன் தோளைக் குலுக்கினான். "என்ன, என் பேச்சு புரியவில்லையா? என்னை பிளாக்மெயில் செய்து பணிய வைக்க முயன்றவளுக்கு, நான் சாதாரணமாகச் செய்வதுகூட பிளாக் மெயிலாகத் தோன்றுகிறது என்றேன். முதலில் இந்தக் கடலில், இப்போது போய் நீந்தும் அளவு நான் முட்டாள் அல்ல என்று தெரிந்து கொள். இங்கே, இந்த ஹோட்டல் காம்ப்ளக்சிலேயே, ஒரு இன்டோர் நீச்சல் குளம் இருக்கிறது. நான் விரும்பி மணந்தவன். இங்கே வரும்போது, என்னுள் என்னென்னவோ ஆசைகள் இருந்தன. அதற்குத் தடை போட்டு விட்டாயே! என் ஏமாற்றத்தின் தவிப்பை, நீச்சலில் அழிக்கப் பார்க்கிறேன். இதில், எந்த இடத்திலும், நீ குறிப்பிட்ட மிரட்டல் தலையைக் கூடக் காட்டவில்லை!" என்றான் அவன்.

கணவனின் பேச்சில் பெரும் பகுதியை ஒதுக்கி, "தடை நீக்கும் வழி உங்கள் கையில்தானே இருக்கிறது!" என்றாள் அவள்.

ஏமாற்றத்தின் தவிப்பு என்று, சியாமளன் கூறியது, ஒரு வகையில் அவளுக்கு ஆறுதல்தான். அந்தத் தவிப்பு அவனுக்கு இருந்தால்தானே, அவள் நினைத்தது நடக்கும்.

ஆனால், ''வழி இருப்பது, கையில் அல்ல, வாயில்! ஆனால் நான் வாய் வார்த்தைகளை அலட்சியமாகப் பயன் படுத்துகிறவன் அல்ல. அதனால், நீந்திவிட்டு வருகிறேன் - ஹோட்டல் நீச்சல் குளத்தில்!'' என்று விட்டுத் திரும்பிப் பாராமல் வெளியேறினான் அவன்.

சற்று நேரம் காஞ்சனி தன்னை மீறிக் கண்ணீர் விட்டாள்.

இழப்பு அவளுக்கும்தானே? எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கக் கூடும்!

அவன் வந்து, அவள் அழுவதைக் கண்டுகொள்ளக் கூடாதே என்று தோன்றவும், உடனேயே, அவசரமாக முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

ஒரு தலையணையை எடுத்து, சோஃபாவில் வைத்து, அதில் தலை வைத்துச் சுருண்டு படுத்துக் கொண்டு, தூங்குவது போலப் பாவனை செய்தாள்.

வெகு நேரம் கழித்துச் சியாமளன் திரும்பி வந்து கதவைத் திறக்கவும், முன்னிலும் அசைவற்றுக் கிடந்தாள்.

விளக்கைக்கூடப் போடாமல், விடி விளக்கின் அரை ஒளியிலேயே, பெட்டியைத் திறந்து, உலர்ந்த ஆடை எடுத்துக் குளியலறை சென்று, மாற்றி வந்து, தண்ணீர் குடித்து, அவன் படுக்கும் வரை, கதவைத் திறந்ததில் இருந்து, ஒவ்வோர் அசைவையும், அவன் இயன்ற வரை ஓசையற்றுச் செய்ததைப் பழைய காலத்து மௌனப் படம் போல, முக்கால் பாகம் மூடியிருந்த விழியிடுக்கின் வழியே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, உள்ளே வலித்தது.

மனைவியின் தூக்கம் கலைந்து விடக்கூடாது என்று இவ்வளவு கவனம் காட்டுகிற அந்த அன்பான கண வனுக்கு, அவளது மகிழ்ச்சி கலையாமல் காக்கும் எண்ணம் மட்டும் ஏன் வரவில்லை? தலைவிதியா?



உடல் ஓய நீந்தி விட்டு வந்ததாலோ, என்னவோ, சியாமளன் படுத்த விரைவிலேயே உறங்கி விட்டான்.

அவனது ஆழ்ந்த மூச்சுகளைக் கவனித்த வண்ணம் தூக்கமின்றிக் கிடந்த காஞ்சனி, காலையில் விழித் தெழுந்தபோது, விடிந்து வெகு நேரம் ஆகியிருந்தது.

ஏதோ சரியில்லை என்ற உணர்வு விழிக்கும்போதே தோன்றிவிட, கண்ணை மட்டும் திறந்து பார்த்தாள்.

பெர்முடாவும் டி ஷர்ட்டும் அணிந்து, பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான் அவன்.

இதுபோல, இலகு உடையில்கூட, இவன் எவ்வளவு நன்றாக இருக்கிறான் என்று எண்ணும்போது, வயிற்றுக் குள் ஏக்கம் பந்தாய்த் திரண்டு, இறுக்கிப் பிடித்தது.

எழ முயன்றால், ஒரே நிலையில் குறுக்கிப் படுத்திருந்த உடம்பு, சட்டெனச் சுவாதீனத்துக்கு வர மறுத்தது.

அவளிடம் அசைவு உணர்ந்து, பத்திரிகையைத் தாழ்த்தி, ''குட் மார்னிங்!'' சொன்னவன், அவளது நிலை புரிந்து, அருகில் வந்து அவளைக் கை கொடுத்து எழுப்பி விட்டான்.

''இரவு முழுவதும் இந்தக் குறுகிய சோஃபாவில், ஒரே நிலையில் படுத்திருந்ததாக இருக்கும். கொஞ்ச நேரம் படுக்கையில் நீட்டி நிமிர்ந்து, இலகுவாகப் படுத்து விட்டுப் பல் துலக்குகிறாயா? அப்புறமாக, உனக்குக் காபிக்குச் சொல்லுகிறேன்,'' என்றான், சியாமளன்.

நீயாக இழுத்துக் கொண்டதுதானே, அனுபவி என்று, சொல்லாமல் சொல்லுகிறானோ என்று அவன் முகத்தை

உற்றுப் பார்த்தால், அதற்குரிய பாவம் அவன் முகத்தில் இல்லை.

''இல்லை, வேண்டாம். நான் பல் துலக்கவே போகிறேன். காபிக்குச் சொல்லி விடுங்கள்,'' என்று விட்டு, சற்றுத் தடுமாறியபடியே காஞ்சனி குளியல் அறைக்குள் புகுந்தாள்.

முகத்தில் நன்றாக நீர் அடித்துச் சோர்வை நீக்கிக் கொண்டு, அவள் வெளியே வந்தபோது, காபி வந்திருந்தது.

கப்பில் ஊற்றி, அவள் புறமாக வைத்துவிட்டு, அவன் மீண்டும் பத்திரிகையைப் புரட்டினான்.

படிக்கவில்லை என்பதைக் கண்டவளுக்குப் புரிந்து போயிற்று.

பேசுவதற்காகக் காத்திருக்கிறான்.

ஆனால், பேசித்தான் ஆக வேண்டும், இல்லையா?

அவளைப் பொறுத்த வரையில், கொண்ட உறுதியில் தொய்வில்லை.

காபியைக் குடித்து முடித்துக் கப்பை வைத்தவள், ''சொல்லுங்கள்!'' என்றாள்.

காஞ்சனி கேட்ட விதம், அவனுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்தி இருக்க வேண்டும். எனவே, மனதை மாற்றிக் கொள்வது பற்றி எதுவும் பேசாமல், அடுத்து நடக்க வேண்டியது பற்றிச் சொன்னான்.

''இப்போது உடனே திரும்பிப் போனால், இரு வீடுகளிலும், என்ன என்ன என்று குழம்பக் கூடும். அதனால், ஏற்கெனவே திட்டமிட்டபடி, நாளைக் காலையிலேயே திரும்பிப் போகலாம். இன்று பகலில், இங்கேயே சுற்றிப் பார்ப்போமா? பல்லவர் காலத்துச் சிற்பங்கள், ஏழு ரதங்க... காட், நீயும் சென்னைக் காரிதானே! ஏற்கெனவே பார்த்திருப்பாய். உன் அப்பாவே கூட்டி வந்து காட்டியிருப்பாரே. அதைவிட, நாம் பாண்டிச்சேரிக்குப் போய் வருவோமா? மதர் சென்டர், அரவிந்தர் ஆசிரமம்.. எல்லாமே, முன்பு பார்த்திருந்தாலும், மறுபடியும் ரசிக்கத் தக்கவை. மனதிற்கும் அமைதி அளிக்கக் கூடியவை, அத்தோடு, ஃப்ரெஞ்சு உணவையும் சுவைத்து விட்டு வரலாம். என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான் சியாமளன்.



''செய்வோம்!'' என்று உடனேயே தலையாட்டி விட்டாள் அவளும்.

இருவருமாக, இங்கே அறைக்குள்ளேயே அடைந்து கிடப்பதும் துன்பமே!

இன்பமாக இருந்திருக்க வேண்டிய தனிமைதான். ஆனால், இன்றைய நிலையில் சகிக்க முடியாத வருத்தமாக மட்டுமே இருக்கும்.

உடனே வீட்டுக்குத் திரும்பிச் சென்றாலும், அதுவும் பிரச்சினைதான்.

எனவே, அவன் சொல்வது போலச் செய்வதுதான், ஓரளவேனும் நிம்மதி தருவது.

அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்பும்போது மட்டும், சியாமளன் ஒன்று கேட்டான். ''என்னோடு காரில் வருவதற்கு, உனக்கு ஒன்றும் பயமில்லையே?'' வேண்டும் என்றே சிறு கவலை போலக் காட்டிக் கேட்கப்பட்ட கேள்வி.

கேள்வியின் காரணம், அவளுக்குப் புரியாமல் இல்லை.

எனவே, பிள்ளையாய் விழி விரித்து, "பயமா? எதற்கு? உங்களுக்கு நேர்வதுதானே எனக்கும் நடக்கும்? அப்புறம் என்ன பயம்?" தெளிவான பார்வையுடன் கேட்டாள் அவள்.

நான், எனக்காகப் பார்க்கவில்லை என்று, இதைவிடத் தெளிவாகச் சொல்ல முடியுமா?

கடைசியில், அவன்தான் பார்வையைத் திருப்பிக் கொள்ள நேர்ந்தது.

'அன்னை' வாழ்ந்த இடம், சமாதியில் மலர் அலங்காரம், மணக்குள விநாயகர் ஆலயப் பிராகாரத்தில் பன்னாட்டுப் பிள்ளையார் படங்கள், 'குளோபல் வில்லேஜ்' போலப் பல நாட்டவரும் வசிக்கும் ஆரோவில், மாத்ரி மந்திர்...

ஒவ்வொன்றாக, அவசரமின்றி, நிதானமாகப் பார்த்து ரசித்தபோது, இருவருக்கும் இடையே இருந்த மன வேறுபாடு கூட மறந்து போயிற்று.

ஆனால், விடுதிக்குத் திரும்பியதும், பழைய இறுக்கம் காஞ்சனியை மீண்டும் பற்றிக் கொண்டது.

அவனாக எதுவும் கேட்பான் என்று பார்த்தால், சியாமளனுக்கு அந்த எண்ணம் இருப்பதாகவே தெரியவில்லை.

கைகால் கழுவியதும் சாப்பிட அழைத்துச் சென்றான். உணவருந்தி வந்ததும், அறையில் இருந்த டி.வி.யைப் போட்டுக் கொண்டு எதையோ பார்க்கத் தொடங்கி விட்டான்.

அப்போதும், "உனக்கு வேறு ஏதும் பார்க்க வேண்டுமா?" என்று கேட்கத் தவறவில்லை.



ரொம்பத்தான் நியாய புத்தி என்று உள்ளூரப் புகைந்த போதும், அவனைக் குற்றம் சொல்ல முடியாத நிலை.

கடைசியாக, அவளாகச் சென்று, "நான் சொன்னதை யோசித்தீர்களா?" என்று கேட்க வேண்டியதாயிற்று.

டிவி சத்தத்தைக் குறைத்துவிட்டு, அவளைப் பார்த்தான் அவன்.

"யோசிப்பது பற்றி, நேற்றே நான் ஒரு குறள் சொன்னேன். ரேஸ் பற்றி என் யோசனை எல்லாம் ரொம்ப முன்பே முடிந்து விட்டது. இப்போது, யோசித்து மனதை மாற்றிக் கொள்ள வேண்டியவள் நீதான்."

"நானும் யோசித்துத்தான் முடிவு செய்திருக்கிறேன்!"

"அதாவது, நேற்றைய நிலையிலேயே இருக்கிறோம் என்கிறாய். உன்னிஷ்டம். ஆனால், நேற்றைப் போலக் குறுக்கிக் கொண்டு படுக்காதே. கட்டில் பெரிதாகத்தான் இருக்கிறது. ஒரு புறமாகப் படுத்துத் தூங்கிக்கூட, உன் வைராக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம்!" என்றான் அவன்.

மறுநாள் வந்து சேர்ந்த மகளையும், மருமகனையும் லலிதாவும் மாதவனும் அன்போடு வரவேற்றார்கள்.

முந்திய நாள் வீட்டுக்கு அழைத்து வந்த மகனைப் பற்றிச் சொன்னார்கள். "அசதியில் தூங்குகிறான். வேறு பாதிப்பு இல்லை, மாப்பிள்ளை. விரைவிலேயே பலம் பெற்றுப் பழைய மாதிரி ஓடியாடத் தொடங்கி விடுவான் என்று டாக்டர் சொன்னார்!" என்றார் மாதவன்.

"அவன் இன்னும் கொஞ்சம் நன்றாகும்வரை, உங்கள் உதவிக்காகக் காஞ்சனியை இங்கேயே விட்டுப் போகலாம் என்று பார்க்கிறேன்!" என்றான், சியாமளன்.

மகாபலிபுரத்திலிருந்து திரும்பி வரும்போது, இரு வருமாகச் செய்த முடிவுதான்.

அப்போதைய மன நிலையில், கணவன் வீட்டுக்குச் செல்ல, அவளுக்கும் மனமில்லை - அழைத்துப் போக, அவனுக்கும் ஆசையில்லை என்பதால் எடுத்த முடிவு. ஆனால், அவன் வாயால் கேட்கையில் அவளுக்கு வலித்தது.

தாயின் முகம் மலர்ந்தபோதும், அதில் திகைப்பும் தயக்கமும்கூட இருந்தது. "அங்கே.. பெரியவர்கள் தப்பாக.. நீங்கள் இங்கே..." என்று லலிதா தடுமாறினாள்.

"தப்பாக என்ன அத்தை? நானும் வெளியூர் போக வேண்டியிருப்பதால்..." என்று கூறியவாறு, சியாமளன் மனைவியை ஏறிட்டுப் பார்த்தான்.

அவளுக்கு வயிற்றுக்குள் பிசைந்தது.

21



**சி**யாமளன் வெளியூர் செல்வது, அதுவரை காஞ்சனி அறியாதது. மகாபலிபுரத்தில் வைத்துச் சொல்ல அவன் எண்ணியிருந்திருக்கலாம். பேச்சுப் போன தினுசில், சொல்லாமலும் இருந்திருக்கலாம்.

ஆனால், என்னவோ, வேண்டாத மூட்டை மாதிரி, அவளை இங்கே கொண்டு வந்து தள்ளிவிட்டு, அவன் கிளம்புவது, அவளுக்கு ஆத்திரமூட்டியது.

கூடவே, பயத்தையும்!

ஆனால்.. ஒரு வேளை, இது அவனது தொழில் துறைப் பயணமாகவும் இருக்கலாம்...

சியாமளனைக் கூர்ந்து பார்த்தால், அவன் பார்வை மாமியாரிடம் திரும்பி யிருந்தது.



"நந்தனுக்கு நேர்ந்த விபத்தில், நீங்கள் கொஞ்சம் அதிகமாகவே ஆடிப் போய் விட்டீர்கள் என்பது, என் கருத்து, அத்தை! மாமாவும்தான். காஞ்சி இங்கே இருந்தால், உங்கள் மனதுக்கு நன்றாக இருக்கும் என்று தோன்றியது. நீங்கள் இருவரும், மகளையே சார்ந்து இருப்பதால், கொஞ்ச நாள் காஞ்சியை இங்கே இருந்து விட்டு வரச் சொல்லி இருப்பதாக, அம்மா, அப்பா விடம் சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கும், அதே எண்ணம்தான். அத்தோடு, நானும் வெளியூர் செல்ல வேண்டி இருக்கிறது. நான் இல்லாமல், அங்கே புது இடத்தில் இவளுக்குச் சிரமமாக இருக்கும் என்பது வேறு. அதனால், நான் திரும்பி வரும்வரையேனும் காஞ்சி இங்கேயே இருக்கட்டும்," என்று சியாமளன் விளக்கம் கொடுக்கவும், அவனுடைய மாமியார், மாமனாருக்கு மனம் பூரித்துப் போயிற்று.

அவன் கிளம்புகையில், வழியனுப்பும் பாவனையில், காஞ்சனி கார் வரை சென்றாள். உள்ளூரத் தோன்றிய நப்பாசையில், "வெளியூருக்கு ஏதாவது தொழில் விஷயமாகவா?" என்று வினவினாள்.

"அப்படிச் சொல்லிச் சமாளிக்கவும் செய்யலாம். ஆனால், உன் கேள்விக்கு உண்மையான பதிலைத் தருவதானால், நான் செல்வது ரேசுக்கு. ஒரு வாரம் கோவாவில் இருப்பேன். பை!" என்று விட்டுக் காரில் ஏறிக் கிளம்பினான் அவன்.

கொதிப்பு சற்று அடங்கும் வரை, காஞ்சனி அங்கேயே நின்றிருந்தாள்.

அவர்கள் இருவருக்கும் இடையே அவ்வளவு பேச்சு நடந்திருக்கிறது. அவர்களது வாழ்க்கையையே, அவள்

பணயம் வைத்திருக்கிறாள். அவனானால், இந்த ஒரு ரேசைக்கூட விடத் தயாரில்லை!

அவள் மட்டும் யோசித்து, மனதை மாற்றிக் கொள்ள வேண்டுமா? அதையும் பார்க்கலாம்.

அவர்களுக்கிடையே உள்ள தகராறைப் பெரியவர்களிடம் காட்டிக் கொள்ளக் கூடாது என்றும் பேசியிருந்ததால், மனதை மறைக்கக் கூடிய அளவு கோபம் குறைந்த பிறகே, காஞ்சனி வீட்டினுள் சென்றாள்.

ஆனால், அப்போதும் அவளுக்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை.

உலகத்திலேயே மிக மிக நல்ல மருமகனும், சம்பந்தி வீட்டாரும் அவர்களுக்குக் கிடைத்தது பற்றி, அவளுடைய பெற்றோர் வாயாரப் புகழ்வதை, முகத்தைச் சிரித்தவாறே வைத்தபடி, கேட்டுக் கொண்டிருக்குமாறு ஆயிற்று.

நல்ல வேளையாகத் தூக்கம் கலைந்து எழுந்த நந்தகுமாரன், அவ்வப்போது சுவரைத் தொட்டுக் கொண்டு, அந்த அறைக்கு நடந்து வந்து சேர்ந்து, அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

ஓரளவு மெதுவாக என்றாலும், தம்பி தனியாக நடந்து வரவும், ''நந்து!'' என்று பதறி எழுந்து, அவனிடம் ஓடினாள் காஞ்சனி.

"ஏய் நந்து! என்னடா, நீயே தனியாக நடந்து வருகிறாய்? என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா? விழுந்து விட்டால், என்ன ஆவது?'' என்று கடிந்தபடி, அருகே சென்று, அவன் கையைக் கவலையோடு பற்றினாள்.



ஆனால், ''அச்சோ, கையை விடு, அக்கா!'' என்றான் தம்பி, பொறுமையற்ற குரலில், ''என்னால் நேராக நடக்க முடியும். விடு. விடு என்கிறேனே!'' என்று அவன் அதட்டவும், காஞ்சனி திகைத்து நின்றாள்.

மகளின் திகைப்பைக் கண்டு, லலிதாவுக்குச் சிரிப்பு வந்தது.

''என்னடாம்மா, நீ கிளம்பிச் சென்று, இரண்டு நாட்கள் ஆகி விட்டன என்பதே மறந்து விட்டதா? இரண்டு நாட்களுமே, அப்படி வினாடியாய் ஓடி விட்டதாக்கும்! நீ கிளம்புவதற்கு முன்பே, மருத்துவ மனையில் வைத்தே, தம்பி பிடித்துக் கொண்டு நடந்தானில்லையா? நேற்றுக் கிளம்பு முன், டாக்டர் முன்னிலையிலும் நடந்து காட்டினான். அவருக்கு மிகவும் சந்தோஷம். வேகமான முன்னேற்றம் என்றார். 'உனக்கு நிறைய மனோதிடம் இருக்கிறது. நினைத்ததைச் சாதிப்பாய்!' என்று கூடப் பாராட்டினார். அவர் சொன்னபடிதான், அடிக்கடி நடந்து பயிற்சி செய்கிறான்!'' என்றார் தாயார்.

அதற்குள் ஒரு சோஃபா வரை வந்து அமர்ந்துவிட்ட நந்தனும் தமக்கையைப் பார்த்து முறுவலித்தான். ''கத்தி விட்டேனா, அக்கா? சாரி! நானாக மனதில் கணக்கிட்டு, என்னால் நடக்க முடிகிறது. ஆனால், யாராவது சட்டென அருகில் வந்து விட்டாலோ, உதவ முயன்றாலோ, என் கணக்கீடு குழம்பித் தடுமாறி விடுகிறேன். அதனால் தான், நீ கையைப் பிடித்ததும், கத்தி விட்டேன். சாரி!'' என்று மன்னிப்புக் கேட்டான், தம்பி.

தம்பி அதட்டியதால் காஞ்சனிக்கு ஏற்பட்ட வருத்தம், அவனது மன்னிப்புக் கேட்டலில் உடனே மறைந்து போயிற்று.

ஆனால், இரண்டு நாட்களும் வினாடியாய் ஓடியதா என்று தாய் செய்த கேலியால் அவளுக்கு ஏற்பட்ட வலிதான், லேசில் மறைவதாக இல்லை.

விபத்து நந்தகுமாரனின் உடலைப் பலவீனப்படுத்தியிருந்ததாலோ, என்னவோ, அவன் அடிக்கடி எரிந்து விழுந்தான். அவ்வப்போது உணர்ந்து, மன்னிப்பும் கேட்டான்.

பெற்றோருக்கு அடி பட்டுத் தேறி வரும் பிள்ளையின் சொல் வேதமாக இருந்தது.

ஆசை ஆசையாக ரேசில் போட்டியிட்ட மகனுக்கு, வெற்றி கிட்டப் போகிற நேரத்தில் தட்டிப் போய் விட்டதே என்கிற பரிதாபம், தன் உடம்பை மீண்டும் சீராக்கிக் கொள்வதில் அவனுக்கு இருந்த வேகத்தைக் காண்கையில் பரிவு, அவனது ஆரோக்கியம் திரும்புவதில் ஆர்வம், எல்லாமாக, அவனுக்காக எதைச் செய்யவும் தயாராக இருந்தனர். மற்ற யாருமே இரண்டாம் பட்சம்தான்.

காஞ்சனியின் சொந்த வாழ்வு நேராக இருந்திருந்தால், அவளும் அப்படித்தான் உணர்ந்திருக்கக் கூடும். ஆனால், இப்போது, 'இம்'மெனுமுன் அவளுக்கு மனம் வாடியது.

வாட்டம் மாறிப் பழைய நிலைக்கு வர, ரொம்பவே முயற்சிக்க வேண்டியிருந்தது.

கணவன் ரேசுக்குப் போயிருக்கிறானே, அவன் நல்லபடியாகத் திரும்பி வர வேண்டுமே என்ற கவலை வேறு உள்ளத்தை அரித்துக் கொண்டே இருந்தது.



அதைப் பற்றி, வெளிப்படையாகப் பேசவும், அவளால் முடியவில்லை.

மருமகனை உலக மகா உத்தமனாக நினைப்பதைக் கெடுக்க மனம் வராததோடு, கணவன் கேட்ட மாதிரி, 'அவர் கார் ரேசில் கலந்து கொள்கிறவர் என்று தெரிந்து தானே கல்யாணம் செய்து கொண்டாய்?' என்றுதானே பெற்றோரும் கேட்பார்கள்!

அதற்கு மேல், சியாமளனோடு நடந்த பேச்சு வார்த்தையோ, வாழும் வாழ்க்கையோ, பெற்றவளிடம் கூடச் சொல்லக் கூடியதில்லை.

உள்ளேயே புழுங்கிக் கொண்டிருந்தவள், நந்தன் கேட்ட பிஸ்கட்டை மறந்து, டிவியில் விளையாட்டுச் செய்தியில் காட்டிக் கொண்டிருந்த கார் ரேசைப் பார்த்தபடி நெஞ்சு படபடக்க நின்று விட்டாள்.

''பசி உயிர் போகிறது!'' என்று நந்தன் கத்த, ''என்னம்மா, தம்பி கேட்டதை எடுத்துக் கொடுக்காமல், உனக்கு என்ன மறதி?'' என்று கேட்டபடி, பிஸ்கட்டை லலிதா எடுத்து வந்து மகனிடம் கொடுத்தாள்.

''அக்காவுக்கு என்னைவிட, டிவியில்தான் கவனம் அதிகம்!'' என்று அவசரமாக பிஸ்கட்டைத் தின்றபடி குறைப்பட்டான் நந்தன்.

வருத்தத்துடன் டிவி திரையைக் காட்டினாள் தமக்கை. ''ஏதோ கார் ரேஸ் காட்டினார்கள்!'' என்றாள், மெல்லிய குரலில்.

''ஓகோ, அத்தான் வருகிறாரா என்று பார்த்தாயாக்கும்!'' என்று கேலி பேசியவன், ''அடுத்து பைக் பற்றி வருமே!'' என்று டிவி முன் அமர்ந்தான்.

முகம் வாட, அங்கிருந்து சென்று விட்டாள் தமக்கை.

இப்போது நீ மட்டும் டிவி பார்க்கலாமோ என்று முன்போலத் தம்பியிடம் மல்லுக் கட்ட, அவளுக்குத் தோன்றவில்லை. மனதில் மட்டும் வலி நமநமத்தது.

டிவி பார்த்து முடித்துவிட்டு வந்தவன், தமக்கையின் முக வாட்டத்தைக் கவனித்து, "இந்த மருந்துகளோ, என்னவோ, லேசாகப் பசித்தாலும், அப்படியே வயிறு காந்தி விடுகிறது. பொறுக்க மாட்டாமல், கத்தி விடு கிறேன். மன்னித்து விடு, அக்கா!" என்றான் தணிவாக.

"அது பரவாயில்லையடா!" என்று, ஒரு வகையில் சமாதானமடைந்தாலும், மேற்கொண்டு மனதில் இருந் ததைத் துணிந்து அவனிடம் சொல்லத் தயங்கினாள்.

ஆயினும், தாயிடம் தனிமையில் அது பற்றிச் சொன்ன போது, பெற்றவள் அவளோடு ஒத்துப் பேசவில்லை.

"அதை அவனே யோசித்து முடிவு செய்யட்டும், காஞ்சி!" என்று லலிதா கூறியதை, முதலில் அவளால் நம்பக்கூட முடியவில்லை.

"என்னம்மா, எவ்வளவு ஆபத்தான நிலையிலிருந்து மீண்டிருக்கிறான்! இன்னமுமா அவனது விருப்பம் என்பது? கூடாது என்று அதட்டி அடக்குங்கள்!" என்றாள் ஆத்திரமுற்று.

ஆனால், மகளின் பேச்சுதான் பெற்றவளுக்குச் சரியெனத் தோன்றவில்லை. "நீ தையல் கலையைத் தொழிலாகச் செய்ய விருப்பப் பட்டாய்! ஏற்பாடு செய்து தந்தோமே! அவனது ஆசைக்கு மட்டும் எப்படித் தடை போடுவது?" என்று அன்னை கேட்டபோது, அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.



"என்னம்மா, அதையும், இதையும் ஒன்றுபடுத்திப் பேசுகிறீர்கள்? இது அவனுக்கே ஆபத்தாக இருக்கிறதே! ஒரு தரம் பட்ட பிறகும், அதை யோசியாமல், என்ன பேச்சு இது?" என்று சிடுசிடுத்தாள்.

கையில் ஊசி குத்தியது இல்லையா என்று, சியாமளன் அர்த்தமற்றுக் கேட்ட மாதிரி அல்லவா இருக்கிறது?

"பட்டறிவு என்பார்கள். ஒரு தரம் பட்டதால்தான் முழுத் தைரியமே வந்திருக்கிறது. அனுபவ அறிவு, அடுத்துத் தப்பு செய்ய விடாது! இனிக் கவனமாக இருப்பேன் என்று நந்துவே சொல்லுகிறான். அப்புறம் என்ன பயம்? அத்தோடு காஞ்சி, இப்போது என்னிடம் சொன்ன மாதிரி, நந்துவிடம் பேசி வைக்காதே! உன்னிடம் கோபப் படுவான்!" என்று எச்சரித்துவிட்டுப் போனாள், தாயார்.

பெற்றோரும் பிள்ளைகளுமாகக் கலகலவென்று ஒரு மனதாகப் பேசிச் சிரித்தது, இந்த வீட்டில்தானா?

தனித்து விடப்பட்டது போலக் காஞ்சனி திகைத்தாள்.

கூடை நிறையப் பழங்களோடு, யசோதையும், மஞ்சுவும் ஒரு நாள் வந்தார்கள். பிரியமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனார்கள்.

ஆனால், காஞ்சனியை இங்கே உதவிக்கு இருக்க விட்டதற்கு நன்றி தெரிவிக்கிற மாதிரி லலிதா பேசியது மட்டும், அவள் மகளுக்கு எரிச்சலூட்டியது.

காஞ்சனி இந்த வீட்டுப் பெண் இல்லையா? தாலி கட்டியதாலேயே, அந்த வீட்டுக்குச் சொந்தமாகிவிட, அவள் என்ன, லைசென்ஸ் தகடு கட்டிய நாயா?

ஆனால், அவளிடம் தனிமையில், "அண்ணன் கிளம்பிப் பத்து நாட்கள் ஆகிறதே, அண்ணி? நீ இங்கே இருப்பதால், அண்ணன் அங்கேயே சுற்றிக் கொண்டு இருக்கிறார் என்று நினைக்கிறேன். இப்போது, நந்த குமாருக்கு நன்றாகி விட்டது என்று தெரிந்தால், உடனே வந்து விடுவார். அப்போது, நீயும் அங்கே வந்துவிடு, அண்ணி!" என்று, மஞ்சு அன்போடு கூறியபோது, காஞ்சனியின் மனம் அடியோடு மாறி விட்டது.

கணவனைப் பார்க்க வேண்டும், அவன் வீட்டுக்குப் போய் விட வேண்டும் என்று, பேரலையாக எழுந்த ஆவலில், காஞ்சனி திக்கு முக்காடிப் போனாள்.

ஆனால், இப்போது அது எப்படிச் சாத்தியப்படும்?

22



ஆரோக்கியமான இளைஞன், தேவையான கவனிப்பும் இருந்ததால், நந்தகுமாரன் வெகு வேகமாகக் குணமடைந்து வந்தான்.

விட்டால், பைக்கை எடுத்துக் கொண்டு வெளியே சுற்றப் போயிருப்பான். ஆனால், டாக்டர் அனுமதியின்றி, பைக் சாவியை அவனிடம் கொடுப்பதற்கு, எப்போதும் பிள்ளைகளின் விருப் பத்தைப் பெரிதும் மதிக்கும் அவனுடைய பெற்றோர்கூடத் தயாராக இல்லை.

எனவே, உடலுக்குப் பயிற்சி என்று, அவனாகவே வீட்டில் இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தான், நந்தன்.

எனவே, உதவியென்று காஞ்சனி பெரிதாகக் கேட்டால் எடுத்துக் கொடுப்பது, டிவி பார்க்கும் நேரம்



போகத் தம்பிக்குப் பொழுது போவதற்காக அவனோடு ஏதாவது பேசுவது, விளையாடுவது, இப்படித்தான்!

ஓர் அதிர்ச்சியின் பின், மகளின் அண்மை, பெற் றோருக்கு மிகவும் தேவைப் பட்டபோதும், நந்தனின் வேகமான முன்னேற்றத்துக்குச் சரி விகிதமாக, தன் தேவையும், அந்த வீட்டில் குறைந்து வருவதாகவே, காஞ்சனிக்குப் பட்டது.

எண்ணப் போக்கில், மற்றவர்களிடமிருந்து மாறுபட்டு நின்றது வேறு, முன்னைப் போல, நினைத்ததைப் பேசி இயல்பாக ஒட்டி உறவாட முடியாமல், அவளைத் தடுத்தது.

அதிலும், தம்பியின் ரேஸ் விவகாரம் பற்றிப் பெற்றவளோடு காஞ்சனி பேசியதை அடுத்து, "தொடக் கத்திலேயே அபசகுனம் போல, நீதான் அன்றைக்கு ரேசுக்குப் போகாதே என்றாய், இப்படி ஆகிவிட்டது. இனிமேல், அந்த மாதிரி ஒரு வார்த்தை, எந்தக் காரணம் கொண்டும், தெரியாத்தனமாகக்கூடச் சொல்லி விடாதே, அக்கா!" என்று நந்தன் ஒரு தரம் பேச்சுவாக்கில் கூறிவிட, அந்த மாதிரி, அவள் வாயே திறப்பதில்லை.

அதே போல, அவளுடைய கணவனைப் பற்றியும், அவனைக் கிட்டத்தட்டக் கடவுளாக எண்ணும் அந்த வீட்டில், அவளால் மனம் திறந்து பேச முடியாமல் போயிற்று!

அவளது கோரிக்கை, அவனது நன்மைக்காக என்பதை ஒத்துக் கொள்ளாமல், அவளை அலட்சியப்படுத்தி விட்டுக் கார் ரேசுக்குப் போன கணவனிடம் கோபம் ஒரு புறம் என்றால், அவனுக்காக ஏக்கமும், அவளே எதிர்பாராத அளவுக்கு, அதிகமாக இருந்தது.

இரண்டில் எதை அவள் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள முடியும்?

பெரும் விபத்துக்கு ஆளாகிப் பிழைப்பதே சந்தேகத் துக்கு இடமாகி, ஒருவாறு குணமடைந்து வரும் பிள்ளையையே ரேசிலிருந்து தடுத்து நிறுத்தாத பெற்றோர், சியாமளனிடம் மகள் பேசியதை நிச்சயம் ஒத்துக் கொள்ளப் போவது இல்லை.

இதைச் சொல்லாமல், ஏக்கத்தை மட்டும் சொன்னால், எப்படிப் புரியும்?

ஏன், விட்டு விட்டு இருக்கிறாய்? அவர் இருக்கு மிடத்துக்குக் கூட்டிப் போய் விடவா என்று தந்தை கேட்கக் கூடும்! அவருக்கு என்ன பதில் சொல்ல முடியும்?

எனவே, காஞ்சனி தனக்குள்ளேயே உழன்றாள்.

யோசிக்கையில், இந்த இருபத்திரண்டு ஆண்டுகள், அவன் இல்லாமல் எப்படி வாழ்ந்தோம் என்று ஆச்சரியமாக இருந்தது.

சியாமளனைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும், பழக வேண்டும் என்று மனம் துடித்தது.

ஆனால், இவ்வளவு தூரம் அவனோடு வாதாடிப் பிடிவாதமாக ஒரு நிபந்தனையும் சொல்லிவிட்டு, அவளாக எப்படி அவனை அணுகுவது? அவள் பலவீன மடைவதாகக் கணவன் எண்ணி விட்டால்?

அதுவும் கூடாதே!

சுய கௌரவம் போவதோடு, சியாமளனைக் காப்ப தற்கு இருக்கும் ஒரே வழியும் வீணாகிப் போகும்!



காஞ்சனி இப்படித் தவித்துக் கொண்டிருக்கையில் ஒரு நாள், திலகாவும், அனகாவும் சேர்ந்து காஞ்சனியின் வீட்டிற்கு வந்தார்கள்.

கையில் இருக்கும் வேலை, இன்னும் ஒரு வாரத்தில் முடிந்து விடும். புது ஆர்டர்கள் வாங்க வேண்டும்! 'உன்னதம்' சுகவனம், அந்த வாரக் கடைசிக்குள் வந்து பார்க்கச் சொன்னார். பிரபலமான 'நாளைய நாகரீகம்' போன்ற மேலும் சில துணிக் கடைகளில் இருந்தும், அழைப்பு வந்திருக்கிறது, என்ன செய்வது என்று சிறு பயத்துடன் கேட்டார்கள்.

என்னதான் சொல்லியிருந்தாலும், இந்தத் தொழிலைத் தொடர்ந்து நடத்தும் ஆர்வம், திருமணமாகி விட்ட காஞ்சனிக்கு இருக்குமோ, இல்லையோ என்ற பயம்!

ஆனால், அவர்கள் கொடுத்த விவரம், காஞ்சனியின் சோர்ந்த மன நிலையைக் கொஞ்சம் மாற்றியது.

அவளது சேலையில் காஞ்சனி செய்திருந்த வேலைப்பாட்டைப் பார்த்து விட்டுத் தங்களுக்கும் வேண்டும் என்று, தனக்குத் தெரிந்த சில பெண்கள் கேட்டிருப்பதாகவும், மறுபடியும் புது வேலைகளை எடுக்கத் தொடங்கும்போது, அவர்களை அழைத்து வருவதாகவும், அன்று தாயுடன் வந்தபோது, மஞ்சுவும் காஞ்சனியிடம் சொல்லியிருந்தாள்.

எனவே, தொழில் வேலைகளைத் தொடங்கி, அதில் கவனத்தைச் செலுத்தலாமே!

சொல்லப் போனால், கட்டாயமாகத் தொழிலைக் கவனிக்க வேண்டிய நேரமே வந்தாயிற்று.

வடிவமைப்பது, வண்ணச் சேர்க்கை என்று, வேலையில் மனதை ஈடுபடுத்தினால், சியாமளனையே நினைத்துக் குழம்புவதில் இருந்து, சற்றே விடுதலை கிடைக்கக் கூடும்.

இன்றைய நிலையில், அதுதான் அவளுக்கு மிகவும் அவசியம்.

முதல் நாள் 'உன்னத'த்துக்குப் போனால், முதல் வார்த்தையாகச் சுகவனம், சியாமளனைப் பற்றித்தான் விசாரித்தார்.

நல்ல வேளையாக, அவர் பொழுதை வீணாக்குகிறவர் அல்ல என்பதால், விரைவிலேயே பேச்சு வேலைக்கு மாறி, நல்ல சில ஆர்டர்களுடன் காஞ்சனி கிளம்ப முடிந்தது.

மஞ்சுவோடு வந்த பெண்களுக்குக் காஞ்சனியின் சின்னதான அலுவல் இடம் சற்றே கண்ணை உறுத்தினாற் போலத் தோன்றியது. ஆனால், காஞ்சனி வரைந்து வைத்திருந்த சில மாதிரிகளைப் பார்த்ததும், மற்றது மறந்து, பல சேலை, சுரிதார்களைக் குந்தன், ஜர்தோஷி வேலை செய்யச் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

மனதை ஒரு நிலைப்படுத்தி வேலையில் ஈடுபட வேண்டும் என்று காஞ்சனி நினைத்தபோது, மறுநாள் அவளுடைய அண்ணன் வருவதைத் தெரிவித்து, அதைக் கலைத்து விட்டுப் போனாள் மஞ்சு.

''அண்ணன், அவரது காரிலேயே வருகிறார் போல! அப்படியே, உன்னையும் வீட்டுக்குக் கூட்டி வந்து விடும்படி அண்ணனிடம் சொன்னேன், அண்ணி!''



என்று, தோழிகளிடையே அண்ணன் பற்றிப் பெருமை காட்டும் விதமாக மஞ்சு சொன்னதுதான்.

வருவதைப் பற்றித் தனக்கு நேரடியாகத் தெரிவிக்கவில்லையே என்று உள்ளூர வருத்தம் இருந்தபோதும், அவன் வருகிறான் என்பதே, காஞ்சனிக்குப் பரபரப்பூட்டியது.

வேலையை முடித்து விட்டு, வீட்டுக்குப் போனால், ''அத்தான் நாளைக்கு வருகிறாராம். போன் செய்தார். நான்தான் எடுத்துப் பேசினேன்! என்னிடம்தான் சொன்னார்!'' என்று, தன் பங்குக்குப் பெருமையடித்தான் நந்தகுமாரன்.

மகளின் கண்ணில் வாட்டத்தைக் கண்டு, ''அக்கா இன்று வேலைக்குப் போனதால், உன்னிடம் சொன்னார். அல்லது, அவளிடம் பேசி, அவள் உனக்கு விஷயம் தெரிவித்திருப்பாள்!'' என்று லலிதா முறுவலித்தாள்.

தாய்க்காக முறுவலித்த போதும், காஞ்சனிக்கு வருத்தம்தான். அவளிடம் பேசுவதானால், அவளது செல்லில் சியாமளன் தொடர்பு கொண்டிருக்கலாமே!

மாலையில் அவளைக் காண வந்த கணவனோடு தனிமை கிட்டியதும், அவள், அதை நேரடியாகக் கேட்க, ''எனக்குப் பயம்மா!'' என்று கண்ணை உருட்டினான் அவன்.

''உங்களுக்கா?'' என்று பதிலுக்குக் கண்ணை விரித்தாள் அவள்.

அறைக் கதவுப் பக்கம் ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு, சற்றுத் தணிந்த குரலில் அவன் சொன்னான். ''மெய்யாகவே, பயம்தான், காஞ்சி! செல்லில் என்

நம்பரைப் பார்த்ததும், நீ அதை 'ஆஃப்' பண்ணி விட்டால்? அதைவிட, நீ வந்தாலும், வராவிட்டாலும் எனக்கென்னடா என்று விட்டால்?''

''அப்படிச் சொல்லுகிறவள், வீட்டுக்கு வந்தால், கழுத்தைப் பிடித்துத் தள்ள மாட்டாளாக்கும்?''

மைத்துனன்தான் அவன் கட்சியாமா?

தன் பிடிவாதத்தை விடுவதாக இல்லை என்று, அவன் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறானாம்! எப்படியோ, எந்தச் சேதமும் இல்லாமல், அவன் வந்தது பெரிது.

ஆனால், இதை இப்படியே விடக் கூடாது. இடைப் பட்ட நாட்களில் பட்ட துன்பம் தொடராது தவிர்க்க வேண்டும்.

யோசித்தபடி, மஞ்சுவின் வருகை பற்றிய விவரம் சொல்லிப் பேச்சை மாற்றினாள் காஞ்சனி.

இடம் பற்றிய பேச்சை அவள் சொன்னபோது, ''நான் அதற்காகவும்தான் வந்தேன், காஞ்சனி. சற்றுப் பெரி தான அலுவல் இடம் ஒன்று, உனக்காகச் சொல்லி வைத் திருந்தேன். அது தயாராகி விட்டதாம். போய்ப் பார்த்து, உனக்குப் பிடித்தால் முடித்து விடலாம். இப்போதே வா, பார்த்து விடலாம்,'' என்று அழைத்தான் அவன்.

அவளும் ஒத்துக்கொள்ள, இருவருமாகக் கிளம்பிச் சென்றனர்.

கார் அடையாறு பக்கமாகச் செல்லவும், ''உங்கள் வீட்டுக்கா போகிறோம்?'' என்று காஞ்சனி வினவினாள்.

''சின்னதாக ஒரு திருத்தம்!'' என்றான், சியாமளன். ''நம் வீட்டுக்கா என்று கேட்க வேண்டும்!'' என்றபடி கிளை வழி ஒன்றில் காரைச் செலுத்தினான்.



குறிப்பாக வரச் சொல்லுகிறானா?

விரைவிலேயே, காரை ஒரு புதிய கட்டடத்தின் முன் நிறுத்தினான் சியாமளன்.

குடியிருப்புக்காகக் கட்டப் பட்டது போல் இல் லாமல், பெரிய கண்ணாடி ஜன்னல்களுடன், அலுவலகங் களுக்குத் தேவையான விதத்தில் கட்டடம் இருந்தது.

''இரண்டாம் மாடி, லிஃப்ட் இருக்கிறது!'' என்றவன், காவலாளியைத் தேடிப் போய் ஏதோ சொல்லிவிட்டுக் காஞ்சனியை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

இடம் வெளிச்சமாக, விசாலமாக இருந்தது. பார்த்ததுமே, இந்த இந்த இடம், இந்த இந்த வேலை செய்ய வசதி என்று, கண்கள் பளபளக்கக் காஞ்சனி திட்டமிடலானாள்.

ஃப்ரேம் பதிப்பது, சரியானபடி விளக்குகள் அமைப்பது பற்றி அவள் உற்சாகத்துடன் பேசி முடித்த பிறகு, ''இந்த இடத்தை நான் பார்த்ததே, நம் வீட்டில் இருந்து, இரண்டே கிலோ மீட்டர் தூரம்தான் என்பதால் தான். உன் தோழிகளுக்கும் பஸ்சில் எளிதாக வரக்கூடிய இடம். புதிய காலனி. உனக்குப் போக்குவரத்து நெரிசலே இராது!'' என்றான் சியாமளன்.

எல்லாம் அவளுக்காகத்தானே யோசித்திருக்கிறான்!

பெரிய விழிகளால், கணவனைப் பார்த்தாள் காஞ்சனி.

''என்னம்மா?''

''நான் உங்.. நம் வீட்டுக்கு வந்து விடட்டுமா?''

அவளது சொல் மாற்றத்தைக் கவனித்தவன்போல சியாமளன் முறுவலித்து, ''உன் விருப்பம்!'' என்றான்.

இவன் வேறு மாதிரி எண்ணி விட்டானா? அவள் சரணாகதி ஆவதுபோல!

அவசரமாக யோசித்து, "ஆனால்... நான் முன்பே சொன்னது... அது நினைவிருக்கிறது அல்லவா?" என்று கேட்டாள் அவள்.

தோளைக் குலுக்கி, "அதுவும் உன் விருப்பம்தான்!" என்றபடி, ஜன்னல் பக்கம் போய், வெளியே எட்டிப் பார்த்தான் அவன்.

23



முகம் பாராமல், வெளியே எதையோ பார்த்தபடி சியாமளன் பேசியது, காஞ்சனிக்கு எரிச்சலூட்டியது.

ஆனால்.. முகத்தைப் பார்த்துப் பேச முடியவில்லையோ என்றும் தோன்றிவிட, வாய்ப்பை விட மனமின்றி, "எல்லாம் உன் விருப்பம், உன் விருப்பம் என்கிறீர்கள். ஆனால், என் விருப்பப்படி நடப்பதாகச் சொல்ல மாட்டேன் என்கிறீர்களே!" என்று சலுகைக் குரலில் குறைப்பட்டாள்.

மெல்லத் திரும்பி, "எனக்கும் ஆசைகள் இருக்கும் அல்லவா?" என்றான் அவன்.

"என் ஆசை பற்றி, உங்களுக்கு ஒன்றும் கிடையாதா?"

"அப்படிப் பார்த்தால், என் விருப்பம் பற்றி, உனக்கு ஒன்றும் இல்லையா?"

"பொல்லாத விருப்பம்! உயிரையே அலட்சியம் செய்கிற விருப்பம்!" என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

"பெரிதாக ஆபத்து ஒன்றும் கிடையாது, காஞ்சனி!"



"எப்படிச் சொல்லுகிறீர்கள்? ஐயர்ட்டன் சென்னா என்பவர், கார் ரேஸ் விபத்தில் செத்தே போயிருக்கிறாரே! ஜார்னோ ட்ருல்லி ஒரு பேட்டியில் அவரது உயிரைக் கையில் பிடித்திருப்பதுபோல, ஹெல்மெட்டைப் பிடித்துக் கொண்டதால், ஒரு விபத்திலிருந்து உயிரோடு மீண்டதாகச் சொல்லியிருக்கிறார். பைக் ரேசில், கைகால் போகாமல் ஷின்யா தப்பித்தது அதிசயம் என்று பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். இன்னும் டிவியில்.." என்று அடுக்கியவளின் பேச்சைச் சியாமளனின் வியப்புடன் கூடிய மெல்லிய விசில் ஒலி தடுத்து நிறுத்தியது.

"பள்ளியில் படிக்கும்போது வீட்டுப் பாடம் முழுசாகச் செய்கிற நல்ல மாணவியாக இருந்திருப்பாய் போல? நிறைய விவரங்கள் சேகரித்திருக்கிறாயே!" என்றான், கிண்டலாக அவன்.

"சேகரித்த விவரங்கள் சரிதானே?" என்று மிடுக்குடன் கேட்டாள் அவள்.

"தேடித் தேடிச் சேகரித்திருக்கிறாயே, சரி பாராமலா விட்டிருப்பாய்? நிச்சயமாக, எல்லாமே சரிதான். ஆனால், ஆண்டுக்கு எத்தனை பந்தயங்கள், எத்தனை இடங்களில் நடக்கின்றன! அதுவும், எத்தனை காலமாக! ஒரு சில அசம்பாவிதங்கள் நடவாதிருக்க முடியுமா? திருமூலர் பாடல் படித்திருக்கிறாயா? அன்றாடச் செயல்கள் அனைத்தையும் முடித்துவிட்டு இரவில் படுத்தவன், அவனது இடப் பாகம் வலித்ததாம். எழவே இல்லை என்று அழகாக எழுதியிருக்கிறார்! அதற்காக நாம் படுத்து உறங்காமலா இருக்கிறோம்?"

ஆத்திரத்துடன் முறைத்தாள் காஞ்சனி. "நான் சொல்வது, உங்களுக்கு வேடிக்கையாகவா இருக்கிறது?"

"இல்லை, காஞ்சனி. அநாவசியமாக அலட்டிக் கொள் கிறாயே என்று இருக்கிறது. ஒரு தரம் என்னோடு வந்து பார். உனக்கே புரியும். இந்தத் தடவையே, உன்னை அங்கே எல்லோரும் எதிர்பார்த்தார்கள்."

"ஜோக்கடிக்கிறீர்களா? நீங்களே அங்கே போகக் கூடாது என்கிறேன்... இதில் நான் வேறு உங்களோடு அங்கே வருவதா? நான் சொல்வதைக் கொஞ்சம் காது..."

"ஷ்!" என்றான் அவன். "கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. வாசுவாகத்தான் இருக்கும். இதற்குமேல், நம் வாக்குவாதங்களை, நம் வீட்டில், அங்கேயும் நம் அறைக்குள் மட்டுமாக வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்," என்றவன், அந்த அறைக்கு வெளியே சென்று, பக்கவாட்டில் இருந்த லிஃப்ட் பக்கமாகப் போய்ப் பார்த்தான்.

சியாமளன் எதிர்பார்த்தது போலவே, வந்தவன் அவனுடைய நண்பன்தான்.

"என்ன சாம்பியன், வீட்டம்மாவுக்கு இடம் பிடித் ததா? அல்லது, வேறு பார்க்க வேண்டுமா?" என்று கேட்டபடி வந்த அந்த வாசு, நண்பனை அழைத்த விதம் காஞ்சனிக்கு ரசிக்கவில்லைதான்.

ஆனால், அந்த இடத்தை நண்பன் மூலமாக எப்படி யாவது அவள் தலையில் கட்ட முயலாமல், அவளது விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்துக் கேட்டது, அதை ஈடு செய்தது.

அத்தோடு, அவளுக்கு அந்த இடமும் பிடித்து விடவே, மேற்கொண்டு பேசி முடித்தார்கள்.



இரண்டு பெரிய அறைகளை அடுத்து, ஒடுக்கமாகப் பாதியளவில் ஒரு சிறு அறையும் இருந்தது. வேண்டாத சாமான்களைப் போட்டு வைத்திருந்தார்கள்.

இந்தப் பக்கம் லிஃப்ட் இருந்தது போல, அந்தச் சிறு அறையை அடுத்து மாடிப் படிகள் இருந்தன.

சுற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தபோது, காஞ் சனிக்கு ஓர் ஐடியா தோன்ற, அந்தச் சிறு அறையைப் பற்றி விசாரித்துத் தன் கருத்தைத் தெரிவித்தாள்.

"உங்களுக்குத் தெரிந்த ஆட்கள் பக்கத்தில் இருந் தால், சாம்பியனுக்கும் நிம்மதி! அது, சும்மா சாமான் போட்டு வைக்கக் கட்டியதுதான். சின்னதாக என்றாலும், அதற்கும், ஒரு தொகை கிடைக்கும் என்றால், எனக்குச் சந்தோஷமே!" என்றான் வாசு.

காஞ்சனி புகுந்த வீட்டுக்குப் போனது, எல்லோருக் குமே, வெகு இயல்பாகத்தான் தோன்றியது.

வித்தியாசமாக நினைக்கவும் ஒன்றும் இல்லைதான். திருமணமான பெண். ஓர் அவசியத்தின் பொருட்டுத் தாய் வீட்டில் தங்கியிருந்து உதவி செய்தாள். இப்போது, அந்தத் தேவை தீர்ந்ததும், கணவன் வீட்டுக்குப் போகி றாள். அவ்வளவுதானே?

கணவன் மனைவி இருவரையும் தவிர, மற்ற அனைவரும் அப்படியே கருத, அதை இவர்களும் திருத்தவில்லை!

திருத்தவும் இல்லை. இருந்த நிலைமை திருந்தவும் இல்லை.

தனிமையில் நேர் எதிராக இருந்தபோதும், வெளிப் பார்வைக்கு நேசமுள்ள கணவன் மனைவியாக இரு வரும் நன்றாக நடித்து, மற்றவர்களை மகிழ வைத்தனர்.

அடுக்கு மாடிக் கட்டடத்தின் ஒரு வீட்டைப் போல, மாடியின் ஒரு பெரும் பகுதி, புது மணமக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததால், அவர்களது வாக்குவாதங்களும், சண்டை சச்சரவுகளும், மற்றவர்கள் அறியாமலே இருந்து வந்தன.

இருவருமே, அவரவர் வழிக்கு மற்றவரைக் கொண்டு வர, மிகவும் முயன்றனர்.

"நம் சாலைகளிலேயே விதி முறைப்படி போக முடிகிறதா? சாலை விதிகளைச் சர்வ அலட்சியமாக எத்தனை பேர் மீறுகிறார்கள்! அதனால், எத்தனை விபத்துகள் நடக்கின்றன! யார் வந்து உள்ளே விழுவார்களோ என்கிற பயம் இல்லாமல், வெறும் ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்குச் சாலை விதியை மட்டும் கடைப்பிடித்துத் தைரியமாகக் காரை ஓட்ட முடிகிறதா? ரேசில் அப்படி ஒழுங்கு முறை மீறுவதெல்லாம் நடக்காது. உடனே வெளியேற்றி விடுவார்கள். அதனால், நம் சாலைகளைவிட, ரேஸ் கோர்ஸ் எவ்வளவோ பாதுகாப்பானது, தெரியுமா?" என்பான் அவன்.

அதற்கு ஆதாரங்களையும் காட்டுவான்.

தன் பங்குக்கு, மேலும் சில ரேஸ் விபத்து விவரங்களைச் சேகரித்துக் கொண்டு வந்து, அவனிடம் காட்டினாள் காஞ்சனி.

அவை யெல்லாம் உண்மையே என்றபோதும், நூற்றுக்கு ஒன்று என்கிற அளவுகூட இல்லாமல், வெகு அபூர்வமாக நடப்பவை. அதனால், அவைகளைப் பெரிதாக எண்ணத் தேவையில்லை என்றான் சியாமளன்.

"அந்த அபூர்வம் உங்களுக்கு நடக்காது என்று என்ன நிச்சயம்?" என்று மடக்கினாள் அவள்.



"விபத்து என்பது, யாருக்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் நடப்பதுதான். ஏன், தினம் தினம் எத்தனை விமான விபத்துகள், ரயில், பஸ், கார், விபத்துகள் நடக்கின்றன! எத்தனை பேர் சாகிறார்கள்! அதற்காக, ரயிலில் பஸ்சில் விமானத்தில் ஏற மாட்டேன் என்று, கட்டை வண்டியிலா பயணம் செய்து கொண்டு இருக்கிறாய்?"

பதிலுக்கு மடக்கி விட்டதாக அவன் நினைத்தான்.

ஆனால், கிடைத்தது வாய்ப்பென்று, "நீங்கள் சொன்ன அத்தனையும், யாருடைய கட்டுப்பாட்டிலும் நடப்பவையோ, நடந்தவையோ அல்ல! அதில், பலியானவர்களின் பங்களிப்பு கொஞ்சமும் கிடையாது! இப்படி நடக்கக் கூடும் என்ற ஊகம்கூடக் கிடையாது! உங்கள் விஷயம் போல, எமதர்மனை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்து, 'இந்தா, இந்தா! என் உயிரை இனாமாக எடுத்துக்கொள்!' என்று இல்லாமல், தானாக, தற்செயலாக நடந்தவையாக்கும்!" என்று திருப்பினாள் அவள்.

"இனாமாக உயிரை அளிப்பதா? அதுவும், இப்படி ஒரு ரதியை மணந்து, பக்கத்தில் வைத்துக் கொண்டா?" என்று கேட்டவாறு, மனைவியின் தோளைப் பற்றி, அவளை ஏற இறங்கப் பார்த்தான் சியாமளன்.

"கீறல் விழுந்த பழைய காலத்துக் கிராமஃபோன் ரிக்கார்டு மாதிரியான இந்தப் பேச்சை இத்தோடு விட்டேன், காஞ்சி. நமது இன்றைய அரைகுறை உறவில், நாம் இருவருமே அவரவர் கருத்தையே விடாமல் சொல்லிக் கொண்டிருப்போமே தவிர, ஒரு மனதாய்

எதையும் சிந்திப்பது கடினம்! நாம் இருவரும் காதலித்து மணந்த கணவன், மனைவி, கண்ணம்மா. அதை மட்டுமே இப்போது நினைப்போமேடா! மற்றப் பிரச்சினைகளைக் கொஞ்ச காலம் கழித்து... அப்புறமாக யோசிக்கலாம்!''

பட்டாய்க் குழைந்த குரலின் மென்மையோடு, அவனது விரல்களும் அவளது முகத்தையும் கழுத்தையும் வருட, காஞ்சனியும் ஒரு கணம் மயங்கி நின்றாள்.

ஆனால், உடனேயே விலகி, ''என்னை உங்கள் அடிமையாக்கி, உங்கள் பேச்சை நான் ஒத்துக் கொள்ளும்படி பேசி முடிக்க எண்ணம்! அதுதானே? நான் ஒன்றும் அவ்வளவு முட்டாள் அல்ல. ரேசை விடுவதாக முடிவு செய்து விட்டு, என்னைத் தொடுங்கள்!'' என்றாள், பிடிவாதமான குரலில்.

அவனும் நெருப்பைத் தொட்டவன் போலக் கையை உதறிக் கொண்டு விலகினான்.

''கணவன் மனைவி கூட்டுறவில், யாரும் யாருக்கும் அடிமை ஆவதில்லை. நான் சொல்வது என்றேனும் உனக்குப் புரிபட்டு, உன் அசட்டுப் பிடிவாதத்தைக் கைவிடுவதானால், சொல்லு. அப்போது இது பற்றி, மேற்கொண்டு நாம் பேசுவோம்! அதுவரை...'' என்று, சலிப்புடன் கூடிய ஒரு கையசைவுடன் பேச்சை முடிக்காமல் முடித்தவன், அதன் பிறகு, தனிமையில், அவள் இருக்கும் பக்கம்கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை.

காஞ்சனியும் கிட்டத்தட்ட அதே நிலையில்தான் இருந்தாள்.

கெஞ்சி, கொஞ்சி, ஆதாரப் பூர்வமாக வாதாடி, எதுவும் பலனின்றிப் போனதில் அவளுக்கும் ஆத்திரம் கலந்த அலுப்புதான்.



அந்த எரிச்சலில், அவளும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அலுப்பும் சலிப்புமாக இருந்த இந்த நிலையில், மஞ்சு வீட்டுக்கு, விருந்துக்குச் செல்வதுகூடக் காஞ்சனிக்கு ஒரு சுமை போலத்தான் இருந்தது.

அங்கே நாள் முழுவதும் சிரித்துப் பேசி, மகிழ்ச்சியோடு இருப்பது போல நடித்தாக வேண்டுமே!

அதுவும், கணவனோடு நல்ல உறவோடு இருப்பதாக வேறு நாடகமாட வேண்டும்.

ஆனால், திருமணமாகி இத்தனை நாட்களும் எப்படியெப்படியோ போய்விட, முதல் முறையாக விருந்துக்கென்று, நல்ல மனமுள்ள நாத்தனார் உண்மையான அன்போடு அழைக்கும்போது, மறுப்பதும் முடியாத காரியம்.

எப்படியோ, தையல் வேலைகளைத் தொடங்கி விட்டதால், பகலில் ஓர் எட்டு மணி நேரம், இந்த மன உளைச்சலில் இருந்து அவளுக்கு விடுதலை கிடைத்தது.

ஆனால், அப்போதும்கூடக் கணவனை எப்படித் திருத்துவது என்ற யோசனை குறுக்கிடத் தொடங்க, அங்கேயும் காஞ்சனியின் மனம் சலித்தது.

இந்நிலையில், அவளுக்கு ஓர் அதிர்ச்சி நேர்ந்தது.

அந்த அதிர்ச்சியின் பயனாக, அவளது உள்ளம் பற்றி எரிந்தபோதும், கூடவே, கணவனை வழிக்குக் கொண்டு வர ஓர் ஐடியாவும் தோன்றிவிட, அவள் பிடிவாதமாக அதைப் பற்றலானாள்.



## 24

காஞ்சனியுடைய மாமனார் ஞானப்பிரகாசம், தொழிற்சாலை, தொழில் தொடர்பான கூட்டங்கள் என்று வெளி வேலைகளில் நேரத்தைச் செலவிட, மாமியார் யசோதையின் பொழுது பல்வேறு தரும, சமூக சேவைகளில் கழிந்தது.

இருவருமே சோம்பியிருந்து, காஞ்சனி பார்த்ததில்லை!

மருமகளும் தனித்து ஒரு தொழிலை நடத்துவதைச் சிணுக்கமின்றி ஏற்க வைத்தது, இந்தத் தன்மைதானோ என்று அவ்வப்போது காஞ்சனி எண்ணுவதுண்டு.

சியாமளன் சென்னையில் இருக்கும்போது, தொழிற்சாலைப் பொறுப்பை அவன் முழுமையாக ஏற்றுக் கொள்ள, கிளப், நண்பர்கள் கூட்டம் என்று, தந்தை சற்று இலகுவாகச் சுற்றுவார். அப்போதும் சும்மா உட்கார்ந்திருப்பது இல்லை.

பெரியவர்கள் இருவரும் வெளியே சென்றுவிட்ட ஒரு நாள், கோயிலுக்குச் சென்று விட்டு, வேலைக்குப் போகலாம் என்று ஒரு சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டு காஞ்சனி கீழே வந்தால், சியாமளன் ஹாலில் இருந்தான்.

கேள்வியாய் நோக்கியவளிடம், சிறு தயக்கத்துடன் அவன் விவரம் சொன்னான்.

டிவி சேனல் ஒன்றுக்காகச் சியாமளனைப் பேட்டி காண வருகிறார்களாம்!

கார் ரேசிங் விஷயமான பேட்டி என்றபோது, அதுவரை ஒன்றும் தெரிவியாத அவனது தயக்கத்தின் காரணம் அவளுக்குப் புரிந்தது.



ஆனால், பேட்டி என்றால், பாதகமானவை பற்றியும் கேட்பார்கள்தானே? இதில், அவளுக்குச் சாதகமாக ஏதேனும் கிடைக்கலாமே!

திலகாவிடம் சற்றுத் தாமதமாக வருவதாகத் தெரிவித்துவிட்டு, வருகிறவர்களை விருந்தோம்பும் சாக்கில், காஞ்சனியும் அவனோடு வீட்டில் இருந்தாள்.

கார் ரேஸ் என்றதும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போகாமல், மனைவி கூட அமர்ந்தது சியாமளனுக்குப் பிடித்தது போலும்.

வியந்து நோக்கியபோதும், காத்திருக்கும் நேரத்தில் அவன் மகிழ்ச்சியுடனேயே அவளோடு உரையாட, அவளும் அதே உணர்வுடன் பேச்சில் கலந்து கொண்டாள்.

ஒருவரோடு ஒருவர் சும்மா பேசிக் கொண்டிருப்பதுகூட, முதலில் இருந்தே இருவருக்கும் சந்தோஷம் தருவதுதானே! இதைக்கூட இயல்பாக அனுபவிக்க முடியாமல் ஆகிவிட்டதே!

தன் வருத்தத்தைக் காட்டிக் கொள்ளாமல், தோட்டத்தில் புதிதாகக் கூடு கட்டிக் குஞ்சு பொரித்திருக்கும் ஒரு தேன்சிட்டு ஜோடி பற்றி அவள் சொல்ல, அவன் அவற்றின் முன்னோடிகளின் கதையைக் கூற, இருவரும் சுவாரசியமாக உரையாடிக் கொண்டிருக்கையில், படப்பிடிப்புக் குழு வந்து சேர்ந்தது.

காஞ்சனியைச் சீற்றமுற வைத்தது, சியாமளனைப் படம் எடுக்க வந்த படப்பிடிப்புக் குழுவில், அவர்களுக்குத் தலைவி போல வந்த ஒரு பெண். அவளது நடவடிக்கை.

அவளுக்கு, அங்கே காஞ்சனி என்ற ஒருத்தி இருந்ததே கண்ணில் படவில்லை, மனைவி என்று சியாமளன் அறிமுகம் செய்ததைக் காதிலும் வாங்கிக் கொள்ளவில்லை.

"புகைப்படங்களில் பார்ப்பதை விட, ரொம்ப ஸ்மார்ட்டாக இருக்கிறீர்களே, ஷ்யாம்!" என்று தோளில் தட்டிப் பாராட்டோடு தொடங்கியவள், இன்னொரு தடவை ஷேவ் செய்ய வேண்டுமா என்று, அவனது கன்னங்களை வருடிப் பார்த்தாள்.

ஏதோ விளம்பரம் நினைவு வர, காஞ்சனி ஏளனமாகப் பார்க்கையில், சட்டையைச் சரி செய்துவிடும் சாக்கில், சியாமளனின் தோளைத் தடவினாள்.

இப்படி உட்காருங்கள். அப்படித் திரும்பிப் பாருங்கள். எல்லாம் அவனைத் தொட்டுத்தான், அவளால் சொல்ல முடிந்தது.

அவனை நெருங்கி அமர்ந்து, அவள் காமிராவுக்குப் போஸ் கொடுத்தது, அதையும்விட, அவனுக்குப் போஸ் கொடுத்த விதம், காஞ்சனியை எரிய வைத்தது.

தாலி கட்டிய கணவனே என்றபோதும், அவள்கூடக் கணவனுக்கு இப்படி யெல்லாம் தன்னைக் காட்டிக் கொண்டது இல்லை.

இவனும், தூரப் போடி என்று அந்தக் கழுதையைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாமல் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறானே!

இப்படி எத்தனை வந்து விழுகிறதோ? அதனால் தான், மனைவியின் தேவை பெரிதாகத் தோன்ற வில்லையோ என்று எண்ணும்போது, அவளுக்கு எரிந்தது.



ஆனால், தானாக எதுவும் சொன்னால், பாமரத் தனமாகத் தோன்றி விடுமோ என்ற தயக்கத்தில், காஞ்சனி வாயை இறுக மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

தொடர்ந்து, இரு கைகளாலும், அவன் முகத்தைப் பிடித்து, இப்புறம், அப்புறமாகத் திருப்பிப் பார்த்து விட்டு, "நீங்கள் சினிமாவில் நடிக்க வந்தால், அப்புறம் நீங்கள்தான் நம்பர் ஒன்! வருகிறீர்களா, ஷ்யாம்? நான் நாயகி. படம் பிய்த்துக் கொண்டு போகும். நாலைந்து திரைப்படத் தயாரிப்பாளர்களை எனக்குத் தெரியும். ஏற்பாடு பண்ணட்டுமா?" என்று கொஞ்சும் குரலில் ஆவலாகக் கேட்டாள் அந்தப் பெண்.

உனக்கு ஆள் தெரிவதற்கு என்னடி என்று காஞ்சனி உள்ளூரப் பொரும, "நீங்கள் ஹாலிவுட்டில் நடிக்க வேண்டியவர். குறைந்தது, பாலிவுட்டுக்காவது போக வேண்டும்! அதை விட்டு, இங்கே கோலிவுட் போதும் என்கிறீர்களே! நியாயமா?" என்று சியாமளன் கேட்கவும், என்னவோ பிரமாதமான 'விட்'டைக் கேட்டு விட்ட மாதிரி, விழுந்து விழுந்து சிரிக்கிற பாவனையில், அவன் தோளில் சரிந்து, வயிற்றில் குத்தினாள் அவள்.

அதற்கு மேல் தாங்க மாட்டாமல் எழுந்து, காஞ்சனி உள்ளே சென்றாள்.

படப்பிடிப்புக் குழு எப்போது சென்றதோ!

வெளியே செல்லத் தயாராவதற்காகச் சியாமளன் மாடிக்கு வந்தபோது, மேலும் ஒரு மணி நேரத்துக்குக் கூடுதலாகவே ஆகியிருந்தது.

அவளைப் பார்த்ததும், "பாதியிலேயே வந்து விட்டாயே, போரடித்துப் போயிற்றா?" என்று, ஒன்றுமே

நடவாதது போல அவன் கேட்கவும், ரஞ்சனிக்குக் கோபம் பொங்கிப் பொத்துக் கொண்டு வந்தது.

முடிந்தவரை அதை அடக்கி, "பேட்டி என்றதும், உங்கள் ஆசை உயிர்கொல்லிப் பொழுதுபோக்கு பற்றிய கண்ணியமான கேள்வி பதிலாக இருக்கும் என்று நினைத்தேன்! ஆனால்..." என்று தோளைக் குலுக்கி உச்சுக் கொட்டினாள் அவள்.

"ஆனால்..? கண்ணியம் இல்லாமல் அங்கே என்ன நடந்துவிட்டது?"

"அவள் பெயரென்ன, மேனாவோ, மோனாவோ, அந்தப் பெண் நடந்து கொண்ட விதத்தைக் கண்ணியம் என்று, நீங்கள்கூடச் சொல்ல மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்!" என்றபோது, அவள் குரலில் ஏளனம் தெறித்தது.

இப்போது, அவன் தோளைக் குலுக்கினான். "அது என்னம்மா, நான் கூட? புரியவில்லையே! பொதுவாக இது போன்ற பேட்டிகளில், கூச்சம், தயக்கம் போவதற்காக, முதலில் சற்றுத் தாராளமாகப் பேசிப் பழகுவது இயல்பே. உனக்கு அது பிடிக்கவில்லை என்றால் தடுத்து நிறுத்துவதுதானே?"

"எப்படி, எப்படித் தடுப்பது? அவள் தலைமுடியைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துப் போய்த் தூரத் தள்ளுவதா?" என்று ஆத்திரத்துடன் குரலை உயர்த்திக் கேட்டாள் காஞ்சனி.

"அந்த மாதிரிக் கற்கால நடவடிக்கைகள் எதுவும் தேவையில்லை! ஆனால், எங்கோ உட்கார்ந்து பொருமிக் கொண்டிராமல், நீ என் அருகில் இருந்திருக்கலாமே!



என் மனைவி என்னோடு சேர்ந்திருந்தால், வேறே யார் என்னை நெருங்க முடியும்?"

வார்த்தைகளை மீறி அவன் பார்வை ஏதோ சொன்னது. அவர்கள் இருவருக்கும் உறவு நன்றாக இருந்திருந்தால், இன்னொருத்தி அவனோடு எப்படிப் பழகினாலும், அவளுக்குத் தவறாகத் தோன்றியிராது என்கிறான்.

அப்படி உறவைக் கெடுத்துக் கொண்டதும் அவள் தானாம்! அவனுக்கு நல்லதைச் சொன்னால், அதை ஏற்காததோடு, அவளையே குற்றவாளி ஆக்குகிறானா?

சினம் மீதூர, "பக்கத்தில் இருந்தால் மட்டும் போதுமா? இப்படி.. இப்படி.. இப்படி யெல்லாம் தொட்டும் தடவியும் காட்டியிருக்க வேண்டுமா?" என்று, அந்த மேனாவைப் போலவே, அவளும் அவனை நெருங்கி நின்று, தொட்டுத் தடவிக் காட்டினாள்.

சொல்வதை வலியுறுத்துவதற்காகச் சற்று அழுத்தமாகவே அவள் தொட்டுத் தடவ, அவன் இறுகினான்.

சியாமளனின் வலிவும் வனப்புமான தசைக் கோளங்களை வருடுகையில், அவளுக்கே உள்ளூர நோவுதான்.

இந்தத் தோளில் விருப்பம் போலச் சாய முடியவில்லையே!

ஆனால் இந்த ஏக்கத்தினூடே, அவனது உடல் சிலிர்த்துக் கல்லாய் இறுகுவதை விரல்கள் உணர்ந்தபோது, காஞ்சனி திகைத்து, அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

ஒரு வினாடிதான்.

அவன் முகத்தில் என்ன இருந்தது என்று அவன் சரியாகப் புரிந்து கொள்ளும் முன்பாகவே, தோளில்

இருந்த அவளது கையைத் தட்டி விட்டுவிட்டுச் சியாமளன் வெளியே செல்லத் தொடங்கிவிட்டான். "இரவு வர நேரமாகும், சாப்பிட்டுவிட்டுத் தூங்கு!"

அந்த மோனா தொடுகையில், முறுவல் மாறாமல் பேசிக் கொண்டிருந்தவனுக்கு, இப்போது என்ன ஆயிற்று?

நிற்கமாட்டாமல் கால்கள் வெலவெலக்க, அப்படியே தரையில் சரிந்து அமர்ந்து யோசித்த காஞ்சனிக்குச் சட்டென விஷயம் புரிந்தது.

எந்த மோனாவும் மேனாவும் எப்படித் தொட்டாலும், சியாமளனுக்கு ஒன்றும் இல்லை. ஆனால், அவனுடைய மனைவியின் தொடுகைக்கு, அவனிடம் பெரும் பாதிப்பு இருந்தது.

மணமானதில் இருந்து நடந்த பல்வேறு நிகழ்ச்சிகள் நினைவு வந்து, அதை உறுதிப்படுத்தின.

இரண்டாம் முறை மகாபலிபுரம் சென்றபோது, காரை நிறுத்தி, விலகி உட்காரச் சொன்னான். அந்தக் குரல், பிறகும்...

காஞ்சனிக்கு ஆயுதம் கிடைத்துவிட்டது.

ஆனால், அது இருபுறம் தீட்டிய கூர் ஆயுதம்.

நெஞ்சு படபடக்க யோசித்தபோது, காஞ்சனிக்குக் கொஞ்சம் பயமாகக்கூட இருந்தது. அவளது முயற்சி நேர் எதிர் பலனைத் தந்து விட்டால்? அவனுக்குப் பதிலாக, அவள் சரணாகதி ஆகிவிட்டால்? அப்புறம், காஞ்சனி வாழ்க்கை முழுவதையும், கவலையும் பயமுமாக அல்லவா கழிக்க நேரும்?



அப்படி நடக்காது என்று நிச்சயமாகச் சொல்வதற்கும் இல்லை.

அவளைப் போலவே, அவனுக்கும், அவளைப் பாதிக்கும் சக்தி நிச்சயமாக உண்டு.

மற்றப்படி, இப்போது நிற்கக்கூட மாட்டாமல் கால்கள் வலுவிழந்து, அவள் தரையில் உட்கார்ந்திருக்கத் தேவை கிடையாது.

ஆனால் ஒன்று, கணவன் மனைவிக்கிடையே உள்ள இயற்கை ரசாயனம் இருவருக்கும் சமமாகவே இருந்த போதும், சியாமளனின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் நேராமல் காப்பாற்ற வேண்டும் என்கிற வேகம் - வெறி என்றுகூடச் சொல்லலாம் - அது, அதிகப்படி ஆயுதமாக, அவளுக்கு மட்டுமே இருந்தது.

அந்த ஆயுதம், மற்ற எதையும் வெற்றி கொள்ளும் என்ற நம்பிக்கையோடு காஞ்சனி தன் போரைத் தொடங்கினாள்.



**த**ன் போரைத் தொடங்குவதற்கு உகந்த நாளாக, மஞ்சுவின் வீட்டு விருந்துக்குச் செல்லும் நாளைக் காஞ்சனி தேர்ந்தெடுத்தாள்.

ஏனெனில், மஞ்சுளாவும் மனோகரனும் மிகவும் ஒட்டுதலான தம்பதியர். விலகி இருக்கையில் இருவர் பேச்சிலும், அடுத்தவர் பெயர் வந்து கொண்டே இருக்கும். ஒரே இடத்தில் இருந்தாலோ, அருகருகேதான் நிற்பார்கள். உட்காருவார்கள். இதில் கூச்ச நாச்சம் பார்ப்பதே கிடையாது. அதே சமயம்

அதிகப்படியாகவும் தெரியாது. ரொம்ப இயல்பாக இருக்கும்.

அதே நெருக்கத்தைப் புதுமணம் புரிந்து கொண்ட ஜோடியிடம் நாத்தனார் நிச்சயமாக எதிர்பார்ப்பாளே, அவளுக்கேற்ப இல்லாததை இருப்பதாகக் காட்டி நடிக்க நேருமே, அது வேதனையாக இருக்குமே என்றெல்லாம் எண்ணித்தான், அங்கே செல்லக் காஞ்சனி தயங்கியதே!

ஆனால், அதுவே, இப்போது அவளுக்குச் சாதக மாகத் தோன்றியது.

அவள் எண்ணி அஞ்சிய துன்பங்கள் எல்லாம், சியாமளனுக்கும் நேரும் என்பது இப்போது தெளிவு. பாதிப்பைப் பல மடங்கு அதிகப்படுத்தவும் கூடும்தான்.

'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பதுபோல, அன்று அதிகாலையிலேயே, திலகாவுடைய தம்பி பூபாலன், தனக்காகச் சியாமளன் நண்பனிடம் பேசிக் குறைந்த வாடகையில் ஏற்பாடு செய்து தந்த புது இடத்துக்காக நன்றி சொல்ல வந்தான்.

காலை நடை முடிந்து, சியாமளன் காஃபி அருந்திக் கொண்டிருந்த வேளை.

"இவ்வளவு காலம், அடுத்தவர் இடத்தில், அவருக் குக் கீழே வேலை செய்து கொண்டு இருந்தேன். எவ் வளவு உழைத்தபோதும், கைக்கு வந்தது, ரொம்பவும் சொற்பம்தான். இப்போது இந்த இடத்துக்கு வாடகை கொடுத்தாலும், உழைப்புக்குச் சரியாகக் கைக்குப் பணம் வரும்! மேலும், இந்த இடம் எனக்குப் போதுமானது என்பதோடு, உங்கள் புண்ணியத்தில், வாடகையும் குறைவு! காயிலைச் சுற்றிக் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டிய இடமும் பக்கத்திலேயே இருக்கிறது. இன் னொரு பெரிய உதவி, காஞ்சனி அக்கா பக்கத்தில் இருப்பதால், நேரடியாக எதுவும் சொல்லி விடுவார் களோ என்ற பயத்தில், அப்பாவின் தொல்லையும் அதிகம் இராது!" என்று, சாதகங்களை வரிசையாக அடுக்கித், தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துவிட்டுப் போனான், பூபாலன்.



வாய்ப்பை விடலாமா?

தோழியுடைய தம்பிக்கு உதவி செய்ததற்காகத் தன் நன்றியைக் காஞ்சனியும், ஒரு மனைவியின் தாராளத் தோடு தெரிவித்துக் கொண்டாள்.

"இனிமேல், திலகா கொஞ்சமேனும் நிம்மதியாக இருப்பாள். ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்ப்பா!" என்று மகிழ்ச்சியோடு கிசுகிசுத்தவள், கணவன் தோளில் கை வைத்து எம்பி, அவன் தாடையில் லேசாக இதழ் பதித்தாள்.

நன்றி உணர்ச்சியின் வேகம் விரைவிலே தணிந்து, அவளாக விலகுவாள் என்று கல்லாய் நின்ற சியாமளன் எதிர்பார்த்தான் போலும்.

ஆனால், அவள் அவனது தோளில் சாய்ந்தபடியே பேசத் தொடங்கவும், தானே அவளை விலக்கி நிறுத்திவிட்டுக் குளிக்கப் போனான்.

கணவனின் கைகளில் விதிர்விதிர்ப்பை உணர்ந்த காஞ்சனிக்கு உற்சாகமாக இருந்தது.

அதே வழியில், இன்னோர் அடி எடுத்து வைக்க எண்ணி, அன்று அணிவதற்காக எடுத்து வைத்திருந்த

கழுத்தாரத்தின் கொக்கியை நன்றாகக் கடித்து, இறுக்கி விட்டு, அதை எடுத்துக் கொண்டாள்.

மனதை மயக்கும் பர்ஃப்யூமை உடம்பில் அடித்துக் கொண்டு, உடை மாற்றி வந்த சியாமளனிடம் சென்று, "இதைக் கொஞ்சம் அணிவித்து விடுகிறீர்களா? என்னால் முடியவில்லை!" என்று உதவி கேட்டாள்.

அணிகலனை வாங்கி, அவள் கழுத்தில் அணிவிக்கப் போனவன், கவனித்து, "கொக்கி இறுகி இருக்கிறதே, தளர்த்தி விட்டுக் கொண்டு போடு. இலகுவாக இருக்கும்." என்று, ஆரத்தை அவளிடமே நீட்டினான்.

"இடையில் கழன்று விழுந்து விடக் கூடாதே என்று தானே, இப்படி இறுக்கி வைப்பதே! தளர்த்திவிடச் சொல்லுகிறீர்களே! மறுபடி இறுக்குவது எப்படி? இப்போதானால், நானாக அணிவதுதான் சிரமம். நீங்கள், கொக்கியின் வாய்ப் பகுதியில், அடுத்த முனையின் கண்ணியை வைத்துச் சற்று அழுத்தமாக இழுத்தீர்களானால், இலகுவாக மாட்டிக் கொள்ளும், கழன்று விழுந்து விடாது என்ற நிம்மதியோடு இருக்கலாம். என்ன?"

அருகே தெரிந்த கழுத்துச் சரிவும், கன்னச் செழுமையும், பூசியிருந்த வாசனையும், சியாமளனை என்ன பாடு படுத்தும் என்று நன்றாக உணர்ந்திருந்ததால், கணவனின் தொடு உணர்ச்சியால் ஏற்பட்ட தனது தவிப்பைக் காஞ்சனியால் பொறுமையோடு ஏற்க முடிந்தது.

புது மண மக்களுக்கு விருந்து என்றபோதும், குடும்பத்தினர் எல்லோருமாகத்தான் மஞ்சுவின் வீட்டுக்குச் சென்றனர்.



குழந்தை அபியுடன் விளையாடுவதில் சிறிது நேரம் கழிந்தது.

உணவு முடிந்ததும் பெரியவர்கள் சற்று நேரம் ஓய்வெடுக்க, ஃப்ரூட் சாலடைச் சுவைத்தபடி, இளையவர்கள் கேலியும் கிண்டலுமாகப் பேசிக் கொண்டு இருந்தனர்.

காஞ்சனி ஆவலும் குறுகுறுப்புமாக எதிர்பார்த்த நேரம்.

எதிர் சோஃபாவில், அருகருகே அமர்ந்தபடி, பேச்சினூடே, ஏதாவது பராக்குக் காட்டிவிட்டு, மனைவிக்குத் தெரியாமல், அவளது சாலட் கலவையில் கொஞ்சத்தை மனோகரன் அபேஸ் செய்வதும், நடந்ததை ஊகித்து, அவனது கிண்ணத்தையே ஒளித்து வைத்துவிட்டு, "என்னதான் ருசியாக இருந்தாலும் கிண்ணத்தோடேயா விழுங்குவது?" என்று மஞ்சு வியப்பதுமாக, அவர்களுக்குள் ஒரு தனி விளையாட்டு நடந்து கொண்டே இருந்தது.

இடையே தலையை நீட்டி, "உங்களதை அம்மா இங்கே ஒளித்து வைத்திருக்கிறாப்பா! இந்தாங்க!" என்று அபி கன சிரத்தையாக எடுத்துக் கொடுக்கவும், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்ட பெற்றோருக்குச் சிரிப்புப் பொங்கியது.

எதிரில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தவர்களும் முறுவலித்தனர்!

புன்னகையோடு, "உங்களுக்கு இன்னும் கொஞ்சம்..." என்றபடி, நடுவில் கிடந்த டீபாயில் இருந்த செல்லோவைத் திறந்து, சியாமளனின் கிண்ணத்தில் ஒரு

கரண்டி சாலடை எடுத்து வைத்த காஞ்சனி, கணவனை ஒட்டி அமர்ந்தாள்.

அப்புறம், இங்கே, அங்கே திரும்பும் போதெல்லாம் உரசித்தானே ஆக வேண்டும்?

''என்ன சியாமளன், திருமணமாகி மூன்று மாதங்கள் ஆகிவிட்டன, நல்ல செய்தி எதுவும் காதில் விழக் காணோமே?'' என்று, மகளின் மூக்கைச் செல்லமாகப் பிடித்து ஆட்டியவாறே, மைத்துனனிடம் மனோகரன் வினவினான்.

இயல்பான கேள்விதான்.

ஆனால், கணவனை வசப்படுத்துவதையே நினைத்துக் கொண்டிருந்த காஞ்சனி, இதை எதிர்பாராததால், சட் டெனத் திகைத்து விழித்தாள்.

''என்ன அண்ணி, அப்படி விழிக்கிறாய்? கல்யாணம் ஆனால், பிள்ளை, குட்டி எல்லாம் பிறக்கத்தான் செய்யு மாக்கும்! இதோ பார்க்கிறீர்களே, இந்த அபிக் குட்டியைப்போல!'' என்று மஞ்சு முறுவலித்தாள்.

ஏற்றாற்போல என்ன சொல்வது என்று தெரியாமல் காஞ்சனி திணறுகையில், ''ஓகோ! இதுதான் குட்டியா?'' என்று தங்கை மகளைத் தன்புறம் இழுத்துக் கொண்டான் சியாமளன். ''குட்டி போக இன்னொன்று... ஏதோ பிள்ளை என்று சொன்னாயே, அதையும் பெற்று முடி! அதற்கப்புறமாக, நிதானமாக எங்கள் முயற்சியை நாங்கள் தொடங்குகிறோம்!'' என்று அபிக் குட்டியின் தலையில் முத்தமிட்டு, அவளைத் தூக்கித் தனக்கும் மனைவிக்கும் இடையே உட்காரவைத்துக் கொண்டான்.



''அடடா! பொறுப்பை எங்கள் பக்கம் தள்ளி விட்டாயே, மைத்துனா! ஆனாலும், பொறுப்பு என்று வந்துவிட்டால், பின் வாங்குகிறவன் நான் அல்ல! என்னம்மா, நீ என்ன சொல்கிறாய்?'' என்று மனைவி யிடம் சாதுவாய் அபிப்பிராயம் கேட்டான் மனோகரன்.

சிரிப்போடு, முகச் சிவப்பையும் சேர்த்துச் சமாளித் தவாறு, ''ஆகா! வழிகிறது! இப்போது, புது மணமக்கள் அவர்கள்தான்! கேலியும் அவர்களைத்தான் செய்ய வேண்டும் என்பது நினைவிருக்கட்டும்!'' என்று, கணவனுக்கு எடுத்துச் சொன்னாள் மஞ்சுளா.

''அடடே, ஆமாமில்லை? மறந்தே போனேனே! எல்லாம் உன் தப்பு! புதுப் பெண் மாதிரி, எப்போதும், இப்படி அழகாகவே இருந்தால், திருமணமாகி ஐந்தாறு ஆண்டுகள் ஆன அறுதப் பழசுகள் நாம் என்பது, எனக்கு எப்படி நினைவு வரும். சொல்லு?'' என்று அவளிடம் மனோகரன் ரொம்பவும் சீரியசாகக் கேட்க, எல்லோருமே நகைக்கலாயினர்.

மற்றவர்களோடு சேர்ந்து சிரித்தாலும், காஞ்சனியின் நெஞ்சு குன்றிக் குமைந்து கொண்டிருந்தது.

தங்கை மகளை மடி மீது வைப்பான். அவளைக் கொஞ்சு கிற சாக்கில், கணவனுக்கு இன்னும் கொஞ்சம் சூடேற்ற லாம் என்று ஆவலோடு காத்திருந்தாள் காஞ்சனி.

ஆனால், மற்றவருக்குத் தெரியாமல், மனைவி செய்த முயற்சியைப் புரிந்து கொண்ட சியாமளன், இருவருக் கும் இடையில் சிறுமியை அமர வைத்து, யாரும் அறி யாமலே, அதற்கு ஒரு முற்றுப் புள்ளியும் வைத்து விட்டான்.

முகத்தில் அடித்த மாதிரி என்று எண்ணிச் சோர்வுறும் போதே, உள்ளூர ஒரு நம்பிக்கையும் உருவாயிற்று.

அவளது முயற்சிகளைத் தடுக்க வேண்டும் என்று சியாமளன் முனைந்ததே, பாதிப்புத் தாங்காமல்தானே! இன்னும் எவ்வளவு தாங்குவான், பார்க்கலாம்!

எந்நேரமும் அபியைக் கேடயமாகப் பயன்படுத்த முடியாதல்லவா? அதே சமயம், தங்கை வீட்டில் ஒரே யடியாக ஒதுங்கிப் போகவும், சியாமளனால் முடிய வில்லை.

சில சந்தர்ப்பங்களைக் காஞ்சனி பயன்படுத்திக் கொண்ட முறை, அவனுக்குத் தாபத்தோடு, குழப்பத்தையும் தந்தது போலும்.

மடியில் இருந்த ஃபோட்டோ ஆல்பத்தில் எதையோ பார்க்கிற சாக்கில், அவனோடு ஒட்டிக் கிடந்த மனைவி யின் காதில், ''என்ன விஷயம் காஞ்சனி? சரணாகதி என்றால், நம் வீட்டில் வைத்துக் கொள்ளலாமே!'' என்றான் சன்னக் குரலில்.

இந்தக் கேள்வியையும், ஓரளவு எதிர்பார்த்திருந்ததால், ''நிபந்தனை உங்களுக்குத்தானே? சரணாகதியோ, மற் றதோ, முடிவும் உங்களதுதான்!'' என்றுவிட்டு, அவனது கழுத்து வளைவில் முகம் சரித்து, ''இது யார் என்று சொல்லவில்லையே!'' என்று ஆல்பத்தைக் காட்டிக் கேட்டாள் அவள்.

சியாமளனின் பற்கள் நறநறத்த சத்தம் அவளுக்கு மட்டுமே கேட்க, காஞ்சனியின் உள்ளம் துள்ளியது.

வீடு திரும்பிய பிறகும், காஞ்சனி தன் முயற்சியை நிறுத்துவதாக இல்லை.



மஞ்சு வீட்டுக்கு அணிந்து சென்ற சேலையிலிருந்து, நைட்டிக்கு மாறிய பின், கழுத்தணியைக் கழற்றி விடு மாறு, கணவனிடம் போய் நின்றாள்.

அவளை ஏளனமும், கோபமுமாக நோக்கியவன், “இந்த மாதிரி நடந்து கொள்கிற பெண்களுக்கு வேறொரு பெயர் சொல்வார்கள்!'' என்றான் அருவருப்புடன்.

என்ன தைரியம் என்று ஆத்திரம் வந்தது அவளுக்கு.

''எண்ணித் துணிக கரும'த்தைத் திரும்பத் திரும்பச் சொல்வீர்களே! உங்கள் வள்ளுவரே, கணவனிடம் இப்படியும் நடந்து கொள்ள வேண்டும் என்று, லைசன்ஸ் கொடுத்திருக்கிறார், தெரியுமா? ஏன் சியாம், என்ன விஷயம்? விசுவாமித்திரர் ஆகி விடுவோமோ என்று பயமாக இருக்கிறதா?'' என்று பதிலுக்குச் சீண்டினாள் அவள்.

''இல்லை! வளர்ந்த விதம், கோட்பாடுகளை எல்லாம் கைவிட்டு, ராவணன் ஆகிவிடுவேனோ என்கிற அச்சம் தான்!'' என்றவன், சட்டென அவனது தனியறைக்குள் சென்று, கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

அவ்வளவு நேரம் கொண்டு செலுத்திய திடம் வடிந்து விட, சோர்வுடன் ஓர் இருக்கையில் விழுந்தாள் காஞ்சனி.

என்னவோ, கிலோமீட்டர் கணக்கில் மாரத்தான் ஓடி முடித்த களைப்பு.

இது எத்தனை நாள் தாங்கும்? கடைசியில், அவள் தான் தோற்கப் போகிறாளா?

ஆனால், அவள் ஆசைப்பட்டது, அஞ்சியது எதுவும் நடக்க வழியின்றி, மறுநாளே, சியாமளன் வெளியூர் சென்று விட்டான். ''உனக்குப் புத்தி வரும்போது

சொல்லு, திரும்பி வருகிறேன்,'' என்று மட்டும் சொல்லி விட்டு!

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்கள் ஆன போதும், அவன் சென்னைக்குத் திரும்பி வரவே இல்லை.

ஹிமாலயன் ராலி, கிராஸ் கன்ட்ரி ரேஸ் என்று ஒவ்வொரு ரேசிலும் கலந்து கொண்டு, அவன் வெளி யூரிலேயே சுற்றிக் கொண்டிருக்க, ஒவ்வொரு நாளும் காஞ்சனி தவியாய்த் தவித்தாள்.

இந்த நிலையில், மஞ்சு ஒரு நாள் வீட்டுக்கு வந்தாள்.



**26**

**கா**ஞ்சியின் புகுந்த வீடு, மஞ்சுவின் தாய் வீடே!

உள்ளூரிலேயே வசிக்கும் மஞ்சுளா, தன் பிறந்த வீட்டுக்கு அவ்வப்போது வந்து சீராடி விட்டுப் போவது, குறிப்பிடுவதற்கு உரிய பெரிய விஷயம் அல்ல.

ஆனால், அவள் அன்று வந்தது, அவளுடைய தாயார் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து வந்தாள். அது மட்டுமின்றி, வேலை முடிந்து, காஞ்சனி வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டதைத் தெரிந்து கொண்டும் வந்தாள்.

''அந்தப் பக்கம் வரப் போகிறேன், அண்ணி. அப் படியே, உன்னையும் பார்த்துப் பேசிவிட்டுப் போகலாம் என்று நினைத்தேன்,'' என்று அவள் சொன்ன வார்த்தை கள் சாதாரணமாக இருந்தபோதும், உள்ளூரச் சிறு கலக்கத்துடன்தான், நாத்தனாரின் வரவைக் காஞ்சனி எதிர்நோக்கினாள்.



அவளுடைய கணவனுக்கு, இந்த மாதிரி வீட்டைத் துறந்து வாழ்வது பிடிக்காமல், தங்கையிடம் கடுமையாக ஏதேனும் சொல்லி அனுப்பியிருப்பானோ என்று அவள் மனம் கலங்கியது.

ஆனால் பிரியம் மிகுந்த தங்கையே ஆனாலும், தங்களுக்கிடையே உள்ளதைச் சியாமளன் அவ்வளவு இலகுவாகச் சொல்லிவிட மாட்டான் என்ற நம்பிக்கை யும் லேசாக இருக்க, இரு வகை எண்ணங்களுக்கும் இடையே ஊடாடியபடியே, காஞ்சனி தன் நாத்தனாரை வரவேற்றாள்.

''உங்களுக்குப் பிடிக்குமே என்று, தயார்ப் பண்ணி வைத்தேன்!'' என்று, அண்ணன் மனைவி தந்த அன் னாசிச் சாறை அருந்தியவாறு, தன் தோழிகளுக்குக் காஞ் சனி செய்து தந்த சில சேலை, சுரிதார் வேலைப்பாடுகள் பற்றிப் பாராட்டி, மஞ்சு கொஞ்ச நேரம் பேசினாள்.

நந்தகுமாரின் உடல்நிலை பற்றிக் கேட்கவும் தவற வில்லை.

ஆனால், வேலைக்காரி வந்து, காலித் தம்ளரை எடுத் துப் போனதுமே, ''உனக்கும் அண்ணனுக்கும் என்ன, அண்ணி?'' என்று நேரடியாகக் கேட்டுவிட்டாள்.

அவள் கேட்பது புரியாதது போன்ற பாவனையில் பேசக் காஞ்சனி வாயெடுக்கும்போதே, ''ஒன்றும் இல்லை என்று மட்டும் சொல்லாதே, அண்ணி! ஏதோ இருக்கிறது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். பொதுவாக, அண்ணன் இப்படிக் கிராஸ் கன்ட்ரி ரேஸ், ஹிமாலயன் ராலி போன்ற நீண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது இல்லை. அத்தோடு, இத்தனை நாட்கள்...

கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் தொடர்ந்து வீட்டுக்கு வராமல் இருந்ததும் இல்லை, இடையிடையே வந்து பொறுப்பேற்றுக் கொள்ளாமல், அப்பாவே தொடர்ந்து வேலையைப் பார்க்கவும் விடமாட்டார். இப்போதும், அப்பாவோடு எந்த வித உரசலும் இல்லை என்று எனக்குத் தெரியும். பின்னே, என்ன? யோசித்துப் பார்த்தபோது, அன்று எங்கள் வீட்டுக்கு வந்தபோதே, அப்போது நீங்கள் இருவரும் நடந்து கொண்ட விதத்திலேயே, அவ்வப்போது எனக்குச் சின்னக் குழப் பங்கள் இருந்தன. ஆனால், பெரிதாக எண்ணவில்...'' என்று வேகமாகச் சொல்லிக் கொண்டு போனவளை இடையிட்டு, "என்ன விதம்? என்ன குழப்பம்?'' என்று வினவினாள் காஞ்சனி.

"எத்தனையோ, அண்ணி! குழந்தை என்றதும், ஏதோ நடக்கவே முடியாததைக் கேட்டது போல, நீ விழித் தாயே! யோசிக்க யோசிக்க எப்படி உறுத்தியது, தெரி யுமா? அப்புறம், அபிக்குட்டியை உங்கள் இருவருக்கும் இடையே அண்ணன் உட்கார வைத்தது! அப்போது நீ அண்ணனைப் பார்த்த பார்வை... எதையுமே, அப் போது நான் பெரிதாக எண்ணவில்லை, அண்ணி! எவ் வளவுதான் ஒட்டி உறவாடினாலும், கணவன், மனை விக்கு இடையே, சிலசில உரசல்கள் நேராமல் இருப்பது இல்லை. இப்போதுகூட, இதில் நான் தலையிடக் கூடாது என்று, மனோ என்னை அதட்டி உருட்டிக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால், அதற்காக, என் அண்ணன், அண்ணிக்கு இடையே பிரச்சினை என்றால், நான் சும்மா இருப்பேனா? நீ சொல்லு, அண்ணி. என்ன விஷயம்?'' என்று அழுத்தமான குரலில் மீண்டும் கேட்டாள் மஞ்சுளா.



கணவனிடம் கூட, மஞ்சு இந்தக் குரலைத்தான் பயன்படுத்திவிட்டு வந்திருப்பாள் என்று, காஞ்சனிக்குத் தோன்றியது.

இந்தக் குரலுக்குப் பதில் தராதிருக்க முடியாது. ஆனால்...

"உங்கள் அண்ணனைக் கேட்டீர்களா?'' என்றாள், மெல்லிய குரலில்.

"விடுவேனா? உன் அண்ணியிடம் கேள். பெண் ணுக்குப் பெண்ணாக, உனக்கேனும் ஏதேனும் புரிகிறதா என்று பார் என்றார். அண்ணன் உன்னை எவ்வளவு ஆசைப்பட்டு மணந்தார் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் இருவரும் நன்றாக இருக்க வேண்டும் என்பது தான் என் நோக்கம் என்ற நம்பிக்கை உனக்கு இருந்தால், மறைக்காமல் சொல்லு, அண்ணி!''

மற்றவர்கள் எல்லோரும் சும்மா இருந்தபோது, சியா மளனையும், அவளையும் மீண்டும் மகாபலிபுரத்துக்கு அனுப்பி வைத்தது, மஞ்சுதான் என்பது, காஞ்சனி அறிந்ததே.

அத்தோடு, அவன் சொன்னது போலப் பெண்ணுக்குப் பெண்ணாக, இவளுக்காவது காஞ்சனியின் மனம் புரியக் கூடும்.

அதற்குமேல், நாத்தனாரிடம் எதையும் மறைக்காமல் காஞ்சனி சொல்லலானாள்.

அணு அணுவாகச் சில அந்தரங்கங்களை நுண்மை யாக விளக்காவிடினும், மொத்தச் சித்திரத்தை முழுவது மாக அவள் முன் வைத்தாள்.

குறுக்கிடாமல் கேட்டு முடித்த மஞ்சு, ஒரு பெருமூச்சு விட்டு, ''உன்னைப் புத்திசாலி என்று எண்ணினேனே, அண்ணி!'' என்று வருத்தத்துடன் கூறினாள்.

அப்படியானால், இப்போது முட்டாளாகி விட்டாளாமா?

காஞ்சனி அதிர்ந்து நோக்கவும், ''உன் பயம் முட்டாள்தனம் என்று சொல்லவில்லை. அண்ணி! ஆனால், அதை அண்ணனும் அப்படியே ஒத்துக் கொள்ள வேண்டும் என்று, நீ எப்படி எதிர்பார்க்கலாம்? ஒரே விஷயத்தைப் பத்துப் பேர் பத்து விதமாகப் பார்க்கலாம், அண்ணி. முதலிலேயே, நீ இப்படித் தடாலடியாக எடுத்தேன் கவிழ்த்தேன் என்று இல்லாமல், அண்ணனிடம் சற்று கொஞ்சம் நீக்குப் போக்காக நடந்து, நிலைமையைப் புரிய வைத்திருக்கலாம் என்று சொன்னேன்!'' என்று மஞ்சு விளக்கவும், காஞ்சனிக்கு இப்போது ஆத்திரம் வந்தது.

அவளுடைய அண்ணனைப் போலவே, கிட்டத்தட்ட அதே வார்த்தைகளையே பேசுகிறாளே! அதற்கும் மேலே நீக்காம், போக்காம்!

''ஏன் அண்ணி, பெண்கள் மட்டும்தான் நீக்குப் போக்காக நடந்து கொள்ள வேண்டுமா? அதை உங்கள் அண்ணனும் செய்யலாமில்லையா?'' என்றாள் எரிச்சலோடு.

அண்ணன் மனைவியை ஆழப் பார்த்தாள் மஞ்சுளா.

''நான் அண்ணன் சார்பாகப் பேசுவதாக எண்ணிவிட்டாயா, அண்ணி? அப்படியல்ல. எனக்கு நீங்கள் இருவருமே வருத்தமின்றி வாழ வேண்டும். அவ்வளவு



தான். அதற்காகத்தான் சொன்னேன். ஒன்றில் ஒருவர் பிடிவாதமாக இருக்கும்போது, நாமும் எதிர் நிலையிலேயே அசையாமல் நிற்பதில் என்ன லாபம்? அப்போதைக்கு விட்டுவிட்டு, இன்னொரு வழியில் முயற்சிக்கலாமே! உதாரணத்துக்கு... மனோ வகைச் சொந்தக்காரப் பெண் ஒருத்தி உண்டு. அவளுடைய கணவனின் சொந்த ஊருக்குத் திருமணமானபின் முதல் முறையாக அழைத்துச் சென்றிருந்தபோது, அவருடைய தாயார், தமக்கையோடு சேர்ந்து, பனை மட்டையிலிருந்து, நார் கிழிக்கச் சொன்னார்களாம்! நான் படித்தவள், இந்த மாதிரிப் பட்டிக்காட்டு வேலையெல்லாம் நான் செய்ய மாட்டேன் என்று அவள் மறுத்திருக்கிறாள். அங்கே இருக்கப் போவது, நாலே நாட்கள். பட்டிக்காட்டு வேலையோ, இல்லையோ, அதைச் செய்து கொண்டிருந்தது கணவருடைய தாயும், தமக்கையும். பேசாமல், கூடச் சேர்ந்து செய்துவிட்டுப் போயிருக்கலாம். அல்லது, செய்கிற மாதிரித் தொடங்கிவிட்டுக் கையில் கத்தியோ, பனைக்கருக்கோ கிழித்து விட்டதாகக் காட்டி விட்டால், அதற்கு மேல், அவளை யார் செய்யச் சொல்லப் போகிறார்கள்? பேச்சுக்கு மேல் பேச்சு வளர்ந்து, இப்போது இருவரும் பிரிந்தே விட்டார்கள். தேவையில்லையே, அண்ணி! கொஞ்சம் பொறுமை! கொஞ்சம் கெட்டிக்காரத்தனம்! அது போதுமே! பெண்களுக்குக் கடவுள் எத்தனையோ சக்திகளைக் கொடுத்திருக்கிறார். வயிற்றில் தன் பிள்ளையைத் தாங்கியபடி, மனைவி கேட்பதை மறுக்க, நல்ல ஆண்களுக்கு மனம் வராது. மனோவுக்குக் காய்கறியே பிடிக்காது! உடம்பு ஆரோக்கியத்துக்கு எவ்வளவு தேவை என்று எத்தனை

மேற்கோள் காட்டி எடுத்துச் சொன்னாலும், 'பிடிக்காது. ப்ளீஸ் விட்டுவிடு!' என்பார். கடைசியில், அவரை எப்படிக் காய்கறி சாப்பிட வைத்தேன் என்கிறாய்? இப்படித்தான்!''

மஞ்சுவின் அடி மனதில் எப்போதும் கணவன் நினைவே இருக்கும் போலும்! இந்த நேரத்தில்கூட, ஏதோ ஒரு வகையில் அவன் பேச்சு வந்துவிட்டதே என்று நினைத்தாள் காஞ்சனி.

ஆனால், அவளும்தான் வேறு எப்படி இருக்கிறாள்? சதா சியாமளன் நினைவுதானே?

பயமும், கவலையும் கோபமுமாகவே என்றாலும், எப்படியும், எல்லாமே அவன்தானே?

ஆத்திரம் மறைய, ''நான் ஏன் இவ்வளவு பிடிவாத மாக இருக்கிறேன் என்று உங்களுக்கும் புரிய வில்லையா? அவர் உயிரோடு திரும்பி வருவாரா, இல்லையா என்கிற நிச்சயம் இல்லாமல், அவரை வழியனுப்பி வைத்துவிட்டுக் காத்திருக்க என்னால் முடியாது! அப்படி ஒன்றும் ஆகாது என்று, அவரைப் போலவே, நீங்களும் சொல்லாதீர்கள். ரேஸ் ரேஸ் என்று செய்தியில் அவர் பெயரைக் கேட்கக் கேட்க, தினமும், நான் எப்படித் தவித்துத் துடித்துக் கொண் டிருக்கிறேன், தெரியுமா?'' என்றபோது, காஞ்சனியின் குரல் தழதழத்தது.

இரக்கத்துடன் நோக்கினாள் மஞ்சுளா. பிறகு, ''அம்மா வுக்கு... எனக்கு... எங்களுக்கெல்லாம் பயம் இல்லாமல் இருந்தது என்றா அண்ணி, நினைக்கிறாய்? அப்பா



வுக்கும் கூட நிறைய இருந்தது அண்ணன். எங்களை நேரில் கூட்டிப் போய்க் காட்டினார். பாதுகாப்புக்காக அவர்கள் என்னென்ன செய்திருக்கிறார்கள், எவ்வளவு கட்டுப்பாட்டுடன் ஓட்டுகிறார்கள் என்பதையெல்லாம் நேரில் பார்த்த பிறகு, கவலையும், பயமும் குறைந்து போயிற்று. நீயும் போய்ப் பார் அண்ணி. உனக்கும்...'' என்றவள், காஞ்சனியின் நம்பிக்கையற்ற முகத்தைப் பார்த்து விட்டு, ''உனக்கு நம்பிக்கை வருகிறதோ, இல்லையோ, நல்ல தீர்வுக்காக ஓர் எட்டு எடுத்து வைக் கிறாய் என்கிற எண்ணம் அண்ணனுக்கு வரட்டுமே!'' என்று அவள் சொன்னபோது, அது சரிதானோ என்று காஞ்சனிக்கும் தோன்றியது.

இதுவரை, அவள் செய்த முயற்சிகள், சியாமளனின் பார்வையில், அவளைத் தரம் தாழ்த்திக் காட்டினவே தவிரப் பலனேதும் தரவில்லை. அதன் காரணமாகவே தானோ, என்னவோ, இளகலே இல்லாமல், அவன் இரு மடங்கு இறுகிவிட்ட நிலைதான். பிரச்சினையும், இரு மடங்கு பெரிதாகிவிட்ட மாதிரிதான்.

ஆனால், மஞ்சுவின் யோசனைப்படி, அவனை நோக்கி அவள் ஓர் எட்டு எடுத்து வைத்தால், அவளை நோக்கி, அவனும் வருவதுதானே, நியாயம், நாகரீகம்? தனக்காகத் தன் வழி வந்து பார்க்கிறாளே என்று, அவன் இளகவும் கூடுமே.

அந்த இளக்கத்தில், அவள் பக்கமாக, அவன் திரும்பியும் வரலாம்.

மஞ்சுளா இன்னொன்றும் சொன்னாள். ''உங்கள் திருமணத்துக்கு, கார் ரேஸ் வட்டாரத்திலிருந்து, நிறையப்

பேர் வந்திருந்தார்கள். இதுவரை, நீ அண்ணனோடு சேர்ந்து செல்லாததே பெரிய கிசுகிசுவாக இருக்கும். அண்ணன் குழுவின் அடுத்த ரேஸ், இங்கே சென்னைப் பக்கம் நடக்கப் போகிறது. அப்போதுகூட நீ போகா விட்டால், நன்றாக இராது, அண்ணி.''

அவளது வரவை மற்றவர்கள் எதிர்பார்த்ததாக, முன்பு ஒரு தரம் சியாமளன் சொன்னது காஞ்சனிக்கு நினைவு வந்தது.

வெளி மாநிலங்களிலேயே அப்படி என்றால், இங்கே எவ்வளவு தூரம் எதிர்பார்ப்பார்கள்! போகாவிட்டால், அவனுக்கு எவ்வளவு தலை குனிவாக இருக்கும்!

படட்டும் என்று அலட்சியப்படுத்த, அவளால் முடிய வில்லை!

அத்தோடு, ரேஸ் நடக்கும் இடத்துக்குப் போவதா லேயே, அவள் எல்லாவற்றுக்கும் தலையாட்டி விட்ட தாக இல்லையே!

அங்கே செல்வதுமே, அவளுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். 'விர் விர்'ரென்ற சத்தத்துடன் கார்கள் கிளம் பிச் செல்லும்போது, எந்தக் கார், கணவனை எப்படி இடித்துவிடுமோ என்று, நடுக்கமாகத்தான் இருக்கும்!

இருந்தாலும், கணவனின் கௌரவம் காப்பதற்காக வும், அவனுடைய தங்கை சொல்வதுபோலச் சியா மளனின் பக்கமாக ஓரடி எடுத்து வைப்பதற்காகக் காட்டிக் கொள்வதற்காகவும் மட்டுமே, ரேஸ் நடக்கும் இடத்துக்குப் போய்ப் பார்ப்பதற்குக் காஞ்சனி சம் மதித்தாள்.



காஞ்சனியின் சம்மதத்தை அறிந்த சியாமளன், முடிந்த அளவு விரைவாகத் திரும்பி வந்தான்.

மனைவியின் கைகளைப் பற்றி, விரல்களில் முத்த மிட்டு நன்றி சொன்னான்.

கண்ணில் ஒளியுடன், ''இனி, நம் வாழ்வு நன்றாகி விடும். பார்...!'' என்றான் குதூகலக் குரலில்.

அவள் ஐயத்துடன் நோக்கினாள்.

27



என்னவோ, கார் ரேஸ் நடக்கும் இடத் துக்கு, ரேசை நேரில் பார்க்க வருவதாக அவள் சொன்னதாலேயே, தங்களுக்கிடையே உள்ள பிரச்சினை முழுசாகத் தீர்ந்துவிடப் போவது போலச் சியாமளன் நடந்து கொண்ட விதம், காஞ்சனிக்குக் கொஞ்சமும் புரியவில்லை.

அதெப்படித் தீரும்?

டிவியில் எத்தனை முறை பார்க்கவில்லை?

'கர் புர்' என்று வண்டுகளாய்க் கார்கள் வேகம் எடுப்பதும், வேகம் குறையாமலே இங்கும் அங்குமாக நெளிந்து, மற்ற கார்களை முந்த முயற்சிப்பதும், அவள் காணாத புதுமை அல்லவே!

முன்பு, ஏதோ ஒரு போட்டி என்று சாதாரணமாகப் பார்த்தது. நந்துவின் விபத்துக்குப் பிறகு, கவலையும் பயமுமாக, அரைகுறையாகக் கவனித்து ஒதுங்குவது!

இதில், இப்போதென்ன வேறுபாடு வந்துவிடும்?

ஒருவேளை, அவனுடைய தாயையும், தங்கையையும் இலகுவாகச் சமாளித்தது போல எண்ணி விட்டானா?

பேர் வந்திருந்தார்கள். இதுவரை, நீ அண்ணனோடு சேர்ந்து செல்லாததே பெரிய கிசுகிசுவாக இருக்கும். அண்ணன் குழுவின் அடுத்த ரேஸ், இங்கே சென்னைப் பக்கம் நடக்கப் போகிறது. அப்போதுகூட நீ போகா விட்டால், நன்றாக இராது, அண்ணி.''

அவளது வரவை மற்றவர்கள் எதிர்பார்த்ததாக, முன்பு ஒரு தரம் சியாமளன் சொன்னது காஞ்சனிக்கு நினைவு வந்தது.

வெளி மாநிலங்களிலேயே அப்படி என்றால், இங்கே எவ்வளவு தூரம் எதிர்பார்ப்பார்கள்! போகாவிட்டால், அவனுக்கு எவ்வளவு தலை குனிவாக இருக்கும்!

பட்டும் என்று அலட்சியப்படுத்த, அவளால் முடியவில்லை!

அத்தோடு, ரேஸ் நடக்கும் இடத்துக்குப் போவதாலேயே, அவள் எல்லாவற்றுக்கும் தலையாட்டி விட்டதாக இல்லையே!

அங்கே செல்வதுமே, அவளுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். 'விர் விர்'ரென்ற சத்தத்துடன் கார்கள் கிளம்பிச் செல்லும்போது, எந்தக் கார், கணவனை எப்படி இடித்துவிடுமோ என்று, நடுக்கமாகத்தான் இருக்கும்!

இருந்தாலும், கணவனின் கௌரவம் காப்பதற்காகவும், அவனுடைய தங்கை சொல்வதுபோலச் சியாமளனின் பக்கமாக ஓரடி எடுத்து வைப்பதற்காகக் காட்டிக் கொள்வதற்காகவும் மட்டுமே, ரேஸ் நடக்கும் இடத்துக்குப் போய்ப் பார்ப்பதற்குக் காஞ்சனி சம்மதித்தாள்.



காஞ்சனியின் சம்மதத்தை அறிந்த சியாமளன், முடிந்த அளவு விரைவாகத் திரும்பி வந்தான்.

மனைவியின் கைகளைப் பற்றி, விரல்களில் முத்தமிட்டு நன்றி சொன்னான்.

கண்ணில் ஒளியுடன், ''இனி, நம் வாழ்வு நன்றாகி விடும். பார்...!'' என்றான் குதூகலக் குரலில்.

அவள் ஐயத்துடன் நோக்கினாள்.

27



என்னவோ, கார் ரேஸ் நடக்கும் இடத்துக்கு, ரேசை நேரில் பார்க்க வருவதாக அவள் சொன்னதாலேயே, தங்களுக்கிடையே உள்ள பிரச்சினை முழுசாகத் தீர்ந்துவிடப் போவது போலச் சியாமளன் நடந்து கொண்ட விதம், காஞ்சனிக்குக் கொஞ்சமும் புரியவில்லை.

அதெப்படித் தீரும்?

டிவியில் எத்தனை முறை பார்க்கவில்லை?

'கர் புர்' என்று வண்டுகளாய்க் கார்கள் வேகம் எடுப்பதும், வேகம் குறையாமலே இங்கும் அங்குமாக நெளிந்து, மற்ற கார்களை முந்த முயற்சிப்பதும், அவள் காணாத புதுமை அல்லவே!

முன்பு, ஏதோ ஒரு போட்டி என்று சாதாரணமாகப் பார்த்தது. நந்துவின் விபத்துக்குப் பிறகு, கவலையும் பயமுமாக, அரைகுறையாகக் கவனித்து ஒதுங்குவது!

இதில், இப்போதென்ன வேறுபாடு வந்துவிடும்?

ஒருவேளை, அவனுடைய தாயையும், தங்கையையும் இலகுவாகச் சமாளித்தது போல எண்ணி விட்டானா?

மஞ்சுவுக்கு, அண்ணன் சொல் வேதம். யசோதைக்கோ, அவருடைய பிள்ளை, கோகுலத்துக் கண்ணன்தான்! பிள்ளைக்குத் தெரியாதது இல்லை. வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளா விட்டாலும், மகனுக்கு ஈடும் கிடையாது, இணையும் கிடையாது என்பதே மாமி யாரின் கருத்து என்பது, காஞ்சனி அறியாதது இல்லை.

ஆனால், இந்த மாதிரிக் கண்ணை மூடிக்கொள்ளக் காஞ்சனியால் முடியாதே!

அவள் 'மனைவி' அல்லவா?

எனவே, சற்றும் நம்பிக்கை இன்றி, ரேஸ் நாளை எண் ணிக் கலங்கியபடியே, நாட்களைக் கடத்திக் கொண் டிருந்தாள் காஞ்சனி.

இந்நிலையில், மாதவனும், லலிதாவும் ஒரு நாள், காஞ்சனியைப் பார்க்க வந்தார்கள்.

பிரியமாக வரவேற்கும் போதே, ''தம்பிக்கு ஒன்றும் இல்லையேப்பா?'' என்று, மகள் கவலையோடு கேட்க வும், மாதவன் முறுவலித்தார்.

''நீ இப்படி முகத்தை வைத்துக் கொண்டு கேட்கும் அளவுக்கு எதுவுமே இல்லை! ஆனால், எப்போதும் போலச் சாதாரணமாக நடமாட முடிந்ததும், பைக், ரேஸ் என்று உன் தம்பி குதிக்கத் தொடங்கிவிட்டான். ஒரு காலில், மிகமிக லேசானதாக, ஒரு சின்னப் பலவீனம் இருப்பதாக, எங்களுக்கு எண்ணம். டாக்டரும் அதை ஒத்துக் கொள்கிறார். நாளாவட்டத்தில் அந்தத் தசைகள் பலம் பெற்றதும், சரியாகிப் போகுமாம். அதுவரை சும்மாயிரு என்றால், வீட்டில் முடிவற்ற வாதப்



பிரதிவாதங்கள்தான் மிஞ்சும். பேசாமல், இந்தச் சூழ் நிலையை விட்டு விலகி ஓர் இரண்டு மாதம் ஊர்ப் பக்கம் போய் இருந்துவிட்டு வரலாமா என்று யோசனை. நான் அநாவசியமாய் லீவு எடுக்கிறவன் இல்லை என்பதால், மேலிடமும் ஒத்துக் கொண்டு விட்டார்கள். உங்கள் இரண்டு பேருக்குமே, நம் ஊர் பிடிக்குமே! கேட்டால், அவனும் மறுக்கவில்லை. அதுதான், உன் னிடம் விவரத்தைச் சொல்ல வந்தோம்!'' என்றார் மாதவன்.

''நந்துவுக்கு அடி பட்டு, ஐந்து மாதங்கள் ஆகிறதில்லை யாப்பா? எவ்வளவு நாள்!'' என்று சொல்லும்போதே, தன் வாழ்விலும் பிரச்சினை மிகுந்த ஐந்து மாதங்கள் கழிந்திருக்கின்றன என்று காஞ்சனி எண்ணினாள்.

ஊரின் பசிய வயல் வரப்புகளின் மேல் நடப்பது, கேணி, வாய்க்கால் நீர் எல்லாவற்றையும் நினைக்கையில் இந்தப் பிரச்சினைகளில் இருந்து விலகி, தானும் அங்கே ஓடிவிடலாமா என்று தோன்றியது.

ஆனால், எங்கே போனாலும், இந்த மனது கூடவே தானே வரும். பிறகு, எங்கே போய் என்ன பயன்?

அத்தோடு, வருவதாக வாயைத் திறந்தால்கூட, என்ன என்ன என்று எல்லோரும் குழம்பிப் போவார்கள்.

அவள் வாயைத் திறவாததே சரி என்பது போல, மகளை ஆர்வமாகப் பார்த்து, ''ஆனால், ஏதேனும் நல்ல சேதி என்றால், தம்பிக்காகத் தயங்காமல், உடனே சொல்லும்மா. அம்மா, அடுத்த ரயிலில், வந்துவிடு வேன்!'' என்று லலிதா ஆசையாகக் கூறவும், நல்ல வேளை சும்மா இருந்தேன் என்று காஞ்சனி எண்ணிக் கொண்டாள்.

யசோதை, இப்படி வெளிப்படையாகப் பேசுவது இல்லை என்றபோதும், அவ்வப்போது கண்களில் ஆர்வம் தெரியும்.

திருமணம் ஒன்று நடந்தாலே, எல்லோருக்கும், இதே எண்ணம்தான் போலும் என்று உள்ளூர அலுத்துக் கொண்டாலும், ஆல்பத்திலிருந்த குட்டி சியாமளனைப் போன்ற குழந்தை ஒன்று மடியில் கிடப்பது போன்ற கற்பனையில், காஞ்சனியின் உடல் சிலிர்க்கத்தான் செய்தது.

இதன் விளைவாக, மனதில் ஓர் இளக்கத்துடன்தான், காஞ்சனி, சியாமளனுடன் ரேஸ் கோர்சுக்குச் சென்றாள்.

மஞ்சு சொன்னதுபோல, நம்பிக்கைக்கு இடம் இருந்தால், அதை ஏற்க, முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும். ஆனால், அப்படி எதுவும் இருப்பதற்கு இல்லையே என்பதுதான், இப்போது அவளது கவலை.

இளம் பச்சையில், ஆரஞ்சு வண்ண வேலைப்பாட்டுடன் கூடிய சுரிதார் செட், பொருத்தமான அணிமணிகளோடு, உடன் வந்தவளைப் பெருமையோடு தன் சகாக்களுக்குச் சியாமளன் அறிமுகப்படுத்தினான்.

எல்லோருமே, அவளுடன் கலகலப்பாகவே பழகினர்.

''சியாம் மனைவியை அழைத்து வரவே காணோமே என்று பேசுவோம். காரணம் இப்போது புரிகிறது. மனைவி இவ்வளவு அழகாக இருந்தால், அடுத்தவர் கண்ணில் காட்ட எப்படி மனம் வரும்?'' ஒருவர் சியாமளனைக் கிண்டலாகக் குற்றம் சாட்டவும், காஞ்சனிக்கு ஒரு மாதிரி இருந்தது.

இந்த விஷயத்தில், அவளுடைய கணவன் மேல் தப்பே கிடையாதே! அவளது பிடிவாதத்துக்கு அவன் பழி ஏற்பதா?



அவளைக் காட்டிக் கொடுக்காமல், சியாமளன் பேசாது புன்னகை செய்யவும். ''அவருக்குக் கூட்டிவர ஆசை தான். ஆனால், என் தம்பி விபத்தில் மாட்டி, அப்படி இப்படி என்று, நாங்கள் எங்குமே சேர்ந்து போக முடியாமல் போயிற்று!'' என்று அவசரமாக விளக்கம் சொன்னாள்.

அதற்கும், ''அடேங்கப்பா! என்னமா வக்காலத்து வாங்குகிறார்கள், பாருங்கள்! சியாம் லக்கிப்பா!'' என்ற மாதிரியில், கேலிதான் கேட்டது.

ஆனால், அதற்கு மேல், வேறென்ன சொல்வது என்கிற பாவனையில் அவள் பார்த்தபோது, 'விட்டுவிடு' என்பது போல லேசாகத் தலையசைத்துச் சியாமளன் சிரித்தது, மற்ற எதையும் மறக்க வைத்தது.

முதல் ரேசில் சியாமளன் கலந்து கொள்ளவில்லை.

அந்த நேரத்தில், மனைவியை அழைத்துச் சென்று, பல்வேறு எச்சரிக்கை நடவடிக்கைகளை, அவளுக்குக் காட்டி விளக்கினான், அவன்.

காரைச் சிறப்பாகப் பேணி வைத்திருப்பது, கார்கள் ஓடும் பாதையின் சம சீர்த் தயாரிப்பு, கட்டுப்பாடு இழந்தாலும், கடினமான எதிலும் மோதாதிருக்க வகை செய்திருப்பது, ரேஸ் தொடக்கத்தின்போது, கார்களை நிறுத்தும் விதம்...

''ஊன்றி ஆராய்ந்தால், வெற்றிக்கு உதவி செய்வதைக் காட்டிலும், ஓட்டுகிறவரைக் காப்பதில்தான் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பது, உனக்குப் புரிகிறது அல்லவா? நீ நினைப்பது போல, உனக்குத் திறமை இருந்தால், எப்படியோ ஓட்டி ஜெயித்துக் கொள்

என்று விடுவதில்லை, காஞ்சி! இன்னும், நான் ஓட்டு கிறபோது பார்த்தாயானால், உன் பயம் அடியோடு போய்விடும்!'' என்று சியாமளனின் குரல் காதருகில் சொல்லச் சொல்ல, அப்படித்தானோ என்று ஒரு சிறு சந்தேகம் காஞ்சனிக்கும் தோன்றலாயிற்று.

வசதியான ஓர் இடத்தில் காஞ்சனியை உட்கார வைத்துவிட்டு, அடுத்து வரும் தனது பந்தயத்துக்காகச் சியாமளன் உடையணியச் சென்றான்.

வயிற்றினுள் பந்தாய்த் திரண்ட கலக்கத்தை அடக்க முயன்றபடி அமர்ந்திருந்த காஞ்சனியின் அருகில் அமர்ந்து, ''மிசஸ் சியாமளன், உங்களுக்கு ஏதாவது தேவை என்றால் என்னிடம் சொல்லுங்கள். கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன்,'' என்றாள் ஒருத்தி.

அவளது குரலில் இருந்த ஆவலில், தன்னை மீறி முறுவலித்து, ''என்ன கொண்டு வரச் சொல்லுவீர்கள்...?'' என்று இழுத்தாள் காஞ்சனி.

''நந்தா! வெறும் நந்தா என்றே கூப்பிடுங்கள், போதும். நான் இங்கே பணி புரிகிறவள். பொதுவான பணி. தேவைக்கேற்ப, பணி மாறும்! குடிப்பதற்கும் கொறிப்பதற்கும் பலது இருக்கிறது!'' என்றபடி, மைதானத்தில் கார்கள் வந்து நிற்பதை ஆவலாகக் கவனித்தாள், நந்தா.

அவளது பெயர் தம்பியை நினைவூட்ட, அவளை நன்றாகப் பார்த்தாள் காஞ்சனி. வெடுவெடுவென்று, ஒல்லியாக இருந்தாள். சிரித்த முகமே என்றாலும், ஏதோ ஒரு வெறுமை தெரிந்தது.



''இப்போது ஒன்றும் தேவையில்லை. தேவைப்பட்டால் பிறகு பார்ப்போம்!'' என்றுவிட்டு, ''தேவைக் கேற்பப் பணி மாறும் என்றீர்களே, அது என்ன பணி?'' என்று வியப்புடன் வினவினாள் காஞ்சனி.

''இன்ன பணி என்று பெரிதாகப் பெயர் ஒன்றும் கிடையாது, மிசஸ் சியாமளன். சும்மா, தேவைக்கு உதவுவது. இதுபோல, உண்ண, அருந்த ஏதாவது கொண்டு வந்து கொடுப்பது. உங்களைப் போலப் பெண்கள் புதிதாக வந்தால், எங்கே என்ன என்று விவரம் கொடுப்பது. இது என்ன வேலை என்று வியப்பாக இருக்கிறதா? ஆதரவற்று நிற்கிறேனே என்று பரிதாபப்பட்டுக் கொடுத்த வேலை. முடிந்த அளவு உழைத்து, அதைத் தக்க வைத்துக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த இடத்தை விட்டு என்னால் போக முடியாது!'' என்று, தயாராக நின்ற கார்களைப் பார்த்தாள் நந்தா.

அடுத்த பந்தயம் தொடங்கப் போவதாக அறிவித்தார்கள்.

கலக்கத்தை மறைக்கும் முயற்சியில் காஞ்சனி வேறு பக்கம் பார்க்க, நந்தாவின் கண்களில் ஆவல் பளபளப்பு ஏறிற்று.

அவளுக்குத் தலை சுற்றி, உலகம் சுழன்றது.

ஆனால், ''ஆகா! இதை விட்டு, என்னால் எப்படி வாழ முடியும்?'' என்றாள் நந்தா ரசனையோடு.

''நந்தா!'' என்று குரல் கேட்க, ''ச்சு! இப்போது பார்த்துக் கூப்பிடுகிறார்களே!'' என்று சலித்துக் கொண்ட போதும், எழுந்து சென்று, சொன்ன வேலையைச் செய்துவிட்டு வந்தாள் அவள்.

கையோடு, இரு சிறு குளிர்பான பாட்டில்கள்.

''அங்கே கொடுத்துவிட்டு, அப்படியே நமக்கும் எடுத்து வந்தேன். சின்ன பாட்டில்தான். குடியுங்கள்!'' என்று, கொடுத்துவிட்டு, கைப்பையில் இருந்த பைனாகுலரை எடுத்துத் தூரப் போய்விட்ட கார்களைப் பார்த்தாள்.

''வைத்யா இருந்தபோது, பாயின்ட், பாயின்ட்டாக, ஒவ்வோர் இடமாகக் காரில் ஏறிச் சுற்றிச் சுற்றிப் போய்ப் பார்ப்பேன்!''

வயிற்றுக்குள் பிசைய, ''வைத்யா?'' என்று கேட்டாள் காஞ்சனி.

இருந்த போதா என்று தொடர்ந்தது மனம்.

அப்படியானால், அந்த வெறுமையின் பொருள்...

''ம்ம், என் கணவர், போய் நாலு வருஷம் ஆகிறது!'' என்று உறுதிப்படுத்தினாள், நந்தா. ''எல்லோருமே, ஓரளவு எதிர்பார்த்ததுதான். ரேஸ் என்று காரைத் தொட்டுவிட்டால், என் வைத்யாவுக்குக் கண் மூடித்தனமான வேகம் வந்துவிடும். விபத்தாகிவிட்டது. இதே சர்க்யூட்தான் அவருக்கும். வீட்டை எதிர்த்துக் காதல் கல்யாணம் செய்து கொண்டு வந்தவள், நான். அங்கே திரும்பிப் போக முடியாது என்று புரிந்து, எனக்கும் வேலை கொடுத்து, மகளையும் படிக்க வைக்கிறார்கள். இங்கே எல்லோருக்குமே ரொம்ப நல்ல குணம். ஆனால், நான் சர்க்யூட்டோடு ஊர் ஊராகப் போக வேண்டி இருப்பதால், அப்போதிருந்தே மின்னிக்கு ஹாஸ்டல்தான்! இப்போது லீவுக்கு வந்திருக்கிறாள். அதோ!'' என்று மகளைச் சுட்டிக் காட்டினாள் நந்தா.



அவள் சொல்லி வந்த பயங்கரக் கதைக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல, அவள் காட்டிய திசையில், எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி, சிப்ஸ் பாக்கெட் ஒன்றைக் கையில் இருந்த கூடையிலிருந்து எடுத்து, பார்வையாளராக வந்திருந்த யாருக்கோ கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''இங்கே வந்தாலே எனக்கு உதவி பண்ணுவேன் என்று இப்படிக் கூடையைத் தூக்கிக் கொண்டு...''

சிறுமியின் முகம் திடுமென அறிமுகமானதாய் மாறியது போன்ற உணர்வு காஞ்சனிக்கு.

மேலே நந்தா பேசுமுன், காஞ்சனி அருந்தியிருந்த இரண்டு மிடறு குளிர்பானமும், எகிறிக் கொண்டு, மேலே வர, வாயைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து ஓடினாள் அவள்.

''என்ன மிசஸ் சியாமளன், என்ன?'' என்று பதறியவாறே, நந்தாவும் கூட ஓடி வந்தாள்.

வாந்தியெடுக்கும் உணர்வு மட்டுப் பட்டதும், ''எனக்கு ஒரே தலைவலி! வீட்டுக்குப் போகிறேன். கேட்டால், சொல்லிவிடுங்கள்!'' என்றவளுக்கு நெஞ்சு பதைத்தது.

கேட்டால் என்று வாயில் வந்ததே!

உயிரோடு திரும்பி வந்து கேட்பானா?

போதும்! போதும்! கடவுளே, போதும்! இந்தப் பயம் இனித் தாங்க முடியாது!

அவளுக்கு முடிவு தெரிந்துவிட்டது.

''கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு...'' என்ற நந்தாவின் பேச்சைக் காதில் வாங்காமலே, அங்கே நின்ற ஒரு டாக்சியில் ஏறிக் காஞ்சனி கிளம்பிவிட்டாள்.

முதலில், அந்த இடத்தை விட்டு அகன்றாக வேண்டும்!

தூரத் தூர... வெகு தூரமாய்!

28



அன்று காஞ்சனி வீடு வந்து சேர்ந்தபோது, நல்ல வேளையாக வீட்டுப் பெரியவர்கள் யாரும் அங்கே இருக்கவில்லை.

இருவருமே, கணவன் மனைவிக்கிடையில் தலையிடுகிறவர்கள் இல்லை என்றாலும், மகனோடு சேர்ந்து சென்ற மருமகள் தனித்து, தவிப் போடு திரும்பியிருக்கிறாளே என்று தோன்றாதிராது.

தவிப்பை மறைப்பது, இப்போதைக்குக் காஞ்சனிக்குச் சாத்தியம் போலத் தோன்றவும் இல்லை.

ஏனெனில், அவள் எடுத்திருந்த முடிவு அத்தகையது.

சியாமளனைப் பிரிவது! ஒரேயடியாகப் பிரிந்தே போய் விடுவதுதான் நல்லது என்று, அவளுக்கு நிச்சயமாகத் தோன்றி விட்டது.

இன்றைய அளவில், உயிரையே பிரிவது போலப் பெரும் வேதனைதான்!

ஆனால், பக்கத்திலேயே இருந்து கொண்டு, சியாமளன் இன்றைக்கு ரேசுக்குப் போகிறான், இப்போது ஓட்டிக் கொண்டு இருப்பான்... எந்த நிமிஷம் விபத்து ஏற்படப் போகிறதோ என்று அவன் நல்லபடியாகத் திரும்பி வரும் வரை தவித்துக் கொண்டிருக்க, இனி அவளால் முடியாது.

பிரிவதும் துயரம்தான் என்றாலும், கணவன் எப்படி இருக்கிறானோ, என்ன சேதி வருமோ என்ற கவலை



எப்போதும் இருக்கத்தான் செய்யும் என்றாலும், மூச்சுக்கூட விட முடியாதது போன்ற இந்தத் தவிப்பு இராதல்லவா?

கணவன் திரும்பி வருமுன், கைக்கு அகப்பட்ட துணிமணிகளை எடுத்துக் கொண்டு, அவன் முகத்தைப் பாராமலே போய்விடலாமா என்று, கோழைத்தனமாக ஒரு யோசனை தோன்றியது.

ஆனால், இந்த வீட்டை விட்டுக் கிளம்புவது என்றால், காரண காரியங்களை அவனிடம் தெளிவாகத் தெரி வித்துவிட்டுப் போவதுதான் சரியான முறையாகும்.

அத்தோடு, இன்று அவன் உருப்படியாக வர வேண் டுமே! அது தெரியாமல் எப்படிப் போக முடியும்?

நெஞ்சில் தவிப்புடன் நிலையின்றி வளையவந்த காஞ் சனி, கணவனுக்காக அதிக நேரம் காத்திருக்க நேரவில்லை.

பந்தயம் முடிந்து ஒரு மணி நேரத்தில், அவனும் வீட்டில் இருந்தான்.

கார் வேகமாக வந்து நின்று, சியாமளன், வேகமாகப் படியேறி வருவதை, ஆறுதலும் வலியுமாகக் கவனித்துக் கொண்டு இருந்தவள், அவனது ஆத்திரத்தை எதிர் கொள்ளவும் தயாராகவே இருந்தாள்.

"இது என்ன பைத்தியக்காரத்தனம், காஞ்சீ? வென்ற வனை வாழ்த்திவிட்டு வரும் பண்பு கூட இல்லையா?" என்று அவன் சீறிய போது, "வெற்றியோ, தோல்வியோ, எனக்குப் பிடிக்கவில்லை!" என்று பதில் சொன்னாள் அவள்.

"என்ன பெரிய 'பிடிக்கவில்லை'? உன்னை மட்டும் தான் நினைப்பதா? வென்றுவிட்டு, ஆசையாக உன்னைத்

தேடி வந்தேனே, எனக்கு எப்படி இருக்கும்? அதை நினைத்தாயா? என்னையும் விடு. அங்கிருந்த மற்ற வர்கள் என்ன நினைப்பார்கள்? அந்த அளவேனும் யோசிக்க வேண்டாமா? அந்த மட்டும் ஒரு நல்ல காரியம் பண்ணிவிட்டு வந்தாய். புரியவில்லை? நந்தா பார்க்க, உன் வாந்தியைச் சொன்னேன்! சும்மா என்றால், வென்றவன் பத்திரிகைப் பேட்டிக்கு இல்லாமல் வந்தது, தகராறு ஆகியிருக்கும். நீ வாந்தி எடுத்ததை வேறு மாதிரி எண்ணி, எல்லோரும் என்னைக் கேலியும் கிண்டலுமாக வாழ்த்தி அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களது வாழ்த்துக்கு அடிப்படை கூட இன்றுவரை கிடையாது என்று வெளியே தெரிந்தால், எப்படி இருக்கும்?''

ஒரு கணம் குன்றியபோதும், உடனேயே காஞ் சனிக்குக் கோபம் வந்தது.

தன்னை மட்டுமே நினைப்பதாக, அவளைக் குற்றம் சாட்டுகிறானே! இவன் எப்படி? அவனையும், மற்ற வர்களையும் நினைத்துப் பார்க்கிறவன், அவளைப் பற்றி மட்டும் எண்ணுவதே இல்லையே!

இது மட்டும் என்ன நியாயம்?

கேட்டால், அவளது மட்டும் அசட்டுப் பயமாகிவிடும்!

எரிச்சலுற்று, அவள் முறைக்கவும், ''கொஞ்சம் புரிந்து கொள், காஞ்சனி. நந்தாவின் பேச்சைக் கேட்டுக் கலங்கி விட்டாய் என்று நினைக்கிறேன். ஆனால், அவன் விஷயம் வேறு. பந்தயக் காரில் ஏறிவிட்டால், எதையும் லட்சியம் செய்யாமல், வைத்யா கண் மூடித்தனமாய் அசுர வேகத்துடன் காரை ஓட்டுவான்...'' என்று



சொல்லிக் கொண்டு போனவன், மனைவியின் ஏளனச் சிரிப்பில் பேச்சை நிறுத்திப் புருவம் உயர்த்திக் காரணம் கேட்டான்.

''உங்கள் போட்டியே அதுதானே? அசுர வேகத்துடன் ஓட்டித்தானே ஜயிப்பது! சைக்கிளில் ஸ்லோ சைக்கிள் ரேஸ் போல, இதில் ஸ்லோ கார் ரேஸ் வைத்துக் கடைசியில் வருகிறவர்களுக்குப் பரிசு கொடுப்பது உண்டா, என்ன?'' என்றாள் அவள் கிண்டலாக.

''மனதிலும் உடம்பிலும் கட்டுப்பாடு இருந்தால், வேகமாகச் செய்வதையும் திருத்தமாகவே செய்யலாம். அத்தோடு, வைத்யா இறந்தது, விபத்தினால் மட்டும் அல்ல! குடி! விபத்துக் காயங்கள் குணமாகி வரும் போது, யாரோ கொடுத்தான் என்று சாராயத்தைக் குடித்து... ஏற்கெனவே கல்லீரல் கெட்டிருந்ததால், அவனைக் காப்பாற்ற முடியவில்லை!''

''எப்படியும், படுத்தது விபத்தின் விளைவுதானே?''

''கிளிப் பிள்ளை மாதிரித் திருப்பித் திருப்பி அதையே பேசாதே!'' என்று எரிச்சலோடு கூறினான் சியாமளன்.

வெட்டுவது போல நோக்கினாள் அவள்.

''புதிது சொல்லவா? நந்தாவுடைய பெண் சிப்ஸ் விற்றுக் கொண்டிருந்தாள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவளது முகம் அபி சாயலாய் மாறிற்று!'' என்றாள் குரல் கம்ம.

''அபி சாயல்... மைகாட்! உடனே, நம் பிள்ளைகளை, அதே போலக் கற்பனை பண்ணி விட்டாயாக்கும்? நம் குழந்தைக்கு அதுபோல நிலைமை வர வாய்ப்பே

கிடையாது! அப்படியே எனக்கு ஏதாவது நேர்ந்தாலும், அப்பா...''

குறுக்கே பாய்ந்தாள் காஞ்சனி. ''நேரும்தானே? ஒத்துக் கொள்ளுங்கள். அந்த எண்ணம் உங்களுக்கும் இருக்கிறதுதானே? இல்லாவிட்டால் இந்த வார்த்தை எப்படி வரும்?''

''கடவுளே! உன்னுடைய புதிய பயத்தைப் போக்குவ தற்காகச் சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னால், அதைப் பிடித்துக் கொண்டு ஆடுகிறாயே! அதுபோல எதுவும் நேராது. காஞ்சி! என்னை நம்பு.''

முடியாது என்று, பிடிவாதமாகத் தலையசைத்தாள் காஞ்சனி.

தான் யோசித்து வைத்திருந்த முடிவையும் தெரிவித்தாள்.

''நீங்கள் உயிரோடு திரும்பி வருவீர்களா என்கிற நிச்சயம் இல்லாமல் விடை கொடுத்து அனுப்பிவிட்டு, இப்படித் தவிப்புடன் காத்திருக்க என்னால் முடியாது, சியாம்! அதனால்... அதனால்...''

சொல்வதே இவ்வளவு கடினமாக இருக்கிறதே!

தலையைச் சரித்து, ஒரு விதமாய் நோக்கி, ''அதனால்...?'' என்று, கதை கேட்கும் பாவனையில் வினவினான், சியாமளன்.

அந்தக் குரல் உசுப்பினாலும், ''நாம் சட்டப்படி பிரிந்து விடுவோம்!'' என்றாள் அவள் வருத்தத்துடன்.

ஒரு கணம், அவன் முகத்தில் சீற்றம் ஜொலித்தது.

உடனேயே அதை மாற்றி, ''கணவன் மனைவியாக வாழவே இல்லாமல், பிரிவதால் என்ன லாபம்? உனக்கு



ஒன்றுமே கிடைக்காது. அதைவிட, எப்போதும் நீ அச்சத்தோடு எதிர்பார்க்கிற மாதிரி விபத்தில் நான் செத்தேன் என்றால், என்னுடைய விதவை என்ற பெயரில், உனக்குச் சொத்தேனும் நிறைய வரும்!'' என்றான், அவன் எகத்தாளமாக.

அந்த வார்த்தைகள், அவனது மரணத்தைச் சித்தரித் துக் காட்டிவிட, ''ஐயோ!'' என்ற கதறலுடன் ஓடிப் போய், அவனை அணைத்துக் கொண்டு, ''என்ன வார்த்தை சொன்னீர்கள்? உங்கள் சொத்தா எனக்குத் தேவை? அதற்கு நான் உயிரோடு இருப்பேன் என்றா நினைத்தீர்கள்?'' என்றாள் கண்ணீரும் தவிப்புமாகக் காஞ்சனி.

அவனும் அவளை விலக்கவில்லை. அணைத்துக் கொண்டு, தோளை, முதுகை வருடிக் கொடுத்தான்.

சற்றுப் பொறுத்து, ''இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு, ஏன்டா, என்னைப் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாய்?'' என்றான் கனிவோடு.

''நீங்களும்தான் என்மீது அன்பு வைத்திருக்கிறீர்கள்! நீங்கள் ஏன் என்னைப் புரிந்து கொண்டு, ரேசை விடக் கூடாது?''

''அதற்குள், எப்படி எங்கே தாவி விட்டாய்! உனக்கு வேறு எண்ணமே வராதா?'' என்று அலுப்புடன் கூறியவாறு, அவ்ளை விட்டு நகர்ந்தான் சியாமளன்.

''எப்படி வரும்? வீட்டை விட்டு வெளியே போகிற கணவன் தானே வருவானா அல்லது, யாராவது தூக்... வந்து, எந்த மருத்துவமனையிலாவது போய்ப் பார்க்க

கிடையாது! அப்படியே எனக்கு ஏதாவது நேர்ந்தாலும், அப்பா...''

குறுக்கே பாய்ந்தாள் காஞ்சனி. ''நேரும்தானே? ஒத்துக் கொள்ளுங்கள். அந்த எண்ணம் உங்களுக்கும் இருக்கிறதுதானே? இல்லாவிட்டால் இந்த வார்த்தை எப்படி வரும்?''

''கடவுளே! உன்னுடைய புதிய பயத்தைப் போக்குவ தற்காகச் சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னால், அதைப் பிடித்துக் கொண்டு ஆடுகிறாயே! அதுபோல எதுவும் நேராது. காஞ்சி! என்னை நம்பு.''

முடியாது என்று, பிடிவாதமாகத் தலையசைத்தாள் காஞ்சனி.

தான் யோசித்து வைத்திருந்த முடிவையும் தெரிவித்தாள்.

''நீங்கள் உயிரோடு திரும்பி வருவீர்களா என்கிற நிச்சயம் இல்லாமல் விடை கொடுத்து அனுப்பிவிட்டு, இப்படித் தவிப்புடன் காத்திருக்க என்னால் முடியாது, சியாம்! அதனால்... அதனால்...''

சொல்வதே இவ்வளவு கடினமாக இருக்கிறதே!

தலையைச் சரித்து, ஒரு விதமாய் நோக்கி, ''அதனால்...?'' என்று, கதை கேட்கும் பாவனையில் வினவினான், சியாமளன்.

அந்தக் குரல் உசுப்பினாலும், ''நாம் சட்டப்படி பிரிந்து விடுவோம்!'' என்றாள் அவள் வருத்தத்துடன்.

ஒரு கணம், அவன் முகத்தில் சீற்றம் ஜொலித்தது.

உடனேயே அதை மாற்றி, ''கணவன் மனைவியாக வாழவே இல்லாமல், பிரிவதால் என்ன லாபம்? உனக்கு



ஒன்றுமே கிடைக்காது. அதைவிட, எப்போதும் நீ அச்சத்தோடு எதிர்பார்க்கிற மாதிரி விபத்தில் நான் செத்தேன் என்றால், என்னுடைய விதவை என்ற பெயரில், உனக்குச் சொத்தேனும் நிறைய வரும்!'' என்றான், அவன் எகத்தாளமாக.

அந்த வார்த்தைகள், அவனது மரணத்தைச் சித்தரித் துக் காட்டிவிட, ''ஐயோ!'' என்ற கதறலுடன் ஓடிப் போய், அவனை அணைத்துக் கொண்டு, ''என்ன வார்த்தை சொன்னீர்கள்? உங்கள் சொத்தா எனக்குத் தேவை? அதற்கு நான் உயிரோடு இருப்பேன் என்றா நினைத்தீர்கள்?'' என்றாள் கண்ணீரும் தவிப்புமாகக் காஞ்சனி.

அவனும் அவளை விலக்கவில்லை. அணைத்துக் கொண்டு, தோளை, முதுகை வருடிக் கொடுத்தான்.

சற்றுப் பொறுத்து, ''இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு, ஏன்டா, என்னைப் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாய்?'' என்றான் கனிவோடு.

''நீங்களும்தான் என்மீது அன்பு வைத்திருக்கிறீர்கள்! நீங்கள் ஏன் என்னைப் புரிந்து கொண்டு, ரேசை விடக் கூடாது?''

''அதற்குள், எப்படி எங்கே தாவி விட்டாய்! உனக்கு வேறு எண்ணமே வராதா?'' என்று அலுப்புடன் கூறியவாறு, அவளை விட்டு நகர்ந்தான் சியாமளன்.

''எப்படி வரும்? வீட்டை விட்டு வெளியே போகிற கணவன் தானே வருவானா அல்லது, யாராவது தூக்... வந்து, எந்த மருத்துவமனையிலாவது போய்ப் பார்க்க

நேருமா என்கிற நிலையில், மனைவிக்கு வேறு என்ன எண்ணத் தோன்றும் என்கிறீர்கள்?'' என்று சுதி உயர்த்தினாள் அவள்.

''இத்தனை தரம், நானே நல்லபடியாகத் திரும்பி வந்துதானே இருக்கிறேன்!''

''அது அதிர்ஷ்டம்! அந்த அதிர்ஷ்டம் எப்போது கைவிடுமோ?''

''பார், காஞ்சனி. இந்த மாதிரிக் கற்பனைகளை நான் மதிக்க முடியாது. இதை விடுத்து, உருப்படியான காரணம் ஏதாவது இருந்தால், அதைச் சொல்லு. யோசிப்போம்.''

இறங்கி வருவதாகக் காட்டுகிறானாமா? ரேஸ் கோர்சுக்கு அவள் போன மாதிரி.

ஆனால், அவன் உயிரோடு இருப்பதை விடப் பெரிதாக, வேறு என்ன காரணம் வேண்டும்? சொன்னால் இவனுக்குப் புரியவில்லையே!

''நீங்களும்தான் என்ன? ஆத்மதிருப்தி என்கிற கதையெல்லாம் விட்டுவிட்டு, உருப்படியாக ஒரு காரணம் சொல்வதுதானே?'' என்றாள் காஞ்சனி பதிலுக்கு.

''தாராளமாக! இந்த ரேஸ்களில் நான் கலந்து கொள்வதால், நம் தொழிலுக்கும் எவ்வளவோ ஆதாயம் இருக்கிறது. தொழில் வளர்ச்சிக்காக என்றும் வைத்துக் கொள்ளலாம் என்று, முன்பே ஒரு தரம் உன்னிடம் சொல்லியும் இருக்கிறேன். அந்த ரேஸ் காரில் பார்த்தாயா, 'ஜிபி' என்ற பெயர் பெரிதாக இருக்கும்! நானே காரை ஓட்டிக் கலந்து கொள்கிறபோது, நம் நிறுவனத் தயாரிப்புகளுக்கு, அது எப்பேர்ப்பட்ட நம்பகத் தன்மையைத் தருகிறது, தெரியுமா? இதனால் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி, பல மடங்கு! இந்த நிலையில் அப்பாவிடம் போய், 'நம் தொழிலைப் பற்றி எனக்குக் கவலை இல்லை! என் பெண்டாட்டி பயப்படுவதால், இனி நானும் அவளது முந்தானையின் பின்னே ஒளிந்து கொள்ளப் போகிறேன்!' என்று சொல்லச் சொல்லுகிறாயா?'' என்று கேட்டான் சியாமளன்.



சற்றுத் திகைத்துவிட்டுத் தலையைச் சிலுப்பினாள் அவள். ''எனக்கும் இப்படி ஒரு காரணம் இருக்கிறது. நாளைக்கு என் பிள்ளைகள், இல்லாத அப்பாவுக்காக ஏங்கிக் கொண்டு நிற்பது, எனக்குத் தாங்காது!'' என்றாள் அவள்.

''மறுபடியும் வெறும் கற்பனை!'' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தான் அவன். ''இல்லாத பிள்ளைகளுக்காக, இப்போதே என்ன தவிப்பு?''

''நாளைக்கு என்ன என்று யோசித்துத்தானே, நாம் எதையும் செய்கிறோம்? நம்முடைய எதிர்காலம் எனக்குத் தெரிகிற விதம் அப்படித்தான்! அதனால்தான் ஒரேயடியாகப் பிரிந்து போகிறேன் என்கிறேன்!'' என்றாள் காஞ்சனி பிடிவாதமாக.

''எங்கே?''

எங்கே?

காஞ்சனி மீண்டும் திகைத்தாள்!

பிரிவில் பிடிவாதமாக இருந்தாளே தவிர, பிரிந்து எங்கே போவது, என்ன செய்வது என்று ஒன்றும் தீர்மானிக்கவில்லையே!

பெற்றோரிடம் போனால், அப்படி ஒன்றும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட மாட்டார்கள்தான். ஆனால், வருத்தப் படுவார்கள். புரிந்து கொள்வார்களா? அதை விட, அவளுக்கு எடுத்துச் சொல்லித் திருப்பி அனுப் பவே முயற்சிப்பார்கள். எல்லாமே வேதனைதான். எல்லோருக்குமே!

கையில் ஒரு தொழில் இருப்பதால்...

''தனியாக...'' என்று காஞ்சனி தொடங்குகையில், சியாமளன் குறுக்கிட்டான். ''பிரச்சினை நமக்குள்தானே, காஞ்சனி? அதை வெளிப்படுத்திப், பாவம்! பெரியவர் களை ஏன் வருத்துவது? இன்றுவரை இருக்கும் அறியாத நிலையிலேயே, அவர்கள் எப்போதும் இருக்கட்டுமே! நாமும் இப்படியே இருந்து விடுவோம்!'' என்றான் அவன்.

''ஆனால், நீங்கள் ரேசில் கலந்து கொள்ளும்போது, என்னால் தாங்கவே முடியவில்லையே!''

''தனியாகப் போனால் மட்டும், அந்தத் தவிப்பு இராதா? அங்கேயும் இதே மனதுதானே?''

''ஆனால், எப்போது, எங்கே, எத்தனை மணிக்கு ஓட்டுகிறீர்கள் என்று, இந்த விவரம் எல்லாம் தெரியா திருக்குமே! இங்கானால் அது தெரிந்து, அந்த நேரங் களில் நான் மூச்சு விட முடியாமல்...''

''இங்கேயும் அந்த விபரங்கள் உன்வரை வராமல், நான் பார்த்துக் கொள்ளுகிறேன். வெளியூர் செல்லும் போது, தொழில் விஷயமாகவும் போகிறேனல்லவா? அதைப் போலவே எண்ணிக் கொள். ஒருவரை ஒருவர்



மாற்ற முயற்சிப்பதை, இருவருமே விட்டு விடு வோம்!''

''இதனால், யாருக்கு என்ன பயன்?''

''நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள முடியும் அல்லவா? நமக்கு அது போதும். நம் பெரியவர்களின் நிம்மதி கெடாதல்லவா? அது லாபம்!'' என்றான் அவன்.

29



ஒரு தொழிலதிபனாக லாபக் கணக் கிட்டுச் சியாமளன் சொன்ன தீர்வு, காஞ்ச னிக்குப் பல வகையிலும் ஏற்புடையதாகத் தான் இருந்தது.

முதல் லாபமாகக் கணவனைப் பிரியத் தேவையில்லாமல் போனது.

ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள முடியும் என் பதே போதும் என்று சியாமளன் சொன்னது, அவளுக் குப் பெரும் ஆறுதலாகவும் இருந்தது. அவனுக்கும் பிரிவு தாங்க முடியாத துன்பம் என்று சொல்லாமல் சொன்னானே!

பிரியும் முடிவு அவளதுதான் என்றாலும், அதை விடப் பெரிய துன்பத்திலிருந்து தப்ப எண்ணியே, வேதனையான இந்த முடிவுக்கு அவள் வந்திருந்தாள்.

ஆனால், இப்போது இரண்டு துன்பங்களுமே, கிட்டத்தட்ட இல்லை என்று ஆனது, அவளுக்குத்தானே சாதகம் என்று கொள்ள வேண்டும்?

கூடவே, கயிறு இழுக்கும் போட்டி போல, அடுத்த வரைத் தன் பக்கம் இழுப்பதற்காக, என்னேரமும் அவர்களுக்கிடையே நடந்த போராட்டமும் நின்று போயிற்று.

''அவரவர் நம்பிக்கை அவரவருக்கு என்று விட்டு விட்டு, இங்கே நாம் நண்பர்களாக வாழுவோம்!'' என்று, அதை முடித்திருந்தான் சியாமளன்.

கார் ரேஸ் பற்றி அவளிடம் இப்போது பேசுவார் இல்லை!

சொல்லப் போனால், அவளுக்குச் சாதகமாக இத் தனையும் நடப்பதற்குக் காஞ்சனி எவ்வளவோ மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும்!

ஆனால், முக்கியமான இரண்டு விஷயங்கள், அந்த மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொண்டிருந்தன.

ஒன்று, சியாமளன் ரேஸ் கார் ஓட்டுவதை நிறுத் தாததால், அவனைப் பற்றி, அவளது அடி மனதில் இருந்த கவலை கொஞ்சமும் குறையவில்லை என்பது.

அடுத்தது, ஒருவர் மீது ஒருவர் மிகுந்த நேசம் கொண்டிருந்த போதும், ஒரு நல்ல இல்லற வாழ்வுக்கு வழியற்றுப் போனது.

என்னதான் வாதாடல் நின்று போனாலும், கார் பந்தயத்தில் கலந்து கொள்கிற விஷயத்தில், சியாமளன் அவளுக்குக் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் தன் பிடிவாதத்திலேயே இருந்தான்.

எனவே, அது தொடர்பான தன் நிபந்தனையைத் தளர்த்தக் கூடாது என்பதில், காஞ்சனியும் அதே பிடி வாதத்தோடு இருந்தாள்.



எனவே, அடிப்படை நிலைமை அப்படியே இருக்க, சேற்றை அடியில் மறைத்து, மேற்பரப்பில் தெளிந்து தெரியும் அழகிய தடாகம் போலக் காஞ்சனி - சியாமளனின் வாழ்க்கை நடந்தது.

சியாமளன், அவன் தொழிலைக் கவனித்தான். காஞ்சனி அவளது வேலையைப் பார்த்தாள். இருவரும் மாலை யில் வீட்டுக்கு வந்தார்கள். டிவி பார்த்தோ, படித்தோ, பொதுவான எதையாவது பற்றிப் பேசியோ, பொழுதைக் கழித்தார்கள்.

அவர்களது ஒவ்வொரு நாளும் கழிந்த விதம் இப்படித்தான்.

புதிய ஆர்டர்கள் எடுப்பதும், செய்து கொடுப்பது மாக, அவளது தொழிலும் மும்முரமாக நடந்தது.

இப்போதைய சின்ன இடத்தில் நெருக்கியடித்துக் கொண்டு, வேலை செய்யும்போது, விசாலமான ஏதாவது இடத்துக்காகக் காஞ்சனியின் மனம் ஏங்கும்!

அதுபோன்ற சமயங்களில் அவர்களது வீட்டுக்கு ஓரளவு அருகில் இருந்த அந்த இடத்தைப் பற்றிய எண்ணம் காஞ்சனிக்கு வருவது உண்டு.

அங்கே, என்னென்ன மாற்றங்கள், எப்படியெப்படிச் செய்ய வேண்டும் என்று, அதைப் பார்க்கச் சென்ற முதல் நாள் இருவரும் பேசியது, அவளுக்கு நன்றாக நினை விருந்தது!

ஆனால், அதற்குப் பிறகு வாழ்க்கை போன விதத் தில், இந்த இடம் பற்றிய நினைவே அவளுக்கு மறந்து போயிற்று.

பூபால் நன்றி சொல்ல வந்தபோதுகூட, அதையும் தன் போரில் பயன்படுத்த ஓர் ஆயுதமாகக் காஞ்சனி கண்டாளே தவிர, அந்த இடத்தின் தேவை மனதில் வர வில்லை.

இப்போதோ, அது பற்றிக் கணவனிடம் பேசுவதே, அவளுக்குத் தப்பாகத் தெரிந்தது.

எப்போது, அவனோடு முழுமையாக ஒத்து வாழ வழியே இல்லை என்று இருவருமே ஒத்துக் கொண்டு முடித்து விட்டார்களோ, அதன் பிறகு மற்ற எந்தச் சலுகைகளை அவனிடம் கேட்பதும், பெறுவதும் நியாய மாகும்?

சியாமளனும், அந்த இடம் பற்றி மறந்துவிட்டான் என்றே, காஞ்சனிக்குத் தோன்றியது. இடம் தேவைப் பட்ட அவளே மறக்கிறபோது, அவனுக்கு மறந்தது அதிசயம் அல்ல.

இப்போது அதைப் பற்றிப் பேசி, அவனுக்கு நினைவு படுத்துவதுதான் தவறு. அதைக் காட்டிலும், வேறு இடம் தேடுவதுதான் மேல் என்று அவளுக்குத் தோன் றியது.

உடம்பிலும், மனதிலும் இன்னும் கொஞ்சம் உற் சாகம் ஏற்பட்டபின், அந்த வேலையைப் பார்க்க வேண் டும் என்று எண்ணி, அப்போதைக்கு வேலையை ஒத்திப் போட்டாள் அவள்.

ஆனால், அவர்களது புதிய ஒப்பந்தப்படி வாழத் தொடங்கி ஒரு வாரகாலம் சென்றபின், ஒருநாள் மாலை யில், ''இன்று உனக்கு வேறு வேலை இல்லை என்றால்,



உன் புதிய அலுவல் இடத்தைப் பார்த்துவிட்டு வர லாமா?'' என்று சியாமளன் காஞ்சனியைக் கேட்டு, அவளைத் திகைக்க வைத்தான்.

அவளது திகைப்பைப் பார்த்து, அவனுக்குச் சிரிப்பு வந்தது!

''என்ன, இதுதான் பூலோகமா மாதிரியாகப் பார்க் கிறாயே! உன் புது அலுவல் இடம், காஞ்சி! இடம் விசாலமாக.... மூன்று மாதங்களுக்கு முன்பாகப் போய்ப் பார்த்து, ஓகே சொன்னோமே, அந்த இடம்மா!'' என்று சின்னக் குழந்தைக்குச் சொல்வது போலப் புன்னகை யோடு விளக்கினான் அவன்.

''ஆ... ஆமாம்... ஆனால்... மறந்து விட்டீர்கள் என்று எண்ணினேன்!'' என்றாள், அவள், மெல்லிய குரலில்.

இப்போது, இதற்கான பணத்தை இவனிடம் எப்படிக் கொடுப்பது என்று அவளது யோசனை ஓடியது.

முன்பானால், அவனை மாற்றி, என்றேனும் ஒரு நாள், எல்லோரையும் போல வாழலாம் என்ற நம்பிக்கை இருந்ததால், யாருடைய பணம் என்கிற எண்ணம் பெரி தாகத் தோன்றாதிருந்தது.

ஆனால் இப்போது அது முடியாதே!

''உன் விஷயம் எதையுமே நான் மறந்தது கிடையாது, காஞ்சனி!''

அவனது தாழ்ந்த குரலில், அவளது இதயம் ஒரு தரம் நின்று, பின் துடித்தது.

தன் பாதிப்பைக் காட்டிக் கொள்ள மனமின்றி, ''இப் போதே போகலாம் என்றீர்களே, கிளம்புவோமா?'' என்று திரும்பினாள் அவள்.

அங்கே போய்ப் பார்த்தால், பாதிப்பு இன்னமுமே அதிகமாயிற்று என்றுதான் சொல்ல வேண்டும்!

அந்த அளவுக்கு அந்த இடத்தைப் பார்த்த அன்று அவள் சொன்னதை, அப்படியே செயல்படுத்தி வைத்திருந்தான், அவளுடைய கணவன்.

சேலைகளுக்கும், தாவணிகளுக்கும் அமர்ந்து வேலை செய்யும்படியான சட்டங்கள், சுரிதார்களுக்கும், பாவாடைகளுக்கும் அவற்றுக்கு ஏற்ற வடிவிலான ஃப்ரேம்கள், ஒவ்வோர் இடத்துக்கும் பொருத்தமான விதத்தில், கண்ணை உறுத்தாதபடி, துணியின் மீது மட்டும் ஒளி விழும் விதமாகத் தனித்தனி விளக்கு அமைப்புகள், துணிகள், நூல், சம்கி போன்றவற்றை அழகாகப் பிரித்து வைத்துக் கொள்ள நீளமான அலமாரிகள்...

ஆடைகளை அணிந்து பார்க்கக் கண்ணாடியுடன் கூடிய ஒரு சிறு அடைப்பும், சும்மா உடம்பின் மேல் வைத்துப் பார்க்க, வெளியே ஒரு கண்ணாடியும் இருந்தன.

இவை அனைத்துக்கும் மேலாகக் காஞ்சனிக்காக மட்டிலுமாகச் சில கொசுறு வேலைகள் வேறு!

ஒரு புறமாக ஒரு தனி அடைப்பில், காஞ்சனி டிசைன் வரைவதற்காக, உயரத்தை மாற்றி அமைத்துக் கொள்ளத் தக்கதாகத் தாங்கியுடன் கூடிய ஃப்ரேம், வெள்ளை



நிறத்தில், வழுவழுவென்று நீள மேஜை, சுழல் நாற்காலி... இன்னும் எத்தனை!

நெஞ்சு நிறைய நேசம் அடைத்துக் கொண்டிருந் தால் தவிர, இவ்வளவு யோசித்துச் செய்திருக்க முடியாது.

இந்த நேசச் செயலுக்கு, அவள் செய்யக் கூடிய கைம்மாறு... ஒன்றுமில்லை! ஒ... ன்று...மே... இல்லை!

ஒரு கணம் காஞ்சனிக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு, 'ஹோ' என்று கண்ணீர் வரப் பார்த்தது.

சுற்றிச் சுற்றிப் பார்க்கிற பாவனையில், கணவனுக்கு முகத்தைக் காட்டாமல் மறைத்துப் பெரு முயற்சி செய்து, தன் உணர்ச்சி வேகத்தை அவன் அறியாது சமாளித் தாள், அவள்.

குரல் வசத்துக்கு வந்து விட்டது என்று தெரிந்ததும், ''இவ்வளவு செய்திருக்கிறீர்கள், பக்கத்திலேயே இருக் கிறான் பூபால்... ஆனால் அவன் திலகாவிடம் கூட, ஒரு வார்த்தை சொல்லவே இல்லையே!'' என்றாள், வியப்பை மட்டும் காட்டி.

''நான்தான் சொல்ல வேண்டாம் என்று தடுத்து வைத்திருந்தேன்!'' என்று சொல்லிச் சிரித்தான், சியாமளன்.

''இங்கே வேலை தொடங்கிய அன்றே ஓடி வந்து சொல்லிவிட, அவனுக்கு ஒரே துடிப்பு. எல்லாம் முடித்து விட்டு, உன் அக்காக்களுக்கு ஆனந்த அதிர்ச்சி கொடுப் போம் என்று நான் கூறவும், மிகவும் கஷ்டப்பட்டு,

அவன் தன்னை அடக்கிக் கொண்டிருந்தான்!'' என்றுரைத்து, அவன் மீண்டும் நகைக்கவும், அவளுக்குப் புரிந்து போயிற்று.

அவள் உணர்ச்சி வசப்பட்டதை, அவனுக்கு மறைப்பதில், அவள் ஒன்றும் முழு வெற்றி அடைந்து விடவில்லை.

திகைப்புடன் காஞ்சனி நோக்கிய அப்போதும், வெளியே இருந்த கண்ணாடியில், சியாமளன் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் அறியாத வண்ணமாகச் சமாளிப்பதற்காக அவள் படாத பாடு பட்டபோது, அங்கும் இங்கும் நடந்து, முழுக்க முழுக்க அவளைக் கண்காணித்திருக்கிறான்.

அவன் கண்டுபிடித்த விதம் மனைவிக்குப் புரிந்துவிட்டது என்று அறிந்ததும், அவனது புன்னகை மேலும் விரிந்தது.

ஆனால், என்ன சிரிப்பு என்று, அவளுக்கு ஆத்திரம் வந்தது. அவள் பட்டபாடு, அவனுக்கு வேடிக்கையாக இருந்ததாமா?

''இதற்கெல்லாம் எவ்வளவு செலவாயிற்று என்று சொன்னால், செக் எழுதித் தந்துவிடுகிறேன்!'' என்றாள், அவள் மிடுக்காக.

அவனது முகம் சட்டென மாறியது. அவளையே பார்த்து, ''சொல்லா விட்டால்?'' என்று கேட்டான் அவன்.

''என்னது 'சொல்லா விட்டால்?' அப்புறம் நான் எப்படி உங்கள் பணத்தைத் திருப்பித் தருவது?''



''எதற்குத் தர வேண்டும்?'' என்று, மீண்டும் சுருக்கமாகவே கேட்டான் சியாமளன்.

''இது என் தொழில். இதற்கு நீங்கள் பணம் செலவு செய்வானேன்?'' என்று பதிலுக்குக் கேட்டாள், அவள்.

''நீ என் மனைவி, காஞ்சனி! ஒரு வேளை, அதுவே மறந்துவிட்டதா?'' என்று கேலிபோலக் கேட்டான் அவன்.

கேலியா, குத்தலா?

வினாடி மௌனத்தின் பின், ''மறக்கவில்லை! எதுவுமே மறக்கக் கூடியதும் இல்லை. அதனால்தான், வேண்டாம் என்கிறேன்,'' என்றாள், அவள் பிடிவாதமாக.

''புரியவில்லையே!'' என்றான், அவன் - புருவம் உயர்த்தி.

புரியாமல் என்ன? அவள் வாயால் சொல்லச் செய்து குன்ற வைக்க எண்ணம்!

இந்த ஒரு வாரமாக இருந்த சுமுக நிலை மாறி, அவன் பேசிய விதம்தான் அவளுக்கு வருத்தமாக இருந்தது.

ஆனால், அந்த இடத்தில் இன்னொரு தகராறை விரும்பாமல், ''ஒரு மனைவியாக எதையும் திருப்பித் தர முடியாதபோது, கணவனாக நீங்கள் கொடுப்பதை நான் எப்படி வாங்கிக் கொள்ள முடியும்? அதனால்தான் மறுக்கிறேன்!'' என்றாள், அவள், மெதுவாகவே.

சட்டென்று கண்கள் சிவக்க, ''என்னையும், உன்னையும் பற்றி, நீ என்னதான் நினைத்துக் கொண்டிருக்

கிறாய்?'' என்று மிகுந்த சினத்துடன் சீறினான், சியாமளன்.

அவனது சினத்தின் காரணம் புரியாமல், காஞ்சனி திகைத்தாள்.

30



மனைவி என்பதே மறந்துவிட்டதா என்று சியாமளன் கேட்டதற்குக் காஞ்சனிதான் கோபப் பட்டிருக்க வேண்டும். மேற்கொண்டு, அவன் பேசிய விதமும், அவளுக்கு எரிச்சலூட்டும் விதம்தான்.

ஆனால், தொடர்ந்து அவன் சீறியதும், கேட்ட கேள்வியும், அவளுக்கு இன்னமும் திகைப்பாகத்தான் இருந்தது.

இருவரையும் பற்றி, என்ன நினைப்பது?

புரியாத சிக்கலில் மாட்டிக் கொண்டு, விடுபடத் தெரியாமல் விழிக்கும் முட்டாள்கள் எனலாம்.

ஆனால், இதை அப்படியே சொன்னால், அவனது ஆத்திரம் இன்னும் எங்கே போய் நிற்குமோ என்று அவள் யோசிக்கையில், சியாமளனே கேட்டான். ''நான் இதை யெல்லாம் செய்தது, லஞ்சம் கொடுப்பதாக, உனக்குத் தோன்றுகிறது. அப்படித்தானே?'' என்று, பழைய சீற்றக் குரலிலேயே கேட்டான்.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? என்ன லஞ்சம்?''

''இந்த லஞ்சத்துக்கு மயங்கி இழுத்த இழுப்புக்கு வருவாய் என்று எதிர்பார்ப்பேன் என்று எண்ணித் தானே, ஏற்க மறுக்கிறாய்? யோசி, காஞ்சனி. இப்படி



லஞ்சம் கொடுத்து உன்னை அடையத் திட்டமிட, நான் அவ்வளவு மட்டமானவனா? அல்லது, இதற்கெல்லாம் மயங்குகிற அளவு நீ மோசமானவள் என்று எண்ணிருந் தால், உன்னை நான் மணந்திருப்பேனா? நம் இருவரை யுமே, எவ்வளவு கேவலப்படுத்தி விட்டாய்?'' என்று, வருத்தமும் கோபமுமாகச் சியாமளன் பேசி முடித்த போதுதான், காஞ்சனிக்கு அவனது கோபத்தின் காரணம் புரிந்தது.

அர்த்தமற்ற கோபம், பேச்சு!

''சியாம், ப்ளீஸ்! போதும், நிறுத்துங்கள்! சும்மா என்னென்னவோ சொல்கிறீர்களே, அது போலெல்லாம் நான் நினைக்கவே இல்லை!''

''பின்னே ஏன் பணத்தைத் திருப்பித் தந்தே தீருவேன் என்கிறாய்?'' என்று விளக்கம் கேட்டான், சியாமளன்.

''குற்ற உணர்ச்சிதான்!'' என்றவள், முகம் கன்றத் தரையைப் பார்த்தவாறு, தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னாள்.

''நான் உங்கள் வீட்டில் இருக்கிறேன், உங்கள் செலவில் வாழ்கிறேன். எங்கே போனாலும், எனக்காக ஏதாவது வாங்கி வருகிறீர்கள். இப்போது இது... நான் மட்டும் இப்படி ஒரு வழிப் பாதைபோல, உங்களிடம் வாங்கிக் கொண்டே இருந்தால், எனக்கு மனது குத்தாதா?''

''அதென்ன, உங்கள் வீடு, உங்கள் செலவு என்கி றாய்? நீ என் மனைவி, காஞ்சி. உன்னிடம் முன்பே சொல்லியிருக்கிறேன், அது நம் வீடு என்று.''

அவனது பேச்சை முழுமையாக ஒத்துக் கொள்ள வில்லை என்று காட்டுவது போல ஒரு கணம் மௌன மாக இருந்துவிட்டு, ''எல்லாத் தம்பதியரையும் போல நாமும் முழுமையாக மனம் ஒத்து, இயல்பாக வாழ்ந் திருந்தால், ஒரு வேளை... இதுபோலத் தோன்றி யிராதோ, என்னவோ? ஆனால் இப்போது... கொஞ்சம் உறுத்தத்தான் செய்கிறது, சியாம்!'' என்று, தான் உண்மையாக உணர்ந்ததைக் காஞ்சனி கணவனிடம் தெரிவித்தாள்.

''உறுத்தலுக்கு அவசியமில்லை, காஞ்சி! எந்தக் கணவன் மனைவியின் மனங்களும், அடுத்தவரின் ஜெராக்ஸ் காப்பி அல்ல! உரசல்கள் நேர்வது தவிர்க்க முடியாதது. நமக்கிடையே கொஞ்சம் பெரிதாக இருக் கிறது. இருவருக்குமே, அவரவர் கருத்தில், நம்பிக்கை அதிகம். அதனால், அடுத்தவர் கூறுவதை ஏற்க முடிய வில்லை. அவ்வளவே. இது ஒரு காலத்தில் மாறும், அல்லது மாறாமலே இருந்துவிடவும் கூடும். ஆனால், அதற்காக நம்மிடையே உள்ள நேசம் பொய்யாகி விடுமா? என்மீது உனக்கும், உன் மீது எனக்கும் உள்ள அக்கறைதான் அழியக் கூடுமா?''

இந்தப் பிரச்சினையின் அடிப்படையே, அவன் மீதுள்ள அக்கறைதானே என்று பொருமியது அவளது மனது.

புரிந்து கொண்டவன் போல முறுவலித்து, ''அத னால், இந்த உறுத்தல்கள் எதுவும் உனக்கு வேண்டாம், என்ன?'' என்று கனிவாகக் கூறிவிட்டு, அவளது நெற்றி



யில் விழுந்த கூந்தல் சுருளை மென்மையாக விலக்கி விட்டான், சியாமளன்.

இந்தச் சின்ன அன்புச் செய்கையில் அவளுக்கு நெஞ்சை அடைத்தது.

இன்னும், இன்னும் என்று ஏக்கமாகவும், அதே சமயம் ஆறுதலாகவும் இருந்தது.

இருந்திருந்து, இவளைப் போய் மணந்து கொண் டோமே என்று சியாமளன் வருந்தத் தொடங்கி யிருப்பானோ என்ற சந்தேகம் பல தருணங்களில் அவளுள் எழுவது உண்டு!

ஆனால், அவன் அப்படி நினைத்ததே இல்லை. இனி, நினைக்கவும் மாட்டான் என்ற நம்பிக்கை, அவளுக்கு இப்போது வந்தது.

அவளைப் போலவேதான் அவனும் போலும்.

அந்த ஒரு வேறுபாடு மட்டும் இல்லையானால்... ஆனால், இருந்ததே!

அப்போதைக்கு, அந்தப் பேச்சை விட்டுவிட்டாலும் பிறகு ஒரு தரம் இந்தப் பேச்சை எடுத்து, ''தொழில் என்று வரும்போது, அந்தக் கணக்கு வழக்குகள் தனியே இருப்பதுதான் நல்லது, சியாம்! இது, இன்னமும் வளர்ச்சி பெற்று, தணிக்கை செய்ய வேண்டிய நிலை வருகிறபோது, இந்த வசதிகள் எல்லாம் எங்கிருந்து வந்து குதித்தன என்ற கேள்வி வரும். என்ன செலவு வேண்டுமானாலும் செய்யலாம். நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்று மிதப்பு, எனக்கே வந்துவிடலாம்! அதனால்... தப்பாக நினைக்க மாட்டீர்கள் என்று

நினைக்கிறேன். நீங்கள் செலவு செய்த பணத்தைத் தந்து விடுகிறேனே!'' என்றாள் காஞ்சனி, கெஞ்சுதலாக.

இவ்வளவு முன்னுரை கொடுத்த பிறகு, தப்பாக எப்படி நினைப்பது?

ஆயினும் சற்றுத் தயங்கிவிட்டு, ''பார், காஞ்சி. இந்த அலுவலகம் முழுவதையும் உனக்கு என் பரிசாகத் தருவது என்று நினைத்திருந்தேன்!'' என்று சியாமளன் தொடங்கவும், காஞ்சனி குறுக்கிட்டாள்.

''பரிசுக்கென்ன, சியாம்? அதுதான் எத்தனையோ தந்திருக்கிறீர்களே! இந்தத் தொழில், இது வரையும் இருந்தது போல, நானே தொடங்கி வளர்ப்பதாக இருக்கட்டுமே, ப்ளீஸ்!''

''அதில்லை, காஞ்சனி. என் பரிசாகக் கருதி, உன் அலுவலகத்தின் உள் அலங்காரத்துக்குச் சற்று அதிகமாகவே செலவு பண்ணி விட்டேனே! எல்லாவற்றையும் உன் தலையில் எப்படிக் கட்டுவது?'' என்று விளக்கினான் அவன்.

காஞ்சனி திகைத்தாள்.

சியாமளன் சொல்வது உண்மைதான். திருமணச் செலவுக்கு எடுத்தது, நந்தனின் விபத்தைத் தொடர்ந்து வேலையில் ஏற்பட்ட மந்தம் எல்லாமாகக் கணக்கிட்டுப் பார்த்தால், கையிருப்புக்கு, இந்தச் செலவு அதிகமேதான்.

சற்று யோசித்துவிட்டு, ''இதை பாங்க் கடனாக மாற்றி விடலாம், சியாம்! நான் கணக்கு வைத்திருக்கும் பாங்கில், கடன் தருவதாக முன்பே சொல்லியிருக்கிறார்கள். அதை வாங்கி உங்களிடம் திருப்பித் தந்துவிட்டு, பாங்க்குக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கட்டிவிடுவேன்!'' என்றாள், அவள் முகம் மலர.



மனைவி எளிதாகத் தீர்வு கண்ட விதம், கணவனுக்கும் பிடித்தது போலும். வேடிக்கையான ஓர் உதட்டுப் பிதுக்கலுடன் விட்டுக் கொடுத்தான் அவன்.

''ஆனால், அம்மையாரின் முகம் மலர்வதைப் பார்க்கும்போது, ஒரு சந்தேகம், பாம்பு மாதிரிப் பயங்கரமாகத் தலையைத் தூக்குகிறதே! இந்தத் துணிமணி அலங்காரத் தொழில், ஓஹோ என்று வளர்ச்சி அடைகிறபோது, பங்குக்கு வந்துவிடக் கூடாதே என்று விரட்டுகிறாயோ என்று... சும்மா ஒரு சின்னச் சந்தேகம் தான்! ஆனால், அது ஒன்றும் உண்மையில்லையே?'' என்று, முகத்தில் கவலை போலக் காட்டிக் கேட்டான், அவன்.

காஞ்சனி கலகலவென்று சிரித்துவிட்டு, ''நீங்கள் சொல்வது பலித்து, இந்தத் தொழில் பெரிய வளர்ச்சி அடைந்தால், உங்களுக்கு, நான் ஒரு பரிசு கொடுப்பேனாக்கும்!'' என்றாள், மனைவி.

''என்ன பரிசு?''

''ம்ம்ம்... ஒரு பெரிய பூங்கொத்து!''

''அதிலிருந்து, ஒவ்வொரு பூவாக எடுத்துக் காதில் வைத்துக் கொள்ளத் தோதாக இருக்கும் என்றா?'' என்று கேட்டு அவன் நகைக்க, அவளும் அதில் கலந்து கொண்டாள்.

கொஞ்சம் பழைய மாயம் திரும்பி வந்த உணர்வு! மகிழ்ச்சி!

பாங்க் வேலையெல்லாம் முடிந்த பின், தோழிகளை அழைத்து வந்து, புது இடத்தைக் காஞ்சனி காட்ட, அவர்களும் 'ஆஹா' என்று மகிழ்ந்தார்கள்.

''அந்த இடத்தில், சேலை, தாவணியில் வேலை செய்வது சிரமமாக இருக்கும். கொஞ்ச தூரத்துக்கு ஒருதரம், முதலில் செய்ததைத் திருப்பி எடுத்து, டிசைன் மாறிவிடாமல் இருக்கிறதா என்று பார்த்துப் பார்த்துச் செய்ய வேண்டியிருக்கும்! இங்கே, பிரச்சினையே இராது!'' என்றாள் அனகா ஆனந்தமாக.

''மாடலுக்குப் பொம்மைகூட இருப்பதால், சுரிதார்க் கழுத்து, உடலில் வேலைப்பாடுகளைப் போட்டுப் பார்த்துச் செய்யலாம்!'' என்றாள் திலகா.

சற்று நேரம், இந்த இடத்து வசதிகளைப் பற்றி, மூவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

அதன் பின், கூட வந்திருந்து பேசிக் கொண்டிருந்த தம்பியை ஓரக் கண்ணால் பார்த்து, ''இங்கே, நமக்கு இன்னொரு வசதி! பூபால் பக்கத்தில் இருப்பதால், ஏதாவது அவசரமாகத் தேவைப்பட்டால், அவ்வப் போது அவனைப் போய் வாங்கி வரச் சொல்லலாம்!'' என்றாள், திலகா புன்னகையோடு.

''ஐயையோ! என்னை எடுபிடியாக்கி, டீ வாங்கி வரச் சொல்ல எண்ணமா? அக்கா, எனக்கு நிறைய வேலை இருக்கிறது! அதை ஒழுங்காகச் செய்யவே, எனக்கு நேரம் சரியாக இருக்கும், நினைவிருக்கட்டும்!'' என்றான், பூபால் அவசரமாக.



மூன்று பெண்களும் கிளுகிளுவென்று சிரிக்கவும், அசடு வழிய, ''அதில்லை காஞ்சிக்கா. எவ்வளவுக்கு உழைக்கிறேனோ, அவ்வளவுக்குப் பணம், எனக்கு! சாரும் நீங்களும் இங்கே இடம் பிடித்துத் தந்த பிறகு, நான் பாங்க்கில் சேமிக்கிறேன், தெரியுமா? இன்னும், அப்பாவை நினைத்து உள்ளூர ரொம்பக் கலக்கம் இருப்பதால், எந்த வழியில் இது கெட்டுப் போய் விடுமோ என்று, எனக்குச் சட்டென்று பயம் வந்து விடுகிறது!'' என்று அவன் கூறியது, காஞ்சனியை உருக்கி விட்டது.

''பயப்படாதே, பூபால். எதை இழந்தாலும், தைரி யத்தை இழக்கக் கூடாது என்பார்கள். மனதில் திடத்தை வளர்த்துக் கொண்டால், எதையும் சமாளித்துவிடலாம், எல்லா லட்சுமிகளையும் விட்டாலும், தைரியலட்சுமியை விட்டுவிடக்கூடாது என்று கதை கூட உண்டே! தைரிய சாலிகள்தான் வெற்றி பெறுவார்கள்!'' என்றாள் காஞ்சனி.

பூபாலனின் முகமும் சட்டென மலர்ந்தது. ''நம் சியாமளன் சாரைப் போல! அப்படித்தானே, அக்கா? ஜெயிப்பதை விடுங்கள்! கார் ரேஸ்களில் கலந்து கொள் ளவே, மனதில் எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்? அந்தத் தைரியம், நம் சாருக்கு இருப்பதால்தான், இப்படி ஒரு துணிச்சலான போட்டியில் கலந்து கொள்ள முடிகிறது. அதில் வெல்லவும் முடிகிறது. அப்படித் தானேக்கா?'' என்று முகத்தில் பிரககாசத்துடன் கேட்டான் அவன்.

கார் ரேஸ்களில் சியாமளன் கலந்து கொள்வதை ஆத ரித்துத் தானே ஒரு நாள் பேசக்கூடும் என்று, காஞ்சனி

கனவில்கூடக் கருதியதில்லை. ஆனால், பூபாலின் முகத் தெளிவு நிலைப்பதற்காக அவள் அப்போது, அப்படித் தான் பேச வேண்டியதாகிவிட்டது.

அப்போதுதான், அவளுடைய சொந்தத் தம்பியைப் போலவே, பூபாலுக்கும், சியாமளன் ஒரு ஹீரோ ஆகி விட்டது, அவளுக்குப் புரிந்தது.

அந்த அளவுக்குச் சியாமளனைப் புகழ்ந்து தள்ளிவிட் டான் பூபாலன்.

அவன் திட்டம் போடுகிற விதம் பிரமாதமாம். அதை, வேலை செய்கிறவர்களுக்குத் தெளிவாகப் புரியும் படி சொல்வதும் அப்படித்தானாம். அதனால், அவன் திட்டமிட்டபடி, அப்படியே வேலை நடந்து விடுகிற தாம்.

அப்புறம், காஞ்சனி அக்கா மீது, சாருக்கு ரொம்பப் பிரியமாம். அவளது தனிப்பகுதியில் வேலை முடிக்கிற அன்று கூடவே இருந்தானாம்.

ஏனோதானோ என்று இருக்கிறவர்களால்கூட, பூபாலின் பேச்சுக்கு உச்சி குளிராமல் இருக்க முடியாது.

காற்றில் மிதக்கிற உணர்வோடு காஞ்சனி வீட்டுக்குப் போனால், சியாமளன் வெளியூர்ப் பயணம் பற்றித் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தான்.

முகத்தைப் பாராமல், பயணம் பற்றி அவளிடம் அவன் சொன்ன விதத்திலிருந்தே, எதற்காகப் போகி றான் என்று, அவளுக்குப் புரிந்து போயிற்று.

இவனுக்குத்தான் அவளிடம் மகாப் பிரியமாக்கும்!



தலை குப்புறத் தள்ளி விட்டது போன்ற உணர் வோடு, அவன் பேசிக் கொண்டு இருக்கும்போதே, காஞ்சனி விலகிச் சென்று விட்டாள்.

அவன் கிளம்பும்வரை, எதிரில் வரக்கூட, அவளுக்கு மனமில்லை!

ஆனால், இந்த ஒதுங்கலை எண்ணி உள்ளம் நொந்து மருகும் நாள், வெகு விரைவிலேயே வரப் போகிறது என்று, அப்போது, அவளுக்குத் தெரியாது,

31



**சி**யாமளன் வெளியூர் சென்றதும், வழக் கம் போலக் காஞ்சனி தன்னை வேலையில் மூழ்கடித்துக் கொள்ள முயன்றாள்.

அவனை நினைக்கவே நேரமில்லாது போனால், வேதனையும் குறைவு அல்லவா?

உடனடியாகப் பழைய இடத்தைக் காஞ்சனி விட்டு விடவில்லை.

நேரடி வாடிக்கை ரொம்ப அதிகம் இல்லாவிட் டாலும், வழக்கமாக வருகிறவர்களுக்குப் புது இடம் பற்றி விளக்கம் சொல்ல, அங்கே ஆள் இருக்க நேர்ந்தது.

அத்தோடு, ஒரு தயார் நிலைத் துணிகளை விற்கும் நிறுவனத்தின் சுரிதார் அலங்கார ஆர்டர் ஒன்று பெரிதாகக் கைவசம் இருந்தது. அதை முடிக்கும் வரை, இங்கும் அங்கும் அலைவதில் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று, பழைய இடத்திலேயே, மூவருமாக அந்த வேலையை முனைந்து செய்தனர்.

ஐந்து மணிக்கு மற்றவர்களை அனுப்பிவிட்டு, கொஞ்சம் துணிகளை எடுத்துக் கொண்டு, காஞ்சனி புது இடத்துக்கு வருவாள்.

சேலை, தாவணிகளில் ஏதாவது வேலை செய்வது, புதிய டிசைன்கள் வரைவது என்று, இயன்ற அளவு நேரம் அங்கிருந்து வேலை செய்துவிட்டுத் தாமதமாகத்தான் வீட்டுக்குக் கிளம்பிப் போவாள்.

அவளது உள்ளம் புரிந்தது போல, வீட்டுப் பெரிய வர்களும் தாமதம் பற்றி ஒன்றும் கேட்கமாட்டார்கள். கணவனைப் பிரிந்திருக்கும் ஏக்கம் அவளுக்கு என்ப தாக, அவர்கள் எண்ணம்.

தொழிலோடு சம்பந்தப்படுத்தி மகன் செல்வதை ஒன்றும் செய்ய முடியாது. கூடவே, அவர்களது தலை யிடாக் கொள்கை வேறு.

ஆனால், மருமகளுக்கு இதமாக ஏதாவது நடக்கும்.

எங்கிருந்தோ, சண்பகச் சரம் வந்து வாசனை வீசும். சாப்பாட்டு மேஜையில், அவளுக்குப் பிடித்தமானது மட்டுமே இருக்கும்.

காஞ்சனிக்கு ஒரு கார் தர, முதலிலேயே பெரியவர்கள் முயன்றனர். ஆனால், காஞ்சனிக்குத்தான், சென்னையின் போக்குவரத்து நெரிசலில், மொப்பெட்டில் உள்ள சுதந்திரம், அதில் இல்லாதது போலத் தோன்ற, "தேவைப் படும் போது, எடுத்துக் கொள்கிறேன்!" என்று, அப் படியே விட்டுவிட்டாள்.

இதிலெல்லாமா என் வேதனை தீரப் போகிறது என்று உள்ளூர எண்ணினாலும், பெரியவர்களுக்கு இதமாகவே, காஞ்சனியும் நடந்து கொள்வாள்.



யசோதைக்கும், அவளுக்கு ஏற்ற வகையில் சில சேலைகளுக்கு வேலைப்பாடு செய்து கொடுத்து, மாமியாரை மகிழ வைத்திருக்கிறாள்.

எல்லாமாக, எவ்வளவோ இனிமையாகச் செல்ல வேண்டிய காலம்...

கடைசியில், அவள் மனம் அங்கேதான் வந்து நின்றது.

முதலில் ஒரு சில நாட்கள், காஞ்சனி புது இடத் துக்கு வந்ததுமே, அவளுக்கு ஏதாவது உதவி தேவையா என்று கேட்டுக் கொண்டு, பூபால் அடிக்கடி வரு வான்.

அன்று திலகாவிடம் அவன் சொன்னதை நினைத்து, தேவைப்பட்டால், தானே அழைப்பதாகச் சொன்ன பிறகும், அவன் வருவதை நிறுத்தாதிருக்கவே, காஞ்சனி சந்தேகப்பட்டு விசாரித்தாள்.

அவளது ஊகம் சரியாக, அவ்வப்போது காஞ்ச னியைப் போய்ப் பார்த்து, வேண்டியது கேட்டு உதவும் படி, சியாமளன் சார் அவனிடம் சொல்லியிருக் கிறாராம்! 'சார்' அவ்வளவு கேட்டுக் கொண்ட பிறகு, அதைச் செய்யாமல் இருக்கலாமா?

காஞ்சனி அக்கா மீது, அவளுடைய கணவர் வைத் திருக்கும் அன்பை எண்ணிப் பார்த்துப் பூபால் உருகிக் கொண்டு இருப்பதைக் காஞ்சனியால் உணர முடிந்தது.

மிகுந்த அன்புதான். ஆனால், அந்த அன்பை விடக் கார் ரேஸ் மீதுள்ள காதல்தானே அதிகமாக இருக் கிறது!

எண்ணத்தை வாய் விட்டுச் சொல்லாமல், ''அவர் சொன்னார் என்றால், அதற்காக, வேலையை விட்டு விட்டு வருவாயா? எனக்கு எதுவும் தேவை என்றால், நானே உன்னிடம் கேட்க மாட்டேனா? திலகாவுடைய தம்பியிடம், அந்த அளவு உரிமை எனக்குக் கிடையாதா?'' என்று காஞ்சனி கேட்கவும், பூபால் விழித்தான்.

காஞ்சனியின் உரிமையை மறுக்கும் விதமாக என்ன செய்தோம் என்று அவன் யோசிக்கையில், ''கேட்பதற்கு உரிமை இருக்கும்போது, சொல்வதற்கும் உரிமை உண்டுதானே? இப்படி இடையிடையே வேலையைப் போட்டுவிட்டு வந்தால், இரண்டு பேர் வேலையும் கெடுகிறது, பார்! போய் வேலையைப் பார். தேவைப் பட்டால், நானே கூப்பிடுகிறேன்!'' என்று சற்று அழுத்தமான குரலில் கூறி, அவனை அனுப்பி வைத்தாள் அவள்.

பின் மாலையில் வீட்டுக்குக் கிளம்பும்போது, காஞ்சனி சென்று பார்க்கும்போது, பூபால் தீவிரமாக வேலையில் ஈடுபட்டிருந்தான்.

இவ்வளவு வேலையை வைத்துக் கொண்டிருப்பவனை அனாவசியமாக ஏவினானே என்று கணவன் மீது சிறு எரிச்சல் வந்தது அவளுக்கு.

மனைவியிடம் அவ்வளவு உருக்கம் இருந்தால், அவன் இருந்து பார்க்க வேண்டியதுதானே! அதை விட்டு, அடுத்தவர் தொழிலைக் கெடுப்பதா?

இந்த எரிச்சலும் சேர்ந்துகொள்ள, அன்றிரவு, முடிந்த அளவு விரைவாகத் திரும்பி வருவதாகச் சியாமளன்



கூறியதற்கு, ''உங்கள் வேலையை முழுதாக முடித்து விட்டு, விருப்பம் போல வாருங்கள்!'' என்று சற்று விட்டேற்றியாகவே பதிலுரைத்து வைத்து விட்டாள் அவள்.

என்றேனும், வேலை சுளுவாகச் சீக்கிரமே முடிந்து விட்டிருந்தால், காஞ்சனியிடம் வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பான் பூபால்.

அப்போதுதான், அவனுடைய தந்தை சுந்தரேசன், இங்கேயும் வந்து பணத்திற்காக அவனைத் தொல்லை செய்யத் தொடங்கியிருப்பதை, அவன் சொன்னான்.

''திறந்து போட்டுவிட்டு, ஒரு டீ குடிக்கக்கூடப் போகப் பயமாக இருக்கிறது, அக்கா! காயில் சுற்றுவதற்காக எடுத்து வந்திருக்கும் மோட்டாரை எடுத்துப் போய் விற்றுவிட்டால், எவ்வளவு நஷ்டமாகிவிடும்! நீங்கள் இங்கேயே முழு நேரத்துக்கும் வந்துவிட்டால், எனக்கு எவ்வளவோ நன்றாக இருக்கும்! நேருக்கு நேர் கேட்டு விடுவீர்கள் அல்லவா? உங்களுக்குப் பயந்து, அப்பா வரமாட்டார்!'' என்றான் அவன்.

''உனக்காகவாவது, சீக்கிரமாக வந்துவிடுகிறோம், பூபால்!'' என்றாள் காஞ்சனி.

அன்று காஞ்சனியின் வேலை முடிகிறவரை பூபாலன் அவளோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

அப்போதுதான், எல்லாவற்றுக்கும் கீழே இருந்த தரைத் தளத்தை ஒரு 'பைக்' நிறுவனமும், இவர்கள் இடத்துக்கு நேர் கீழாக இருந்த முதல் தளத்தை ஒரு பாங்க்கும் எடுத்திருப்பது, காஞ்சனிக்குத் தெரிய வந்தது.

''நாலைந்து மாதங்களாக, முழுசும் சும்மா கிடந்திருக்கிறது. நல்ல வேளை, இப்போதேனும் வாடகைக்குப் போயிற்றே!'' என்றாள் காஞ்சனி.

''இவர்கள் பேச்சு வார்த்தை முதலிலேயே தொடங்கி விட்டதாம், அக்கா. வேறே ஆட்களும் கேட்டிருக்கிறார்கள். ஆனால்,மெயின் ரோடில் இல்லாமல் கிளை வழியில் இருப்பதால், ரொம்பவும் குறைத்துக் கேட்டார்களாம். இதுவானால், பக்காவாக ஒரு பாங்க், அந்த பாங்க்கில் வாடிக்கை வைத்திருக்கும் பெரிய பைக் நிறுவனம். இழுத்தடித்தாலும் இதுதான் மேல் என்று வாசு சார் நினைத்துவிட்டார். மெல்லப் பேசிப்பேசி, ஒப்பந்தமும் முடிந்துவிட்டதாம். அடுத்த வாரத்தில் இருந்து, அவர்களுக்கு ஏற்றபடி உள் அமைப்பு வேலைகளைத் தொடங்கப் போகிறார்களாம்,'' என்று, அங்குள்ள அக்கப்போர்களை, அங்கேயே நாள் முழுதும் இருந்து வேலை செய்யும் பூபால், காஞ்சனிக்குத் தெரிவித்தான்.

''இங்கே பெருக்கித் துடைப்பதற்கு நல்ல ஆள் பார்க்க வேண்டும், பூபால்! நம் வராந்தாப் பக்கம், குப்பையாகக் குவிந்து தெரிகிறது!'' என்றபடி, கொண்டு வந்திருந்த அனைத்தையும் கவனமாக எடுத்து, மீண்டும் தோள்ப் பையினுள் வைத்தாள் அவள்.

''கொஞ்சம் குப்பையா, காஞ்சனிக்கா? நம் தளத்தில், உங்களுக்கு அடுத்த மூலை இடத்து ஆட்கள் நாஸ்தி பண்ணுகிறார்கள், அக்கா. திடீர் என்று, பெரிய பெட்டிகள் வருகின்றன! அதைப் பிரித்துச் சின்னச் சின்னதாக அட்டை டப்பாக்களில் அடைக்கிறார்கள். வேண்டாத



எல்லாவற்றையும், அப்படியே, வெளியே வீசி விடுகிறார்கள். இங்கே, உள்ளே நாம் வருவதற்கே வழியில்லாமல் பண்ணியிருந்தார்கள். ஒரு நாள், நான் போய்க் கத்தினேன். பிறகு, நம் வழியை விட்டு விட்டு, மாடிப்படிப் பக்கம் வீசுகிறார்கள். ஒரு நாள் மின்சாரம் இல்லாவிட்டால், படி வழியாகப் போகக் கூட முடியாது. அவ்வளவு குப்பை அங்கே!'' என்றான் அவன்.

அவனோடு சென்று, மாடிப்படிப் பக்கம், பின் புறம் எல்லாம் சென்று பார்த்தவளுக்கு ஆத்திரம் வந்தது. ''என்ன இப்படிப் போட்டு அடைத்து வைத்திருக்கிறார்கள், பூபால்! நாளைக்கு, நான் வந்து, அவர்களிடம் பேசுகிறேன்!'' என்று அவனிடம் சொல்லிவிட்டுக் கிளம்பியவள், அதற்காகவே, ஒரு மணி நேரம் முன்னதாகத் தன் புதிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தாள்.

ஆனால், அவள் சென்றது பயனின்றி, அந்த முதல் இடத்துக்காரர்கள், அன்றைய வேலையை முடித்துக் கொண்டு போய் விட்டிருந்தனர். வழியெங்கும் சிதறிக் கிடந்த அட்டைகளையும் காகிதத் துணுக்குகளையும் பார்க்கையில், காஞ்சனிக்கு ஆத்திரம் அதிகரித்தது.

அவர்களது இடத்திற்குள் எப்படியோ வைத்துக் கொள்ளட்டும். இப்படிப் பொது இடத்தையுமா கெடுப்பது?

அன்றைக்குப் பூபாலனும் மிகவும் சோர்ந்து தெரிந்தான்.

அவனுடைய தந்தை வந்தாராம். அவனது பையில் இருந்த ஐம்பது ரூபாயைப் பிடுங்கிக் கொண்டு, திரும்பவும் பணத்துக்கு வருவேன் என்று கத்திவிட்டுப் போனாராம்.

''இன்றைக்கு, எல்லா மோட்டாருக்கும் காயில் சுற்றிக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, அடுத்த செட்டை வாங்கிவர வேண்டும், அக்கா. அப்பாவோடு போராடியதில், இவ்வளவு நேரம் வீணாகிப் போயிற்று. இதை முடித்துக் கொடுத்தாலும், பணத்தைப் பிடுங்க, அவர் வரப் போகிறார். நாளைக்குக் காயில் கம்பி வாங்கப் பணம் இராது. வருத்தமாக இருக்கிறதுக்கா!'' என்றான் அவன், அழாத குறையாக.

''நீ வேலையை முடி. நான் இருக்கிறேன். பணத்தையும் என்னிடம் தந்துவிடு. நாளைக்கு, எங்கள் பழைய இடத்தில் வந்து வாங்கிக்கொள்,'' என்று காஞ்சனி ஒரு வழி சொல்லிக் கொடுத்த பிறகுதான், அவன் முகம் தெளிந்து வேலையைப் பார்க்கப் போனான்.

பூபாலன் வேலையை முடித்துக் கிளம்பியபோது, லேசான இருள் பரவத் தொடங்கியிருந்தது.

வீட்டுக்கு ஃபோன் பண்ணி, வரத் தாமதமாகும் என்று யசோதையிடம் தெரிவித்துவிட்டுக் கையோடு கொண்டு வந்திருந்த வேலையில், காஞ்சனி ஈடுபட்டாள்.

சற்றுப் பொறுத்து, சிறு தள்ளாடலுடன் அங்கே வந்த சுந்தரேசன், காஞ்சனியின் பகுதியில் விளக்கெரிவதைக் கண்டு திடுக்கிட்டார்.

இவள் இருக்கும்போது, மகனை அதட்டி உருட்டிப் பணத்தைப் பிடுங்க முடியாதே!

மெல்லப் பின்னடைந்தவருக்குக் கீழே போகவும் மனமில்லை.



காஞ்சனி திரும்பிப் போகிற வழியில் நிற்பது கூடத் தப்பு.

என்னவோ, அவள் சம்பாதிப்பதைக் கேட்கிற மாதிரி, பிய்த்துப் பிடுங்குவாள்.

லிஃப்டினுள் சென்று யோசித்தவர், மேலே போகும் பட்டனை அழுத்தினார்.

மேலே போய் உட்கார்ந்து, பார்த்துக் கொண்டே இருந்து, காஞ்சனி கிளம்பிச் சென்றதும் இறங்கி வந்து, மகனின் மென்னியைப் பிடிக்க வேண்டும்.

மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவரை ஒட்டிஅமர்ந்து கொண்டு, ஒரு சிகரட்டைப் பற்ற வைத்தார், அவர்.

மேலும் சிறிது நேரம் கழித்துப் பூபால் திரும்பி வந்தான்.

''அப்பா வருமுன், சீக்கிரம் பிடியுங்கள்!'' என்று பணத்தைக் காஞ்சனியிடம் கொடுத்தான். ''காயில் சுற்றிப் பொருத்த வேண்டிய மோட்டார்களை எடுத்து வரவில்லை, அக்கா! இருட்டி விட்டது என்று, ஆட்டோவுக்கு, எக்கசக்கம் கேட்கிறார்கள். நாளைக்குப் பகல் நேரத்திலேயே கொண்டு வரலாம் என்று பஸ்சிலேயே வந்துவிட்டேன். கிளம்புவோமா, அக்கா?'' என்று கேட்டான்.

அவளது பொருட்களை எடுத்துக்கொண்டு வந்து, கதவைப் பூட்டுகிற சமயம், மின்சாரம் போயிற்று.

''சே, நாம் கீழே இறங்கிப் போன பிறகு, இந்த மின்சாரம் போயிருக்கக் கூடாது? இப்போது லிஃப்ட்டுக்காக,

நாம் காத்திருக்க வேண்டும்!'' என்று எரிச்சல் பட்ட பூபாலன், திடுமெனச் சற்று அழுந்த மூச்செடுத்துப் பார்த்துவிட்டுச் சொன்னான். அக்கா, எங்கோ புகை வாசம் வருகிற மாதிரித் தெரியவில்லை?''

32



அதற்குள், காஞ்சனியும் புகை மணத்தை உணர்ந்து, சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''இங்கே ஒன்றையும் காணோம், பூபால். பக்கத்தில் எங்கேனும் குப்பைகளை எரிக்கிறார்களோ என்னவோ? அது மாதிரி, மக்கிய காகிதம் எரிகிற வாசம்தானே வருகிறது...'' என்றபடி திரும்பியவள், ''பூபால், இங்கே அடிக்கடி இப்படி மின்சாரம் போகுமா? ஆனால், நமக்கு மட்டும்தான் போன மாதிரி இருக்கிறது. அங்கெல்லாம் விளக்கு எரிவது தெரிகிறது பார்!'' என்று அந்தக் கிளைச் சாலையில், அங்கொன்றும், இங்கொன்றுமாக இருந்த கட்டடங்களைக் காட்டினாள்.

அவற்றினுள் மின் விளக்குகளின் வெளிச்சம் தெரியவும், ''ஆமாம்க்கா, நமக்கு மட்டும்தான் போயிருக்கிறது! அப்படியானால் இந்தக் கட்டடத்தில்தான் ஏதோ பழுதாகியிருக்கிறது! ஃபோன் பண்ணிப் பார்க்கிறீர்களா? ஆனால், ஒரே ஒரு கட்டடத்துக்கு என்று மின் வாரியத்திலிருந்து பழுது பார்க்க வருவார்களா?'' என்று சந்தேகத்துடன் கேட்டான் பூபாலன்.

''எல்லாம் வருவார்கள்! ஆனால், என் செல்லில்தான் சார்ஜ் குறைவாக இருக்கிறது!'' என்றவாறே அந்தப் பகுதியில், மின் வாரியத்தின் புகார் எண்ணைத்



தட்டி, விவரம் சொல்லும்போதே, செல் தகராறு செய்தது.

''எதற்கும், வாட்ச்மேனை அழைத்து, ஏதாவது ஃப்யூஸ் போயிருக்கிறதா என்று பார்க்கச் சொல்லுவோம்!'' என்று முன் புறத்து வராந்தாவின் கைப்பிடிச் சுவரின் மீது, முன்புறமாகச் சாய்ந்து, வாட்ச்மேனை அழைத்தபடி, இப்புறமும், அப்புறமும் திரும்பி அவனைத் தேடிய காஞ்சனி, சற்றுத் திகைத்து, ''பூபால், அங்கே பார்!'' என்று அவனது சிறு அறை தாண்டிப் பக்க வாட்டில் கையைக் காட்டினாள்.

சிறு வெளிச்சம் தெரிந்தது, அங்கேதான்.

இருவருமாக ஓடிப் போய்ப் பார்த்தால், மாடிப்படி முழுவதையும் அடைத்துக் கொண்டு கிடந்த குப்பை கூளத்திலிருந்து, தீ, தன் செந்நாக்குகளை நீட்டிப் பரவிக் கொண்டு இருந்தது.

''ஓகோ! இங்கிருந்துதான் புகை வாசம் வந்திருக்கிறது. எங்கேயோ குப்பை எரிப்பதாக நினைத்... தோ...மே...'' என்று சொன்னபடி திரும்பிய பூபாலனின் பேச்சு, காஞ்சனியின் முகத்தைப் பார்த்ததும், தயங்கி நின்றது.

''என்னக்கா?'' என்றான் பயத்துடன்.

''பூபால், அங்கே, மாடிப் படியில் தீ பரவிக் கொண்டு இருக்கிறது. இங்கே, லிஃப்ட் இயங்கவில்லை! அதாவது, நாம் எந்த வழியிலும், இங்கிருந்து, கீழே இறங்க வழியில்லை!'' என்றபடி எட்டிப் பார்த்தாள் அவள்.

''இங்கிருந்து குதிப்பதும் முடியாது, பூபால். கீழ்த் தளத்துக்கு ஏறும் படி, அந்தத் தளம், அதற்கு மேல் இரண்டு தளங்கள், இந்தக் கைப்படிச் சுவர், எல்லாமாகச் சேர்த்து, சுமார் நாற்பத்தைந்து அடி உயரம்... துணிந்து குதித்தால், அவ்வளவுதான். உயிர் நிச்சயமாகப் போய் விடும்...''

அவள் பேச்சில் குறுக்கிட்டு, ''ஐயோ, சொல்லாதீர் கள், அக்கா. எனக்குச் சும்மாவே, உயரம் என்றால்பயம். லிஃப்டிலேயே, கொஞ்சம் பயந்து கொண்டுதான் வரு வேன்!'' என்றான் பூபால், குரலில் சிறு நடுக்கத்துடன்.

''அதை விடு! இப்போது இங்கிருந்து வெளியேற முடியாமல், சிறைப்பட்டு நிற்கிறோம், புரிகிறதா? முதலில், இந்த வாட்ச்மேனை எப்படிப் பிடிப்பது? கண்ணிலேயே காணவில்லையே!'' என்று மீண்டும், சுற்றிலும் பார்வையை அலையவிட்டாள் காஞ்சனி.

''அவன் எங்கே போயிருக்கக் கூடும், பூபால்?''

''அது...'' என்று தலையை உலுக்கி, உயரத்தில் இருந்து குதிப்பதில் இருந்து மனதை மீட்டு யோசித்தான் அவன். ''பொதுவாக, இங்கே நான் மட்டும்தானே, அக்கா! அடிக்கடி டீ குடிக்கப் போய்விடுவார். இந்தத் தெரு முனை திரும்பினால், அங்கே உள்ள டீக்கடைக் காரர் சினேகிதர். எப்போது வருவார் என்று நிச்சய மில்லை. அக்கா! நான் சீக்கிரமாகக் கிளம்பிவிட்டால், அங்கே வந்து சொல்லிவிட்டுப் போகச் சொல்லுவார்.''

''அப்படியானால், அவர் வந்து ஃப்யூஸ் போட்டு, லிஃப்டை இயக்குவது, உடனடியாக நடக்கும் காரியம் அல்ல என்று தெரிகிறது!'' என்று காஞ்சனி கூறுகை



யில், சுழன்றடித்த ஒரு காற்று வெப்பத்தோடு, சில நெருப்புப் பொறிகளையும், அந்தத் தளத்தில் அள்ளி வீசியது.

கையில் சுரீலெனப் பட்ட தீப்பொறியைச் சட்டெனத் தட்டிவிட்டபோதுதான், அவர்கள் இருவரும் மாட்டிக் கொண்டிருந்த ஆபத்தான நிலைமையைக் காஞ்சனி முதலில் உணர்ந்தது.

அப்போதும், செயல்படாமல் சும்மா இருக்க நேரம் இல்லை. என்ன செய்வது என்று பார்க்க வேண்டும் என்றுதான் எண்ணினாளே தவிர, அதற்குமேல் பெரிய ஆபத்து எதையும் அவள் எதிர்பார்க்கவில்லை.

ஏதாவது உதவி வரும்வரை, இப்போதைக்கு என்ன செய்வது என்று யோசித்தபடி, அருகே நின்ற பூபா லனைப் பார்த்தால், கண்களில் மிரட்சியுடன், அவள் சொல்வதைச் செய்யத் தயாராக இருந்தானே தவிர, அவனாக எதுவும் செய்கிறவனாகத் தெரியவில்லை.

காஞ்சனி சுதாரித்தாள். இப்போது, பொறுப்பேற்று, நிலைமையைச் சமாளிக்க வேண்டியது, அவள்தான்.

முதலில்...

செல்லைத் தூக்கிப் பார்த்து, பையுள்ளே போட்டு விட்டு, அறையைத் திறந்து, உள்ளே ஓடிச் சென்று டெலிஃபோன் ரிசீவரைத் தூக்கினாள்.

டயல் டோனே இல்லாமல் ஃபோன் உயிரிழந்து கிடந்தது.

இனித் தன் கைதான் தனக்குதவி.

''பூபால், இந்தத் தளத்தில் ஒரு டாய்லெட் அறை உண்டல்லவா? அதில் இருந்து, தண்ணீரைப் பிடித்து ஊற்றி, மாடிப்படித் தீயை அணைக்கலாம், வா!'' என்று அவனைப் பின்புறம் அழைத்துச் சென்றாள்.

ஓடி ஓடிச் சென்று தண்ணீரை ஊற்ற வசதியின்றி, கிழிந்த அட்டைப் பெட்டிகள், பொருள் அசையாமல் இருப்பதற்காக, இடைக்கிடை அண்டை கொடுக்க வைக்கப்பட்டிருந்த துணுக்குக் காகிதங்கள் எல்லாம் இந்தப் பக்கமும் குவிந்து கிடந்தன.

அவற்றை ஒதுக்கியபடியே பூபால் கொண்டு வந்து கொடுத்த தண்ணீரை, ஓடி ஓடி ஊற்றிய காஞ்சனிக்கு எரிச்சல் வந்தது.

பொறுப்பற்று, எவ்வளவு ஆபத்தில் மாட்டி வைத்து விட்டார்கள்!

முடிந்தவரை வேகமாக நீரைப் பிடித்து ஊற்றிய போதும், தீயின் வேகம் சற்றுத் தணிந்தது போலத் தோன்றியதே தவிர, அது அணைவதாக இல்லை.

எப்போது நிரப்பிய தண்ணீர்த் தொட்டியோ? நீரின் வேகம் குறைந்து, வாளியில் நீர் நிரம்பத் தாமதம் ஆகவும், காஞ்சனிக்குத் திக்கென்றது.

தீ அதிகரிப்பது நன்றாகவே தெரிந்தது. சூடும் புகையும் உணர முடிந்தது.

தண்ணீர் நின்றே போய், நெருப்பு சீறி,மேலே வரத் தொடங்கியிருந்தது.

இனி இங்கே செய்வதற்கு ஒன்றும் இல்லை என்று உணர்ந்து, பூபாலை அழைத்துக் கொண்டு, யோசித்தவாறே, காஞ்சனி முன் பக்கம் ஓடிவந்தாள்.



காட்டுத் தீ பரவுவதைத் தடுப்பது பற்றிய ஒன்று அவளுக்கு நினைவு வந்தது.

தீ எரியும் இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் உள்ள மரம், செடி, கொடிகளை வெட்டி அகற்றி விடுவார்கள். எரிவதற்குப் பொருள் இருந்தால்தானே, தொடர்ந்து, தீ பரவும்? எரிவதற்குப் பொருள் இல்லாத இடைவெளியில் தீ நின்று, அணையத் தொடங்கி விடும்.

அந்த யோசனைப்படி, இருவருமாக அங்கங்கே குவிந்து கிடந்த குப்பை கூளங்களைச் சேர்த்து அள்ளி அள்ளிக் கைப்பிடிச் சுவரைத் தாண்டி வெளியே வீசினார்கள்.

இரண்டாம் முறையே, கைப்பிடிச் சுவர் அருகே வரப் பூபால் தயங்கினான்.

''சும்மா நிற்க முடியாது, பூபால். வராந்தாவில் தீ வந்துவிட்டால், நம் கதி என்ன என்று யோசி. அல்லது, குப்பையை அள்ளி, என்னருகே குவி. நான் வெளியே போடுகிறேன்!''என்றாள்.

''எனக்காகக் காத்திருக்கச் செய்து, உங்களையும் ஆபத்தில் மாட்டி வைத்து விட்டேன் போலிருக்கிறதே!'' என்று புலம்பினான் அவன்.

''பேசிக் கொண்டு இருக்க நேரம் இல்லை, பூபால். நம்மால் முடிந்ததைச் செய்வோம். சீக்கிரம்!'' என்று அவனை விரட்டியவாறு, மாடிப்படிப் பக்கத்துக் குப்பைகளை வேகமாகத் திரட்டினாள் அவள்.

குப்பைகளை வெளியே வீசிக் கொண்டிருக்கும் போது, கீழே ஓரிருவர் நிற்பது தெரிந்தது.

கையைப் பிசைந்து கொண்டு நின்ற கட்டடதத்துக் காவலாளும் கண்ணில்பட, மீண்டும் தைரியம் வந்தது.

ஆனால், ஒவ்வொரு தளத்துக்கும் மின்சாரம் செல்லும் ஜங்க்ஷன் பாக்ஸ், மாடிப்படியை ஒட்டி இருப்பதாகவும், அந்தப் பக்கம் போகவே முடியவில்லை என்றும், அதில் உள்ள மின் கம்பிகள் என்ன ஆகியிருக்குமோ தெரியவில்லை என்றும் வாட்ச்மேன் கவலைப்பட, அது மறைந்தது.

மின்சார வாரியத்துக்கு ஃபோன் செய்தாலும், இப்போது பலனிராது!

தீயணைக்கும் படைக்கு ஃபோன் பண்ணச் சொல்லிக் கத்திக் கதறிப் புரிய வைத்துக் காவலாளியை அனுப்பி வைத்தார்கள். திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம், கைகளை உதறிக் கொண்டே சென்ற அவன் மூலம் உதவி வரக்கூடும் என்ற நம்பிக்கை இப்போது மறைந்தது.

கீழே நின்று பார்த்தவர்களின் எண்ணிக்கை கூடியிருந்தது. அவர்களுள் பலர் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் சென்று பார்த்தார்களே தவிர, அவர்களால் எந்த உதவியும் செய்ய முடியவில்லை. செய்யவில்லை.

படீரென்று ஏதோ வெடிக்கவும், பதட்டத்துடன் காஞ்சனியும் பூபாலும் திரும்பிப் பார்த்தனர்.

பூபாலின் அறைக்குப் பக்கவாட்டில், படியோரமாக இருந்த அகன்ற மரச் சட்டத்தில் தீப்பிடித்துக் கண்ணாடி உடைந்திருந்தது.

அந்தத் தளத்துக்குள் தீ நுழைந்து விட்டது.



''அக்கா!'' என்று பேரச்சத்துடன் கூவிய பூபால், சட்டென நினைவு வந்தவனாய், ''ஐயா, என் டூல்ஸ்!'' என்ற அலறலுடன், அவனது பகுதிக்குள் ஓடினான்.

காஞ்சனியின் பார்வை அவளது அலுவல் அறையினுள் சென்றது.

உள்ளிருப்பவை, அவளுடைய ஆசைக் கணவன் அவளுக்காக அமைத்தவை.

ஆனால், தன் உயிரையே காக்க முடியாதவள், எதைக் காப்பது?

இரும்பாகக் கனத்த கால்களை மெல்ல நகர்த்தி அறையினுள் சென்றாள்.

சூழ்ந்து வந்த இருளில், ஒவ்வொன்றாகத் தடவிப் பார்த்தாள்.

அவள் விரும்பிய அத்தனையும் அமைத்து, அதற்கு மேலும் செய்து... அவளுக்குத் தன் பரிசாகச் செய்தது என்றானே!

அதைக்கூட, அவள் ஏற்கவில்லையே. ஏதேதோ கதை சொல்லி, அதைப் பாங்க் கடனாக மாற்றினாளே.

சிரித்துக் கேலி பேசி, அதற்கும் சுமுகமாகவே விட்டுக் கொடுத்தானே!

அவனுக்குத்தான் அவளிடம் எவ்வளவு அன்பு!

தம்பிக்கு உதவியது, தம்பி மருத்துவ மனையில் இருந்தபோது, தந்தைக்கு உதவியது. அவளிடமும்தான் அன்பு காட்டியே வந்திருக்கிறான்!

அந்த அன்பை, அவள் அவனிடம் காட்டியிருக்கிறாளா?

அவனோடு கோபப்பட்டுச் சண்டையிட்டதெல்லாம் நினைவு வந்து, அவளைத் துடிக்க வைத்தன. கடைசி யாகக் கிளம்பும் அன்றும், முகத்தைத் திருப்பினாளே! மீண்டும் அவனைப் பார்க்க முடியாமல் போகக் கூடும் என்று, அவளுக்கு ஏன் தெரியவில்லை?

ஆனால், இந்தக் கோப தாபங்களுக்குக் காரணமாக இருந்த அவளது அன்பை அவன் புரிந்து கொண்டிருப் பானா?

எப்படிப் புரியும்? இம்மென்றால் எகிறி, எதற்கும் விட்டுக் கொடாமல், அலைக்கழித்து... என்ன பாடு படுத்தியிருக்கிறாள்!

இதெல்லாம் அன்பின் வெளிப்பாடு என்று, யாரால் கருத முடியும்?

சத்தியமாக அது அன்புதான்... அவன் மீது கொண்ட அளவற்ற நேசம்தான் என்று, அவளுக்குத் தெரியும்.

ஆனால் அவனுக்கு?

சியாமளனுக்கு அதைப் புரிய வைக்காமலே அவள் சாகப் போகிறாளா? கூடாதே!

பரபரப்புடன் டெலிஃபோன் ரிசீவரைத் தூக்கிக் காதில் வைத்துப் பார்த்தாள்.

பயனற்றிருந்த அதைத் தூக்கிப் போட்டுவிட்டுக் கைப்பை யிலிருந்து, செல்லை எடுத்துக் குலுக்கி, ஆன் செய்து பார்த்தாள்.

ஓரத்துக் கோடு சிறு புள்ளி மாதிரித் தெரிந்தது.

அவசரமாகச் சியாமளனின் எண்ணைத் தட்டினாள்.



கடவுளே! கடவுளே... கொஞ்ச நேரம்! கொஞ்ச அவகாசம் கொடு!

"என்னம்மா?" என்று கேட்டது, அவனது செல்லில், அவ ளது எண்ணைப் பார்த்துவிட்ட அவனது அன்பான குரல்.

அதை ரசிக்க நேரம் இல்லை. சீக்கிரம், சீக்கிரம்!

"சியாம், பிழைத்து வந்து, உங்களை மீண்டும் பார்க்க வாய்ப்பில்லை. ஆனால், நான் எப்போதும், உங்களை என் உயிராய் நேசித்து வந்திருக்கிறேன் என்று தெரிந்து கொள்ளுங்கள்!" என்று அவசரமாகக் கூறியபோது, காஞ்சனியின் குரல் கேவியது.

33



அவ்வளவு தவிப்பிலும், காஞ்சனிக்கு ஓரளவு திருப்திதான்.

கணவனிடம் தன் அன்பைத் தெரிவித்து விட்டாள். இத்தோடு, இந்த செல்லின் சார்ஜ் தீர்ந்து போனாலும் பரவாயில்லை!

அவளது அவசரப் பேச்சில் என்ன கண்டானோ, சியாமளனும் ஆறுதல் மொழிகளிலோ, அச்சத்திலோ, குழப்பத்திலோ வார்த்தைகளை வீணாக்கவில்லை.

அவளது அதே வேகத்துடன், "எங்கே இருக்கிறாய்? என்ன விஷயம்?" என்று கேட்டான் அவன்.

"புது இடத்தில்! தீ. இறங்க வழி..." என்று அவள் சொல்லிக் கொண்டிருந்தபோதே, காஞ்சனியின் செல் ஓய்ந்து போயிற்று.

ஆனால், ஓரளவு பிரச்சினையைக் கூடக் கணவனிடம் தெரிவித்துவிட்டதாகவே, காஞ்சனிக்குத் தோன்றியது.

ஆனால், இது தெரிந்து அவனால் மட்டும் என்ன செய்ய முடியும்? அதுவும் வெளியூரில் இருப்பவனால் ஒன்றும் செய்ய முடியாதுதான்.

ஆனால், இப்போது, வேறு விஷயங்களையும் அவளால் யோசிக்க முடிந்தது.

முதலில், கதவோரம் இருந்த பை. அடுத்தவரின் துணிகள் அடங்கியது. பூபாலனின் பணம்.

இவை அனைத்தும் திலகாவின் கைக்குச் சென்றால் தான் சரியாக இருக்கும்.

முதலாம் இடத்துக்காரர்கள் கழித்துப் போட்டிருந்த தில், அகலமான 'கம் டேப்'பும் கொஞ்சம் கிடந்தது.

நிறையவே இருந்திருக்கக் கூடும். என்னவென்றே பாராமல் தூக்கி எறிந்தது போக, இன்னமும், லிஃப்ட் பக்கமாகக் கொஞ்சம் துண்டுகள் கிடந்தன.

நல்ல அகலமான டேப்! அந்தத் துண்டுகளை இணைத்து, நீளமாகக் கட்டலாம். மனிதர்களின் கனத்தைத் தாங்காது. ஆனால், இந்தப் பையை நிச்சயமாகத் தாங்கும்.

பூபாலனுக்குக் குரல் கொடுத்துவிட்டு, 'கம்டேப்'பு களைக் காஞ்சனி இணைக்கையில், ஒரு சிறு சாக்கில், தன் கருவிகளைச் சுருட்டி எடுத்துக்கொண்டு, பூபால் ஓடி வந்தான்.

''அக்கா, இதற்கெல்லாம், நான் பணம்கூட முழுதாகக் கட்டி முடிக்கவில்லை. இவை நாசமாகாமல் காப்பாற்ற வேண்டுமே!'' என்றான் வெறி பிடித்தவன் போல.

நீயே இல்லாமல், இந்தக் கருவிகளை வைத்து என்னப்பா செய்வது என்று மனதுள் தோன்றிய போதும், அதை



வாய் விட்டுச் சொல்லாமல், தான் செய்து கொண்டிருந்த வேலையைத் தூக்கிக் காட்டினாள் காஞ்சனி.

பேச்சின்றியே, அவனும் புரிந்துகொண்டு, அங்கங்கே கிடந்த டேப் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து சேர்த்தான்.

இருவருமே, அடுத்தடுத்த மரச் சட்டங்களைப் பற்றிப் பரவி வரும் தீயைப் பிடிவாதமாகப் பார்க்கா திருந்து, கையிலிருந்த வேலையைச் செய்தனர்.

ஓரளவு நீளத்துக்குக் கயிறு போல, டேப் தயா ரானதும், அதைக் கொண்டு, பூபாலனின் கருவிகள் அடங்கிய சாக்குப் பைக்குள், காஞ்சனியின் தோள்ப் பை, கைப்பையையும் சேர்த்துப் போட்டுக் கட்டினார்கள்.

காஞ்சனி முன்பு எடுத்து வைத்திருந்த அவளது பெயர் அட்டையை, மூட்டையோடு இணைத்து இன்னொரு கட்டுக் கட்டி, வெளியே எட்டிப் பார்த்தார்கள்.

வாட்ச்மேன் திரும்பி வந்திருந்தான்.

காதைத் தொட்டுக் கையை விரித்து, அவன் சொன்ன வார்த்தைகள்... சரிவரக் கேட்காவிட்டாலும், அவன் சென்ற காரியத்துக்கு எதிர் மறைப் பலனே கிடைத் திருக்கிறது என்பது புரிந்தது.

காஞ்சனியின் கார்டைக் காட்டி, மூட்டையை அந்த முகவரியில் சேர்க்கும்படி சொன்னது புரிந்து, காவலாளி தலையாட்டினான்.

பாதித் தூரத்தில், டேப் கயிறு அறுந்துவிட்ட போதும், கீழே விழுந்த மூட்டையைத் தூக்கிச் சென்று பாதுகாப் பாக வைத்துக் கொண்டு, அவர்கள் இருவரையும் பரிதாபமாகப் பார்த்தான், அவன்.

வேடிக்கை பார்க்க வந்திருந்த கூட்டம் பெருகியிருந்தது.

கையை நீட்டிப் பரிதாபம் காட்டிப் பேசிய கூட்டத்தைப் பார்க்கப் பிடிக்காமல் திரும்பியபோது, காற்றோடு புகையையும் சேர்த்து உள்ளிழுத்து விட்டதில், இருவருக்கும் இருமல் வந்தது!

இருமி முடிக்கும்போது, பூபால் அழுதுவிட்டான்.

"சம்பாதிக்கத் தொடங்கி விட்டோம். நிறையச் சேர்த்து, அக்காவுக்குத் திருமணம் செய்ய வேண்டும். இந்தத் தொழிலில் நிறைய முன்னேறிப் புது மோட்டார்களே செய்து மொத்த விற்பனை செய்கிற அளவு உயர வேண்டும் என்று நினைத்தேன், அக்கா! கடைசியில்..."

காஞ்சனிக்கும் மிகவும் வேதனைதான். ஆனால், ஆத்திரமும் வந்தது.

பூபாலைப் பற்றி, அவளுடைய தந்தை மாதவன் சொன்னதற்குச் சரியாக, என்னென்ன திட்டமிட்டிருக்கிறான்! மொத்த விற்பனை செய்யும் தயாரிப்பாளன் நிலை வரை! கடைசியில், யாரோ சில திமிர் பிடித்த முட்டாள்களின் தவறுக்கு, இவன் பலியாவதா?

இவன் மட்டுமா? இந்த வினாடியில், சியாமளன் எப்படித் தவித்துக் கொண்டிருப்பான்!

"இந்த மாதிரியெல்லாம் நடக்கும்போது, நல்லவர்களாக இருப்பதில் அர்த்தம் இல்லை என்று..." என்று சொல்லிக் கொண்டிருந்தவள், விலுக்கெனத் திரும்பி வெளியே பார்த்தாள்.

'அது டயோட்டா காம்ரிட, மட்டி!'

அதே 'காம்ரி'யேதான்!



சரக்கென்று கார் நின்ற வினாடியே கதவு திறந்து, அதிலிருந்து இறங்கி, எதையோ.. ஒரு தாம்புக் கயிற்றுச் சுருளைக் கார் மேல் வீசிவிட்டுத் தானும் ஏறி நிற்பவன், சியாமளனேதான்!

அந்தக் கார் மேல் தூசு பட விடாதவன், தானே ஏறி நிற்கிறானே!

"சியாம்...!"

விலகு என்பது போலக் காட்டிவிட்டு, கயிற்றைச் சில தரம் சுழற்றி, மேல் நோக்கி வீசி எறிந்தான் அவன்.

பெருத்த சத்தத்துடன் தளத்தினுள் ஏதோ வந்து விழுந்தது!

கயிற்றின் முனையில் கட்டப்பட்டிருந்த இரும்புக் கொக்கிகள்... கிணற்றில் ஏதாவது விழுந்து விட்டால் எடுப்பதற்கு உதவும், பல கொக்கிகள் சேர்த்தமைத்த பாதாளக் கரண்டி!

ஒன்றில்லா விட்டால், ஒரு கொக்கி எதிலாவது மாட்டும் என்று, இதைக் கொண்டு வந்திருக்கிறான்.

கணவனைப் பற்றிய பெருமையில், நெஞ்சு விம்மித முற, பாதாளக் கரண்டியைக் கிரில் அமைப்பு ஒன்றின் மீது, காஞ்சனி மாட்டினாள்.

மாட்டிவிட்டு, அவள் ஓடிப்போய் எட்டிப் பார்க்கும்போது, கயிற்றை இழுத்துப் பார்த்துவிட்டு, சியாமளன் மேலே ஏறத் தொடங்கியிருந்தான்.

விறுவிறுவென்று மேலே ஏறி வந்தவன், வினாடி காலம் வீணாக்காமல், "குரங்குக் குட்டி போல, என் கை, கால்களுக்கு இடைஞ்சல் இல்லாமல், என்னைக்

கெட்டியாகப் பிடித்துக் கொள், காஞ்சி! பூபால், நாங்கள் ஒரு தளம் அளவு இறங்கியதும், நீயும் பின்னோடு இறங்கத் தொடங்கி விடு!'' என்று சொல்லியவன், ஒட்டிக் கொண்ட மனைவியோடு, கயிற்றைப் பற்றி இறங்கத் தொடங்கி விட்டான்.

குளிர்ந்த தரையில் கால் ஊன்றி நிற்பதைச் சில வினாடி நேரம், காஞ்சனியால் நம்பக்கூட முடியவில்லை.

உயிரோடு, சாவு கையெட்டும் தூரம் வந்து விட்ட பிறகு, உயிர் பிழைப்பது எவ்வளவு பெரிய அற்புதம்!

கணவனை விட்டு விலகவும் காஞ்சனிக்குத் தோன்ற வில்லை. ஏனெனில், அவனும் ஒரு மாபெரும் அற்புதம் தானே!

அவனுக்கும் அற்புதமாகத்தான் இருந்தது போலும்.

திடுமெனச் சுற்றி நின்றவர்களின் சத்தம் வலுக்கவும், என்ன என்று பார்த்தால், பூபால், இறங்க முயற்சிகூடப் பண்ணாமல், மேலேயே நின்றான்.

''இறங்கு, இறங்கு!'' என்று, இவர்களும் சேர்ந்து கத்தியும், நிராசையும் பயமுமாக, அவனது கலங்கிய முகம், தீ வெளிச்சத்தில் மிகவும் வெளுத்துத் தெரிந்தது.

சட்டென நினைவு வர, ''அவனுக்கு உயரம் என்றால் பயம்!'' என்றாள் காஞ்சனி.

ஒரு கணம் மனைவியை ஆழ நோக்கிவிட்டுத் திரும்பிய சியாமளன், மேலே பார்த்தான்.

தீ பூபாலனை அடைய, இன்னும் ஒரு மரச் சட்டம் பாக்கி இருந்தது.

கயிறு கட்டியிருந்த இடமும், அதே இடைவெளிதானே?



உதட்டைக் கடித்துத் தன் அச்சத்தை வெளிக்காட்டாமல், காஞ்சனி நின்றாள்.

''யாராவது தண்ணீர் கொண்டு வாருங்கள்!'' என்று விட்டு, பூபாலனைப் பார்த்து, ''கொக்கியை அடுத்தச் சட்டத்தில் சீக்கிரமாக மாட்டு!'' என்று, சியாமளன் கத்தினான்.

அதற்குள் தண்ணீர் வந்து சேர, அதைத் தலையிலும் உடையிலும் நன்கு தெளித்துக் கொண்டான்.

''எதற்கும், கெட்டியான போர்வை, கோணி சிலது கொண்டு வந்து வைத்துக் கொள்ளுங்கள்! யார் மீதாவது, தீப்பற்றி விட்டால், சுற்றி, உருட்டித் தீயை அணைக்க உதவும்! ப்ளீஸ்!''

முகம் பாராமல் சியாமளன் கூறிய போதும், அவன் சொன்ன விதத்தில்,

"என் வீட்டில் கோணி இருக்கிறது!", "என் வீட்டில் பெரிய ஜமுக்காளம் இருக்கிறது!'' என்று சிலர் ஓடினார்கள்.

பூபால், மாற்றி மாட்டியதை, இழுத்துச் சரி பார்த்து விட்டுச் சியாமளன் மீண்டும் வேகமாக ஏறத் தொடங்கி விட்டான். லாவகமாக ஏறிச் சென்று, உடம்பில் தீப்பற்று முன், அவனையும் கீழே கொணர்ந்து சேர்த்தான்.

சம்பந்தப்பட்டவர்களோடு, சுற்றியிருந்த எல்லோருக்குமே சந்தோஷம். கை தட்டினவர்களும் உண்டு.

இரண்டு உயிர் தப்பியதே!

''என்ன தம்பி, சாரை, இரண்டாம் தரமும் ஏற வைத்து விட்டியே!'' என்று, பூபாலனை லேசாகக் கடிந்தோரும் உண்டு.

சியாமளனின் காலைத் தொட்டு நன்றி சொன்னான், பூபால்!

"என்னப்பா நீ, காலில் எல்லாம் விழுந்து கொண்டு? இதெல்லாம் கூடாது. என்ன?" என்றான் சியாமளன்.

"அவ்வளவு வேகமாக ஏறினீர்களே!" என்றாள் காஞ்சனி, ஆச்சரியமும், மகிழ்ச்சியுமாக மலர்ந்த கண்களுடன்.

"என்.சி.சி. பயிற்சி! அவ்வப்போது, மலையேறுவது, எல்லாம் உண்டு!" என்று முறுவலித்தான் அவளுடைய கணவன்.

உள்ளூரப் பெருமையுடன், "குரங்கு வேலை, ஒன்றையும் விடுவதில்லை, போல!" என்று, மென் குரலில் செல்லமாகக் கேலி செய்தாள் அவள்.

கவனித்தவர்கள் சிரித்தார்கள்.

"பூபால்...!" என்று கேட்ட ஒரு பயங்கர அலறலில், இந்த மகிழ்ச்சி, அப்படியே மறைந்து, எல்லோரும் அதிர்ந்தனர்!

மொட்டை மாடியில், இரு கைகளையும் விரித்தபடி நின்று, "மகனே, என் ஐயா! என்னைக் காப்பாற்றப்பா! ஐயோ! நான் எரிந்து விடுவேனோ? பயமாக இருக்கிறதே! என்னைக் காப்பாற்று, பூபால்!" என்று, மகனை அழைத்துக் கத்திக் கதறினார் பூபாலனுடைய தந்தை சுந்தரேசன்.

கீழே நின்ற எல்லோர் முகமும் வாடிச் சுண்டிப் போயிற்று!

சுந்தரேசனைக் காப்பது, அவ்வளவு எளிதன்று. மிகக் கடினம்! கிட்டத்தட்ட இயலாத காரியம் என்றே சொல்லலாம்.



அவரைக் காப்பாற்றப் போகிறவருக்கும், ஆபத்து தயாராகக் காத்து நின்றது.

பாதாளக் கரண்டி மாட்டியிருந்த சதுரத்துக்குப் பக்கத்துச் சட்டத்தைத் தீ தொட்டிருந்தது.

அதில் தீப்பற்றுமுன் ஏறி விட்டாலும், சுந்தரேசனை அடைய, மேலும் ஒரு தளம் அளவு, மொட்டை மாடி வரையும் போக வேண்டும்.

அங்கிருந்து அவரைக் கூட்டியும் வர வேண்டும்.

அதற்குள், எந்த நிலையில் கயிற்றில் தீப்பிடித்து விட்டாலும், சியாமளன் அதோ கதிதானே?

நெஞ்சுக் குழியை அழுத்தித் தவிப்புடன் நின்றவளிடம், வேறு வழியில்லை என்பது போன்ற பாவனையோடு, விடை பெறும் விதமான தலையசைப்புடன், சியாமளன் மீண்டும் கயிற்றை நோக்கிப் போனான்.

## 34



பூபாலனைக் காப்பாற்றுவதற்காகச் சியாமளன் சென்றபோது, பயமாக இருந்தபோதும், ஓரளவு நம்பிக்கையும் இருந்ததால், காஞ்சனியால், அச்சத்தை வெளிக்காட்டாமல் நிற்க முடிந்தது.

ஆனால், இப்போதோ, மூச்சு விடுவதே சிரமமாக இருந்தது.

கணவனோடு ஒட்டிக் கொண்டது போலப் பார்வையை விலக்க முடியாமல், அவனையே பார்த்தபடி சிலையாக நின்றாள், அவள்.

ஆனால், அவன் கயிற்றை நெருங்கும் முன்பே, பூபால், முன் வந்து, அவனைத் தடுத்தான்.

''வேண்டாம், சார்! எத்தனை முறை ஏறிச் சுமையைத் தூக்கிக் கொண்டு இறங்குவீர்கள்? அத்தோடு, அவர் என் தந்தை! அவரைக் காப்பாற்றுவது, என் கடமை!'' என்று கயிற்றைப் பிடித்தான்.

''உனக்கு உயரம் என்றால்...'' என்ற சியாமளனை இடை மறித்து, ''அவர்...'' என்று கை உயர்த்திக் காட்டி, ''என் அக்காவுக்கும் தந்தை! என் அசட்டுப் பயத்தில், அவள் தந்தையுமற்றுப் போகக் கூடாது! விட மாட்டேன்!'' என்றான் உறுதியோடு பூபால்.

மேலே வாதம் செய்து நேரத்தை வீணாக்க விரும்பாமல், சட்டெனத் தான் அணிந்திருந்த தடிமனான கையுறையைக் கழற்றிப் பூபாலனுக்கு அணிவித்தான் சியாமளன்.

ஆனால், அங்கிருந்து அகலவில்லை. ஒரு வேளை, பூபாலனால் முடியாவிட்டால், தானே ஏறுவதற்குத் தயாராக, அங்கேயே நின்றான்.

கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறப் பூபாலன் சிரமப் படுவது, எல்லோருக்குமே புரிந்தது.

ஆனால், பெற்றவரைக் காப்பாற்றும் மனவலிமை கை கொடுக்க, சமாளித்து அவன் ஏறுகையில், காதுகளில் தேன் பாய்வது போலத் தீயணைப்பு வண்டியின் மணியோசை கேட்டது.

வேகமாக வந்து நின்ற வண்டியிலிருந்து, இறங்கி, ''யார் சார், சியாமளன்?'' என்று கேட்டார் ஒருவர்.

அவரிடம் ஓடிச் சென்று, மேலே நின்ற சுந்தரேசனை யும், கயிற்றில் ஏறிக் கொண்டிருந்த பூபாலனையும், சியாமளன் காட்டினான்.



சாக்கு மூட்டையைக் கொணர்ந்து கொடுத்த கட்டடக் காவலாளியிடம், தீயணைப்பு வண்டி வந்தது பற்றிக் காஞ்சனி விசாரித்தாள்!

''எனக்கு அவங்க நம்பரே கிடைக்கலீங்கம்மா! அதான், முதலாளிக்குப் போட்டுப் பார்த்தேன். அவரும் வெளியே போயிருந்தார் போல! வந்ததும், இப்படி விஷய மின்னு சொல்லும்படி, ஆளுங்க கிட்டே சொல்லிட்டு வந்தேன். ஒரு வேளை, முதலாளி வீட்டுக்கு வந்து அனுப்பிச்சாரோ, என்னமோ, தெரியலை!'' என்றான் அவன்.

ஆனால், சியாமளன் பெயரைக் கேட்டுக் கொண்டல் லவா வந்தார்கள்.

வேகமாகக் காரை ஓட்டிக் கொண்டு வரும்போதே, சியாமளன்தான் தீயணைக்கும் படையோடு தொடர்பு கொண்டு, வரச் சொல்லியிருக்க வேண்டும்.

ஏதோ புரிகிற மாதிரி இருந்தது அவளுக்கு.

தீயணைப்பு வண்டி வந்த விதம் மட்டுமல்ல. இன்னும் பலதும்!

சாக்கு மூட்டையைக் காரில் போட்டு விட்டு, பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு காஞ்சனி கணவனிடம் போனாள்.

பூபால் கயிற்றிலிருந்து இறங்கி வந்திருந்தான்.

ஒரு புறம் தண்ணீரைப் பீய்ச்சி அடித்துத் தீயை அணைத்தபடி, சுந்தரேசனையும் காப்பாற்றிக் கீழே கொண்டு வந்து சேர்த்தார்கள்.

மகனின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதார், அவர்.

"தொல்லை கொடுக்கும் தகப்பன் சாகட்டும் என்று முகம் திருப்பாமல், என்னைக் காப்பாற்ற வந்தாயேப்பா! உன்னைப் பெறக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று புரியாமல், எல்லோரையும் சாகடிக்கப் பார்த்தேனே! என் ஐயா, பூபால் கண்ணு, என்னை மன்னித்து விடு! அம்மா காஞ்சி, நீயும் தயவு பண்ணி என்னை மன்னித்து விடும்மா!" என்று கை கூப்பிக் கண்ணீர் விட்டுக் கெஞ்சினார் அவர்.

"சரி சரி, விடுங்கள், அங்கிள். முடிந்தால், இனிமேல்..."

அவள் முடிக்குமுன் குறுக்கிட்டு, "விட்டு விடுகிறேன், அம்மா! கட்டாயமாகக் குடிப்பதை விட்டு விடுகிறேன்! சத்தியமாக, இனிக் குடிக்கவே மாட்டேன்!" என்றவர், சின்னவர்களின் முகத்தில் நம்பிக்கையின்மையைக் கண்டு, "மெய்யாகவே சத்தியம், பூபால்! நாளைக்கே என்னைக் கூட்டிப் போய், ஒரு மறு வாழ்வு மையத்தில் சேர்த்துவிடு!

"அங்கிருந்து வெளி வரும்போது, முன்பே காஞ்சனி அறிவுறுத்திய மாதிரி, உனக்கும், திலகத்துக்கும், 'தாயுமானவனா'கத்தான் திரும்பி வருவேன். இது நம் குடும்பத் தெய்வம், உன் அம்மா மீது ஆணை!" என்று சூளுரைத்தபோது, இது 'விடிந்தால் மறக்கிற குடிகாரன் பேச்சல்ல!' என்று காஞ்சனிக்கு நிச்சயமாகத் தோன்றியது.

மற்றப்படி, இவர் மறு வாழ்வு மையம் பற்றிப் பேச மாட்டாரே!

அவளது நம்பிக்கை, பூபாலனின் முகத்திலும் பிரகாசமாய் எதிரொளி வீச, தந்தையின் கையை அன்போடு பற்றிக் கொண்டான் அவன்.



காஞ்சனிக்கு ஆச்சரியமாக இருந்தது.

எந்தத் தீமையிலும், ஒரு நன்மை இருக்கும் என்பது, இதுதான் போலும்!

ஆனால், நன்மை இது மட்டும்தானா?

"வெளிப்புறம்தானே? சீக்கிரம் முடிந்து விட்டது.." என்று தீயணைக்கும் படையினர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சியாமளனுடைய நண்பனும், கட்டட உரிமையாளனுமான வாசுவும் வந்து சேர்ந்து விட்டான்.

விவரம் அறிந்ததும், 'முன்பணம் நிறையக் கொடுக்கிறேன் என்றானே என்று இடத்தைக் கொடுத்தது, தப்பாகப் போய் விட்டது. வரட்டும். அவனது முன் பணம் என்னிடம்தானே இருக்கிறது. ஆட்டிப் படைத்து விடுகிறேன். நல்ல வேளையாகக் கீழே வருகிறவர்களுக்காகக் கட்டடத்தைப் போன மாதம்தான் இன்ஷ்யூரும் பண்ணினேன்!" என்றுவிட்டு, நண்பனிடம் மன்னிப்பும் கேட்டான் அவன்.

"என் இடத்தில், உன் மனைவிக்கு, இந்த ஆபத்து நேர்ந்து விட்டதே!"

நண்பனுக்கு ஆறுதலாக இரண்டு வார்த்தை பேசி விட்டுப் பொறுப்பை வாசுவிடம் கொடுத்துவிட்டு, மனைவியையும், பூபால் குடும்பத்தையும் காரில் ஏற்றிக் கொண்டு, சியாமளன் கிளம்பினான்.

பேச்சுப் போக்கில், "வாசுவுக்கு நஷ்டம் இராது! எப்படித் தீப்பிடித்திருக்கும் என்று, ஒரு முழு விசாரணை நடத்திவிட்டு, இன்ஷ்யூரன்சில் பணத்தைக் கொடுத்து விடுவார்கள்," என்று சியாமளன் கூற, சுந்தரேசன் "ஐயோ!" என்று அதிர்ந்தார்.

''என்னைச் சிறையில் போட்டு விடுவார்களா?''

ஓரமாகச் செலுத்தி, சியாமளன் காரை நிறுத்த, எல்லோரும் சுந்தரேசனைத் திகைப்புடன் நோக்கினர்.

''என்னப்பா?'' என்று பூபால் கேட்டான்.

''நான்.. நான்தான்ப்பா காரணம். காஞ்சனி கிளம்பிய பிறகுதான் உன்னிடம் பணத்தைப் பிடுங்க முடியும் என்று, அவள் போவதற்காக மொட்டை மாடியில் மறைவாக உட்கார்ந்து காத்திருந்தேன். அப்போது பிடித்த சிகரெட்டுகளை, அணைக்கத் தோன்றவில்லை. சும்மா அணைக்காமலே வீசிவிட்டேன்! அதில்தான்... மாடிப்படி இன்ன நிலை என்று தெரியாமல்தான், அந்தப் பக்கம் வீசினேன். ஆனால் இப்போது, அதைக் கண்டு பிடித்து, என்னைக் கைது செய்து விடுவார்களா? ஆனால், இன்றுவரை நான் செய்த தப்புகளுக்கு, இந்தத் தண்டனை தேவைதான். செய்யட்டும். கைது செய்து, என்னைத் தூக்கில் போடட்டும்!'' என்று முகத்தை மூடிக் கொண்டு அழுதார் அவர்.

காஞ்சனியும் சியாமளனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

காப்பாற்றப் பட்டதும், 'எல்லோரையும் சாகடிக்கப் பார்த்தேனே' என்று, சுந்தரேசன் வருந்தியதின் பொருள், இருவருக்கும் இப்போது புரிந்தது.

''அழாதீர்கள், அப்பா!'' என்று தந்தையை அணைத்துக் கொண்டான் பூபால்.

பிறகு சியாமளனைப் பார்த்து, ''அப்பாவைக் காப் பாற்ற வழியில்லையா, சார்? இப்போது திருந்தி விட்ட



பிறகு, அப்பா தண்டனை அனுபவிப்பது என்றால், மிகவும் வேதனையாக இருக்கிறதே!'' என்றான்.

சுந்தரேசனை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''அங்கே ஏதாவது சிகரெட் துண்டுகளை விட்டிருக்கிறீர்களா, சார்?'' என்று கேட்டான் சியாமளன்.

''இல்லை. ஒவ்வொன்றையும் சுண்டி வீசியது நினை விருக்கிறது, ஸ்டைலாக!'' என்று தலையில் அறைந்து கொண்டார் அவர். ''அப்படி வீசி, உன்னை நானே கொல்ல இருந்தேனே!'' அந்த நினைவில் விசும்பினார் முதியவர்.

''அந்த நினைவு உங்களுக்கு இருக்கும்போது, வேறு தண்டனை எதுவும் தேவையில்லைதான். இப்போது, இந்த விஷயத்தை நீங்களாகப் போய்ச் சொல்லா விட்டால், யாருக்கும் விவரம் தெரியப் போவது இல்லை. எனவே, சிகரெட் விஷயம் மட்டும், ஒன்றும் சொல்லாமல், அப்படியே விட்டுவிடுங்கள். விசாரணையின் போது யாரும் கேட்டால், மகன் வேலை முடித்து வரும்வரை, காற்றாட மொட்டை மாடியில் காத்திருந் தவன், அப்படியே தூங்கி விட்டேன் என்று மட்டும் சொல்லுங்கள், போதும். அதற்கு மேல் உண்மை சொல்லி, யாருக்கும், எந்த லாபமும் இல்லை!'' என்று சியாமளன், கூற, அவனை நன்றியுடன் நோக்கினான் பூபாலன்!

பூபால், சுந்தரேசனை, அவர்கள் வீட்டில் இறக்கி விட்டு விட்டு, இவர்கள் இருவரும் வீடு திரும்பினார்கள்.

சியாமளனின் உடையில் ஈரம் காய்ந்து விட்ட போதும், நலுங்கிய தோற்றம் தெரிந்தது.

காஞ்சனியிடமும்.

பயணம் முடிந்து வரும் மகனுக்காகக் காத்திருப்பவர் போல, ஹாலில் அமர்ந்திருந்தார் ஞானப்பிரகாசம்.

அவர் லேசாகப் புருவம் உயர்த்தவும், ''சிறு விபத்து, அப்பா. உதவி செய்ய நேர்ந்தது. அவ்வளவுதான்!'' என்றான் சியாமளன், சுருக்கமாக.

''சுடு நீரில் குளித்து விட்டு வந்து சாப்பிடுங்கள். மற்றது, நாளை பேசிக் கொள்வோம்,'' என்று அவர்களை அனுப்பி வைத்தார் அவர்.

அவர் சொன்னது போலக் குளித்து விட்டு வரும் போது, காஞ்சனிக்குப் பசி எடுத்தது.

மனதில் இத்தனை எண்ணங்கள் அலை மோதும் போது, பசி கூடத் தெரிகிறதே என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

வீட்டுப் பெரியவர்கள் நேரப்படி சாப்பிடுகிறவர்கள். முடிந்தவரை, நேரத்துக்கு உறங்கவும் போய் விடுவார்கள்.

ஆனால், இன்று இவர்கள் இருவரும் உணவருந்த அமரும்போது, யசோதை வந்தாள்.

''உங்கள் இருவருக்கும் பிடித்த தினுசுகள்தான். இன்றேனும் நன்றாகச் சாப்பிடு!'' என்று மருமகளிடம் சொன்னவள், மகனது சிகையை லேசாக வருடி,

''இப்படி ஒரு வாரம், பத்து நாள் போவதை, இனிக் குறைத்துக் கொள். காஞ்சி கஷ்டப் படுகிறாள்!'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

''நீங்கள் இன்று வருவது தெரியுமா?'' என்று தட்டில் எடுத்து வைத்தபடியே காஞ்சனி வினவினாள்.



''இம். இரண்டு நாள் முன்னதாகவே, வேலை முடிந்து விட்டது. வரும்போது, அப்பாவிடம் சொன்னேன். உன்னிடம் வந்து சொல்லிக் கொள்ளலாம் என்று...''

அன்று பேசிய விதத்தில், இன்று அவளிடம் சொல்லத் தயங்கியிருக்கிறான்! மனம் சுட, ''எப்படியோ, வந்தது நல்லதாயிற்று!'' என்றாள் மெதுவாக.

இரவுத் தனிமையிலும், சற்று நேரம், இருவருக்கும் பேச்சு வரவில்லை.

சிறு அமைதியின் பின், ''காஞ்சி...'' என்று அவள் அருகே சென்று அமர்ந்தான் சியாமளன்.

அவள் கையைப் பற்றி, லேசாக வருடி, ''அம்மா சொன்னதைக் கேட்டாயல்வா? எனக்கும் புரிகிறது. அதனால் நான் ரேசிங்கை அடியோடு விட்டுவிடப் போகிறேன்!'' என்றான்.

அவள் அதிர்ந்து நோக்கவும், சட்டெனக் கைப்பிடி இறுக, ''உன் காரணம் எனக்கு இப்போது புரிகிறது, கண்மணி! இன்று நீ ஃபோன் செய்ததும் எனக்கு எப்படி இருந்தது, தெரியுமா? மறுபடியும், உன்னை உயிரோடு பார்ப்போமா என்று, என்ன தவிப்பு! ஐயோ, என்ன மாதிரித் தவிப்பு, அது! மீண்டும் உன்னைப் பார்க்கிற வரை.

''கடவுளே! உயிருக்கு உயிராக நேசிக்கும் ஒருவர், வெளியே போனால், அவரை மீண்டும் உயிரோடு பார்க்க மாட்டோமா என்று தவித்துக் கொண்டே இருப்பது எப்படி என்று, இந்த இருபது நிமிடங்களில் நான் நன்றாகப் புரிந்து கொண்டேன், காஞ்சிம்மா!

அந்தத் தவிப்பை அறிந்த பின்னும், இனியும் உனக்கு, அதை எப்படித் தருவேன்?

''என் ஆசை, ஆத்ம திருப்தி எல்லாம் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கட்டும். அதற்காக, நீ இந்தத் துன்பம் அனுபவிக்க வேண்டும் என்பது, எவ்வளவு சுயநலம்!

''கண்ணம்மா, உன் மீது ஒரு தூசு பட்டால்கூடத் தாங்காதவன் நான். இப்படிப்பட்ட துன்பத்தை எப்படிச் சுமத்தினேன்? நினைத்துப் பார்க்கக் கூட முடிய வில்லையே!

''இப்போதும், உன் பயம் தேவையற்றதுதான். ஆனாலும், இந்த வேதனை நீ அனுபவிக்க, இனி நான் விட மாட்டேன். அதனால் சத்தியமாக...'' என்று மூச்சிரைக்கச் சொல்லிக் கொண்டே போனவனின் வாயைச் சட்டெனப் பொத்தினாள், காஞ்சனி. ''வேண்டாம்!''

பொத்திய கையை விலக்கி, ''என்ன காஞ்சீ?'' என்று புரியாமல் கேட்டான் அவன்.

தலையசைத்து, ''இன்றைக்கு எனக்கும் ஒரு கண் திறப்புதான், சியாம்!'' என்றாள் அவள்.

''என்ன கண் திறப்பு?''

''சியாம், தீப் பரவி, வெளியே தெரியத் தொடங்கி யதும், அங்கே எத்தனை பேர் கூடி விட்டார்கள், பார்த்தீர்கள் அல்லவா? ஆனால், அவர்களில் ஒருவருக் காவது, எப்படியாவது துணிந்து வந்து, எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று தோன்றியதா? இல்லையே! உங்களால் மட்டும்தானே, அது முடிந்தது? அதாவது,



தைரியம் உங்கள் இயல்பு. எனக்காக அதை விட்டுவிட வேண்டும் என்று கேட்பது, எப்படி நியாயமாகும்?

''அது மட்டுமல்ல. பூபாலைக் காப்பாற்றச் செல்லும் போது, முன் எச்சரிக்கையாக என்னென்ன செய்தீர்கள் என்று, நான் பார்த்துக் கொண்டே இருந்தேன். அடுத்த சட்டத்தில் கொக்கியை மாட்டச் சொன்னது, நனைத்துக் கொண்டது, கோணி, போர்வை கொண்டு வரச் சொன்னது... எல்லாம்!

''மனதிலும், உடம்பிலும் கட்டுப்பாடு இருந்தால் பயப்படத் தேவை இல்லை என்றீர்கள். என்ன வேகத்தில் வந்தீர்களோ, அதற்கிடையிலும் யோசித்துப் பாதாளக் கரண்டி, தாம்புக் கயிறு வாங்கி இருக்கிறீர்கள். வெறும் கையோடு இங்கே வந்து, செய்வதறியாமல் பெப்பே பெப்பே என்று கையைப் பிசைந்துகொண்டு சும்மா நிற்கவில்லை. வேகமாக ஓட்டிக் கொண்டே, தீயணைப்புப் படைக்கும் தகவல் கொடுத்திருக்கிறீர்கள்.

''இந்தத் திடம், கவனம், கட்டுப்பாடு எல்லாம் ரேசில் கார் ஓட்டும்போதும், இருக்கும்தானே! அதிலும், நான் உங்களுக்காகக் காத்திருப்பேன் என்பதால், நீங்கள் இரு மடங்குக் கவனத்தோடு இருப்பீர்களே! பிறகு நான் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்று அவள் முடித்தபோது, அவன் வியப்பே உருவாகி, ''வாவ்!'' என்று விழி விரித்தான்.

அவளது முகத்தை ஒரு விரலால் உயர்த்தி, ''அப்போது...'' என்று குறுகுறுப்பாய் நோக்கினான்.

கணவனின் முகத்தை, தோளை அன்போடு மெல்ல வருடினாள் காஞ்சனி. ''கொஞ்சம் கலக்கம் இருக்

கத்தான் செய்யும். ஆனால், விரைவிலேயே அது சரியாகிப் போய்விடும். அதனால், இனிமேல் நான் உங்களைத் தடுக்க மாட்டேன், சியாம்!'' என்றாள், தெளிவாக.

''ஓ!'' அவனது கைகள் கிண்ணமாய் அவள் முகத்தை ஏந்தின.

ஆர்வமாய் நோக்கிய கண்கள், அவளது இதழ்களில் பதிந்தன.

''தடை விலக்கம் இதில் மட்டும்தானா?''

கணவனின் கேள்வி புரிந்து, காஞ்சனியின் முகம் சிவந்தது.

''எதிலும்தான்!'' என்று மிடுக்காகச் சொல்ல முயன்ற போது, அவளது குரல் தானாகக் கொஞ்சிக் குழைந்தது.

வாய்ப்பை விடாமல், ஆசை மனைவியை அள்ளி அணைத்தான் சியாமளன்.